# TNPSC தேர்வுப் பெட்டகம்


## நடப்பு நிகழ்வுகள் - பிப்ரவரி 2023

**www.tnpscthervupettagam.com**









SHANKAR IAS ACADEMY™

The Best IAS Academy in India

SINCE 2004

Plot No. 1742, I Foor, 18th Main Road,
Anna Nagar, Chennai - 600 040.
Phone - 044-26216435, 4353 3445, Mobile: 9444166435
www.shankariasacademy.com

# உள்ளடக்கம்

TNPSC துளிகள் ........ 10
தமிழ்நாடு செய்திகள் ........ 15
மாநில அரசின் அனைத்துப் பணிகளுக்கும் கட்டாயத் தமிழ் மொழி ........ 15
பூம்புகார் என்ற துறைமுக நகரத்தின் காலம் ........ 15
தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள முனைவர் பட்டம் பெற்ற பட்டதாரிகள் ........ 15
உயர்கல்வியில் மொத்தச் சேர்க்கை விகிதம் ........ 16
சிறந்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் ........ 17
சென்னை உயர்நீதிமன்றம் - ஐந்து புதிய நீதிபதிகள் ........ 17
'புதுமைப் பெண்' திட்டத்தின் இரண்டாம் கட்டம் ........ 18
கி.மு. 800 காலகட்டத்தினைச் சேர்ந்த சங்க காலம் - தொல்லியல் கண்டுபிடிப்பு ........ 18
11 ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த தமிழ் கல்வெட்டு ........ 19
புதிய மின்சார வாகனக் கொள்கை ........ 20
தென்பெண்ணை நதிக்கரையில் நடுகற்கள் ........ 21
உலகின் மிகப்பெரிய மின்சார வாகன உற்பத்தி மையம் ........ 21
அதிக எண்ணிக்கையிலான MBBS சேர்க்கை இடங்கள் ........ 22
தமிழ்நாட்டின் சிறந்த காவல் நிலையம் ........ 23
தேசியச் செய்திகள் ........ 23
தனியார் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் நினைவுச் சின்னங்கள் ........ 23
இந்தியாவின் முதல் மாதிரி G-20 உச்சி மாநாடு ........ 24
G-20 புத்தொழில் பணிக் கட்டுப்பாட்டுக் குழு ........ 24
சிந்து நதி நீர் ஒப்பந்த திருத்த அறிக்கை ........ 25
பொருளாதார ஆய்வறிக்கை 2022-2023: சிறப்பம்சங்கள் ........ 26
உத்தரகாண்ட் மாநிலத்தின் காட்சி வாகனம் ........ 27
தேசியக் குழந்தை அறிவியல் மாநாடு ........ 28
2023 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 7 அம்சங்களுக்கு முன்னுரிமை ........ 29
மத்திய அரசின் நிதிநிலை அறிக்கை – 2023/24 சிறப்பம்சங்கள் ........ 29
PM-PRANAM திட்டம் ........ 31
அரிவாள் செல் இரத்த சோகை நோயினை ஒழிப்பதற்கான திட்டம் ........ 31
அம்ரித் தரோஹர் திட்டம் ........ 32
முழு அளவிலான தொகுப்புச் சுற்றுலா 2023 ........ 33
பிரதான் மந்திரி கௌஷல் விகாஸ் யோஜனா 4.0 ........ 34
தேசியத் தரவு ஆளுமைக் கொள்கை ........ 34
ஆத்ம நிர்பர் தோட்டக்கலை தூயத் தாவரத் திட்டம் ........ 35
சதுப்புநிலத் தோட்டங்கள் அமைப்பதற்கான MISHTI திட்டம் ........ 36
வேளாண்மைத் துறை ஊக்க நிதி ........ 36

பொதுவான அடையாளக் குறியீடாக நிரந்தரக் கணக்கு வைப்பு எண் ........ 37
வருமான வரி அடுக்குப் புதுப்பிப்பு ........ 38
பிரதான் மந்திரி விஸ்வகர்மா கௌசல் சம்மான் ........ 38
மஹிளா சம்மான் பச்சத் பத்ரா ........ 39
ஹர் கர் தியான் பிரச்சாரம் ........ 39
Visit India Year 2023 பிரச்சாரம் ........ 40
20 அம்சத் திட்டத்தின் முன்னேற்றம் குறித்த அறிக்கை ........ 40
தேசியத் தளவாடங்கள் தளம் - Marine ........ 41
பாசறை திரும்புதல் நிகழ்வு 2023 ........ 41
நமஸ்தே திட்டம் ........ 42
இரயில்வே துறைக்கான நிதிநிலை அறிக்கை 2023 ........ 42
முதலாவது வேலைவாய்ப்புப் பணிக் கட்டுப்பாட்டுக் குழு கூட்டம் ........ 43
அடல் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் 5 கோடி பதிவுகள் ........ 43
மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் ELLORA திட்டம் ........ 44
ஒரே தேர்தலில் இரண்டு இடங்களில் போட்டியிடுதல் ........ 44
இந்தியா "முதலீட்டுத் துறையில் முன்னோடி" ........ 45
சத்பவனா நடவடிக்கை ........ 45
இந்திய எரிசக்தி வாரம் 2023 ........ 46
இந்திய உச்ச நீதிமன்றத்தின் 73வது ஸ்தாபன தினம் ........ 47
போரும் அற்ற மற்றும் அமைதியும் அற்றச் சூழ்நிலை ........ 47
ஹைட்ரஜன் இரயில் – இந்தியா ........ 48
அணுசக்தி விசையாழி பாகங்கள் விநியோகம் ........ 49
சுழற்சி மற்றும் நிலைத்தன்மையை மேம்படுத்துதல் திட்டம் ........ 49
முதன்மை வேளாண் கடன் சங்கங்களின் சேவை ........ 50
Zoop - உணவு விநியோகச் சேவை ........ 51
உச்ச நீதிமன்றம் - புதிய நீதிபதிகள் ........ 51
இந்தியாவின் பால் உற்பத்தி ........ 52
யுவ சங்கம் பதிவுத் தளம் ........ 52
எண்ணிமத் திறன்கள் திட்டம் – இந்தியா ........ 53
மேற்கூரை சூரியசக்தி உற்பத்தி திட்டம் ........ 53
அந்த்யோதயா திட்டக் கணக்கெடுப்பு 2022-23 ........ 54
உலகளாவிய சர்வதேச உயிரி எரிபொருள் கூட்டணி ........ 55
முழு நீதிபதிகள் எண்ணிக்கை பலம் - உச்ச நீதிமன்றம் ........ 55
உலகின் முதல் பழங்காலப் பாரம்பரியப் பல்கலைக்கழகம் ........ 56
மாற்றுத் திறனாளிகள் எளிதில் அணுகும் வகையிலான இந்திய செயலி ........ 56
விரைவுக் குறியீடு அடிப்படையிலான நாணய விநியோக இயந்திரம் ........ 57
கண்ணாடியினாலான இந்தியாவின் முதல் இக்லூ உணவகம் ........ 58
ஏரோ இந்தியா 2023 ........ 58
13 புதிய ஆளுநர்கள் நியமனம் ........ 59

கானன் பிரஹாரி செயலி ........ 59
அகலப்பட்டை அலைவரிசைக்கான வரையறை ........ 60
நதிப்புற நகரங்கள் கூட்டணி உறுப்பினர்களின் வருடாந்திரக் கூட்டம் ........ 61
TRIFED ஆதி மஹோத்சவத் திருவிழா ........ 61
பீமா சுகம் இணையதளம் ........ 62
இந்திய அரிசி மாநாடு 2023 ........ 62
AMRITPEX 2023 ........ 63
ஜல் ஜன் அபியான் ........ 63
டிஜிட்டல் சுரக்சா பிரச்சாரம் ........ 64
கவாச் 2023 ........ 64
2வது உலகளாவிய ஹேக்கத்தான் “ஹார்பிங்கர் 2023” ........ 65
வட இந்தியாவின் முதல் அணுமின் நிலையம் ........ 65
சிறைக் காவலில் உள்ள நபர்களின் உயிரிழப்பு குறித்தத் தரவு ........ 66
குனோ தேசியப் பூங்காவிற்கு 12 சிவிங்கிப் புலிகள் வருகை ........ 67
உலகின் மிக உயரமான வானிலைக் கண்காணிப்பு நிலையம் ........ 67
தீவிரவாத அமைப்புகளுக்குத் தடை ........ 68
mPassport காவல் செயலி ........ 69
செயல்பாட்டில் உள்ள 27,000 தொழில்நுட்பப் புத்தொழில் நிறுவனங்கள் ........ 69
எழுச்சிமிக்க கிராமங்கள் திட்டம் ........ 70
அதிகளவு உள்நாட்டு விமானப் பயணம் ........ 70
உள்நாட்டுத் தொழில்துறைகளில் இருந்து பாதுகாப்பு கொள்முதல் ........ 71
புத்தொழில் 20 செயல்பாட்டுக் குழு ........ 72
உறுப்பு மாற்றுச் சிகிச்சைக்கான விதிகளில் மாற்றங்கள் ........ 72
இந்தியர்களின் குடியுரிமைத் துறப்பு ........ 73
சரக்கு மற்றும் சேவை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் ........ 74
SWARM ஆளில்லா விமான அமைப்பு ........ 74
PRASHAD திட்டத்திற்கான புதிய யாத்திரை மையம் ........ 75
சிவசேனா கட்சியின் பெயர் மற்றும் சின்னம் ........ 76
ஒருங்கிணைந்த மருத்துவ மையங்கள் ........ 76
ஜாதுய் பிடரா ........ 77
SADUN முன்னெடுப்பு ........ 78
‘She Feeds the World' திட்டம் ........ 78
யானைக்கால் நோயினை எதிர்த்துப் போராடுவதற்கான பிரச்சாரம் ........ 78
பேறுகால தாய்மார்கள் இறப்பு விகிதம் – 2000/2020 ........ 79
சிறுதானியங்களுக்கான FSSAI அமைப்பின் தர நிர்ணயம் ........ 80
சர்வதேசச் செய்திகள் ........ 81
BIO ASIA 2023 மன்றத்திற்கான பங்குதார நாடு ........ 81
இந்திய எல்லைக்கு அருகில் அணை நிறுவும் சீனா ........ 81

இஸ்லாமியத்திற்கு எதிரான பாகுபாடுகளை எதிர்த்துப் போராடுதல் நடவடிக்கைகளுக்கான பிரதிநிதி ..... 82
பணத்தாள்களில் இருந்து பிரிட்டிஷ் அரசர்களின் படங்களை அகற்றுதல் ..... 83
உகாண்டாவின் முதல் எண்ணெய்க் கிணறுகள் துளைத்தல் திட்டம் ..... 83
சர்வதேச சூரியசக்திக் கூட்டணியில் காங்கோ ..... 84
மாட்ரிட் சர்வதேச புத்தகக் கண்காட்சி ..... 84
பசுமை ஒப்பந்தத் தொழில்துறைத் திட்டம் ..... 85
துருக்கி மற்றும் சிரியா ஆகிய நாடுகளைத் தாக்கிய மாபெரும் நிலநடுக்கம் ..... 85
காசியான்டெப் கோட்டை ..... 86
உலகப் பருவநிலை நெகிழ்திறன் நிதி ..... 87
இந்தியா-தென்கொரியா இடையிலான அரசுமுறை உறவுகள் ..... 87
இந்தியா, ஐக்கிய அரபு அமீரகம், பிரான்சு - முத்தரப்பு முன்னெடுப்பு ..... 89
12வது உலக இந்தி மொழி மாநாடு ..... 89
இந்திய அரசின் LiFE முன்னெடுப்பு குறித்த சர்வதேச எரிசக்தி முகமையின் அறிக்கை ..... 89
தோஸ்த் நடவடிக்கை ..... 90
இந்தியாவிற்கான ரஷ்ய நாட்டின் ஆயுத விநியோகம் ..... 91
TROPEX - 23 ..... 91
விண்வெளிக்குப் பயணம் மேற்கொள்ளும் முதல் சவுதி அரேபியப் பெண் ..... 92
அருணாச்சலப் பிரதேசம் குறித்த அமெரிக்க மசோதா ..... 92
உலகளாவிய மின்சாரத் தேவை ..... 93
அமெரிக்காவில் சுட்டு வீழ்த்தப்பட்ட மர்மப் பொருட்கள் ..... 94
வங்காள தேசத்தின் 22வது குடியரசுத் தலைவர் ..... 94
18வது உலகப் பாதுகாப்பு மாநாடு ..... 95
ஆசியப் பொருளாதாரப் பேச்சுவார்த்தை 2023 ..... 95
விமானச் சேவை ஒப்பந்தம் ..... 96
மாடுகளின் மூளைக்கோளாறு நோய் பாதிப்பு ..... 96
ஆராய்ச்சி மற்றும் விழிப்புணர்வுக்கான சர்வதேச சிறு தானிய முன்னெடுப்பு ..... 97
பொருளாதாரச் செய்திகள் ..... 98
சரக்கு மற்றும் சேவை வரி வருவாய் இழப்பீடு பெறும் முதல் ஐந்து மாநிலங்கள் ..... 98
2022 ஆம் ஆண்டில் MSME நிறுவனத் தயாரிப்புகளை அதிகம் வாங்கிய பிரிவுகள் ..... 99
விமான எரிவாயு ஏற்றுமதி ..... 99
கூடுதல் கண்காணிப்புச் செயல்முறை ..... 100
மத்திய வங்கியின் எண்ணிம நாணயத்தினை ரிலையன்ஸ் நிறுவனம் ஏற்பு ..... 100
இந்திய ரிசர்வ் வங்கியின் நிதியியல் கொள்கை 2023 ..... 101
UPI மூலம் எல்லை தாண்டிய பண வழங்கீடுகள் ..... 101
2021-22 ஆம் ஆண்டில் அதிக பண வரவு பதிவு ..... 102
எண்ணிம வெள்ளி நாணயம் ..... 102
இறையாண்மைப் பசுமைப் பத்திரங்களின் முதல் தவணை ..... 103
2022-23 ஆம் நிதியாண்டின் நேரடி வரி வசூல் ..... 103

ஹலோ உஜ்ஜீவன் செயலி ........ 104
இந்தியாவின் மாபெரும் ஏர்பஸ் விமான விற்பனை ஒப்பந்தம் ........ 105
சரக்கு மற்றும் சேவை வரி□□ சபையின் 49வது கூட்டம் ........ 105
கடன் வழங்கீடுகளின் எண்ணிக்கை உயர்வின் அடிப்படையில் சிறந்த செயல் திறன் கொண்ட வங்கி ........ 106
சிங்கப்பூர் அரசுடனான ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுகச் சேவை கூட்டிணைவு ........ 106
கடல்சார் உணவு ஏற்றுமதி இலக்கு ........ 106
ஆறாவது பெரிய பங்குச் சந்தை ........ 107
கிரேட் பேக்யார்டு பறவைகள் கணக்கெடுப்பு 2023 ........ 108
**அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் ........ 109**
iNCOVACC ........ 109
மார்பகப் புற்றுநோய்க்கான மருந்தின் மரபியல் சார்ந்த வடிவம் ........ 109
பூமியின் உட்கரு சுழற்சி ........ 110
50,000 ஆண்டுகளுக்குப் பிறகுத் தோன்றும் பச்சை நிற வால் நட்சத்திரம் ........ 110
மூளையின் கணக்கிடுதல் திறனை ஒத்தச் செயற்கை நரம்பிணைவுத் தொழில் நுட்பம் ........ 111
அணுக்கருப்பிளவு மூலம் இயங்கும் விண்கலம் ........ 112
அண்டார்டிகாவில் கண்டறியப்பட்ட விண்கல் ........ 112
ஒளியணுவியல் அடிப்படையிலான உலகின் முதல் குவாண்டம் கணினி ........ 113
முக்கிய பணையத்தீநிரல் வலையமைப்பு – Hive ........ 114
மகாராஷ்டிராவில் புதிய பீடபூமி ........ 114
முதலாவது காமா-கதிர் கிரகணங்கள் ........ 115
கால்நடைகளில் நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகளின் பயன்பாடு குறித்த ஆய்வு ........ 116
பாய்டு நிறுவனத்தின் உரையாடு மென்பொருள் 'எர்னி' ........ 117
கூகுள் நிறுவனத்தின் உரையாடு மென்பொருள் ‘பார்டு’ ........ 117
SSLV D2 ........ 117
செயற்கைக்கோள் வழியான இருவழிச் செய்தியிடல் சேவை ........ 118
நடுநிலை அடர்த்தி கொண்ட வடிவமற்ற பனிக்கட்டி ........ 119
குவாவார் குறுங்கோளினைச் சுற்றி காணப்படும் வளையம் ........ 119
கழிவிலிருந்து ஹைட்ரஜன் உற்பத்தி செய்யும் ஆலை ........ 120
முதலாவது மீக்காந்தங்களின் சோதனை ........ 121
அதிகத் துணைக் கோள்களை கொண்டுள்ள கிரகம் ........ 121
தியோதர் விண்கல் ........ 122
புதிய பகுதியளவுப் படிகம் ........ 123
மார்பர்க் வைரஸ் நோய் பெருந்தொற்று ........ 124
கட்புலனாகா அண்டம் ........ 124
மோப்ப சக்தி கொண்ட எந்திரங்கள் ........ 125
ஹைட்ரஜனில் இயங்கும் முதலாவது கனரக சரக்குந்து வாகனம் ........ 126
இந்தியாவின் முதல் கலப்பின ஏவுகலம் ........ 126
லெ□□□□ – ChatGPT ........ 127

நிலவில் உள்ள பசால்ட் பாறைகளின் தோற்றம் ....127
சந்திரன், வெள்ளி வியாழன் கோள்கள் ஒரே நேரத்தில் காட்சியளிப்பு ....128
ஹைப்பர்லூப் மூலமான சரக்குப் போக்குவரத்து ....129
LORA உந்துவிசை ஏவுகணை ....130
மேகக்கணிமை முறையில் கட்டமைக்கப்பட்ட உலகின் முதல் செயல்விளக்க செயற்கைக் கோள் ....131
வெர்டிபிளேன் X3 ஆளில்லா விமானம் ....131
சூரிய சக்தியில் இயங்கும் ஆளில்லா விமானம்- SURAJ ....132
'Vayulink' தளம் ....132
LLaMA மாதிரி ....133
சுற்றுச்சூழல் செய்திகள் ....134
தென்னாப்பிரிக்காவிலிருந்து அதிக எண்ணிக்கையிலான சிவிங்கிப் புலிகள் இடமாற்றம் ....134
ஆலிவ் ரிட்லி ஆமைகளின் திரளான உயிரிழப்பு ....134
சோலிகா ஈகரிநாட்டா ....135
வரித்தலை வாத்து ....136
ஆக்கிரமிப்புத் தாவரங்களை ஒழிப்பதற்கான திட்டம் ....136
புதிய ஸ்வாலோடெயில் வண்ணத்துப் பூச்சி ....137
ஆசிய நீர்ப்பறவைகள் கணக்கெடுப்பு 2023 ....138
பண்டைய காலத்தில் இருந்த ‘கடல் முதலையின்’ புதைப்படிமம் ....138
IqAir நிறுவனத்தின் காற்றுத் தரக் குறியீடு ....139
சுந்தரவனக் காடுகளில் மேற்கொள்ளப்பட்ட முதல் பறவைகள் கணக்கெடுப்பு ....140
பெரு பகுதியில் கடற்சிங்கங்கள் உயிரிழப்பு ....141
ரோடோடென்ட்ரான்ஸ் ....141
ஓமோர்கஸ் கந்தேஷ் ....142
பருவநிலை சார்ந்த திறன்மிகு கோதுமை வகை ....143
சதுப்பு நிலங்களைப் பாதுகாத்தல் பிரச்சாரம் ....143
சதுப்பு நிலங்களின் அகலிட அழிவுறா காத்தல் அமைப்பு ....144
அறிக்கைகள் மற்றும் குறியீடுகள் ....145
"Countdown to 2023" அறிக்கை ....145
உலகப் பொருளாதார நிலை மற்றும் வாய்ப்புகள் 2023 - அறிக்கை ....146
வருடாந்திர மரணத் தண்டனை அறிக்கை, 2022 ....146
வணிக மேலாண்மைக் கல்வி நிறுவனங்களின் தரவரிசை 2023 ....147
செம்மரம் கடத்தல் பற்றிய CITES தரவு ....148
உலகளாவிய தரமான உள்கட்டமைப்பு குறியீடு 2021 ....149
உலகளாவியச் சிறுபான்மையினர் அறிக்கை ....150
மாநில அரசுகளின் கல்விக்கான நிதி ஒதுக்கீடு ....150
TomTom போக்குவரத்துக் குறியீடு அறிக்கை ....151
சேவை சார்ந்த வர்த்தகக் கட்டுப்பாடு குறியீடு (STRI) ....152
மொத்த உள்நாட்டுப் பருவநிலை ஆபத்து அறிக்கை ....153
உலகத் தொழிலாளர் வள நெகிழ்திறன் குறியீடு 2023 ....154

உலகின் முன்னணி சுயாதீன ஆற்றல் உற்பத்தியாளர் ....... 155
இணைய சங்கேதப் பணத்தின் ஏற்பிற்குத் தயாராக உள்ள நாடுகள் ....... 155
மாநிலச் செய்திகள் ....... 156
ஜார்க்கண்ட் மாநிலத்தின் புலம்பெயர்ந்தோர் குறித்த முதல் கணக்கெடுப்பு ....... 156
நாகாலாந்து ஆரஞ்சு திருவிழா ....... 157
ஆந்திரப் பிரதேசத்தின் புதிய தலைநகர் ....... 157
10,000 புதிய குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களைப் பதிவு செய்த முதல் மாவட்டம் ....... 158
நிலத்தடித் தண்ணீர்ப் பயன்பாடு குறித்த பஞ்சாப் கொள்கை ....... 159
லடாக்கின் முதல் பல்லுயிர்ப் பாரம்பரியத் தளம் ....... 160
இந்தியாவின் மிகப்பெரிய ஹெலிகாப்டர் தயாரிப்பு ஆலை ....... 160
ஆசியாவின் முதல் மிதவைத் திருவிழா ....... 161
FAME திட்டத் தரவரிசை ....... 161
குழந்தைத் திருமணத் தடுப்பு நடவடிக்கை ....... 162
சிற்பப் பூங்கா ....... 162
ஜம்மு & காஷ்மீரில் லித்தியம் கனிம இருப்புகள் ....... 163
இந்தூர் மாநகராட்சிக் கழக பசுமைப் பத்திரங்கள் ....... 163
முதல் தேசிய மெட்ரோ இரயில் தகவல் மையம் ....... 164
'ஒரு குடும்பம், ஓர் அடையாள அட்டை' திட்டத்திற்கான இணைய தளம் ....... 164
உறைந்த ஏரி மீதான இந்தியாவின் முதல் மாரத்தான் போட்டி ....... 165
சர்வதேச கைவினைப் பொருட்கள் உச்சி மாநாடு ....... 166
முதலாவது இரயில் கட்டுப்பாட்டு மற்றும் மேற்பார்வை அமைப்பு ....... 166
மலையாள மொழியில் உயர்நீதிமன்ற தீர்ப்புகள் ....... 166
B20 மாநாடு ....... 166
வேளாண் துறைக்கான இந்தியாவின் முதல் உரையாடு மென்பொருள் ....... 166
கடல்சார் இடஞ்சார்ந்த திட்டமிடல் கட்டமைப்பு ....... 167
கழிவுநீர் சாக்கடைக் குழாய் சுத்திகரிப்பு எந்திரங்கள் ....... 167
பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள் ....... 168
கிருஷி மஹோத்சவம் ....... 168
இந்தியா-ஐக்கிய இராஜ்ஜியம் ஆகிய நாடுகளின் சாதனையாளர்களுக்கான விருது ....... 168
முன்னாள் சட்ட அமைச்சர் சாந்தி பூஷன் ....... 168
வாணி ஜெயராம் ....... 169
பர்வேஸ் முஷாரப் ....... 169
கிராமி விருது 2023 ....... 170
சூரஜ்குண்ட் கண்காட்சி 2023 ....... 170
"உலகின் அறிவுத் திறன்மிக்க" மாணவர்கள் பட்டியல் ....... 171
தங்கப் புத்தகம் விருதுகள் - 2023 ....... 171
ATD சிறப்பு விருதுகள் 2023 ....... 172
தமிழ்நாட்டினைச் சேர்ந்த புதிய ஆளுநர் ....... 172
தயானந்த சரஸ்வதி அவர்களின் 200வது பிறந்தநாள் (1824-1883) ....... 173

மதிப்புமிக்க விண்வெளி நிறுவன விருது ........ 174
ஷோய்சிரோ டொயோடா – ஜப்பான் ........ 174
உஸ்தாத் பிஸ்மில்லா கான் யுவ புரஸ்கார் விருது ........ 175
பிரசிடென்ட்ஸ் கலர் விருது – அரியானா ........ 175
தாதாசாகேப் பால்கே விருதுகள் ........ 176
ஆண்டின் சிறந்தப் புகைப்படங்களுக்கான விருதுகள் ........ 176
இந்தியாவின் 80வது கிராண்ட்மாஸ்டர் ........ 177
சர்வதேச கஜுராஹோ நடனத் திருவிழா 2023 ........ 177
ELECRAMA 2023 ........ 178
சன்சத் ரத்னா விருதுகள் – 2023 ........ 178
உலகின் சிறந்த M-GOV விருதுகள் ........ 179
சர்வதேச தொழிலாளர் அமைப்பின் வெளிப்புறத் தணிக்கையாளர் ........ 179
2022 ஆம் ஆண்டின் சிறந்த EY தொழில்முனைவோர் ........ 180
விளையாட்டுச் செய்திகள் ........ 181
தேசியப் பனித்தள மைதான ஹாக்கி சாம்பியன்ஷிப் போட்டி ........ 181
5வது கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டிகள் ........ 181
கேலோ இந்தியா குளிர்கால விளையாட்டுப் போட்டிகள் 2023 ........ 181
இந்திய ஓபன் பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் போட்டி 2023 ........ 182
முக்கிய தினங்கள் ........ 183
இந்தியக் கடலோரக் காவல்படை தினம் - பிப்ரவரி 01 ........ 183
உலக சமய நல்லிணக்க வாரம் - பிப்ரவரி 01- 07 ........ 183
உலக சதுப்பு நில தினம் - பிப்ரவரி 02 ........ 183
சர்வதேச மனித சகோதரத்துவ தினம் - பிப்ரவரி 04 ........ 184
உலகப் புற்றுநோய் தினம் - பிப்ரவரி 04 ........ 184
சர்வதேச பெண் பிறப்புறுப்பு சிதைப்பு எதிர்ப்பு தினம் - பிப்ரவரி 06 ........ 184
பாதுகாப்பான இணைய தினம் - பிப்ரவரி 07 ........ 185
உலகப் பருப்பு வகைகள் தினம் - பிப்ரவரி 10 ........ 185
தேசியக் குடற்புழு நீக்க தினம் - பிப்ரவரி 10 ........ 186
உலக யுனானி தினம் - பிப்ரவரி 11 ........ 186
உலக நோயாளர் தினம் - பிப்ரவரி 11 ........ 187
அறிவியல் துறையில் உள்ள பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கான சர்வதேச தினம் – பிப்ரவரி 11 ........ 187
சர்வதேச டார்வின் தினம் - பிப்ரவரி 12 ........ 188
தேசிய உற்பத்தித் திறன் தினம் – பிப்ரவரி 12 ........ 188
உலக வானொலி தினம் - பிப்ரவரி 13 ........ 189
தேசிய மகளிர் தினம் - பிப்ரவரி 13 ........ 189
சர்வதேச வலிப்பு நோய் தினம் – பிப்ரவரி 13 ........ 190
APEDA அமைப்பின் ஸ்தாபன தினம் - பிப்ரவரி 13 ........ 190
சர்வதேச குழந்தைப் பருவ புற்றுநோய் தினம் - பிப்ரவரி 15 ........ 191
நிதிசார் கல்வியறிவு வாரம் - பிப்ரவரி 13 முதல் 17 வரை ........ 191

உலக சுற்றுலா நெகிழ்திறன் தினம் - பிப்ரவரி 17 ..... 192
உலக எறும்புத் திண்ணி தினம் - பிப்ரவரி 18 ..... 192
8வது மண்வளக் குறிப்பேடுத் திட்ட தினம் - பிப்ரவரி 19 ..... 193
அருணாச்சலப் பிரதேச மாநிலத்தின் உருவாக்க தினம் - பிப்ரவரி 20 ..... 194
உலக சமூக நீதி தினம் - பிப்ரவரி 20 ..... 195
சர்வதேச தாய்மொழி தினம் - பிப்ரவரி 21 ..... 195
உலக சாரணர் தினம் - பிப்ரவரி 22 ..... 195
உலகச் சிந்தனை தினம் - பிப்ரவரி 22 ..... 196
மத்திய கலால் வரி தினம் - பிப்ரவரி 24 ..... 196
உலக தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் தினம் - பிப்ரவரி 27 ..... 197
மராத்திய மொழி தினம் - பிப்ரவரி 27 ..... 197
தேசிய அறிவியல் தினம் - பிப்ரவரி 28 ..... 197
இதரச் செய்திகள் ..... 198
கட்டாயக் குறைந்தபட்ச தண்டனை ..... 198
அதிக நஷ்டத்தில் இயங்கும் விமான நிலையங்கள் ..... 199
விண்வெளி வீரர்களுக்கான பயிற்சிப் பெட்டகம் ..... 199
ஆசிய காண்டாமிருகங்கள் வசிக்கும் நாடுகளின் கூட்டம் ..... 200
முசிரிஸ் பற்றிய BBC ஆவணப்படம் ..... 201

# TNPSC துளிகள்

- பல்வேறு உள்கட்டமைப்புத் திட்டங்களைச் செயல்படுத்தச் செய்வது தொடர்பாக அமைச்சகங்களுக்கு இடையே தற்போது காணப்படும் பல்வேறு சிக்கல்களைத் தீர்ப்பது தொடர்பாக விவாதிப்பதற்காக வேண்டி புது டெல்லியில் நடத்தப்பட்ட உள் கட்டமைப்புக் குழுவின் 10வது கூட்டத்திற்குச் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ் சாலைகள் துறை அமைச்சர் நிதின் கட்காரி தலைமை தாங்கினார்.
- இந்த ஆண்டின் 'ஏரோ இந்தியா 2023' என்ற நிகழ்வானது பெங்களூரு நகரில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.
- இந்தியாவின் தேசியப் பங்குச் சந்தையானது, 2022 ஆம் ஆண்டில் உலகின் மிகப் பெரியப் பங்குப் பரிமாற்றச் சந்தையாக மீண்டும் உருவெடுத்துள்ளது.
    - தொடர்ந்து நான்காவது ஆண்டாக இந்தச் சந்தை முதலிடத்தைப் பெற்றுள்ளது.
- மத்திய நிதியமைச்சரின் அறிவிப்பின்படி, 2023 ஆம் ஆண்டில் வருமான வரி கணக்குத் தாக்கல் செய்வதற்கான சராசரிச் செயல்முறைக் காலமானது 93 நாட்களிலிருந்து 16 நாட்களாகக் குறைக்கப்பட்டுள்ளது.
- PVR சினிமாஸ் நிறுவனமானது, சென்னையில் உள்ள விமான நிலைய வளாகத்தில் இந்தியாவின் முதலாவது பல்லரங்கத் திரையரங்கத்தினைத் தொடங்கியுள்ளது.
- G20 அமைப்பிற்கான இந்தியாவின் தலைமைத்துவத்தின் கீழான முதலாவது G20 சர்வதேச நிதிக் கட்டமைப்புப் பணிக் கட்டுப்பாட்டுக் குழு கூட்டமானது சண்டிகரில் நடைபெற்றது.
- 74வது குடியரசுத் தின அணிவகுப்பில் பங்கேற்ற குஜராத் மாநிலத்தின் காட்சி வாகனமானது, 'மக்கள் விருப்பம்' என்ற பிரிவில் முதல் இடத்தைப் பிடித்துள்ளது.
- கௌதம் அதானியின் நிறுவனமானது, அதன் கார்பன் நீக்கத் திட்டத்தின் ஒரு பகுதியாக, ஆசியாவிலேயே முதல்முறையாக, ஹைட்ரஜன் எரிபொருள் மின்கலம் மூலம் இயக்கப்படும் சரக்குந்துகளைச் சுரங்கத் தளவாடங்கள் மற்றும் அதன் போக்குவரத்திற்காகப் பயன்படுத்தவுள்ளது.
- ஒரு மாத காலம் நடைபெறும் 2023 ஆம் ஆண்டு காதித் திருவிழாவானது மும்பையில் தொடங்கப் பட்டது.
- லூமினஸ் பவர் டெக்னாலஜிஸ் நிறுவனமானது, இந்தியாவின் முதல் பசுமை ஆற்றல் அடிப்படையிலான சூரிய சக்தி மின்தகடுகள் உற்பத்தி ஆலையினை உத்தரகாண்டில் அமைக்கத் திட்டமிட்டுள்ளது.
- அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலக் கடற்கரையிலிருந்து ஏவப்பட்ட ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் ஃபால்கன் 9 ஏவுகலமானது, 51 ஸ்டார்லிங்க் செயற்கைக் கோள்களைப் புவித் தாழ்மட்டச் சுற்றுப் பாதைக்குக் கொண்டு சென்றது.
- பிரிட்டிஷ் பொருளாதார நிபுணர் மேக்நாத் தேசாய் "The Poverty of Political Economics" என்ற புதியப் புத்தகத்தை எழுதியுள்ளார்.
- அதானி குழுமம் ஆனது, இஸ்ரேலின் உத்திசார் முக்கியத்துவம் வாய்ந்த ஹைஃபா துறைமுகத்தினை 1.2 பில்லியன் அமெரிக்க டாலர்களுக்கு வாங்கியுள்ளது.
    - ஹைஃபா துறைமுகம் இஸ்ரேலின் கொள்கலன் கப்பல் போக்குவரத்தின் அடிப்படையில் இரண்டாவது பெரிய துறைமுகம் மற்றும் சுற்றுலா பயணக் கப்பல்கள் போக்குவரத்தில் மிகப்பெரிய துறைமுகமாகும்.

- அசாம் மாநில அரசானது, 2023 ஆம் ஆண்டு இளையோர் 20 (Y20) சந்திப்பின் தொடக்கக் கூட்டத்தினை குவஹாத்தி நகரில் நடத்தியது.
- குஜராத் அரசானது ரான் ஆஃப் கட்ச் பகுதியில் G20 சுற்றுலாப் பணிக் கட்டுப்பாட்டுக் குழுவின் (TWG) தொடக்கக் கூட்டத்தினை நடத்தியது.
- மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகமானது, G20 அமைப்பிற்கான இந்தியாவின் தலைமையின் கீழ், 400 உள்நாட்டு மற்றும் சர்வதேசப் பங்கேற்பாளர்கள் பங்கு பெற்ற G20 இணையவெளிப் பாதுகாப்புப் பயிற்சியினை மேற்கொண்டது.
- மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையமானது, இந்தியத் தலைமை மருந்துக் கட்டுப்பாட்டு அமைப்பின் (DCGI) தலைவராக டாக்டர் ராஜீவ் சிங் ரகுவன்ஷி என்பவரை நியமிப்பதற்குப் பரிந்துரை செய்துள்ளது.
- மத்திய இளையோர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் அனுராக் தாக்கூர் மற்றும் ஜம்மு காஷ்மீரின் துணை நிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா ஆகியோர் மூன்றாவது கேலோ இந்தியா குளிர்கால விளையாட்டுப் போட்டிகளின் சின்னம், கருத்தாக்கப் பாடல் மற்றும் உடை ஆகியவற்றினை வெளியிட்டனர்.
- ஒடிசா மாநில முதல்வரின் செயலாளரான V.K. பாண்டியன், ஹாக்கித் துறையில் ஆற்றிய சிறந்தப் பங்களிப்பிற்காக 2023 ஆம் ஆண்டிற்கான FIH பிரசிடென்ஸ் விருது வழங்கி கௌரவிக்கப் பட்டார்.
- பெங்களூருவில் நடைபெற்ற முதலாவது எரிசக்திப் பரிமாற்றங்களுக்கான ஒரு பணிக் கட்டுப்பாட்டுக் குழு கூட்டத்தில் பங்கேற்ற G20 அமைப்பின் உறுப்பினர் நாடுகள், ஆற்றல் பாதுகாப்பை அடைவதற்கும், புதிய எரிசக்தி வளங்களின் பன்முகப் படுத்தப் பட்ட விநியோகச் சங்கிலிகளை அடைவதற்கும் முன்னுரிமைப் பகுதிகளில் கூட்டு முயற்சிகளை மேற்கொள்வதற்கு ஒப்புக் கொண்டன.
- தும்கூரு தொழில்துறை நகரம் என்ற திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட முதலாவது தொழில்துறை வழித்தடத்தினைப் பிரதமர் சமீபத்தில் தொடங்கி வைத்தார்.
    - இது தென்னிந்தியாவின் முதலாவது தொழில்துறை வழித்தடமாகும்.
- போட்டிச் சூழலுக்கு எதிரான நடைமுறைகளை ஆய்வு செய்த பின்னர் எண்ணிமத் துறைக்கான போட்டிச் சூழல் சட்டத்தினை மூன்று மாதங்களுக்குள் உருவாக்கச் செய்வதற்காக மனோஜ் கோவில் தலைமையின் கீழ் ஒன்றிய அரசுச் செயலாளர்கள், சட்ட வல்லுநர்கள் மற்றும் தொழில்துறைப் பங்குதாரர்கள் ஆகியோரை உள்ளடக்கிய 16 பேர் கொண்ட ஒரு குழுவை அரசாங்கம் நியமித்துள்ளது.
- தெலுங்கானா மாநில அரசானது, இந்தியாவில் உள்ள நிலையானப் போக்குவரத்து அமைப்புகளை மேலும் மேம்படுத்துவதற்காக ஹைதராபாத் மற்றும் அதைச் சுற்றி நான்கு மாபெரும் தொகுப்புகளை அமைப்பதற்கான தெலுங்கானா போக்குவரத்துப் பள்ளத்தாக்குப் பகுதி திட்டத்தினை (TMV) அறிவித்துள்ளது.
    - இது இந்தியாவின் முதலாவது போக்குவரத்துப் பள்ளத்தாக்குப் பகுதி திட்டமாகும்.
- ஜார்க்கண்டில் அமைக்கப்பட உள்ள இந்தியாவின் ஐந்தாவது நுண் யூரியா உற்பத்தி ஆலைக்குச் சமீபத்தில் அடிக்கல் நாட்டப்பட்டது.
- தேசியக் கடற்கரைத் தளக் கால்பந்து சாம்பியன்ஷிப் போட்டியில் அதன் தொடக்க சாம்பியன்ஷிப் பட்டத்தைக் கேரள அணி வென்றது.
- இந்திய அரசாங்கம் தனது 33.44% பங்குகளுடன் Vi (வோடபோன் ஐடியா) நிறுவனத்தின் மிகப்பெரியப் பங்குதாரராக மாற உள்ளது.

- இந்திய சுழற்பந்து வீச்சாளர் R. அஷ்வின் கும்ப்ளேவின் சாதனையினை விஞ்சி (93வது போட்டியில்), 89வது டெஸ்ட் போட்டியில் 450வது விக்கெட்டுகளை வீழ்த்திய துரிதமான இந்தியப் பந்து வீச்சாளர் என்ற பெருமையினைப் பெற்றுள்ளார்.
- 8வது ICC மகளிர் டி20 கிரிக்கெட் உலகக் கோப்பைப் போட்டியானது, தற்போது தென் ஆப்பிரிக்காவில் நடைபெற்று வருகிறது.
- குருகிராமிலுள்ள ஆளில்லா விமானச் சேவை வழங்கீட்டு நிறுவனமான ஸ்கை ஏர், இந்தியாவில் ஆளில்லா விமானங்களுக்கானப் போக்குவரத்து மேலாண்மை அமைப்பினை அறிமுகப் படுத்தியுள்ளது.
- ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுகச் செயலியில் RuPay கடன் அட்டைச் சேவையினை வழங்கும் முதல் நிதித்தொழில்நுட்பம் சார்ந்த செயலியாக மொபிக்விக் மாறியது.
- சல்மான் ருஷ்டி "Victory City" எனப்படும் விஜயநகர பேரரசினைப் பற்றிய கற்பனையான கதை அடங்கிய ஒரு புதிய புனைவுக் கதையினை வெளியிட்டுள்ளார்.
- மூத்தப் பத்திரிகையாளர் டாக்டர் A.B.K. பிரசாத், பத்திரிக்கைத் துறையில் ஆற்றிய சிறப்பான பணிக்காக மதிப்பு மிக்க "2020 ஆம் ஆண்டு இராஜா இராம் மோகன் ராய் தேசிய விருதிற்கு" தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- டாடா ஆலோசனை சேவை வழங்கீட்டு நிறுவனமானது ஃபார்ச்சூன் இதழ் வெளியிடும் உலகின் மிகவும் போற்றப்படும் நிறுவனங்களின் பட்டியலில் இடம் பெற்றுள்ளது.
- பாகிஸ்தான் கிரிக்கெட் அணித் தலைவர் பாபர் அசாம், ICC ஆடவர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியின் ஆண்டின் சிறந்த வீரராக அறிவிக்கப் பட்டதையடுத்து, 2022 ஆம் ஆண்டிற்கான ICC ஆடவர் கிரிக்கெட் போட்டியின் ஆண்டின் சிறந்த வீரருக்கான சர் கார்பீல்ட் சோபர்ஸ் கோப்பையினை வென்றார்.
- உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி அப்துல் நசீர் அவர்கள் ஆந்திரப் பிரதேச மாநிலத்தின் ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- டெல்லி-மும்பை விரைவுச் சாலையில் அமைந்த 246-கி.மீ. நீள சோஹ்னா-தௌசா-லால்சோட் என்ற சாலையினை பிரதமர் அவர்கள் திறந்து வைத்தார்.
  - வனவிலங்குகளின் நடமாட்டத்திற்காக வேண்டி பாதுகாப்பான வழித் தடங்களைக் கொண்டுள்ள வகையில் இது ஆசியக் கண்டத்தில் முதலாவது ஆகும்.
- 19 வயதிற்குட்பட்ட மகளிருக்கான T20 உலகக் கோப்பைப் போட்டியின் உறுப்பினரான டைட்டஸ் சாது, கொல்கத்தாவில் நடைபெற்ற 2023 ஆம் ஆண்டு ஸ்போர்ட்ஸ்டார் ஈஸ்ட் விளையாட்டுப் போட்டிகள் மாநாட்டில் 'வளர்ந்து வரும் நாயகன்' விருதை வென்றார்.
- G20 அமைப்பிற்கான இந்தியாவின் தலைமைத்துவத்தின் ஒரு பகுதியாக, மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகம் ஆனது (MeitY) உத்தரப் பிரதேசத்தின் லக்னோ நகரில் முதலாவது எண்ணிமப் பொருளாதாரப் பணிக் கட்டுப்பாட்டுக் குழு (DEWG) கூட்டத்தினை நடத்தியது.
- மத்தியக் கலாச்சார அமைச்சகம் ஆனது மும்பை நகரில் உள்ள ஆசாத் மைதானத்தில் 2023 ஆம் ஆண்டு ராஷ்ட்ரிய சமஸ்கிருதி மஹோத்சவ் நிகழ்ச்சியை நடத்த உள்ளது.
- இந்தியாவின் முதலாவது குளிரூட்டப்பட்ட இரட்டை அடுக்கு மின்சாரப் பேருந்து சேவையானது மும்பையின் பேருந்துச் சேவையில் சேர்க்கப்பட்டது.
- மத்திய இரசாயனம் மற்றும் உரங்கள் துறை அமைச்சர் டாக்டர் மான்சுக் மாண்டவியா, உத்தரப் பிரதேசத்தில் உள்ள அயோன்லா மற்றும் புல்பூர் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள IFFCO திரவ நுண் யூரியா உற்பத்தி ஆலைகளை திறந்து வைத்தார்.

- PEPSICO மற்றும் CARE ஆகிய நிறுவனங்களின் மனிதநேய உதவி வழங்கீட்டு அறக் கட்டளை அமைப்புகள் ஒன்று சேர்ந்து "She Feeds the World" என்ற ஒரு திட்டத்தினை இந்தியாவில் அறிமுகப்படுத்தியுள்ளன.
    - வேளாண் துறையில் பெண்களுக்கு அதிகாரம் அளிக்கச் செய்வதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.
- இந்திய அமெரிக்கரான நீல் மோகன், யூடியூப் ஊடகத்தின் புதிய தலைமை நிர்வாக அதிகாரியாக நியமிக்கப் பட்டுள்ளார்.
- இந்தியாவின் விமானப் பாதுகாப்பு மேற்பார்வை நடவடிக்கையின் தரவரிசையானது 112வது இடத்தில் இருந்து 55வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.
    - விமானப் போக்குவரத்து பொது இயக்குனரகத்தின் கருத்துப் படி, இந்தத் தர வரிசை சர்வதேச விமானப் போக்குவரத்து அமைப்பால் வெளியிடப் பட்டது.
- மும்பையின் மரோல் எனுமிடத்தில் அமைக்கப்பட்டுள்ள அல்ஜமியா-துஸ்-சைஃபியா அரேபிய அகாடமியின் புதிய வளாகத்தைப் பிரதமர் திறந்து வைத்தார்.
    - இது தாவூதி போஹ்ரா என்ற சமூகத்தின் முதன்மையான ஒரு கல்வி நிறுவனம் ஆகும்.
- 23வது இந்தியச் சர்வதேசக் கடல் உணவுக் கண்காட்சியானது (IISS-2023), கொல்கத்தா நகரில் நடைபெற்றது.
- வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகம் ஆனது சமீபத்தில் கோவாவின் பனாஜி நகரில் இரண்டு நாட்கள் அளவிலான திறன்மிகு நகரங்களின் தலைமை நிர்வாக அதிகாரிகள் மாநாட்டினை நடத்தியது.
- மத்தியச் சுற்றுலாத் துறை அமைச்சகமானது, சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறையில் காணப்படும் வாய்ப்புகளை வெளிப்படுத்தும் வகையில் முதலாவது உலகச் சுற்றுலா முதலீட்டாளர்கள் உச்சி மாநாட்டினைப் புது டெல்லியில் நடத்தவுள்ளது.
- இந்தியத் தேர்தல் ஆணையமானது, 'தொழில்நுட்பத்தின் பயன்பாடு மற்றும் தேர்தல் நடைமுறையில் நேர்மை' என்ற ஒரு தலைப்பில் 2வது சர்வதேச மாநாட்டினைப் புது டெல்லியில் நடத்தியது.
- சத்ரபதி சிவாஜி மகாராஜா அவர்களின் 393வது பிறந்தநாள் விழாவானது, ஆக்ரா கோட்டையின் திவான்-இ-ஆம் வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது.
- யுனிசெஃப் அமைப்பிற்கான இந்தியத் தேசியத் தூதராக நடிகர் ஆயுஷ்மான் குரானா நியமிக்கப் பட்டுள்ளார்.
- மத்திய அரசின் முன்னாள் வர்த்தக செயலாளரும், ஓய்வு பெற்ற அரசு நிர்வாக அதிகாரியான B.V.R.சுப்ரமணியம் அவர்கள் நிதி ஆயோக் அமைப்பின் தலைமை நிர்வாக அதிகாரியாக (CEO) நியமிக்கப்பட்டுள்ளார்.
- மகாராஷ்டிரா மாநிலத்தின் நாக்பூரில் அமைக்கப்பட உள்ள திவ்யாங் பூங்கா எனப் படும் உலகின் மிகப்பெரிய மற்றும் தனித்துவமான, அனுபூதி என்ற உள்ளார்ந்த அம்சங்கள் கொண்ட ஒரு பூங்காவிற்கு மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் நிதின் கட்கரி அடிக்கல் நாட்டினார்.
- வேதாந்தா மற்றும் ஃபாக்ஸ்கான் ஆகிய நிறுவனங்களுக்கு இடையேயான ஒரு கூட்டு முதலீட்டு நிறுவனமானது இந்தியாவின் முதலாவது குறைகடத்தி மற்றும் திரைச் சாதனத் தயாரிப்பு மையத்தினை குஜராத் மாநிலம் அகமதாபாத் நகரில் அமைக்க உள்ளது.
- மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளிப்புத் துறை அமைச்சர் வீரேந்திர குமார் அவர்கள், மும்பையில் நடைபெற உள்ள 2023 ஆம் ஆண்டு திவ்ய கலா மேளாவினைத் தொடங்கி வைத்தார்.

- பிலிப்ஸ் வீட்டு உபயோகப் பொருட்கள் உற்பத்தி நிறுவனமானது, தனது நிறுவனத்தின் பெயரை வெர்சுனி என மாற்றுவதாக அறிவித்துள்ளது.
- G20 அமைப்பிற்கான இந்தியாவின் தலைமைத்துவத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள விவசாயப் பணிக் கட்டுப்பாட்டுக் குழுவின் முதல் விவசாயத்துறைப் பிரதிநிதிகள் கூட்டமானது (ADM) இந்தூர் நகரில் நடத்தப்பட்டது.
- உலக சுகாதார அமைப்பானது, mRNA சார்ந்த (தூது ரிபோநியூக்ளிக் அமிலம்) தடுப்பு மருந்து உற்பத்தி மையத்தினைத் தெலுங்கானாவில் அமைக்கவுள்ளது.
- G20 கலாச்சாரப் பணிக் கட்டுப்பாட்டுக் குழுவின் முதல் கூட்டமானது மத்தியப் பிரதேசத்தின் கஜுராஹோ நகரில் நடத்தப் பட்டது.
- G20 அமைப்பிற்கான இந்தியாவின் தலைமைத்துவத்தின் கீழான, G20 அமைப்பு நாடுகளின் நிதி அமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்களின் (FMCBG) முதல் கூட்டமானது, கர்நாடகாவின் பெங்களூரு நகரில் தொடங்கியது.
- G20 அமைப்பின் சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை நிலைத் தன்மை பணிக் கட்டுப்பாட்டுக் குழுவின் (ECSWG) முதலாவது சந்திப்பானது (2023) பெங்களூரு நகரில் நடைபெற்றது.
- கோல் இந்தியா லிமிடெட் நிறுவனமானது, 30 பணி நிறுத்தப்பட்டச் சுரங்கங்களைச் சுற்றுச்சூழல் சார் பூங்காக்கள் மற்றும் சுற்றுச்சூழல் சார் சுற்றுலாத் தலங்களாக மாற்றியுள்ளது.
- டெல்லி மெட்ரோ இரயில் நிர்வாகமானது, Momentum 2.0 எனப்படும் இந்தியாவின் முதல் மெய்நிகர் வணிகச் செயலியினை விரைவில் அறிமுகப்படுத்தவுள்ளது.
    - இது மெட்ரோ இரயில் பயணிகள் பொருட்களை வாங்கவும், சேவைகளைப் பதிவு செய்யவும் மற்றும் இரயில் நிலையங்களில் உணவு விநியோகச் சேவைகளைப் பெறவும் வழிவகை செய்யும்.
- ஒடிசாவில் உள்ள பழங்குடியின மொழிகளை மேம்படுத்துவதற்கானப் பணிக்காக இந்தியக் கல்வியாளர் மற்றும் சமூக சேவகர் டாக்டர் மகேந்திர குமார் மிஸ்ரா அவர்களுக்கு, வங்காளதேசப் பிரதமர் ஷேக் ஹசீனா அவர்கள் டாக்காவில் நடைபெற்ற விழா ஒன்றில் சர்வதேசத் தாய்மொழி விருதை வழங்கினார்.
    - இந்த விருதினைப் பெறும் முதல் இந்தியர் என்ற பெருமையினை இவர் பெற்று உள்ளார்.
- ஐக்கிய அரபு அமீரகம் ஆனது அபுதாபியில் நடைபெற உள்ள I2U2 அமைப்பின் முதலாவது துணை அமைச்சர்கள் கூட்டத்தினை நடத்த உள்ளது.
    - இதில் இந்தியா, இஸ்ரேல், அமெரிக்கா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகள் பங்கேற்க உள்ளன.
- இந்தியக் கடற்படையானது, ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள காக்கிநாடா அருகே இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மேற்கொள்ளப்படும் AMPHEX 2023 என்ற இருதரப்பு முப்படைகளுக்கான கடல் மற்றும் நிலப்பரப்பு சார்ந்த ஒரு பயிற்சியினை மேற் கொண்டது.
- எல்லைப் பாதுகாப்புப் படையானது, குஜராத்தின் சர் க்ரீக் பகுதி முதல் ரான் ஆஃப் கட்ச் வரையிலும் மற்றும் ராஜஸ்தானின் பார்மர் மாவட்டம் வரையிலும் அமைந்த இந்திய-பாகிஸ்தான் எல்லையில் 'ஆப்ஸ் அலர்ட்' என்ற பயிற்சியினை மேற்கொண்டது.

# தமிழ்நாடு செய்திகள்

## மாநில அரசின் அனைத்துப் பணிகளுக்கும் கட்டாயத் தமிழ் மொழி

- ❖ மாநில அரசுப் பணிகளில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான தேர்வுகளில் தமிழ் மொழித் தாளைக் கட்டாயமாக்கும் மசோதாவினை தமிழ்நாடு சட்டமன்றம் ஏற்றுக் கொண்டு உள்ளது.
- ❖ இந்த ஆணையை நடைமுறைப்படுத்துவதற்காக 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (சேவை நிபந்தனைகள்) சட்டத்தில் ஒரு புதிய விதியை அரசு சேர்த்து உள்ளது.
- ❖ இது 2021 ஆம் ஆண்டு டிசம்பர் 01 ஆம் தேதி முதல் பின்தேதியிட்டுப் பொருந்தும் வகையில் நடைமுறைக்கு வந்தது.

## பூம்புகார் என்ற துறைமுக நகரத்தின் காலம்

- ❖ பூம்புகார் என்பது தமிழ்நாட்டில் தற்போதைய மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள கடல் நீரில் மூழ்கிய ஒரு பழங்காலத் துறைமுக நகரமாகும்.
- ❖ காவேரிப் பூம்பட்டினம் என்றும் அழைக்கப்படும் பூம்புகார் நகரானது, சுமார் 1,000 ஆண்டுகளுக்கு முன்பு கடல்சார் வரைபடத்தில் இருந்து மறைவதற்கு முன்பாக, தென் கிழக்கு ஆசியா மற்றும் எகிப்து ஆகிய நாடுகளுடன் கடல் சார் ரீதியில் வணிகத் தொடர்புகளைக் கொண்டிருந்தது என்று முந்தைய ஆய்வுகள் நிரூபித்துள்ளன.
- ❖ சோழப் பேரரசின் போது முக்கியத்துவம் பெற்ற இந்தத் துறைமுக நகரமானது சுமார் 2,500 ஆண்டுகள் பழமையானது என்று ஆரம்பத்தில் நம்பப் பட்டது.
- ❖ கடலோர ஆய்வுகள் மற்றும் புவியியல் அம்சங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமீபத்திய ஆய்வில், இந்த நகரம் குறைந்தது 15,000 ஆண்டுகள் பழமையானது என மதிப்பிடப் பட்டுள்ளது.





## தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள முனைவர் பட்டம் பெற்ற பட்டதாரிகள்

- ❖ நாட்டிலேயே அதிக முனைவர் பட்டம் பெற்ற பட்டதாரிகளைக் கொண்ட மாநிலமாக தமிழ்நாடு மீண்டும் உருவாகியுள்ளது.

- 2020-21 ஆம் கல்வியாண்டில் 3,206 முனைவர் பட்டம் பெற்ற பட்டதாரிகளை இந்த மாநிலம் உருவாக்கியுள்ளது.
- இதில் 1,493 பெண்கள் மற்றும் 1,713 ஆண்கள் ஆராய்ச்சி அறிஞர்கள் ஆவர்.
- 2,217 முனைவர் பட்டங்களை வழங்கியதன் மூலம் உத்தரப் பிரதேச மாநிலமானது இந்தப் பட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ளது.
- கர்நாடகா மற்றும் டெல்லி ஆகியவை முறையே 2,125 மற்றும் 2,055 முனைவர் பட்டங்களைப் பெற்ற பட்டதாரிகளை உருவாக்கி மூன்றாவது மற்றும் நான்காவது இடங்களில் உள்ளன.
- 2019-2020 ஆம் ஆண்டு உயர்கல்வி குறித்த அகில இந்திய ஆய்வறிக்கையின் படி, தமிழ்நாடு 5,324 முனைவர் பட்டங்களைப் பெற்ற மாணவர்களை உருவாக்கியுள்ளது.

## உயர்கல்வியில் மொத்தச் சேர்க்கை விகிதம்

- தமிழ்நாட்டின் மொத்தச் சேர்க்கை விகிதம் ஆனது, முந்தைய ஆண்டை விட 2020-21 ஆம் ஆண்டில் 2.1 சதவிகிதப் புள்ளிகள் குறைந்து 46.9% ஆக உள்ளது.
- இந்திய அளவிலான மொத்தச் சேர்க்கை விகிதம் ஆனது 25.6 சதவீதத்திலிருந்து 27.3% ஆக ஒரு சிறிய உயர்வினைக் கண்டுள்ளது.
- மொத்தச் சேர்க்கை விகிதத்தில் சரிவைக் கண்ட மிக சில மாநிலங்களில் தமிழகமும் ஒன்றாக உள்ளது.
- கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழகத்தின் மொத்தச் சேர்க்கை விகிதத்தில் சரிவு பதிவு ஆகியது இதுவே முதல் முறையாகும்.
- மொத்தச் சேர்க்கை விகிதத்தில் சரிவு இருந்த போதிலும், பல்வேறு முக்கிய மாநிலங்களுள் அதிக மொத்தச் சேர்க்கை விகிதம் கொண்ட மாநிலமாக தமிழகம் தொடர்ந்து திகழ்கிறது.
- தமிழ்நாடு மாநிலத்தினை அடுத்து உத்தரகாண்ட் (45.7%) மற்றும் கேரளா (43.2%) ஆகிய மாநிலங்கள் உள்ளன.
- சண்டிகர், புதுச்சேரி மற்றும் டெல்லி ஆகிய ஒன்றியப் பிரதேசங்களில் முறையே அதிக பட்சமாக 66.1%, 60.8% மற்றும் 47.6% மொத்தச் சேர்க்கை விகிதம் பதிவாகி உள்ளது.



## சிறந்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள்

- மருத்துவக் கல்வி இயக்குநரகமானது, மருத்துவக் கல்லூரி சார்ந்த மருத்துவ மனைகளின் செயல்திறன் அடிப்படையிலான ஒரு தரவரிசைப் பட்டியலை வெளியிட்டுள்ளது.
- சென்னையில் உள்ள சென்னை இராஜீவ் காந்தி அரசுப் பொது மருத்துவமனை (RGGGH) ஆனது 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் அக்டோபர் மாதம் வரையிலான காலகட்டத்திற்கு மேற்கொள்ளப்பட்ட இத்தரவரிசையில் முதலிடத்தைப் பிடித்தது.
- சேலம் மற்றும் கோவையில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் ஆகியவை இதில் முறையே இரண்டு மற்றும் மூன்றாவது இடங்களைப் பெற்றுள்ளன.



A long wait: Women waiting at the outpatient department of the Rajiv Gandhi Government General Hospital.
B. JOTHI RAMALINGAM

## சென்னை உயர்நீதிமன்றம் - ஐந்து புதிய நீதிபதிகள்

- குடியரசுத் தலைவர், சென்னை உயர்நீதிமன்றத்திற்கு ஐந்து கூடுதல் நீதிபதிகளை நியமித்தார்.
- ஐந்து புதிய நீதிபதிகள் நியமிக்கப்பட்டதன் மூலம், 52 என்ற அளவாக இருந்த உயர் நீதிமன்றத்தின் பணியில் உள்ள நீதிபதிகளின் எண்ணிக்கையானது 57 ஆக உயர்ந்து உள்ளது.
- சென்னை உயர் நீதிமன்றத்திற்கு அனுமதிக்கப்பட்ட நீதிபதிகளின் எண்ணிக்கை 75 ஆகும்.
- மூன்று புதிய பெண் நீதிபதிகள் பதவியேற்ற பிறகு உயர் நீதிமன்றத்தில் உள்ள பெண் நீதிபதிகளின் எண்ணிக்கை 14 ஆக உயர்ந்தன் மூலம் அது எப்பொழுதும் இல்லாத அளவிற்கு உயர்ந்துள்ளது.
- புதிய நீதிபதிகளில் ஒருவரான திருமதி விக்டோரியா கௌரி என்பவரது நியமனத்தை சென்னையைச் சேர்ந்த ஒரு வழக்கறிஞர்கள் குழு அவர் மதச் சிறுபான்மையினருக்கு எதிராக "வெறுக்கத் தக்க உரைகளை" வழங்கியதாகக் கூறி எதிர்த்தது.
- ஆனால் அவர் பதவிப் பிரமாணம் செய்து முடித்ததையடுத்து, அவரது தகுதி அடிப்படையில் இந்த வழக்குகளை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.



## 'புதுமைப் பெண்' திட்டத்தின் இரண்டாம் கட்டம்





- ❖ மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தினைத் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.
- ❖ இத்திட்டத்திற்கு 'புதுமைப் பெண்' என்று பெயரிடப்பட்டுள்ளது.
- ❖ இது சமூக நலத்துறை மற்றும் பெண்களுக்கு அதிகாரமளித்தல் துறையால் செயல் படுத்தப் படுகிறது.
- ❖ இந்தத் திட்டமானது, அரசுப் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்த மாணவிகளுக்கு மாதம் ரூ.1,000 மதிப்பிலான நிதியுதவி வழங்கச் செய்வதை நோக்கமாகக் கொண்டது.
- ❖ இந்தத் திட்டத்தின் முதல் கட்டத்தினை முதல்வர் அவர்கள் செப்டம்பர் மாதத்தில் தொடங்கி வைத்த நிலையில், இதன் மூலம் 1.16 லட்சம் மாணவர்கள் பயனடைந்து உள்ளனர்.

## கி.மு. 800 காலகட்டத்தினைச் சேர்ந்த சங்க காலம் - தொல்லியல் கண்டுபிடிப்பு

- ❖ சமீபத்திய அறிக்கையில், தொல்லியல் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் சங்க காலம் ஆனது கி.மு.800 என்ற காலத்தினைச் சேர்ந்ததாகக் கூறப்படுகிறது.
- ❖ 2014 மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட கீழடி அகழ்வாராய்ச்சியினை மேற்கொண்ட கே அமர்நாத் ராமகிருஷ்ணா தலைமையிலான ஆய்வுக் குழுவானது, இந்தியத் தொல்லியல் துறையின் தலைமை இயக்குநரான வி வித்யாவதியிடம் முதல்

இரண்டு கட்டங்களின் போது மேற்கொள்ளப் பட்ட தனது 982 பக்க அறிக்கையைச் சமீபத்தில் சமர்ப்பித்துள்ளது.

- முதல் இரண்டு கட்டங்களில் கண்டெடுக்கப்பட்டப் பண்பாடு சார்ந்தப் படிமங்களின் பாறைப் படிவியல் முடிவுகளின் அடிப்படையில், இந்த சங்க காலத் தொல்பொருள் தளத்தின் காலம் ஆனது கி.மு. 8 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 3 ஆம் நூற்றாண்டு வரையிலானதாகக் கூறப்படுகிறது.
- சங்க காலம் ஆனது கி.மு. 300 முதல் கி.பி. 300 வரை தொடர்ந்ததாக இது வரை நம்பப் பட்டது.
- இந்தப் புதிய அறிக்கையானது சங்க காலத்தினைக் கி.மு. 800 முதல் கி.பி. 300 வரையிலான காலத்தினைச் சேர்ந்ததாக மாற்றியமைக்கிறது.
- மேலும் வரலாற்றின் இந்தக் காலகட்டமானது, மூன்று காலகட்டங்களாக வகைப் படுத்தப் பட்டுள்ளது.
    - கி.மு. 800 முதல் கி.மு. 500 வரையிலான காலம் - வரலாற்றுக்கு முந்தைய காலம்
    - கி.மு. 500 முதல் கி.மு. 1 ஆம் நூற்றாண்டின் இறுதி வரையிலான காலம் - நன்கு வளர்ச்சி பெற்ற ஆரம்பகால வரலாற்றுக் காலம்
    - கி.மு. 1 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 300 வரையிலான காலம் ஆரம்பகால வரலாற்றிற்குப் பிந்தைய காலம்
- கீழடி என்பது தமிழ்நாட்டின் மதுரை நகருக்கு அருகில் அமைந்துள்ள ஒரு குக்கிராமமாகும்.
- இது வைகை ஆற்றின் கரையில் அமைந்துள்ளது.




## 11 ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த தமிழ் கல்வெட்டு

- திருச்சி மாவட்டம் லால்குடி அருகே சோழர் காலத்தினைச் சேர்ந்த சிதிலமடைந்த ஒரு கோயிலைக் குறிக்கும் கல்வெட்டுகளை இரண்டு கல்வெட்டு வல்லுநர்கள் கண்டு பிடித்துள்ளனர்.
- இது சோழர் காலத்தில் இருந்த ஒரு பழமையான கோவிலைக் குறிக்கிறது.
- இந்த அழிந்து போன கோவிலின் காலம் கிபி 11 ஆம் நூற்றாண்டு என்று அவர்கள் மதிப்பிட்டுள்ளனர்.

- முதலாம் குலோத்துங்க சோழன் ஆட்சியின் போது, திரு அயோத்தியாழ்வார் கோயில் மண்டபத்தில், கிராம நிர்வாகக் குழு கூடி நிர்வாகப் பணிகள் மேற்கொள்வது பற்றி விவாதித்ததாக இந்தக் கல்வெட்டு குறிப்பிடுகிறது.



## புதிய மின்சார வாகனக் கொள்கை



- 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார வாகனக் கொள்கையினை முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார்.
- இது பொது மற்றும் தனியார் மின்னேற்ற நிலையங்கள் மற்றும் மின்கல மாற்று நிலையங்களை நிறுவுவதற்கான மூலதனத்திற்கு மானியங்களை வழங்குகிறது.
- இது மறுசீரமைப்பு மற்றும் மறு உற்பத்தி ஆகியவற்றிற்கு வழங்கப்படும் சிறப்புத் தேவை சார்புச் சலுகைகளைக் குறிப்பிடுகிறது.
- மாநிலத்தில் இயங்கி வரும் பொது மற்றும் தனியார் நிறுவனப் பேருந்துகளை மின் மயமாக்குவதற்கான செயல்திட்டத்தினை அரசாங்கமானது படிப்படியாக உருவாக்க உள்ளது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் மின்சாரப் பேருந்துகளின் பங்கினை [மாநிலப் போக்குவரத்து நிறுவனங்களால் இயக்கப்படும்] 30% ஆக அதிகரிக்க அரசு பல முயற்சிகளை மேற் கொள்ளும்.

- 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதி வரை சாலை வரி, பதிவுக் கட்டணங்கள் மற்றும் அனுமதிக் கட்டணங்கள் ஆகியவற்றினைத் தள்ளுபடி செய்வதற்கு 2019 ஆம் ஆண்டு கொள்கை அனுமதி வழங்கியது.
- ஆனால், சமீபத்தியக் கொள்கையானது அவற்றை மேலும் மூன்று ஆண்டுகள் நீட்டித்து, மேலும் 2026 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி வரையில் சிறப்புத் தேவைச் சார்புச் சலுகைகளை வழங்குகிறது.
- இருப்பினும், இந்த சலுகைகள் ஆனது தமிழ்நாட்டில் தயாரிக்கப்பட்ட, விற்பனை செய்யப் பட்ட மற்றும் பதிவு செய்யப்பட்ட வாகனங்களுக்கு மட்டுமே பொருந்தும்.
- 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் 30 ஆம் தேதியன்றைய நிலவரப்படி, தமிழ்நாட்டில் 1.15 லட்சத்துக்கும் அதிகமான மின்சார வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், அவற்றில் 93% வணிகப் பயன்பாடு சாராத வாகனங்களாகும்.

## தென்பெண்ணை நதிக்கரையில் நடுகற்கள்

- திருவண்ணாமலை மாவட்ட வரலாற்று ஆய்வு மையத்தைச் சேர்ந்த ஆராய்ச்சி அறிஞர்கள், ஆலம்பாடி அருகே தென்பெண்ணை நதிக் கரையில் இருந்து இரண்டு நடு கற்களைக் கண்டெடுத்துள்ளனர்.
- ஆலம்பாடி அருகே உள்ள வேடியப்பன் கோவிலில் இருந்து இந்த இரண்டு கற்களை அவர்கள் கண்டெடுத்துள்ளனர்.
- அந்தக் கற்கள் போரில் இறந்தப் பழங்குடி இனத் தலைவரின் நினைவாக நடப்பட்ட அரிய வகை 'ஆநிரை' கற்களாகும்.
- பல்லவ மன்னன் சிங்க விஷ்ணுவின் 11 ஆம் ஆண்டு ஆட்சியின் போது இந்தக் கல் எழுப்பப் பட்டதாக அந்தக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.
- அவை கி.பி. 6 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கலாம்.
- பழங்குடியினரின் எதிரிகளால் கவர்ந்து செல்லப்பட்ட பசுக்களை மீட்கும் முயற்சியில் இந்தப் போர்வீரர்கள் இறந்ததாக இந்தக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.



## உலகின் மிகப்பெரிய மின்சார வாகன உற்பத்தி மையம்


- ஓலா எலக்ட்ரிக் மொபிலிட்டி பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துடன் தமிழக அரசு ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

- தமிழகத்தில் ஒருங்கிணைந்த இருசக்கர வாகனம், மகிழுந்து மற்றும் லித்தியம் செல் ஜிகா தொழிற்சாலைகளுடன் சேர்த்து உலகின் மிகப்பெரிய மின்சார வாகன உற்பத்தி மையத்தினை ஓலா நிறுவனம் அமைக்கவுள்ளது.
- கிருஷ்ணகிரி மாவட்டத்தின் பர்கூரில் உள்ள சிப்காட் வளாகத்தில் மின்சார வாகன மின்கல உற்பத்தி ஆலை மற்றும் நான்கு சக்கர மின்சார வாகன ஆலை ஆகிய இரண்டினையும் இத்திட்டத்தின் மூலம் அமைக்கப்பட உள்ளது.




## அதிக எண்ணிக்கையிலான MBBS சேர்க்கை இடங்கள்

- 11,275 MBBS இடங்களுடன் தமிழகம் முதலிடத்தில் உள்ளது.
- அதைத் தொடர்ந்து 10,995 இடங்களைக் கொண்டு கர்நாடகா இரண்டாமிடத்தில் உள்ளது.
- மகாராஷ்டிரா 10,295 இடங்களுடன் 3வது இடத்திலும், உத்தரப் பிரதேசம் 9,203 MBBS இடங்களுடன் 4வது இடத்திலும் உள்ளன.
- ஒட்டு மொத்தமாக, நாட்டில் உள்ள 655 மருத்துவக் கல்லூரிகளில் தற்போது 1,00,163 MBBS இடங்கள் உள்ளன.
- சுகாதாரத் துறை அமைச்சகத்தின் அறிக்கையின்படி, மொத்தம் 65,335 முதுநிலைக் கல்வி மருத்துவச் சேர்க்கை இடங்கள் தற்போது உள்ளன.
- இதில் அதிகபட்சமாக கர்நாடகா மாநிலத்தில் 6,006 இடங்களும், மகாராஷ்டிராவில் 5,765 இடங்களும், தமிழ்நாட்டில் 4,935 இடங்களும் உள்ளன.



### தமிழ்நாட்டின் சிறந்த காவல் நிலையம்

- திருச்சி மாவட்டத்தில் உள்ள முசிறி காவல் நிலையத்தினை தமிழகத்தின் சிறந்த காவல் நிலையமாக மத்திய உள்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.
- உள்துறை அமைச்சகம் ஆனது கடந்த ஆண்டு ஆகஸ்ட் முதல் செப்டம்பர் மாதம் வரையில் நாடு முழுவதும் உள்ள பல்வேறு காவல் நிலையங்களுக்குச் சென்று அவற்றின் செயல்திறன்களை மதிப்பீடு செய்தது.
- இந்த மதிப்பீட்டின் அடிப்படையில், ஒடிசாவின் கஞ்சம் மாவட்டத்தில் உள்ள அஸ்கா காவல் நிலையம் ஆனது இந்தியாவிலேயே முதல் இடத்தைப் பிடித்துள்ளது.




## தேசியச் செய்திகள்

### தனியார் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் நினைவுச் சின்னங்கள்

- தற்போது இந்தியத் தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள சுமார் 1000 நினைவுச் சின்னங்கள் தனியார் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட உள்ளது.
- இது அந்த நிறுவனங்களின் நிறுவனம் சார்ந்த சமூகப் பொறுப்பின் ஓர் அங்கமாகும்.
- இந்த நினைவுச் சின்னங்களில் உள்ள வசதிகள் நினைவுச் சின்னங்களுக்கான மித்ரா திட்டத்தின் கீழ் தனியார் துறையால் புதுப்பிக்கப் படும்.
- நினைவுச் சின்னங்களுக்கான மித்ரா திட்டம் என்பது ஒரு பாரம்பரியத் தளத்தினைக் கட்டுப்பாட்டில் எடுத்து அதனைப் பராமரிப்பதற்கான ஒரு திட்டமாகும்.

## இந்தியாவின் முதல் மாதிரி G-20 உச்சி மாநாடு

- ❖ இந்திய ஜனநாயகத் தலைமைத்துவக் கல்வி நிறுவனமானது, சமீபத்தில் மாதிரி G-20 உச்சி மாநாட்டினை நடத்தியது.
- ❖ இது இவ்வகையிலான முதல் மாநாடு ஆகும்.
- ❖ G-20 அமைப்பிற்கான இந்தியப் பிரதிநிதி அமிதாப் காந்த் இந்த உச்சி மாநாட்டைத் தொடங்கி வைத்தார்.
- ❖ இது மும்பையில் உள்ள இந்திய ஜனநாயகத் தலைமைத்துவக் கல்வி நிறுவன வளாகத்தில் நடத்தப்பட்டது.
- ❖ இக்குழுவில் உறுப்பினராக உள்ள நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது, உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 85 சதவீதத்தினை உள்ளடக்கியதால், G-20 உச்சி மாநாடு ஆனது இந்தியா மற்றும் பிற உறுப்பினர் நாடுகளுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.
- ❖ 2023 ஆம் ஆண்டில் நடைபெற உள்ள இதன் உச்சி மாநாட்டை இந்தியா நடத்த உள்ளது.




## G-20 புத்தொழில் பணிக் கட்டுப்பாட்டுக் குழு

- ❖ G-20 அமைப்பின் புத்தொழில் பணிக் கட்டுப்பாட்டுக் குழுவின் தொடக்கக் கூட்டம் என்பது சமீபத்தில் ஹைதராபாத் நகரில் நடைபெற்றது.
- ❖ இந்தப் பெயர் குறிப்பிடுவது போல, புத்தொழில் 20 பணிக் கட்டுப்பாட்டுக் குழுவில் G-20 அமைப்பின் உறுப்பினர் நாடுகளில் உள்ள முன்னணி புத்தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் இடம் பெற்றுள்ளனர்.
- ❖ புத்தொழில் 20 என்பது புத்தாக்கம், தொழில்முனைவு மற்றும் ஒத்துழைப்பு ஆகிய பலவற்றின் மீது கவனம் செலுத்துகிறது.
- ❖ இது G-20 உறுப்பினர் நாடுகளின் புத்தொழில் நிறுவனங்களுக்கும், உலகின் பிற வளர்ந்து வரும் பொருளாதாரங்களுக்கும் இடையே உள்ள பல இடைவெளிகளைக் குறைப்பதனை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ G20 உறுப்பினர்கள் தவிர, ஒன்பது சிறப்பு விருந்தினர் நாடுகளும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டன.
- ❖ 2023 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள G-20 உச்சி மாநாட்டினை இந்தியா நடத்த உள்ளது.
- ❖ இந்த உச்சி மாநாட்டினை வெற்றிகரமாக நடத்துவதற்காக, பல பணிக் கட்டுப்பாட்டுக் குழுக்கள் உருவாக்கப் பட்டு வருகின்றன.
- ❖ இக்குழுவில் அரசு சாரா நிறுவனங்களின் பிரதிநிதிகளும் இடம் பெற்றுள்ளனர்.

## சிந்து நதி நீர் ஒப்பந்த திருத்த அறிக்கை

- ❖ ராட்டில் நீர்மின் நிலையம் மற்றும் கிஷன்கங்கா நீர்மின் நிலையம் ஆகியவை தொடர்பான பிரச்சனைகளை அறிக்கை அனுப்பியதற்கான காரணம் என்று இந்தியா குறிப்பிடுகிறது.
- ❖ சிந்து நதி நீர் ஒப்பந்தம் ஆனது, இந்திய அரசுக்கும் பாகிஸ்தான் அரசுக்கும் இடையே 1960 ஆம் ஆண்டில் கையெழுத்தானது.
- ❖ இந்த ஒப்பந்தத்தின்படி, பியாஸ், ரவி மற்றும் சட்லெஜ் ஆகிய நதிகளின் நீர் இந்திய அரசின் கட்டுப்பாட்டிலும், சிந்து, ஜீலம் மற்றும் செனாப் ஆகிய நதிகளின் நீர் பாகிஸ்தானின் கட்டுப்பாட்டிலும் உள்ளது.
- ❖ இந்த நதிநீருக்கான அணுகல் வசதியில் இந்தியாவுக்கு 20 சதவீதமும், பாகிஸ்தானுக்கு 80 சதவீதமும் வழங்கப்பட்டுள்ளது.
- ❖ இந்திய அரசினைப் பொறுத்தவரை, இந்த ஒப்பந்தத்தில் பாகிஸ்தான் "இணக்கம் அற்றதாக" உள்ளது.
- ❖ அதாவது உடன்படிக்கைக்கு உடன்பட மறுப்பது என்பது இதன் பொருளாகும்.
- ❖ இதனால், ஒப்பந்தத்தில் மாற்றம் செய்யுமாறு பாகிஸ்தானுக்கு இந்தியா அறிக்கை அனுப்பியுள்ளது.
- ❖ ராட்டில் மின் நிலையமானது செனாப் ஆற்றில் அமைந்துள்ளது.
- ❖ அப்போதையப் பிரதமர் மன்மோகன் சிங் அவர்கள் 2013 ஆம் ஆண்டில் இதற்கான அடிக்கல்லினை நாட்டினார்.
- ❖ 2018 ஆம் ஆண்டில் பாகிஸ்தான் எதிர்ப்புகளை எழுப்பியப் போதிலும், உலக வங்கி ஆனது இந்தத் திட்டத்தை முன்னோக்கி மேற்கொள்ளுமாறு இந்தியாவிற்கு அனுமதி வழங்கிய பிறகு இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது.



## பொருளாதார ஆய்வறிக்கை 2022-2023: சிறப்பம்சங்கள்




- இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள் ஜனவரி 31 அன்று, 2022-2023 ஆம் ஆண்டிற்கான பொருளாதார ஆய்வறிக்கையை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தார்.
- இந்த நிதியாண்டில் நாட்டின் பொருளாதாரம் எவ்வாறு செயல்பட்டது மற்றும் அடுத்த ஆண்டுக்கான செயல்திட்டம் ஆகியவற்றினை இந்த அறிக்கை மதிப்பாய்வு செய்கிறது.
- உலகிலேயே வேகமாக வளர்ந்து வரும் மாபெரும் பொருளாதாரமாக இந்தியா தொடர்ந்து திகழ உள்ளது.
- இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியானது 2023 ஆம் நிதியாண்டில் 7 சதவீதம் என்ற அளவில் (நிகழ் நேர மதிப்பில்) வலுவானதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் பதிவான சில்லறைப் பணவீக்கமானது இந்திய ரிசர்வ் வங்கியின் இலக்கு வரம்பிற்குள் மீண்டும் திரும்பியுள்ளது.

- நகர்ப்புற வேலையின்மை விகிதம் குறைந்து வந்த போதும் அதிகளவிலான வேலை வாய்ப்பு உருவாக்கம் பதிவாகியுள்ள நிலையில், பணியாளர் வருங்கால வைப்பு நிதியில் நிகரப் பதிவும் வேகமான அளவில் பதிவாகியுள்ளது.
- 2018-19 ஆம் ஆண்டில் 5.8 சதவீதமாக இருந்த வேலையின்மை விகிதமானது, 2020-21 ஆம் ஆண்டில் 4.2 சதவீதமாகக் குறைந்துள்ளது.
- 2020-21 ஆம் ஆண்டில் வேளாண் துறையில் மேற்கொள்ளப்பட்ட தனியார் துறையின் முதலீடு 9.3% ஆக அதிகரித்துள்ளது.
- 2022 ஆம் நிதியாண்டில் 8.4% ஆக இருந்த சேவைத் துறையின் வளர்ச்சி 2023 ஆம் நிதியாண்டில் அதே காலகட்டத்தில் 9.1% ஆக இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- 2022 ஆம் ஆண்டில் 100 பில்லியன் அமெரிக்க டாலர்களைப் பெற்று, உலகிலேயே அதிக பணம் வரவு பெறும் நாடாக இந்தியா மாறியுள்ளது.
- சேவை ஏற்றுமதிக்கு அடுத்தபடியாக வெளிநாட்டு நிதி வழங்கீட்டிற்குப் பங்களிக்கும் இரண்டாவது பெரிய மூல ஆதாரமாக இந்தப் பண வரவு திகழ்கிறது.
- 2022 ஆம் ஆண்டு ஜனவரி முதல் நவம்பர் மாதம் வரையிலான காலகட்டத்தில் குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் துறைக்கான கடன் வழங்கீட்டு வளர்ச்சி என்பது சராசரியாக 30.6 சதவீதத்திற்கும் அதிகமாக இருந்தது.
- 2019 ஆம் நிதியாண்டில் 180 மில்லியன் அமெரிக்க டாலர்களாக இருந்த மருந்து உற்பத்தித் தொழில் துறையில் மேற்கொள்ளப்படும் அன்னிய நேரடி முதலீடு (FDI) ஆனது 2022 ஆம் நிதியாண்டில் நான்கு மடங்கு உயர்ந்து, 699 மில்லியன் அமெரிக்க டாலர்களாக உள்ளது.
- 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாத நிலவரப்படி, 9.3 மாத இறக்குமதியை உள்ளடக்கிய அந்நியச் செலாவணி கையிருப்பு 563 பில்லியன் அமெரிக்க டாலர்களாக உள்ளது.
- 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாத இறுதி நிலவரப்படி, உலகிலேயே அதிக அந்நியச் செலாவணி இருப்பு கொண்டுள்ள நாடுகளில் இந்தியா ஆறாவது இடத்தில் உள்ளது.
- ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுகம் மூலமான பரிவர்த்தனைகள் மதிப்பு (121 சதவீதம்) மற்றும் அளவு (115 சதவீதம்) ஆகியவற்றின் அடிப்படையில் 2019-22 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் அதிகரித்துள்ளதன் மூலம் சர்வதேச அளவில் இந்த முறையினை ஏற்பதற்கான ஒரு வாய்ப்பினை இது வகுத்தது.
- இந்தியாவில் உள்ள மொத்தத் தொலைபேசி சந்தாதாரர்களின் எண்ணிக்கை 117.8 கோடியாக உள்ள நிலையில் (2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை), இதில் இந்தியாவின் கிராமப்புறப் பகுதிகளில் பதிவான சந்தாதாரர்களின் எண்ணிக்கை 44.3 சதவீத உள்ளது.
- பிரசார் பாரதியானது (இந்தியாவின் தன்னாட்சிப் பொதுச் சேவை ஒளிபரப்பாளர்) - 479 நிலையங்களில் இருந்து 23 மொழிகளில், 179 பேச்சு வழக்குகளில் ஒளிபரப்பப் படுகிறது.
- இது பரப்பளவில் 92 சதவீதப் பரவலையும், மொத்த மக்கள் தொகையில் 99.1 சதவீத நபர்களையும் சென்றடைகிறது.

## உத்தரகாண்ட் மாநிலத்தின் காட்சி வாகனம்

- 2023 ஆம் ஆண்டு குடியரசுத் தின அணிவகுப்பில் பங்கேற்ற மாநிலங்களின் காட்சி வாகனங்களுக்கான விருதினை மத்திய அரசு அறிவித்துள்ளது.

- இதில் உத்தரகாண்ட் மாநிலத்தின் மானஸ்கண்ட் என்ற காட்சி வாகனம் முதலிடம் பெற்றது.
- இந்த வாகனத்தில், அந்த மாநிலத்தின் வனவிலங்குகள் மற்றும் சமயத் தலங்கள் அடங்கிய கருத்துருவானது காட்சிப் படுத்தப்பட்டிருந்தது.
- இந்த ஆண்டிற்கான குடியரசுத் தின அணிவகுப்பில் 23 காட்சி வாகனங்கள் காட்சிப் படுத்தப் பட்டன.
- இதில் மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களினால் 17 காட்சி வாகனங்களும், அமைச்சகங்கள் மற்றும் துறைகள் சார்பாக 6 காட்சி வாகனங்களும் காட்சிப் படுத்தப் பட்டன.



## தேசியக் குழந்தை அறிவியல் மாநாடு




- தேசிய அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் சபையானது, சமீபத்தில் 2023 ஆம் ஆண்டு தேசியக் குழந்தை அறிவியல் மாநாட்டினை ஏற்பாடு செய்தது.
- இந்த மாநாட்டினை குஜராத் அறிவியல் நகர சபை நடத்தியது.
- இந்த மாநாடானது குஜராத் மாநிலத்தின் அகமதாபாத் நகரில் நடைபெற்றது.
- இந்த நிகழ்வின் கருத்துரு "உடல்நலம் மற்றும் நல்வாழ்வுக்கான சூழல் அமைப்பைப் புரிந்து கொள்ளுதல்" என்பதாகும்.
- தேசியக் குழந்தை அறிவியல் மாநாடானது, 1993 ஆம் ஆண்டு முதல் இந்தியாவில் நடைபெற்று வருகிறது.

## 2023 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 7 அம்சங்களுக்கு முன்னுரிமை




- மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள் 2023 ஆம் ஆண்டிற்கான மத்திய நிதிநிலை அறிக்கையில் வழங்கப்பட்டுள்ள ஏழு முக்கிய முன்னுரிமை அம்சங்களைப் பட்டியலிட்டுள்ளார்.
- அவை ஒன்றையொன்றின் தேவையைப் பூர்த்தி செய்து அமிரித் கால் என்ற கால கட்டத்தில் அரசாங்கத்தினை வழி நடத்துகின்ற சப்தரிஷிகளாகச் செயல்பட உள்ளன.
- இந்தியா தனது சுதந்திரத்தின் நூற்றாண்டு நிறைவினைக் கொண்டாட உள்ள 2047 ஆம் ஆண்டு வரையிலான 25 ஆண்டு காலத்தைக் குறிக்கும் வகையில் அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட சொல் அம்ரித் கால் என்பதாகும்.
- இது அடுத்த 25 ஆண்டுகளுக்கான அரசின் ஒரு செயல்திட்டமாகும்.
- அந்த ஏழு முன்னுரிமை அம்சங்கள்
    - உள்ளார்ந்த மேம்பாடு
    - கடைக்கோடி மக்களையும் பலன் சென்றடைதல்
    - உள்கட்டமைப்பு மற்றும் முதலீடு
    - திறன்களை வெளிக் கொணருதல்
    - பசுமை மேம்பாடு
    - இளையோர் திறன்
    - நிதித்துறை

## மத்திய அரசின் நிதிநிலை அறிக்கை – 2023/24 சிறப்பம்சங்கள்

- மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள் 2023-24 ஆம் ஆண்டிற்கான மத்திய நிதிநிலை அறிக்கையினைத் தாக்கல் செய்துள்ளார்.
- வருமான வரி செலுத்துவதற்கான தள்ளுபடி வரம்பானது ஆண்டிற்கு ரூ.7 லட்சமாக உயர்த்தப் பட்டுள்ளது.

❖ புதிய தனிநபர் வருமான வரிக் கட்டமைப்பின் கீழான வருமானப் படிநிலைகளானது, ஆறில் இருந்து ஐந்தாக மாற்றப் பட்டுள்ளது.

❖ வரி விலக்கு வரம்பு ஆனது ரூ.3 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.


❖ இந்த நிதிநிலை அறிக்கையானது, இரயில்வே நிர்வாகத்திற்கான மூலதன முதலீட்டினை இதுவரை இல்லாத அளவில் ரூ. 2.40 லட்சம் கோடியாக உயர்த்தியுள்ளது.

❖ நிதிப் பற்றாக்குறையானது 2023-24 ஆம் நிதியாண்டில், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5.9% ஆக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

❖ நிதிப் பற்றாக்குறையை ஈடுகட்டுவதற்காகப் பெறப்படும் நிகரக் கடன்களின் மதிப்பு ரூ.11.8 லட்சம் கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

❖ மூலதன முதலீட்டுச் செலவினமானது, தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக 33% அளவு அதிகரிக்கப் பட்டு அது ரூ.10 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது.

❖ இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.3% ஆகும்.




❖ கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்வளத்தை மையமாகக் கொண்டு, வேளாண் கடன்களுக்கான இலக்கு ரூ. 20 லட்சம் கோடியாக உயர்த்தப்படும்.

❖ கிராமப்புறங்களில் உள்ள இளம் தொழில்முனைவோர்களின் வேளாண் சார்ந்த புத்தொழில்களை ஊக்குவிப்பதற்காக வேண்டி வேளாண் ஊக்குவிப்பு நிதி அமைக்கப் பட உள்ளது.


❖ பிரதான் மந்திரி விஸ்வகர்மா கௌசல் சம்மான் இது பாரம்பரியக் கைவினைக் கலைஞர்களால் தயாரிக்கப்பட்டப் பொருட்களின் தரம், அளவு மற்றும் பரவலை மேம்படுத்துவதற்கான முதல்-வகையான ஒரு தொகுப்பு உதவித் தொகை சார்ந்த முன்னெடுப்பு ஆகும்.

❖ ஆற்றல் மாற்றம் மற்றும் நிகரச் சுழிய உமிழ்வு இலக்குகள் மற்றும் ஆற்றல் பாதுகாப்பை அடைவதற்கான முன்னுரிமை சார்ந்த மூலதன முதலீடுகளுக்காக இந்த நிதிநிலை அறிக்கையில் ரூ. 35,000 கோடி வழங்கப்பட்டுள்ளது.

- கர்நாடகாவில் உள்ள வறட்சியால் பாதிக்கப் படக்கூடியப் பகுதிகளில், நிலையான நுண்ணீர்ப் பாசன முறைகளின் பயன்பாட்டு ஊக்குவிப்புத் திட்டங்களுக்காக நிதி உதவி வழங்கப்பட உள்ளது.
- பிரதான் மந்திரி PVTG மேம்பாட்டுத் திட்டமானது தொடங்கப்படுவதோடு, 740 ஏகலவ்யா மாதிரி உறைவிடப் பள்ளிகளில் அதிக அளவில் ஆசிரியர்கள் நியமிக்கப்பட உள்ளனர்.

## PM-PRANAM திட்டம்

- இந்திய அரசாங்கமானது, PM-PRANAM என்ற திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- இது புவி மறுசீரமைப்பு, விழிப்புணர்வு, வளமாக்கல் மற்றும் மேம்பாடு ஆகியவற்றின் மேம்பாட்டிற்கான பிரதம மந்திரியின் திட்டம் என்பதைக் குறிக்கிறது.
- இந்தத் திட்டமானது, கோபர் தன் (GOBAR Dhan) திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்டுள்ளது.
- இத்திட்டத்தின் கீழ், உரங்களுக்கான மாற்றுப் பொருட்களை ஊக்குவிக்க அரசு திட்டம் போட்டுள்ளது.
- மேலும், இரசாயனங்களின் சீரான பயன்பாட்டை ஊக்குவிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இரசாயன உரங்களின் பயன்பாட்டைக் குறைக்கச் செய்வதே இந்தத் திட்டத்தின் ஒரு முக்கிய நோக்கமாகும்.




## அரிவாள் செல் இரத்த சோகை நோயினை ஒழிப்பதற்கான திட்டம்

- 2047 ஆம் ஆண்டிற்குள் அரிவாள் செல் இரத்த சோகையை ஒழிப்பதற்கான ஒருதிட்டத்தைத் தொடங்குவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக நிதியமைச்சர் அறிவித்தார்.
- 2047 ஆம் ஆண்டிற்குள் அரிவாள் செல் இரத்த சோகையை ஒழிப்பதை நோக்கமாகக் கொண்டு இந்தத் திட்டம் தொடங்கப்படும்.
- இது விழிப்புணர்வு உருவாக்கம், பாதிக்கப்பட்டப் பழங்குடியினர் பகுதிகளில் உள்ள 0 முதல் 40 வயதுக்குட்பட்ட ஏழு கோடி நபர்களின் பொது உடல் பரிசோதனை ஆகியவற்றினை உள்ளடக்கியதாகும்.

- உடலின் பல்வேறுப் பகுதிகளுக்கு ஆக்ஸிஜனை எடுத்துச் செல்வதே இரத்தச் சிவப்பணுக்களின் ஒரு முதன்மைப் பணியாகும்.
- அரிவாள் செல் இரத்த சோகை நோயினால் பாதிக்கப்பட்ட நபரின் உடலில் உள்ள சிவப்பு இரத்த அணுக்களின் ஆக்ஸிஜனைச் சுமந்துச் செல்லும் திறன் பாதிக்கப் படுகிறது.
- அரிவாள் செல்கள் என்பது அரிவாளின் வடிவத்தைப் போலவே C வடிவத்தில் மாறுகின்ற செல்களாகும்.
- அவை தன்னைத் தானேச் சிதைத்து வளைத்துக் கொள்கின்றன.




## அம்ரித் தரோஹர் திட்டம்

- நகரங்களில் அமைந்துள்ள ஈரநிலங்களின் மீதான உகந்தப் பயன்பாட்டினை அதிகரிக்கச் செய்வதற்காகவும், அவற்றின் பல்லுயிர்ப் பெருக்கத்தை மேம்படுத்தச் செய்வதற்காகவும் அம்ரித் தரோஹர் திட்டத்தினை இந்திய அரசு அறிமுகப் படுத்தி உள்ளது.
- இந்தத் திட்டமானது, உள்ளூர்ச் சமூகங்களின் உதவியுடன் நிலையான சுற்றுச்சூழல் மேம்பாட்டினை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது இந்த ஆண்டின் நிதி நிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏழு முன்னுரிமை அம்சங்களில் ஒன்றான 'பசுமை மேம்பாடு' என்பதன் கீழ் குறிப்பிடப்படுகிறது.
- இத்திட்டமானது, அடுத்த மூன்று ஆண்டுகளில் செயல்படுத்தப்பட உள்ளது.
- இந்தத் திட்டமானது, சுற்றுச்சூழல் சார்ந்தச் சுற்றுலா மற்றும் கார்பன் பங்குகள் ஆகியவற்றை அதிகரிக்கச் செய்வதோடு, அவை உள்ளூர்ச் சமூகங்களின் வருமான உருவாக்கத்திற்கும் உதவும்.




## முழு அளவிலான தொகுப்புச் சுற்றுலா 2023




- குறைந்தபட்சம் 50 இடங்களாவது தேர்ந்தெடுக்கப்பட்டு, அவை முழு அளவிலான ஒரு தொகுப்புச் சுற்றுலாப் பகுதிகளாக உருவாக்கப்பட உள்ளது.
- ஒருங்கிணைந்த மற்றும் புதுமையான அணுகுமுறையைப் பயன்படுத்தி, ஒரு பிரச்சார முறை அடிப்படையில் இந்த இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட உள்ளன.
- சுற்றுலா மேம்பாட்டில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் மீது கவனம் செலுத்தப்படும்.
- எல்லையோரக் கிராமங்களில் சுற்றுலா அம்சங்களை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட உள்ளது.

## பிரதான் மந்திரி கௌஷல் விகாஸ் யோஜனா 4.0

- அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் இலட்சக்கணக்கான இளைஞர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை அளிக்கும் வகையில் பிரதான் மந்திரி கௌஷல் விகாஸ் யோஜனா 4.0 திட்டமானது தொடங்கப்படும் என மத்திய நிதியமைச்சர் அறிவித்து உள்ளார்.
- இந்தத் திட்டம், வேலைவாய்ப்பு வழங்கப் பட்ட பின்பானப் பயிற்சி, தொழில் துறைக் கூட்டாண்மை மற்றும் தொழில்துறையின் தேவைகளுக்கு ஏற்ப கல்விப் படிப்புகளைச் சீரமைத்தல் ஆகியவற்றை உள்ளடக்கும்.
- இந்தத் திட்டம் தொழில்துறை 4.0 என்பதற்கான குறியீட்டு முறையாக்கம், செயற்கை நுண்ணறிவு, எந்திரவியல், எந்திர மின்னணுவியல், இணைய உலகம், முப்பரிமாண அச்சிடல், ஆளில்லா விமானங்கள் மற்றும் மென்பொருள் சார்ந்தத் திறன்கள் போன்ற புதிய கால கட்டத்தினைச் சார்ந்தப் படிப்புகளையும் உள்ளடக்கும்.




## தேசியத் தரவு ஆளுமைக் கொள்கை

- இந்திய அரசு தேசிய ஆளுமைக் கொள்கையை அறிமுகப் படுத்த உள்ளது.
- இந்தக் கொள்கையானது, இந்தியத் தரவு மேலாண்மை அலுவலகத்தை உருவாக்க உள்ளது.
- இந்தக் கொள்கையின் முக்கிய நோக்கமானது, தரவுகளைப் பாதுகாப்பானதாக்கி, அதனை நாட்டிலுள்ள புத்தொழில் நிறுவனங்களுக்குக் கிடைக்கச் செய்வதாகும்.
- இது தேசியத் தரவு ஆளுமைக் கொள்கையானது எண்ணிமம் அடிப்படையிலான அரசாங்கத்தினை உருவாக்குவதை நோக்கிய முதல் படியாகும்.
- இந்தக் கொள்கையின் மூலம், அரசாங்கம் தனது முடிவெடுக்கும் அதிகாரத்தினை மேலும் அதிகரிக்க முடியும்.
- தரவுத் தனியுரிமைத் தரநிலைகளை அதிகரிக்க இயலும்.
- தரவுப் பாதுகாப்புத் தரநிலைகள் மேம்படுத்தப்படும்.




## ஆத்ம நிர்பர் தோட்டக்கலை தூயத் தாவரத் திட்டம்




- அதிக மதிப்புள்ள தோட்டக்கலைப் பயிர்களை உருவாக்குவதற்காக வேண்டி நோய்த் தாக்கமற்ற, தரமான தாவரப் பொருள் கிடைக்கப் பெறுவதனை அதிகரிப்பதற்காக, ஆத்மா நிர்பர் தூயத் தாவரத் திட்டம் தொடங்கப்பட உள்ளது.

- ஒரு தூய்மையான தாவரம் என்பது நடவு செய்வதற்கு முன் பல பரிமாணங்களில் சோதிக்கப் பட்ட ஒரு தாவரமாகும்.
- முதலில், தாவரங்களில் நோய்க் கிருமிகளால் பாதிக்கப்பட்டுள்ளனவா என சோதிக்கப் படுகின்றன.
- இரண்டாவதாக, செழுமையாக வளர்ந்து வரும் தாவரங்கள் அடையாளம் காணப் படுகின்றன.
- செழுமையாக வளரும் தாவரங்களிலிருந்து திசு மாதிரிகள் சேகரிக்கப்படுகின்றன.
- இந்த திசுக்கள் மற்ற தாவரங்களுடன் இணைக்கப்பட்டு அவற்றின் உற்பத்தித் திறனும் அதிகரிக்கப் படுகின்றன.

## சதுப்புநிலத் தோட்டங்கள் அமைப்பதற்கான MISHTI திட்டம்




- கரையோர வாழ்விடங்கள் மற்றும் உறுதியான வருமானங்களுக்கான சதுப்பு நில முன்னெடுப்பு எனப்படும் MISHTI திட்டமானது, கடற்கரையோரம் மற்றும் உவர்மண் நிலங்களில் சதுப்பு நிலத் தோட்டங்கள் அமைப்பதற்காக தொடங்கப்பட உள்ளது.
- இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கமானது கடற்கரையோரத்தில் சதுப்புநிலத் தோட்டங்களை நிறுவுவதாகும்.
- MISTHI திட்டத்தின் முக்கிய நோக்கம் "சதுப்பு நில காடுகளைப் பாதுகாத்தல்" ஆகும்.
- இழப்பீட்டுக் காடு வளர்ப்பு நிதி மேலாண்மை மற்றும் திட்டமிடல் ஆணைய நிதி, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் பிற மூல ஆதாரங்களை ஒன்றிணைப்பதன் மூலம் MISHTI திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

## வேளாண்மைத் துறை ஊக்க நிதி

- கிராமப்புறங்களில் உள்ள இளம் தொழில் முனைவோர்களின் வேளாண் சார்ந்த புத்தொழில்களை ஊக்குவிப்பதற்காக வேளாண்மைத் துறை ஊக்க நிதி நிறுவப்பட உள்ளது.
- விவசாயிகள் எதிர்கொள்ளும் சவால்களுக்கு வேண்டி புதுமை மிக்க மற்றும் மலிவு விலையிலான தீர்வுகளை வழங்குவதை இந்த நிதியம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

- வேளாண் நடைமுறைகளை மாற்றுவதற்கும், உற்பத்தித் திறன் மற்றும் இலாபத்தை அதிகரிப்பதற்கும் இது நவீனத் தொழில்நுட்பங்களை இத்துறையில் அறிமுகப்படுத்த உள்ளது.
- வேளாண்மைக்கான பொது எண்ணிம உள்கட்டமைப்பானது, பொது மக்களின் பயன்பாட்டிற்காகத் தடையற்ற வளங்கள், ஒப்பற்றத் தரத்திலான மற்றும் தரவுப் பரிமாற்றங்களை மேற்கொள்ளக் கூடிய ஒரு தளமாக உருவாக்கப் பட உள்ளது.




## பொதுவான அடையாளக் குறியீடாக நிரந்தரக் கணக்கு வைப்பு எண்

- சில குறிப்பிட்ட அரசு நிறுவனங்களின் அனைத்து எண்ணிம அமைப்புகளுக்குமான ஒரு பொதுவான அடையாளக் குறியீடாக நிரந்தரக் கணக்கு வைப்பு எண் (PAN) பயன் படுத்தப்பட உள்ளது.
- இந்த நடவடிக்கையானது, நாட்டில் வணிகம் செய்வதை எளிதாக்குதலை மேலும் மேம்படுத்த உதவும்.
- PAN என்பது ஒரு நபர், நிறுவனம் அல்லது பெருநிறுவனத்திற்கு வருமான வரித் துறையால் வழங்கப்பட்ட 10 இலக்க எண்ணெழுத்துக் குறியீடு ஆகும்.



## வருமான வரி அடுக்குப் புதுப்பிப்பு

- ❖ 7 லட்சம் வரை வருமானம் உள்ள நபர்கள், வரி செலுத்தத் தேவையில்லை என மத்திய நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது.
- ❖ அதிக வரி வரம்பில் உள்ள வரி செலுத்துவோருக்கு விதிக்கப்பட்ட கூடுதல் வரி கட்டணம் ஆனது 37 சதவீதத்திலிருந்து 25% ஆக குறைக்கப்பட்டது.
- ❖ இதன் முக்கிய அம்சமானது, இந்தப் புதிய வருமான வரி அடுக்கானது அதிக மற்றும் குறைந்த வரி வரம்புகளில் உள்ள வரி செலுத்துவோருக்குப் பலனளிக்கிறது.

IND money

Income Tax Slabs: At A Glance

| New tax Regime (Revised*) | | New tax Regime (Previous) | | Old tax Regime | |
|---|---|---|---|---|---|
| Income | Tax Rate % | Income | Tax Rate % | Income | Tax Rate % |
| 0-3 Lakh | NIL | 0-2.5 Lakh | NIL | 0-2.5 Lakh | NIL |
| 3-6 Lakh | 5% | 2.5-5 Lakh | 5% | 2.5-5 Lakh | 5% |
| 6-9 Lakh | 10% | 5-7.5 Lakh | 10% | 5-10 Lakh | 20% |
| 9-12 Lakh | 15% | 7.5-10 Lakh | 15% | Above 10 Lakh | 30% |
| 12-15 Lakh | 20% | 10-12.5 Lakh | 20% | | |
| Above 15 Lakh | 30% | 12.5-5 Lakh | 25% | | |
| | | Above 15 Lakh | 30% | | |

## பிரதான் மந்திரி விஸ்வகர்மா கௌசல் சம்மான்



- நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்த போது பிரதான் மந்திரி விஸ்வகர்மா கௌஷல் சம்மான் திட்டமானது அறிவிக்கப்பட்டுள்ளது.
- இது நாட்டின் கைவினைஞர்கள் தங்கள் தயாரிப்புகளின் தரம், அளவு மற்றும் பரவலை மேம்படுத்தி, அவர்களை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துறை நிறுவனங்களின் (MSME) மதிப்புச் சங்கிலியுடன் ஒருங்கிணைக்க உதவும்.
- திறன் பயிற்சி, தொழில்நுட்பம் மற்றும் கடன் வழங்கீடு ஆகியவை மூலம் நாடு முழுவதும் உள்ள ஆயிரக்கணக்கான கலைஞர்கள் மற்றும் கைவினைஞர்களின் திறனை வெளிக் கொணர்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## மஹிளா சம்மான் பச்சத் பத்ரா




- மகிளா சம்மான் சேமிப்புச் சான்றிதழ் திட்டம் என்பது நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்த போது அறிமுகப் படுத்தப்பட்ட புதிய சிறு சேமிப்புத் திட்டமாகும்.
- இத்திட்டம் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்காகத் தொடங்கப்பட்ட பிரத்தியேகமான திட்டமாகும் என்பதோடு இது 7.5% வட்டி விகிதத்துடன் 2 லட்சம் ரூபாய் வரை வைப்புத் தொகை கணக்கு வசதியையும் வழங்குகிறது.
- தேசியச் சேமிப்புச் சான்றிதழ் திட்டத்தினால் வழங்கப்படும் 7% வட்டி விகிதத்துடன் ஒப்பிடும் போது மகிளா சம்மான் சேமிப்புச் சான்றிதழ் திட்டத்தில் 7.5% வட்டி விகிதம் வழங்கப் படுகிறது.
- இது பகுதியளவில் பணத்தினைத் திரும்பப் பெறுவதற்கான விருப்பத் தேர்வுகளை வழங்கச் செய்வதோடு இது ஒரு நெகிழ்திறன்மிக்க முதலீட்டு விருப்பத் தேர்வாக அமைகிறது.

## ஹர் கர் தியான் பிரச்சாரம்

- கலாச்சாரத் துறை அமைச்சகமானது, ஹர் கர் தியான் என்ற ஒரு பிரச்சாரத்தைத் தொடங்கி உள்ளது.

- இந்தப் பிரச்சாரமானது, தியானத்தின் முக்கியத்துவத்தைப் பொதுமக்களிடம் பரப்பச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- வாழும் கலை என்ற அறக்கட்டளையுடன் இணைந்து கலாச்சார அமைச்சகம் இந்தப் பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகிறது.
- இந்தப் பிரச்சாரத்தின் போது, இந்த அமைப்பினைச் சேர்ந்த ஆசிரியர்கள் தியான வகுப்புகளை நடத்துவர்.
- இளைஞர்களுக்கு அதிகாரம் அளிப்பதே இந்தப் பிரச்சாரத்தின் முக்கிய நோக்கமாகும்.

## Visit India Year 2023 பிரச்சாரம்

- மத்திய சுற்றுலாத் துறை அமைச்சகமானது Visit India Year 2023 என்ற பிரச்சாரத்தினைத் தொடங்கியுள்ளது.
- தற்போது G20 அமைப்பிற்குத் தலைமை வகிக்கும் இந்திய நாட்டிற்கானச் சுற்றுலாப் பயணத்தை ஊக்குவிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- "நமஸ்தே" என்ற ஒரு குறியீட்டினைக் குறிக்கும் வகையில் அமைந்திருக்கும் இந்தப் பிரச்சாரத்திற்கான சின்னத்தையும் அமைச்சர் வெளியிட்டார்.
- இந்தச் சின்னமானது, "இந்திய நாடு கொண்டுள்ள எண்ணற்றக் கதைகளின் நுண்ணியத்தை" குறிக்கும் வகையில் உள்ளது.

## 20 அம்சத் திட்டத்தின் முன்னேற்றம் குறித்த அறிக்கை

- **The Twenty Point Programme (TPP) was launched by the Government of India in 1975. The Programme was first revised in 1982 and again in 1986.**

- தேசியப் புள்ளியியல் அலுவலகமானது 20 அம்சத் திட்டத்தின் முன்னேற்றம் குறித்த அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- சமீப காலமாக இத்திட்டத்தின் செயல்திறன் மோசமாக உள்ளது.
- இந்த அறிக்கையின்படி, 2022-23 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கில் 41% மட்டுமே நிறைவு செய்யப் பட்டுள்ளது.
- அனைத்துத் திட்டங்களிலும் இந்தத் திட்டத்தின் செயல்திறன் மோசமாக இருந்ததாக தேசியப் புள்ளியியல் அலுவலகமானது கூறுகிறது.
- 20 அம்சத் திட்டமானது 2016 ஆம் ஆண்டில் அதன் இலக்கில் 96% மட்டுமே நிறைவு செய்தது.
- 2019 ஆம் ஆண்டில், இந்தத் திட்டம் அதன் இலக்கில் 13% மட்டுமே நிறைவு செய்தது.
- இந்திய அரசானது, 1975 ஆம் ஆண்டில் 20 அம்சத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது.
- இத்திட்டமானது தொடங்கப்பட்டதிலிருந்து 1982 ஆம் ஆண்டில் ஒரு முறையும் 1986 ஆம் ஆண்டில் ஒருமுறையும் என இரண்டு முறை திருத்தப்பட்டது.

- ஆகவே 20 அம்சங்களைப் பயன்படுத்தி வறுமையை ஒழித்துக் கிராமப்புற மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.
- 2022-23 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கைத் தாக்கலின் போது, மத்திய அரசு இந்தத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டினை 36% அதிகரித்தது.

## தேசியத் தளவாடங்கள் தளம் - Marine

- மத்தியத் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் துறை அமைச்சர் சர்பானாந்தா சோனோவால் தேசியத் தளவாடத் தளத்தினை (மரைன்) புது டெல்லியில் தொடங்கி வைத்தார்.
- தேசியத் தளவாடங்கள் தளம் (NLP) என்பது ஒரு தேசிய முக்கியத்துவம் வாய்ந்த திட்டம் ஆகும்.
- அனைத்து தளவாடச் சமூகப் பங்குதாரர்களையும் இணைப்பதற்கும், செலவினங்கள் மற்றும் நேர தாமதங்களைக் குறைப்பதன் மூலம் செயல்திறன் மற்றும் வெளிப்படைத் தன்மையை மேம்படுத்துவதற்கும், எளிதான, விரைவான மற்றும் அதிக போட்டித் திறன் கொண்ட சேவைகளை அடைவதற்கும் தகவல் தொழில்நுட்பத்தினைப் பயன் படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- நீர்வழிகள், சாலைகள் மற்றும் வான்வழிகள் வழியாக மேற்கொள்ளப்படும் அனைத்து வகையான போக்குவரத்து முறைகள் உட்பட, நாடு முழுவதும் உள்ள அனைத்து தளவாட வர்த்தகச் செயல்முறைகளுக்குமான ஒற்றைத் தொடர்பு மையமாக இது செயல்படும்.

## பாசறை திரும்புதல் நிகழ்வு 2023



- குடியரசுத் தின விழாவின் நிறைவினை அதிகாரப் பூர்வமாகக் குறிக்கும் வகையிலான பாசறை திரும்புதல் நிகழ்ச்சியானது விஜய் சௌக் வழித் தடத்தில் நடைபெற்றது.
- இந்த நிகழ்ச்சியானது, ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் தலைவர் சபா கொரோசியின் முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றது.
- முதன்முறையாக, விஜய் சௌக் வழித்தடத்தில் நடைபெற்ற இந்தப் பிரம்மாண்ட நிகழ்வின் போது வடக்குப் பகுதி கட்டிடம் மற்றும் தென் பகுதி கட்டிடம் ஆகியவற்றின் முகப்பில் முப்பரிமாண உருவக் காட்சிகள் திரையிடப்பட்டன.

- உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட 3,500 ஆளில்லா விமானங்கள் இடம் பெற்ற இந்தியாவின் மிகப்பெரிய ஆளில்லா விமானங்கள் கண்காட்சியும் இதில் இடம் பெற்றது.
- இந்த நிகழ்ச்சியானது பல நூற்றாண்டுகளாகப் பின்பற்றப்பட்டு வரும் பழமையான இராணுவப் பாரம்பரிய நடைமுறையினைக் குறிக்கிறது.
- இத்தகைய விழாவானது ஐக்கியப் பேரரசு, அமெரிக்கா, கனடா, நியூசிலாந்து, ஆஸ்திரேலியா மற்றும் பிற நாடுகளின் ஆயுதப் படைகளாலும் நடத்தப் படுகின்றன.

## நமஸ்தே திட்டம்





- இந்திய அரசானது 2023 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், நமஸ்தே என்ற திட்டத்திற்காக 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியுள்ளது.
- NAMASTE என்பது 'இயந்திரமயமாக்கப்பட்ட தூய்மைப் பணிச் சேவை சார்ந்த சூழல் அமைப்புக்கான ஒரு தேசிய செயல் திட்டம்' என்பதாகும்.
- இந்தத் திட்டமானது துப்புரவுத் தொழிலாளர்களுக்கான ஒரு மாற்று வாழ்வாதாரத்தை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மேலும், இந்தத் திட்டமானது அவர்களின் தனிப்பட்ட நடைமுறையிலும் பல்வேறு மாற்றங்களைக் கொண்டு வரவும் முயற்சிக்க உள்ளது.

## இரயில்வே துறைக்கான நிதிநிலை அறிக்கை 2023

- 2023-24 ஆம் ஆண்டிற்கான மத்திய நிதிநிலை அறிக்கையில் இரயில்வே துறைக்கான மூலதனச் செலவினம் இதுவரை இல்லாத அளவில் ரூ.2.40 லட்சம் கோடியாக உயர்த்தப் பட்டுள்ளது.
- இது 2013-2014 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட தொகையை விட ஒன்பது மடங்கு அதிகம் ஆகும்.


- அரசு ஹைட்ரஜன் எரிபொருளில் இயங்கும் 35 இரயில்களைத் தயாரிப்பதற்கான ஒரு திட்டத்தினையும் முன்மொழிந்துள்ளது.




## முதலாவது வேலைவாய்ப்புப் பணிக் கட்டுப்பாட்டுக் குழு கூட்டம்

- இந்தியாவின் முதலாவது வேலைவாய்ப்புப் பணிக் கட்டுப்பாட்டுக் குழு கூட்டமானது ஜோத்பூரில் தொடங்கியது.
- G20 அமைப்பிற்கான இந்தியாவின் தலைமையின் கீழ், உலகளாவிய திறன்களுக்கான ஒரு கூட்டுச் செயல்திட்டத்தினை உருவாக்குவது குறித்து இக்குழு விவாதங்களை மேற் கொண்டது.
- 'உலகளாவியத் திறன் சார்ந்த இடைவெளிகளை நிவர்த்தி செய்தல்' என்ற ஒரு முன்னுரிமை வழங்கீட்டுப் பகுதி குறித்த நுண்ணறிவு மற்றும் சில கருத்துகளைக் குழுவினர்கள் பகிர்ந்து கொண்டனர்.

## அடல் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் 5 கோடி பதிவுகள்




- அடல் ஓய்வூதியத் திட்டத்தின் (APY) கீழான பதிவானது சமீபத்தில் 5 கோடி என்ற எண்ணிக்கையினைக் கடந்துள்ளது.
- அடல் ஓய்வூதியத் திட்டம் என்பது 2015 ஆம் ஆண்டு மே 09 அன்று இந்திய அரசினால் தொடங்கப்பட்ட முதன்மையான சமூகப் பாதுகாப்புத் திட்டம் ஆகும்.

- இந்திய அரசானது, அடல் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ், வங்கிகளுக்கு ஆண்டுதோறும் பல்வேறு இலக்குகளை நிர்ணயிக்கிறது.
- 2022 ஆம் ஆண்டில் 29 வங்கிகள் அவற்றின் இலக்கை எட்டியுள்ளன.
- பல்வேறு அமைப்பு சாராத் துறைகளில் பணிபுரியும் மக்களுக்கு முதியோர் வருமானப் பாதுகாப்பை வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2022 ஆம் ஆண்டு அக்டோபர் 01 ஆம் தேதி முதல் வருமான வரி செலுத்தும் எந்தவொரு நபரும் புதிய அடல் ஓய்வூதியத் திட்டம் கணக்கைத் தொடங்க அனுமதிக்கப் படுவது இல்லை.

## மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் ELLORA திட்டம்

- மைக்ரோசாப்ட் நிறுவனமானது, 'அரிதான' இந்திய மொழிகளை இயங்கலையில் கொண்டு வருவதற்காக வேண்டி, 2015 ஆம் ஆண்டில் ELLORA அல்லது குறைந்த மூல ஆதாரங்கள் கொண்ட மொழிகளைப் புத்துயிர் பெறச் செய்தல் என்ற திட்டத்தினை அறிமுகப் படுத்தியது.
- இத்திட்டத்தின் கீழ், ஆராய்ச்சியாளர்கள் அந்த மொழிகளின் எண்ணிம வளங்களை உருவாக்கி வருகின்றனர்.
- மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் ELLORA திட்டமானது கோண்டி, முண்டாரி போன்ற சிறிய மொழிகள் எண்ணிம உலகில் வளம் பெற உதவுகிறது.
- ஆராய்ச்சியாளர்கள் தங்கள் செயற்கை நுண்ணறிவு மாதிரியைப் பயிற்றுவிக்கச் செய்வதற்கான தரவுத் தொகுப்பை உருவாக்குவதற்காக வேண்டி அச்சிடப்பட்ட இலக்கியங்கள் உள்ளிட்ட மூல ஆதாரங்களைத் திரட்டி வருகின்றனர்.
- சுமார் 1.2 பில்லியன் மக்கள் அதாவது உலக மக்கள் தொகையில் 20% பேர் எண்ணிம உலகில் ஈடுபடுவதில் தங்கள் மொழியைப் பயன்படுத்த முடியாமல் உள்ளனர்.

## ஒரே தேர்தலில் இரண்டு இடங்களில் போட்டியிடுதல்

**WHAT THE REPRESENTATION OF THE PEOPLE ACT SAYS**

**SECTION 8(1)** A person convicted for promoting enmity between different groups, rape, terrorist acts, insulting national flag etc stands disqualified for six years on mere conviction.


**SECTION 8(2)** A person convicted for hoarding, dowry offences etc. incurs disqualification if he is sentenced to at least six months for the offences. The bar continues for six years after release from jail.

**SECTION 8(3)** A person convicted of any other offence incurs disqualification if he is sentenced to an imprisonment of not less than two years. The disqualification continues till six years after release.

**SECTION 8(4)** Protects sitting MPs and MLAs from being disqualification under the above provisions. If they file an appeal within three months, they can continue as a member of the House till the completion of the term or till the decision on appeal, whichever is earlier.

- ஒரே நேரத்தில் இரண்டு தொகுதிகளில் போட்டியிடச் செய்வதற்கு வேட்பாளர்களை அனுமதிக்கும் வகையிலான தேர்தல் சட்ட விதியை நீக்க உச்சநீதிமன்றம் மறுத்து உள்ளது.
- இதற்காக தாக்கல் செய்யப்பட்ட மனுவில், மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 33(7) என்ற ஒரு பிரிவைச் செல்லாதது மற்றும் அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்டது என்று அறிவிக்க வேண்டும் என்று நீதிமன்றத்தில் கோரப்பட்டிருந்தது.
- ஆனால், இந்த விவகாரத்தினை நாடாளுமன்றத்தின் நடவடிக்கையின் கீழ் விட்டு விடுவதற்கு நீதிமன்றம் முடிவு செய்தது.
- தேர்தல் ஆணையமானது 2018 ஆம் ஆண்டில் தனது உறுதிச் சான்று மூலம் இந்த மனுவை ஆதரித்தது.
- 2004 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் 33(7)வது பிரிவில் திருத்தம் செய்ய முன் மொழியப் பட்டதாக உச்ச நீதிமன்றத்தில் அது தெரிவித்திருந்தது.

## இந்தியா "முதலீட்டுத் துறையில் முன்னோடி"



Source: International Union for Conservation of Nature, Nature Journal

- சர்வதேசக் கடற்பரப்பு ஆணையம் ஆனது, இந்திய நாட்டினை "முதலீட்டுத் துறையில் முன்னோடியாக விளங்கும் நாடு" என்று அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.
- முன்னோடி முதலீட்டாளர் என்பது எந்தவொரு புதிய துறை அல்லது தொழில் நுட்பத்தில் ஆரம்ப கட்டத்திலேயே முதலீடு செய்தலைக் குறிக்கிறது. எ.கா., கடற்கரை படுகையில் உள்ள பல்கனிம முடிச்சுகள்.
- சமீபத்தில், சர்வதேசக் கடற்பரப்பு ஆணையம் மற்றும் புவி அறிவியல் அமைச்சகம் ஆகியவை இணைந்து பல்கனிம முடிச்சுகள் ஆய்வு ஒப்பந்தத்தினை நீட்டிப்பு செய்து கொண்டன.

## சத்பவனா நடவடிக்கை

- இந்திய ராணுவமானது, லடாக் ஒன்றியப் பிரதேசத்தில் சத்பவனா நடவடிக்கையினை மேற்கொண்டு வருகிறது.

- பள்ளிகளை நடத்துதல் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்கள் போன்ற பல நலன்புரி நடவடிக்கைகள் இதில் அடங்கும்.
- இந்த நடவடிக்கைகளானது, லடாக்கின் தொலைதூரப் பகுதிகளில் வசிக்கும் குழந்தைகளுக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டது.
- இந்திய இராணுவமானது கல்வியின் தரத்தை மேம்படுத்தவும், அவர்களுக்குத் தரமான கல்வியை வழங்குவதற்காகவும், தற்போது ஏழு இராணுவ நல்லெண்ணப் பள்ளிகளை நடத்தி வருகிறது.
- மேலும், பெண்களுக்காக பாஷ்மினா சால்வை நெசவு, கம்பளி பின்னல் உள்ளிட்ட பல்வேறு பயிற்சி வகுப்புகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.




## இந்திய எரிசக்தி வாரம் 2023

- '2023 ஆம் ஆண்டு இந்திய எரிசக்தி வாரம்' ஆனது பிப்ரவரி 06 முதல் 08 ஆம் தேதி வரை பெங்களூரு நகரில் நடைபெற்றது.
- இந்தியன் ஆயில் நிறுவனத்தின் 'Unbottled' என்ற ஒரு திட்டத்தின் கீழ் பிரதமர் சீருடை வழங்கீட்டினை தொடங்கி வைத்தார்.
- இந்த சீருடைகள் மறுசுழற்சி செய்யப்பட்ட PET குடுவைகளால் தயாரிக்கப்படுகின்றன.
- 11 மாநிலங்கள்/ஒன்றியப் பிரதேசங்களில் உள்ள எண்ணெய்ச் சந்தைப்படுத்துதல் நிறுவனங்களின் 84 சில்லறை விற்பனை நிலையங்களில் எத்தனால் கலப்பு செயல் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட உள்ள E20 எரிபொருள் விநியோகத்தினையும் பிரதமர் தொடங்கி வைத்தார்.



## இந்திய உச்ச நீதிமன்றத்தின் 73வது ஸ்தாபன தினம்




- ❖ இந்திய உச்ச நீதிமன்றமானது நிறுவப்பட்டதன் 73வது ஆண்டு நிறைவு விழாவை கொண்டாடியது.
- ❖ இந்த ஆண்டு நிகழ்வில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த சிங்கப்பூர் தலைமை நீதிபதி சுந்தரேஷ் மேனன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.
- ❖ 1950 ஆம் ஆண்டு, இந்தியா ஓர் இறையாண்மை கொண்ட ஜனநாயகக் குடியரசாக மாறியதையடுத்து இரண்டு நாட்களுக்குப் பிறகு ஜனவரி 28 ஆம் தேதியன்று இந்திய உச்ச நீதிமன்றம் நடைமுறைக்கு வந்தது.
- ❖ இந்திய நாடாளுமன்றம் அமைந்துள்ள கட்டிடத்தில் உள்ள இளவரசர்களின் அவையில் தொடக்க விழா நடைபெற்றது.
- ❖ 1950 ஆம் ஆண்டின் அசல் அரசியலமைப்புச் சட்டமானது, ஒரு தலைமை நீதிபதி மற்றும் ஏழு நீதிபதிகளைக் கொண்ட உச்ச நீதிமன்றத்தினை உருவாக்கி, இந்த நீதிபதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் அதிகாரத்தினை பாராளுமன்றத்திற்கு வழங்கியது.
- ❖ நாடாளுமன்றமானது 1950 ஆம் ஆண்டில் 8 ஆக இருந்த நீதிபதிகளின் எண்ணிக்கையை 1956 ஆம் ஆண்டில் 11 ஆகவும், 1960 ஆம் ஆண்டில் 14 ஆகவும், 1978 ஆம் ஆண்டில் 18 ஆகவும், 1986 ஆம் ஆண்டில் 26 ஆகவும், 2009 ஆம் ஆண்டில் 31 ஆகவும், 2019 ஆம் ஆண்டில் 34 ஆகவும் (தற்போதைய எண்ணிக்கை) உயர்த்தியது.


## போரும் அற்ற மற்றும் அமைதியும் அற்றச் சூழ்நிலை

- ❖ இந்திய விமானப்படையானது (IAF), ஒரு திருத்தப்பட்ட கோட்பாட்டினை வெளியிட்டது.
- ❖ அதில் "போரும் அற்ற மற்றும் அமைதியும் அற்றச் சூழ்நிலையில்" விமானப் படையின் ஆற்றலின் பங்கை அது முன்வைத்தது.
- ❖ மற்ற இரு படைகளையும் உள்ளடக்கிய கூட்டு இராணுவ உத்திகளின் ஒரு பகுதியாக விமானப் படையின் ஆற்றலினைப் பயன்படுத்துவதை இந்தக் கோட்பாடு எடுத்து உரைக்கிறது.
- ❖ தற்காப்பு மற்றும் தாக்குதல் எதிர்ப்புச் செயல்பாடுகள் ஆகியவையும் இதில் இணைக்கப் பட்டுள்ளன என்பதையும் இந்தக் கோட்பாடு வலியுறுத்தியது.

- இந்திய விமானப் படையானது முதன்முதலில் 1995 ஆம் ஆண்டில் ஒரு கோட்பாட்டினை வெளியிட்ட நிலையில் இது 2007 ஆம் ஆண்டில் திருத்தியமைக்கப்பட்டது.
- 2012 ஆம் ஆண்டில், திருத்தப்பட்ட மற்றும் வகைப்படுத்தப்படாத ஓர் அடிப்படைக் கோட்பாடு வெளியிடப்பட்டது.
- சமீபத்தியக் கோட்பாடானது 2012 ஆம் ஆண்டு ஆவணத்தைத் திருத்தியமைக்கிறது.





## ஹைட்ரஜன் இரயில் – இந்தியா




- இந்தியாவின் முதல் ஹைட்ரஜன் இரயில் இந்த ஆண்டு டிசம்பர் மாதத்தில் தயாராகும் என்று இரயில்வே அமைச்சர் அறிவித்துள்ளார்.
- ஹைட்ரஜன் இரயில் ஆனது முதலில் கல்கா மற்றும் சிம்லா போன்ற பாரம்பரிய வழித் தடச் சுற்றுகளில் இயக்கப்படும்.

- இந்த இரயில்கள் அதன் பெயரில் குறிப்பிடப் படுவது போல ஹைட்ரஜன் எரிபொருள் எஞ்ஜின்களால் இயங்கும்.
- பாரம்பரிய டீசல் எஞ்ஜின்களை விட இவை சுற்றுச்சூழலுக்கு மிகவும் உகந்தவை ஆகும்.
- ஹைட்ரஜன் எரிபொருள் கலனானது, ஹைட்ரஜன் மற்றும் ஆக்சிஜனை மாற்றி அமைத்து, இரயிலின் இயங்கிகளை இயக்கச் செய்வதற்குப் பயன்படுத்தப்படும் மின்சாரத்தை உற்பத்தி செய்கிறது.
- இந்த இரயில்கள் தூய்மையான ஆற்றல் மாற்ற எரிபொருளைப் பயன்படுத்தச் செய்வதால் அவை எந்தவொரு காற்று மாசுபாடுத்திகளையும் வெளியிடுவதில்லை.

## அணுசக்தி விசையாழி பாகங்கள் விநியோகம்




- ஹைதராபாத்தில் அமைந்துள்ள ஆசாத் இன்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனமானது, அணுசக்தி விசையாழிகளுக்கான முக்கிய விசையாழி பாகங்களை விநியோகிப்பதற்கான முதல் இந்திய நிறுவனமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- இந்த நிறுவனம் ஆனது, அதற்கான முக்கியப் பாகங்கள் அடங்கிய தனது முதல் தொகுப்பினை வழங்கியுள்ளது.
- இவை தற்போது பிரான்சு நாட்டின் பெல்ஃபோர்ட் எனுமிடத்தில் தயாரிக்கப்படும் அணு விசையாழிகளில் பொருத்தப்படும்.

## சுழற்சி மற்றும் நிலைத்தன்மையை மேம்படுத்துதல் திட்டம்


- இந்திய அரசானது, ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றுச்சூழல் திட்ட அமைப்புடன் இணைந்து இந்தியாவில் 'சுழற்சி மற்றும் நிலைத்தன்மையை மேம்படுத்துதல்' என்ற திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது.
- இது "கழிவிலிருந்து வளத்தினை உருவாக்குதல்" திட்டம் ஆகும்.
- சுற்றுச்சூழலின் மீது ஜவுளித்துறை ஏற்படுத்தும் எதிர்மறையான தாக்கங்களைக் குறைப்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.
- பாலிஸ்டர் போன்ற செயற்கைப் பொருட்களின் பயன்பாட்டைக் குறைப்பதும் இந்தத் திட்டத்தில் அடங்கும்.
- பாலிஸ்டர் சிதைவடையாத ஒரு வகை நெகிழியாகும்.

- ஜவுளிப் பொருட்களின் மறுசுழற்சி மற்றும் மறு பயன்பாட்டை ஊக்குவிக்கச் செய்யும் வகையில் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது.
- உலக ஜவுளிக் கழிவுகளில் இந்தியாவிலிருந்து வரும் ஜவுளிக் கழிவுகள் 8.5% ஆகும்.
- இந்தியாவில் ஆண்டுக்கு 7800 கிலோ டன் ஜவுளிக் கழிவுகள் குவிகின்றன.




## முதன்மை வேளாண் கடன் சங்கங்களின் சேவை

- முதன்மை வேளாண் கடன் சங்கங்கள் ஆனது, விரைவில் பொதுச் சேவை மையங்கள் வழங்கி வருகின்ற சேவைகளை வழங்கத் தொடங்க உள்ளது.
- முதன்மை வேளாண் கடன் சங்கங்களானது தற்போது நீர் விநியோகம், சேமிப்பு, வங்கி மித்ரா உள்ளிட்ட 20 வெவ்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலும்.
- முதன்மை வேளாண் கடன் சங்கங்களின் 13 கோடி விவசாயி உறுப்பினர்கள் உள்ளிட்ட கிராமப்புற மக்களுக்கு 300க்கும் மேற்பட்டச் சேவைகள் இதன் மூலம் கிடைக்கப் பெறும்.
- இது முதன்மை வேளாண் கடன் சங்கங்களின் வணிகச் செயல்பாடுகளை அதிகரித்து, அவை தன்னிறைவுப் பொருளாதார நிறுவனங்களாக மாற உதவும்.



## Zoop - உணவு விநியோகச் சேவை

- இந்திய இரயில்வே நிர்வாகமானது, "Zoop" என்ற புதிய சேவையை அறிமுகப் படுத்தி உள்ளது.
- இது இரயில் பயணிகளுக்கான வாட்ஸ்அப் (புலனம்) அடிப்படையிலான ஒரு உணவு விநியோகச் சேவையாகும்.
- பிரபலமான புலனம் தளத்தில் கிடைக்கப் பெறும் இந்தச் சேவையானது பயணிகள் தங்கள் இருக்கைகளில் அமர்ந்தவாறே உணவுகளை வாங்குவதற்குப் பதிவு செய்ய இது வழிவகை செய்கிறது.




## உச்ச நீதிமன்றம் - புதிய நீதிபதிகள்

- நீதிபதிகள் நியமன ஆணையம் அளித்த பரிந்துரைகளை ஏற்று, இந்திய உச்ச நீதிமன்றத்திற்கான 5 புதிய நீதிபதிகளை நியமித்து மத்திய அரசு அறிவித்தது.
- பரிந்துரைகளை வழங்குகின்ற நீதிபதிகள் நியமன ஆணையம் எனப்படும் நீதிபதிகள் குழுவானது, டிசம்பர் மாதத்தில் உச்ச நீதிமன்றத்திற்கு நியமிக்கப்பட உள்ள நீதிபதிகளின் பெயர் பட்டியலை அனுப்பியது.
- தற்போது உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் மொத்த எண்ணிக்கை 32 ஆக உள்ளது.
- தற்போது, இந்திய உச்ச நீதிமன்றத்தில் அனுமதிக்கப்பட்ட மொத்த நீதிபதிகளின் எண்ணிக்கை முப்பத்து நான்கு நீதிபதிகள் ஆகும்.



## இந்தியாவின் பால் உற்பத்தி

- 2021-22 ஆம் ஆண்டில், உலகப் பால் உற்பத்தியில் 24 சதவீதப் பங்களிப்பை வழங்கி உலகிலேயே அதிக பால் உற்பத்தி செய்யும் நாடாக இந்தியா மாறியுள்ளது.
- உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் பெரு நிறுவனப் புள்ளி விவரங்கள் தரவுத் தளத்தின் (FAOSTAT) உற்பத்தி குறித்த தரவுகளின் படி இது கூறப்படுகிறது.
- 2014-15 மற்றும் 2021-22 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட கடந்த எட்டு ஆண்டுகளில் இந்தியாவானது தனது பால் உற்பத்தியில் 51 சதவீத வளர்ச்சியைக் கண்டுள்ளது.
- இது 2021-22 ஆம் ஆண்டில் 22 கோடி டன்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது.
- ஏற்கனவே இருந்த பின்வரும் மூன்று திட்டங்களை இணைத்து 2014 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் தேசியப் பால்வள மேம்பாட்டுத் திட்டம் ஆனது தொடங்கப்பட்டது
    - முனைவுறு பால்வள மேம்பாட்டுத் திட்டம்
    - தரமான மற்றும் தூய்மையான பால் உற்பத்திக்கான உள்கட்டமைப்பை வலுப்படுத்துதல் திட்டம் மற்றும்
    - கூட்டுறவு நிறுவனங்களுக்கான உதவித் திட்டம்.




## யுவ சங்கம் பதிவுத் தளம்




- யுவ சங்கம் என்பது வடகிழக்குப் பிராந்தியத்தினைச் சேர்ந்த இளைஞர்களுக்கும், இந்தியாவின் பிற பகுதிகளில் உள்ள இளைஞர்களுக்கும் இடையே நெருங்கிய உறவுகளை உருவாக்குவதற்கான ஒரு முன்னெடுப்பாகும்.

- இந்தத் தளமானது, "ஏக் பாரத் ஷ்ரேஷ்தா பாரத்" என்ற நோக்கத்தின் கீழ் தொடங்கப் பட்டது.
- இந்த முன்னெடுப்பின் கீழ் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள் நாடு முழுவதும் பயணம் செய்து, பல்வேறு பகுதிகளுக்கிடையே நிலவும் கலாச்சாரத்தினைப் பற்றி கற்பதற்கான ஒரு தனித்துவமான வாய்ப்பைப் பெறுவர்.

## எண்ணிமத் திறன்கள் திட்டம் – இந்தியா





- ரிலையன்ஸ் ஜியோ மற்றும் GSMA ஆகியவை தங்களது எண்ணிமத் திறன்கள் திட்டத்தினைத் தேசிய அளவில் தொடங்க உள்ளதாக அறிவித்துள்ளன.
- இது மாபெரும் GSMA உடன் இணைக்கப்பட்ட மகளிர் ஈடுபாட்டு முன்னெடுப்பின் கீழ் மேற்கொள்ளப்படும் ஒரு கூட்டு முயற்சியாகும்.
- எண்ணிமப் பயன்பாட்டிற்கான அணுகலைத் திறன்மிக்க வகையில் பயன்படுத்த உதவும் வகையில், கிராமப்புற பெண்கள் மற்றும் விளிம்புநிலை/குறைந்த வருமானம் கொண்ட குழுக்களைச் சேர்ந்த தனிநபர்களுக்கு, அதன் தேவை அடிப்படையிலானப் பயிற்சியை வழங்குவதை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- GSMA அமைப்பின் 2022 ஆம் ஆண்டு கைபேசி பயன்பாடு சார்ந்த பாலின இடைவெளி அறிக்கையின் படி, இந்தியாவில் கைபேசி சார்ந்த இணையத்தினைப் பயன்படுத்தச் செய்வதில் ஆண்களை விட பெண்கள் 41% குறைவாகவே உள்ளனர்.
- இந்தியாவில் 248 மில்லியன் ஆண்கள் கைபேசி சார்ந்த இணையத்தைப் பயன் படுத்துகின்ற அதே சமயம் மொத்தம் 330 மில்லியன் பெண்கள் இன்னும் கைபேசி சார்ந்த இணையத்தைப் பயன்படுத்துவதில்லை.

## மேற்கூரை சூரியசக்தி உற்பத்தி திட்டம்

- இந்திய அரசானது PM-KUSUM திட்டத்தினை 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை நீட்டித்துள்ளது.
- பிரதான் மந்திரி கிசான் உர்ஜா சுரக்சா ஏவம் உத்தான் மகாபியன் (PM-KUSUM) திட்டமானது 2019 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- இது 2022 ஆம் ஆண்டிற்குள் 30,800 மெகாவாட் அளவிற்கு சூரிய சக்தி உற்பத்தியினை அதிகரிக்க வேண்டும் என்ற இலக்கினை நிர்ணயித்துள்ளது.
- இத்திட்டம் மூன்று கூறுகளைக் கொண்டுள்ளது.

- கூறு A: 2 மெகாவாட் திறன் கொண்ட சிறிய மின் உற்பத்தி நிலையங்களை நிறுவச் செய்வதன் மூலம் 10,000 மெகாவாட் சூரிய சக்தியை நிறுவுதலை நோக்கமாகக் கொண்டது.
- கூறு B: 20 லட்சம் சூரிய சக்தியில் இயங்கும் வேளாண் நீர் இறைப்பு இயந்திரங்களை நிறுவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- கூறு C: 15 லட்சம் கட்டமைப்பில் இணைக்கப்பட்ட வேளாண் நீர் இறைப்பு இயந்திரங்களை சூரிய சக்தியில் இயங்கக் கூடியதாக மாற்றுதலை நோக்கமாகக் கொண்டது.




## அந்த்யோதயா திட்டக் கணக்கெடுப்பு 2022-23




- ஊரக மேம்பாட்டு மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை அமைச்சகம் ஆனது அந்த்யோதயா திட்டத்திற்கான 2022-23 ஆம் ஆண்டு கணக்கெடுப்பினைத் தொடங்கியுள்ளது.
- இது கிராமப்புறங்களில் மேற்கொள்ளப்படும் பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்களின் மூலம் பெறப்படும் விளைவுகளை மதிப்பிடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இந்தக் கணக்கெடுப்புடன் இணைக்கப்பட்ட வகையிலான ஒரு இணையதளம் மற்றும் கைபேசிச் செயலி ஆகியவையும் தொடங்கப்பட்டன.
- கிராமப் பஞ்சாயத்து மேம்பாட்டுத் திட்டத்திற்கான (GPDP) பங்கேற்புத் திட்டமிடல் என்ற ஒரு செயல்முறைக்கு உதவச் செய்வதை நோக்கமாகக் கொண்டு இந்தக் கணக்கெடுப்பானது மேற்கொள்ளப் படுகிறது.
- இது சேவை வழங்கலை மேம்படுத்துவது, குடியுரிமையை மேம்படுத்துவது, மக்கள் சார்ந்த நிறுவனங்கள் மற்றும் குழுக்களின் கூட்டணிகள் உருவாவதற்கான ஒரு வாய்ப்பினை உருவாக்குவது, மற்றும் உள்ளாட்சி மட்ட அளவிலான நிர்வாகத்தை மேம்படுத்துவது ஆகிய பணிகளை மேற்கொள்ளும்.

## உலகளாவிய சர்வதேச உயிரி எரிபொருள் கூட்டணி




- 2023 ஆம் ஆண்டு இந்திய எரிசக்தி வார நிகழ்வில் உலகளாவிய உயிரி எரிபொருள் கூட்டணி என்ற அமைப்பினை இந்தியா தொடங்கி வைத்தது.
- அமெரிக்கா, பிரேசில், ஐரோப்பிய ஒன்றியம், சர்வதேச எரிசக்தி முகமை போன்ற முக்கிய பங்குதாரர்களுடன் இணைந்து உயிரி எரிபொருள் பயன்பாட்டினை மிகவும் ஊக்குவிப்பதற்காக ஒரு சாதகமான சூழல் அமைப்பை உருவாக்கச் செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உயிரி எரிபொருளினை விரைவாக ஏற்றுக் கொள்வதற்காக, அதற்கான எரிபொருள் தரநிலைகள் மற்றும் எந்திரங்களுக்கு உகந்த சூழல் அமைப்பை உருவாக்குவதையும், தொழில்நுட்பத்தில் ஒத்துழைப்பை உருவாக்குவதையும் இந்த கூட்டணி நோக்கமாகக் கொண்டுள்ளது.

## முழு நீதிபதிகள் எண்ணிக்கை பலம் - உச்ச நீதிமன்றம்

- இரண்டு உயர் நீதிமன்ற தலைமை நீதிபதிகள் உச்ச நீதிமன்றத்திற்குப் பதவி உயர்த்தப் பட்டதன் மூலம் இந்தியாவின் உச்ச நீதிமன்றத்தின் நீதிபதிகளின் பலமானது தற்போது அதன் முழு எண்ணிக்கையான 34 ஆக உள்ளது.
- இதற்கு முன்பு, 2019 ஆம் ஆண்டு செப்டம்பர்-நவம்பர் மாதங்களில் தான் உச்ச நீதிமன்றம் தனது முழு பலத்துடன் செயல்பட்டது.
- பாராளுமன்றம் ஆனது 1956 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்ற (நீதிபதிகள் எண்ணிக்கை) சட்டத்தினை இயற்றி, நீதிபதிகளின் எண்ணிக்கைக்கான அதிகபட்ச உச்ச வரம்பை நிர்ணயிப்பதற்காக அச்சட்டத்தினை திருத்தியுள்ளது.

- 1956 ஆம் ஆண்டில் ஒரு தலைமை நீதிபதியுடன் சேர்த்து கூடுதலாக மொத்த நீதிபதிகளின் எண்ணிக்கை 11 ஆக உயர்த்தப்பட்டது.
- இச்சட்டமானது, 1960 ஆம் ஆண்டில் 14, 1978 ஆம் ஆண்டில் 18, 1986 ஆம் ஆண்டில் 26, 2009 ஆம் ஆண்டில் 31 மற்றும் 2019 ஆம் ஆண்டில் 33 என உயர்த்தப்படுவதற்காக மேலும் பலமுறை திருத்தியமைக்கப் பட்டது.




## உலகின் முதல் பழங்காலப் பாரம்பரியப் பல்கலைக்கழகம்

- விஸ்வபாரதி பல்கலைக்கழகம் ஆனது, விரைவில் யுனெஸ்கோ அமைப்பின் 'பாரம்பரியச் சின்னம்' என்ற அந்தஸ்தினைப் பெற்று உலகின் முதல் பழங்காலப் பாரம்பரியப் பல்கலைக்கழகம் என்ற பெருமையினைப் பெற உள்ளது.
- இது 1921 ஆம் ஆண்டில் இரவீந்திரநாத் தாகூர் அவர்களால் மேற்கு வங்கத்தில் சாந்தி நிகேதனில் நிறுவப்பட்டது.
- விஸ்வபாரதி பழ்கலைக்கழகமானது, ஒரு மத்தியப் பொது ஆராய்ச்சிப் பல்கலைக் கழகம் மற்றும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு கல்வி நிறுவனம் ஆகும்.



## மாற்றுத் திறனாளிகள் எளிதில் அணுகும் வகையிலான இந்திய செயலி

- "எண்ணிம சூழலமைவினை மாற்றுத் திறனாளிகளுக்கு உகந்த வகையில் மாற்றுதல்" என்ற அறிக்கை சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- வாட்ஸ்அப் (புலனம்) ஆனது, எளிதில் பயன்படுத்தக் கூடிய எண்ணிம வசதிகள் மற்றும் சேவைகள் மூலமாக மாற்றுத் திறனாளிகள் எளிதில் அணுகும் வகையிலான மாற்றுத் திறனாளிகளுக்கான இந்தியச் செயலியாக விளங்குகிறது.

- இணைய வர்த்தகம், இயங்கலை மூலமான பண வழங்கீட்டுச் சேவைகள், போக்குவரத்து, உணவு விநியோகம் போன்ற பல்வேறு வகைகளில் உபயோகிக்கப் படும் செயலிகளை இந்த நிறுவனம் மதிப்பீடு செய்தது.
- ஃபோன்பே, பேடிஎம், ஸ்விகி, சோமாட்டோ, அமேசான், ஃபிளிப்கார்ட், டெலிகிராம், ஊபேர் மற்றும் ஓலா போன்ற பிற செயலிகளையும் இந்த ஆலோசனை வழங்கீட்டு அமைப்பானது தணிக்கை செய்துள்ளது.




## விரைவுக் குறியீடு அடிப்படையிலான நாணய விநியோக இயந்திரம்



- இந்திய ரிசர்வ் வங்கியானது, விரைவுக் குறியீடு அடிப்படையிலான நாணய விநியோக இயந்திரங்களை அறிமுகப்படுத்துவதற்காக ஒரு சோதனைத் திட்டத்தைத் தொடங்க உள்ளது.

- இந்த விற்பனை இயந்திரங்களானது, வாடிக்கையாளரின் கணக்கில் இருந்து எடுக்கப் படும் பற்றுக்கு ஈடான நாணயங்களை வழங்கும்.
- இது நாணயங்களுக்கான அணுகலை எளிதாக்கும்.
- முதற்கட்டமாக 12 நகரங்களில் இந்த இயந்திரம் அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

## கண்ணாடியினாலான இந்தியாவின் முதல் இக்லூ உணவகம்

- குல்மார்க்கில் உள்ள இந்தியாவின் முதல் கண்ணாடி இக்லூ உணவகம் சுற்றுலாப் பயணிகளின் ஈர்ப்பினைப் பெற்ற பிரபலமான இடமாக மாறியுள்ளது.
- வடக்கு காஷ்மீரின் பாரமுல்லா மாவட்டத்தில் உள்ள குல்மார்க்கின் கோலாஹோய் கிரீன் ஹைட்ஸ் என்ற தங்கும் விடுதியினால் பனிக் குவியல்களின் நடுவில் இந்த கண்ணாடிச் சுவரினால் ஆன உணவகம் கட்டமைக்கப்பட்டுள்ளது.
- 2021 ஆம் ஆண்டில், இதே தங்கும் விடுதி நிர்வாகமானது, ஆசியாவின் மிகப்பெரிய பனி இக்லூ என்ற வகையில் குல்மார்க்கில் ஒரு பனி இக்லூவைக் கட்டமைத்தது.



## ஏரோ இந்தியா 2023




- ஆசியாவின் மிகப்பெரிய வான்படை விமானங்களின் கண்காட்சியான 2023 ஆம் ஆண்டு ஏரோ இந்தியா நிகழ்வானது பிரதமர் அவர்களால் பெங்களூருவில் தொடங்கி வைக்கப் பட்டது.

- ஐந்து நாட்கள் வரை நடைபெறும் இந்த நிகழ்வில் கிட்டத்தட்ட 98 நாடுகளைச் சேர்ந்த 809 நிறுவனங்கள் மற்றும் பிரதிநிதிகள் பங்கேற்க உள்ளனர்.
- இராணுவ விமானங்கள், ஹெலிகாப்டர்கள், இராணுவ உபகரணங்கள் மற்றும் புதுமையான விமானவியல் ஆகியவை சார்ந்த தயாரிப்புகளுக்கான வளர்ந்து வரும் ஒரு மையமாக இந்தியா திகழ்வதனை 14வது ஏரோ இந்தியா நிகழ்வானது காட்சிப் படுத்துகிறது.

## 13 புதிய ஆளுநர்கள் நியமனம்

- 2023 ஆம் ஆண்டு பிப்ரவரி 12 ஆம் தேதியன்று 12 மாநிலங்கள் மற்றும் லடாக் ஒன்றியப் பிரதேசம் ஆகியவற்றிற்கான புதிய ஆளுநர்கள் நியமிக்கப்பட்டனர்.
- இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 157 மற்றும் 158 ஆகிய சட்டப் பிரிவுகள், ஆளுநர் பதவிக்கான தகுதி வரம்புகளைக் குறிப்பிடுகின்றன.
- ஆளுநர் இந்திய அரசியலமைப்பினுடைய கூட்டாட்சி அமைப்பின் ஓர் அங்கமாக திகழ்வதோடு மட்டுமல்லாது மத்திய மற்றும் மாநில அரசாங்கங்களுக்கு இடையே ஒரு இணைப்புப் பாலமாக இவர் செயல்படுகிறார்.
- ஆளுநர் அவர்கள் ஒரு மாநில அரசின் அரசியலமைப்பு சார்ந்த தலைவராகவும் அதன் பிரதிநிதியாகவும் 'இரட்டைத் திறனில்' செயல்படுகிறார்.
- அவர் மாநில அரசின் அமைச்சர்கள் குழுவின் ஆலோசனைக்குக் கட்டுப்பட்ட வகையில் அரசியலமைப்பு சார்ந்த தலைவர் ஆவார்.
- மத்திய அரசிற்கும் மாநில அரசிற்கும் இடையேயான ஒரு முக்கிய இணைப்பாக அவர் செயல்படுகிறார்.




## கானன் பிரஹாரி செயலி

- இந்திய அரசானது, 'கானன் பிரஹாரி' எனப்படும் கைபேசி செயலி மற்றும் CMSMS இணைய தளம் ஆகியவற்றினை அறிமுகப்படுத்தியுள்ளது.

- CMSMS என்பது நிலக்கரிச் சுரங்கக் கண்காணிப்பு மற்றும் மேலாண்மை அமைப்பு என்பதன் சுருக்கமாகும்.
- இது அங்கீகரிக்கப்படாத நிலக்கரிச் சுரங்க நடவடிக்கைகளைப் பற்றி புகார் அளிக்கச் செய்வதற்கான வசதியினை வழங்குகிறது.
- ஆந்திரப் பிரதேசம், தெலுங்கானா மற்றும் தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் சிறு கனிமங்களுக்கான சட்டவிரோதமான சுரங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது பெரும்பாலும் அதிகமாகக் காணப்படுகிறது.
- அசாம் மற்றும் மேகாலயா போன்ற வடகிழக்கு மாநிலங்களில் நிலக்கரி போன்ற முக்கியக் கனிமங்களுக்கான சட்டவிரோதமான சுரங்க நடவடிக்கைகள் மேற் கொள்ளப் படுவது பெரும்பாலும் அதிகமாகக் காணப்படுகிறது.
- சட்ட விரோதமான மணல் கடத்தலில் இந்தியா முதலிடத்தில் உள்ளது.




## அகலப்பட்டை அலைவரிசைக்கான வரையறை

- அகலப்பட்டை அலைவரிசைக்கான வரையறையில், தொலைத் தொடர்பு சேவை வழங்கீட்டு நிறுவனங்கள் தற்போது குறைந்தபட்சம் 2 Mbps இணையச் சேவை வேகம் வழங்க வேண்டும்.
- இதற்கு முன்பு 2013 ஆம் ஆண்டு முதல் அந்த அலைவரிசையில் நான்கில் ஒரு பங்கு, அதாவது 512 Kbps சேவை வழங்கப்பட வேண்டியிருந்தது.


- 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில், இந்தியாவில் உள்ள அகலப்பட்டை அலைவரிசை சேவை பயன்பாட்டாளர்களின் எண்ணிக்கை 825.38 மில்லியன் ஆகும்.
- 2012 ஆம் ஆண்டிற்கான தேசியத் தொலைத் தொடர்புக் கொள்கையானது, 2015 ஆம் ஆண்டிற்குள் அகலப் பட்டை அலைவரிசை சேவைக்கான வரையறையை 2 Mbps ஆக மாற்றுவதற்கான இலக்கை நிர்ணயித்துள்ளது.

## நதிப்புற நகரங்கள் கூட்டணி உறுப்பினர்களின் வருடாந்திரக் கூட்டம்

- நதிப்புற நகரங்கள் கூட்டணி உறுப்பினர்களின் வருடாந்திரக் கூட்டம் ஆனது புனே நகரில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- தேசிய நகர்ப்புற விவகாரங்கள் கல்வி நிறுவனத்துடன் (NIUA) இணைந்து தேசியத் தூய்மை கங்கை திட்டத்தினால் (NMCG) இது ஏற்பாடு செய்யப்பட்டது.
- DHARA என்பது நகர்ப்புற நதிகளுக்கான முழு அளவிலான நடவடிக்கையை மேற் கொள்தல் என்பதனைக் குறிக்கிறது.
- நதிப்புற நகரங்கள் கூட்டணி ஆனது 2021 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- இந்தியாவின் நதிப்புற நகரங்கள், நகர்ப்புற நதிகளின் நிலையான மேலாண்மை அமைப்பிற்கான தகவல் பரிமாற்றம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றினை மேற் கொள்வதற்கான ஒரு பிரத்தியேகத் தளமாகும்.
- 2021 ஆம் ஆண்டில் 30 நகரங்களை உறுப்பினராக கொண்டு தொடங்கப்பட்ட நிலையில், தற்போது இது இந்தியா முழுவதும் 95 நகரங்கள் இந்த அமைப்பின் உறுப்பினர்களாக உள்ளது.

## TRIFED ஆதி மஹோத்சவத் திருவிழா

- பழங்குடியினர் விவகார அமைச்சகம் ஆனது, சமீபத்தில் ஆதி மஹோத்சவ விழாவை புது டெல்லியில் தொடங்கியது.
- ஆதி மஹோத்சவ் விழாவின் ஒரு முக்கிய நோக்கம் பழங்குடியினரின் தயாரிப்புப் பொருட்களின் விநியோகத்தினை ஊக்குவிப்பதாகும்.
- பழங்குடியினர் துறை அமைச்சகத்தின் சார்பில் TRIFED அமைப்பானது இந்த விழாவை நடத்துகிறது.
- இந்த நிகழ்வின் கருத்துரு, "பழங்குடியினரின் கைவினைப் பொருட்கள், கலாச்சாரம், உணவு வகைகள் மற்றும் வர்த்தகத்தின் மதிப்பினைக் கொண்டாடுதல்" என்பதாகும்.



## பீமா சுகம் இணையதளம்

- இந்திய அரசானது, சமீபத்தில் பீமா சுகம் என்ற இணைய தளத்தினைத் தொடங்கியது.
- இது காப்பீடு தொடர்பான விநியோகங்களை மேற்கொள்வதற்கான ஒரு மின்னணு தளமாகும்.
- சந்தையில் உள்ள அனைத்துக் காப்பீட்டு நிறுவனங்களையும் இங்கு கண்டறிந்து, காப்பீட்டுத் திட்டங்களை இந்தத் தளம் மூலம் வாங்க இயலும்.
- காப்பீட்டுகளை வாங்கும் நிறுவனங்கள் மற்றும் விற்பனையாளர்கள் இந்த இணையத் தளத்தினை எளிதில் அணுகக் கூடிய வகையில் உள்ளது.


Bima Sugam: A game changer?

Policyholders will be able to buy insurance products directly or through assisted mode

All insurance intermediaries including individual agents, web aggregators will have access to Bima Sugam

There will be a variety of products, businesses and payment options on this platform to choose from

Know-your-customer (KYC) will be done through Aadhaar number and the data will auto populate

## இந்திய அரிசி மாநாடு 2023

- 2வது இந்திய அரிசி மாநாடானது, சமீபத்தில் ஒடிசாவின் கட்டாக் நகரில் உள்ள தேசிய அரிசி ஆராய்ச்சி நிறுவனத்தில் தொடங்கப்பட்டது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இந்த மாநாட்டின் கருத்துரு, "நெல் ஆராய்ச்சியை மாற்றி அமைத்தல்" என்பதாகும்.
- உலகளாவிய உணவு நெருக்கடி மற்றும் நெல் பயிர்களின் உற்பத்தி மற்றும் விளைச்சலை அதிகரிக்க உதவும் சமீபத்திய அறிவியல் முன்னேற்றங்கள் ஆகியவை குறித்து இந்த மாநாட்டில் கலந்தாலோசிக்கப்படும்.



## AMRITPEX 2023

- இந்தியத் தபால் துறையானது புது டெல்லியில் 'AMRITPEX 2023' என்ற தலைப்பிலான ஒரு தேசிய அளவிலான அஞ்சல்தலை கண்காட்சியை ஏற்பாடு செய்தது.
- 300 பங்கேற்பாளர்களால் சேகரிக்கப்பட்ட ஒரு லட்சத்திற்கும் அதிகமான தபால் தலைகளைக் காட்சிப்படுத்தும் வகையிலான 1,400 படக்காட்சிகள் இதில் இடம் பெற உள்ளன.
- பல ஆண்டுகளாக நிலவி வரும் இந்தியாவின் வரலாறு, கலாச்சாரம், கலை மற்றும் பாரம்பரியத்தை முன்னிலைப்படுத்தும் வகையில் இந்தக் கண்காட்சியில் அஞ்சல் தலைகள் மற்றும் புகைப்படச் சேகரிப்புகள் காட்சிப்படுத்தப்பட்டன.




## ஜல் ஜன் அபியான்



- ❖ ஜல் சக்தி அமைச்சகம் மற்றும் பிரம்ம குமாரிகள் அமைப்பு ஆகியவை இணைந்து ஜல் ஜன் அபியான் பிரச்சாரத்தினைச் செயல்படுத்த உள்ளன.
- ❖ இந்தப் பிரச்சாரத்தின் முக்கிய நோக்கம் நீர் வளங்காப்பு ஆகும்.
- ❖ இந்த எட்டு மாத காலப் பிரச்சாரத்தின் போது, இந்த அமைப்பைச் சேர்ந்த தன்னார்வலர்கள் தண்ணீரைப் பாதுகாப்பது குறித்து பொதுமக்களிடையே விழிப்பு உணர்வுப் பிரச்சாரத்தினை மேற்கொள்வர்.
- ❖ புதிய நீர்நிலைகளை அமைக்கச் செய்வதிலும், ஏற்கனவே உள்ள 5,000க்கும் மேற்பட்ட நீர் நிலைகளைப் பாதுகாப்பதிலும் இந்த அமைப்பு கவனம் செலுத்த உள்ளது.
- ❖ இந்தப் பிரச்சாரமானது குறைந்தது பத்து கோடி மக்களைச் சென்றடைவதையும், 10,000 விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வதையும் இலக்காகக் கொண்டு உள்ளது.

## டிஜிட்டல் சுரக்சா பிரச்சாரம்

- ❖ G20 அமைப்பின் பாதுகாப்பான இணையம் என்ற ஒரு பிரச்சாரத்திற்காக, மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகத்துடன் (MeitY) இணைந்து தனது கூட்டாண்மையினை நிறுவ உள்ளதாக மெட்டா நிறுவனம் அறிவித்துள்ளது.
- ❖ அந்த அமைச்சகத்துடன் இணைந்து, மெட்டா நிறுவனம் #டிஜிட்டல் சுரக்சா என்ற ஒரு பிரச்சாரத்தினைத் தொடங்கியுள்ளது.
- ❖ இந்தப் பிரச்சாரத்தின் மூலம், மெட்டா நிறுவனமானது இணையத்தில் எவ்வாறு பாதுகாப்பாக இருப்பது என்பது குறித்த மூல ஆதாரங்களை இந்திய மொழிகளில் உருவாக்கிப் பகிர்ந்து கொள்ள உள்ளது.
- ❖ எண்ணிம உலகில் எவ்வாறு பாதுகாப்பாக இருப்பது என்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும்.




## கவாச் 2023

- ❖ உள்துறை மற்றும் கல்வித் துறை அமைச்சகம் ஆகியவை, அகில இந்தியத் தொழில் நுட்பக் கல்விக் கழகத்துடன் (AICTE) இணைந்து கவாச் 2023 என்ற ஹேக்கத்தானை அறிமுகப் படுத்தி உள்ளது.
- ❖ இது இணையப் பாதுகாப்பு குறித்த தேசிய அளவிலான ஹேக்கத்தான் ஆகும்.
- ❖ இந்திய உளவுத் துறை முகமைகள் எதிர்கொள்ளும் இணையப் பாதுகாப்பு சார்ந்த சவால்களை எதிர்கொள்வதற்கான புதுமையான கருத்தாக்கங்கள் மற்றும் தொழில் நுட்பம் சார்ந்த தீர்வுகளை காணச் செய்வதற்காக இந்தப் பிரச்சாரமானது தொடங்கப் படுகிறது.




## 2வது உலகளாவிய ஹேக்கத்தான் "ஹார்பிங்கர் 2023"

- இந்திய ரிசர்வ் வங்கியானது, 'ஹார்பிங்கர் 2023 - மாற்றத்திற்கான புத்தாக்கம்' என்ற தனது இரண்டாவது உலகளாவிய ஹேக்கத்தானைத் தொடங்கியுள்ளது.
- 'உள்ளார்ந்த எண்ணிமச் சேவைகள்' என்பதே இந்த ஹேக்கத்தானுக்கான கருத்துரு ஆகும்.
- முதல் ஹேக்கத்தான் 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் அறிவிக்கப்பட்டு அதன் முடிவுகள் 2022 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் அறிவிக்கப்பட்டன.





## வட இந்தியாவின் முதல் அணுமின் நிலையம்

- வட இந்தியாவின் முதல் அணுமின் உற்பத்தி நிலையமானது, ஹரியானா மாநிலத்தின் கோரக்பூரில் அமைக்கப்பட உள்ளது.
- இதன் மூலம் 2800 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட உள்ளது.
- தற்போது அணுமின் உறபத்தி நிலையங்கள் பெரும்பாலும் தமிழ்நாடு மற்றும் ஆந்திரப் பிரதேசம் போன்ற தென் மாநிலங்களிலோ அல்லது மேற்கில் மகாராஷ்டிரா ஆகிய பகுதிகளில் மட்டுமே அமைந்துள்ளன.




## சிறைக் காவலில் உள்ள நபர்களின் உயிரிழப்பு குறித்தத் தரவு




- கடந்த ஐந்து ஆண்டுகளில், குஜராத்தில் சிறைக் காவலில் உள்ள நபர்களின் உயிரிழப்புகள் அதிகபட்சமாக 80 ஆக பதிவாகியுள்ளன.
- இதைத் தொடர்ந்து மகாராஷ்டிரா (76), உத்தரப் பிரதேசம் (41), தமிழ்நாடு (40), பீகார் (38) ஆகிய மாநிலங்கள் உள்ளன.
- ஒன்பது ஒன்றியப் பிரதேசங்களில் கடந்த ஐந்தாண்டுகளில் பதிவான சிறைக் காவலில் உள்ள நபர்களின் உயிரிழப்புகளில் டெல்லியில் அதிகபட்சமாக 29 மரணங்கள் பதிவு ஆகியுள்ளன.
- இதைத் தொடர்ந்து ஜம்மு & காஷ்மீர் 4வது இடத்தில் உள்ளது.
- சிறைக் காவலில் உள்ள நபர்களின் உயிரிழப்புகளானது 2017-2018 ஆம் ஆண்டில் 146 ஆகவும், 2018-2019 ஆம் ஆண்டில் 136 ஆகவும், 2019-2021 ஆம் ஆண்டில் 112 ஆகவும், 2020-2021 ஆம் ஆண்டில் 100 ஆகவும் மற்றும் 2021-2022 ஆம் ஆண்டில் 175 ஆகவும் பதிவு ஆகியுள்ளன.

## குனோ தேசியப் பூங்காவிற்கு 12 சிவிங்கிப் புலிகள் வருகை

- தென்னாப்பிரிக்காவில் இருந்து கொண்டு வரப்பட்ட 12 சிவிங்கிப் புலிகள் மத்தியப் பிரதேசத்தினை வந்தடைந்தன.
- ஷியோபூர் மாவட்டத்தில் உள்ள குனோ தேசியப் பூங்காவில் (KNP) அமைந்துள்ள தனிமைப் படுத்தப்பட்ட பாதுகாப்புப் பகுதிகளில் அவை விடுவிக்கப்பட்டன.
- இந்த 12 சிவிங்கிப் புலிகளின் சேர்க்கையுடன் குனோ தேசியப் பூங்காவில் உள்ள சிறுத்தைகளின் எண்ணிக்கை 20 ஆக உயர்ந்துள்ளது.
- முன்னதாக எட்டு அதிவேக நிலவாழ் விலங்குகள் நமீபியாவிலிருந்து கொண்டு வரப் பட்டதற்கு ஐந்து மாதங்களுக்குப் பிறகு இந்த 12 சிவிங்கிப் புலிகள் இங்கு கொண்டு வரப் பட்டன.
- இந்தியாவில் வாழ்ந்த கடைசி சிவிங்கிப் புலியானது, 1947 ஆம் ஆண்டில் இன்றைய சத்தீஸ்கரின் கோரியா மாவட்டத்தில் இறந்ததனால், இது 1952 ஆம் ஆண்டில் அழிந்து விட்ட இனமாக அறிவிக்கப்பட்டது.
- இந்த தேசியப் பூங்காவானது, விந்தியாச்சல் மலைகளின் வடக்குப் பகுதியில் 700 சதுர கி.மீ. பரப்பளவில் பரவிக் காணப்படுகிறது.



## உலகின் மிக உயரமான வானிலைக் கண்காணிப்பு நிலையம்



- எவரெஸ்ட் சிகரத்தில் வீசிய புயல் காற்றினால் உலகின் மிக உயரமான வானிலைக் கண்காணிப்பு நிலையம் ஆனது அழிக்கப்பட்டது.
- இந்த வானிலைக் கண்காணிப்பு நிலையம் ஆனது 8,810 மீட்டர் (28,904 அடி) உயரத்தில், எவரெஸ்ட் சிகரத்திற்குக் கீழே வெறும் 39 மீட்டர் (128 அடி) தொலைவில் அமைந்து உள்ளது.

- இது கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.
- முன்னதாக, இந்த வானிலைக் கண்காணிப்பு நிலையம் ஆனது எவரெஸ்டின் பால்கனி எனப்படும் பகுதியில், தற்போது இருந்த பகுதியை விட சுமார் 400 மீட்டர் தாழ்வான தொலைவில் அமைந்திருந்தது.
- 8,000 மீட்டர் உயரத்திற்கும் மேல் நிறுவப்பட்ட முதல் நிலப்பரப்பு சார்ந்த வானிலைக் கண்காணிப்பு நிலையம் இது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## தீவிரவாத அமைப்புகளுக்குத் தடை

- மத்திய அரசானது, இரண்டு அமைப்புகளுக்குத் தடை விதிக்கச் செய்ததோடு, அந்த அமைப்புகளின் நாசகார மற்றும் இந்திய அரசிற்கு எதிரான கடும் விரோத மிக்கச் செயல்களுக்காக அந்த அமைப்பின் ஒரு நபரைத் தீவிரவாதி என்றும் அறிவித்தது.
- அந்த இரு அமைப்புகளாவன; ஜம்மு காஷ்மீர் கஸ்னவி அமைப்பு மற்றும் காலிஸ்தான் டைகர்ஸ் அமைப்பு ஆகியவையாகும்.
- ஜம்மு காஷ்மீர் கஸ்னவி அமைப்பானது, லஷ்கர்-இ-தொய்பா, ஜெய்ஷ்-இ-முகமது, தெஹ்ரீக்-உல்-முஜாஹிதீன், ஹர்கத்-உல்-ஜெஹாத்-இ-இஸ்லாமி மற்றும் இதர சில தடை செய்யப்பட்டப் பயங்கரவாத அமைப்புகளிடமிருந்து தனது பணியாளர்களைச் சேர்க்கிறது.
- காலிஸ்தான் டைஜர்ஸ் அமைப்பானது 2011 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்தது.
- இது சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் (UAPA) கீழ் தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பான பாபர் கால்சா இன்டெர்னேசனல் என்ற அமைப்பின் கிளை ஆகும்.
- பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் தடை செய்யப் பட்டதாக அறிவிக்கப்பட்ட 43வது மற்றும் 44வது பயங்கரவாதக் குழுக்கள் முறையே ஜம்மு காஷ்மீர் கஸ்னவி அமைப்பு மற்றும் காலிஸ்தான் டைகர்ஸ் அமைப்பு ஆகியனவாகும்.
- பஞ்சாப்பைச் சேர்ந்த ஹர்விந்தர் சிங் சந்து என்கிற ரிண்டா ஒரு தீவிரவாதியாக அறிவிக்கப் பட்டுள்ளார்.
- அரசாங்கத்தினால் தீவிரவாதியாக அறிவிக்கப்பட்ட 54வது நபர் இவர் ஆவார்.



## mPassport காவல் செயலி

- மத்திய வெளியுறவுத் துறை விவகாரங்கள் அமைச்சகம் ஆனது (MEA) 'mPassport காவல்' என்ற ஒரு செயலியினை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இந்தச் செயலியானது கடவுச் சீட்டு வழங்கச் செய்வதற்கான காவல்துறை சரிபார்ப்பு நடைமுறையை எளிதாக்கவும் அதனைத் துரிதப் படுத்தவும் உதவுகிறது.
- இந்த முக்கியமான நடைமுறையை மேலும் விரைவுபடுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தச் செயலியானது குடிமக்களுக்கு விரைவானச் சரிபார்ப்பு நடைமுறை மற்றும் கடவுச் சீட்டு வழங்குவதற்கு வழிவகை செய்யும்.




## செயல்பாட்டில் உள்ள 27,000 தொழில்நுட்பப் புத்தொழில் நிறுவனங்கள்




- இந்தியாவில் 2022 ஆம் ஆண்டில் 1,300க்கும் மேற்பட்ட செயல்பாட்டில் உள்ள தொழில் நுட்பப் புத்தொழில் நிறுவனங்கள் தொடங்கப் பட்டுள்ளன.
- இதன்படி தற்போது செயல்பாட்டில் உள்ள தொழில்நுட்பப் புத்தொழில் நிறுவனங்கள் எண்ணிக்கையானது 25,000 முதல் 27,000 ஆக உள்ளது.
- அமெரிக்கா மற்றும் சீனாவிற்கு அடுத்தபடியாக உலகின் மூன்றாவது பெரிய தொழில் நுட்பப் புத்தொழில் நிறுவனங்களுக்கு உகந்த ஒரு சூழல் அமைப்பாக இந்தியா தனது நிலையைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.

- 2022 ஆம் ஆண்டில், 23க்கும் மேற்பட்ட யூனிகார்ன் நிறுவனங்கள் இணைக்கப்பட்டதை அடுத்து, இந்தியா உலகளவில் அதிக யூனிகார்ன் நிறுவனங்களைக் கொண்ட நாடுகளில் இரண்டாவது இடத்தினைப் பெற்றது.
- 2022-23 ஆம் ஆண்டில் இந்தியப் புத்தொழில் நிறுவனங்களுக்கான மொத்த நிதி ஒதுக்கீடு 24% குறைக்கப் பட்டுள்ளது.

## எழுச்சிமிக்க கிராமங்கள் திட்டம்




- 2022-23 முதல் 2025-26 வரையிலான நிதியாண்டுகளுக்கான 'எழுச்சிமிக்க கிராமங்கள் திட்டத்திற்கு' மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இது மத்திய அரசின் நிதியுதவியினைப் பெறும் திட்டமாகும்.
- இத்திட்டத்தினுடைய முதல் கட்டத்தில் 662 கிராமங்கள் மேம்படுத்தப்படும்.
- கிராமப் பஞ்சாயத்து அமைப்புகளின் உதவியுடன் எழுச்சிமிக்க கிராமத் திட்டத்திற்கான செயல் திட்டங்கள் மாவட்ட நிர்வாகத்தினால் உருவாக்கப் படும்.
- உள்ளூர் மக்களின் இடப்பெயர்வைத் தடுப்பதற்காக என்று புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப் பட்டு, நிலையான பொருளாதார நடவடிக்கைகள் ஊக்குவிக்கப் படும்.


## அதிகளவு உள்நாட்டு விமானப் பயணம்

- விமானப் போக்குவரத்துத் துறையானது மக்களை நெருங்கிய தொடர்பு எல்லைக்குள் கொண்டு வருவதோடு, அதிக விமான நிலையங்கள் மற்றும் சிறந்த சேவை இணைப்பு வசதிடன் தேசிய முன்னேற்றத்தினையும் மேம்படுத்துகிறது.
- பிப்ரவரி 19 அன்று, உள்நாட்டு விமானப் பயணிகளின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 4.45 லட்சமாகும்.
- கோவிட் பெருந்தொற்றிற்குப் பிறகு பதிவான மிக அதிகளவிலான பயணம் இது ஆகும்.
- கோவிட் பெருந்தொற்றிற்கு முன்னதாக பதிவான தினசரி உள்நாட்டு விமானப் பயணிகளின் எண்ணிக்கை 4 லட்சத்திற்கும் குறைவாகவே இருந்தது.

❖ தற்போது, இந்தியாவில் 147 விமான நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.




## உள்நாட்டுத் தொழில்துறைகளில் இருந்து பாதுகாப்பு கொள்முதல்




❖ 2023-24 ஆம் ஆண்டில் இந்தியா தனது பாதுகாப்புத் துறைக்கான மூலதனத்தில் 75 சதவீதத்தினை உள்நாட்டுத் தொழில் துறைகளிடமிருந்து கொள்முதல் செய்வதற்காக செலவிட உள்ளது.

❖ இதே செலவினமானது 2022-23 ஆம் ஆண்டில் 68 சதவீதமாக இருந்தது.


❖ 2023-24 ஆம் ஆண்டிற்கான ஒட்டு மொத்தப் பாதுகாப்புத் துறை சார் செலவினமானது ரூ.5.94 லட்சம் கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது.

❖ இதில், மூலதனச் செலவினமானது ரூ.1.63 லட்சம் கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## புத்தொழில் 20 செயல்பாட்டுக் குழு

- ❖ G20 அமைப்பிற்கான இந்தியாவின் தலைமையின் கீழ் புத்தொழில் 20 செயல்பாட்டுக் குழு அமைக்கப்பட்டுள்ளது.
- ❖ இந்தக் கூட்டத்தின் போது தொழில்முனைவு மற்றும் புதுமை பற்றிய கொள்கைப் பரிந்துரைகள் குறித்து விவாதிக்கப்படும்.
- ❖ புத்தொழில், பெரு நிறுவனங்கள், முதலீட்டாளர்கள், புத்தாக்க முகமைகள் மற்றும் பிற பங்குதாரர்களுக்கு இடையே ஒருங்கிணைப்பை மேம்படுத்தச் செய்வதற்கும் உலக அளவில் புத்தொழில் நிறுவனங்களை ஆதரிக்கச் செய்வதற்குமான ஒரு வாய்ப்பினை உருவாக்குவதை இந்தக் கூட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ புத்தொழில் 20 குழுவானது, அடித்தளம் மற்றும் கூட்டணிகள்; நிதி; உள்ளடக்கம் மற்றும் நிலைத்தன்மை ஆகிய மூன்று பணிக் குழுக்களைக் கொண்டு உள்ளது.


## உறுப்பு மாற்றுச் சிகிச்சைக்கான விதிகளில் மாற்றங்கள்




- ❖ இந்தப் புதிய விதிகள் ஆனது உறுப்பு பெறுநர்களுக்காக விதிக்கப்பட்ட 65 வயது என்ற வரம்பினை நீக்குகிறது.
- ❖ இருப்பிடம் தொடர்பான கட்டுப்பாடுகளை அகற்றச் செய்வது என்பது, உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்குச் சரியான நேரத்தில் உறுப்புகள் கிடைக்கப் பெறச் செய்திட மிகவும் அவசியமான மற்றொரு நடவடிக்கையாகும்.
- ❖ இது ஒரே தேசம் ஒரே உறுப்பு தான காத்திருப்புப் பட்டியலை அடைவதை நோக்கிய ஒரு நடவடிக்கையாகும்.

- தற்போதைய விதிகளின்படி, எதிர்காலத்தில் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை செய்து கொள்ள உள்ள நபர்கள், அவர்கள் வசிக்கும் மாநிலத்தில் மட்டுமே உறுப்புகளைப் பெறுவதற்குப் பதிவு செய்ய வேண்டும்.
- இதில் மேற்கொள்ளப்பட்டுள்ள மற்றொரு முக்கியமான மாற்றம் என்னவென்றால், இதற்காக இதுவரையில் மாநிலங்கள் வசூலித்து வந்த பதிவுக் கட்டணமானது ரத்து செய்யப் பட்டுள்ளது.
- ஒவ்வோர் ஆண்டும் உலகில் மூன்றாவது அதிக எண்ணிக்கையிலான உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள் இந்திய நாட்டில் தான் மேற்கொள்ளப்படுகிறது.

## இந்தியர்களின் குடியுரிமைத் துறப்பு





- 2022 ஆம் ஆண்டில் சுமார் 2.25 லட்சம் இந்தியர்கள் இந்தியக் குடியுரிமையைத் துறந்து உள்ளனர்.
- இது 2011 ஆம் ஆண்டிற்குப் பிறகு பதிவான இதுவரை இல்லாத அதிகபட்ச அளவாகும்.
- சிறந்த வாய்ப்புகள், சுகாதாரம், வாழ்க்கைத் தரம் மற்றும் கல்வி போன்ற பல காரணிகளைத் தேடி, இந்தியர்கள், குறிப்பாக அதிகளவு நிகரச் சொத்து மதிப்புள்ள தனி நபர்கள் (HNI) புதிய கடவுச் சீட்டுகளுடன் மேற்குலக நாடுகளை நோக்கி இடம் பெயர்கிறார்கள் என்பது குறித்து இந்தத் தரவு எடுத்துரைக்கிறது.
- அதிகளவு நிகரச் சொத்து மதிப்புள்ள தனிநபர்கள் 1 மில்லியன் டாலர் அல்லது 8.2 கோடிக்கும் அதிகமான சொத்து வைத்திருக்கும் நபர்கள் ஆவர்.
- ஹென்லி உலக குடிமக்கள் அறிக்கையின்படி, 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இந்தியாவில் 3.47 லட்சம் அதிகளவு நிகரச் சொத்து மதிப்புள்ள தனிநபர்கள் உள்ளனர்.
- மும்பை, டெல்லி, கொல்கத்தா, பெங்களூரு, ஹைதராபாத், புனே, சென்னை, குர்கான் மற்றும் அகமதாபாத் ஆகிய ஒன்பது நகரங்களில் மட்டும் 1.49 லட்சம் அதிகளவு நிகரச் சொத்து மதிப்புள்ள தனி நபர்கள் காணப் படுகின்றனர்.

- உலக அளவில் தனி நபரிடம் உள்ள சொத்து மதிப்பின் அடிப்படையில், அமெரிக்கா, சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளையடுத்து இந்தியா நான்காவது இடத்தில் உள்ளது.

## சரக்கு மற்றும் சேவை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம்

- சரக்கு மற்றும் சேவை வரிச் சபையானது, டெல்லியில் முதன்மை அமர்வுடனும் பிற மாநிலங்களில் அதற்கான கிளை அமர்வுகளுடன் கூடிய தேசிய சரக்கு மற்றும் சேவை வரி சார்ந்த வழக்குகளுக்கான மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தினை நிறுவ முடிவு செய்துள்ளது.
- ஒரு மாநிலத்தில் உள்ள அமர்வுகளின் எண்ணிக்கையானது அம்மாநிலத்தில் உள்ள மக்கள் தொகையின் தேவைகளின் அடிப்படையில் அந்த மாநில அரசினால் தீர்மானிக்கப் படும்.
- இந்த மேல்முறையீட்டு அமைப்பானது, ஓர் உச்ச நீதிமன்ற நீதிபதி அல்லது உயர் நீதி மன்றத்தின் தலைமை நீதிபதியினுடைய தலைமையில் செயல்படும்.
- 50 இலட்சத்திற்கும் குறைவான வரி சிக்கல் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கு ஒற்றை உறுப்பினர் கொண்ட ஒரு அமர்வானது நிர்ணயிக்கப்படும்.
- 50 இலட்சத்திற்கும் மேலான வரி சிக்கல் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கு இரட்டை உறுப்பினர்கள் கொண்ட ஒரு அமர்வானது நிர்ணயிக்கப்படும்.




## SWARM ஆளில்லா விமான அமைப்பு

- இந்திய ராணுவமானது, போர்க்களத்தில் பயன்படுத்துவதற்காக, முதலாவது பன்முகப் பயன்பாடு கொண்ட ஒரு ஆளில்லா வான்வழி வாகன (UAV) அமைப்பை வாங்கத் தொடங்கியுள்ளது.
- இராணுவப் பயன்பாடுகளுக்காக என்று அறிமுகப்படுத்தப்படும் உலகின் முதல் செயல்பாட்டில் உள்ள உயர் ஆற்றல் செயல்திறன் கொண்ட SWARM ஆளில்லா வான்வழி வாகன அமைப்பு இதுவே ஆகும்.
- பெங்களூரு நகரில் அமைந்துள்ள நியூஸ்பேஸ் ரிசர்ச் & டெக்னாலஜிஸ் என்ற இந்தியப் புத்தொழில் நிறுவனம் மூலம் அவை விநியோகிக்கப்படுகின்றன.

- 100 ஆளில்லா விமானங்கள் கொண்ட ஒரு தொகுதியானது, குறைந்தது எதிரி நாட்டின் பிரதேசத்தினுள் 50 கிலோமீட்டர் தொலைவில் வரை உள்ள இலக்குகளைத் தாக்கும் திறன் கொண்டது.
- அவை மேம்பட்டத் தன்னியக்கம், கணினிமயம், தகவல் தொடர்பு மற்றும் செயற்கை நுண்ணறிவு நெறிமுறைகளைப் பயன்படுத்தி, குறைந்தபட்ச மனித ஈடுபாட்டுடன் பல்வேறு பணிகளைச் செயல்படுத்துகின்றன.



## PRASHAD திட்டத்திற்கான புதிய யாத்திரை மையம்




- புனித யாத்திரைப் புத்துயிராக்கம் மற்றும் ஆன்மீகப் பாரம்பரியத்தை மேம்படுத்தச் செய்வதற்கான இயக்கம் (PRASHAD) என்ற திட்டத்தின் கீழ், நான்கு புனித யாத்திரை மையங்களை மத்திய அரசு அடையாளம் கண்டுள்ளது.
- அந்த 4 புதிய மையங்கள்
    - மைசூருவில் உள்ள சாமுண்டேஸ்வரி கோவில்,
    - உடுப்பி மாவட்டத்தில் உள்ள குஞ்சரகிரியில் உள்ள ஸ்ரீ மத்வ வனம்,
    - பிதார் மாவட்டத்தில் உள்ள பாப்னாஷ் கோவில் மற்றும்
    - பெலகாவி மாவட்டத்தில் சௌந்தட்டியில் உள்ள ஸ்ரீ ரேணுகா யெல்லம்மா கோவில்

- ஹம்பி மற்றும் மைசூருவில் அமைந்துள்ள பாரம்பரியத் தளங்கள் ஏற்கனவே ஸ்வதேஷ் தர்ஷன் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன.
- PRASAD திட்டம் ஆனது சுற்றுலா அமைச்சகத்தினால் 2014-15 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது.
- இத்திட்டத்தின் பெயர் ஆனது 2017 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் PRASAD என்பதில் இருந்து PRASHAD என மாற்றப்பட்டது.

## சிவசேனா கட்சியின் பெயர் மற்றும் சின்னம்


- இந்தியத் தேர்தல் ஆணையம் ஆனது 'சிவசேனா' என்ற பெயரையும் அக்கட்சியின் வில் அம்பு சின்னத்தையும் ஏக்நாத் ஷிண்டே அணிக்கு ஒதுக்கியுள்ளது.
- இந்த நடவடிக்கையானது, பாலா சாகேப் தாக்கரேவால் நிறுவப்பட்ட அசல் கட்சி இது என்று அங்கீகரிக்கப்பட்டது.
- "பெரும்பான்மைச் சோதனை" என்ற அடிப்படையில் தேர்தல் ஆணையமானது இந்த முடிவினை மேற்கொண்டது.
- ஏக்நாத் ஷிண்டே தரப்பிரனருக்கு ஆதரவு அளிக்கும் சட்டசபை உறுப்பினர்கள் குழுவானது கிட்டத்தட்ட 76% வாக்குகளையும், உத்தவ் தாக்கரே தரப்பினர் 23.5% வாக்குகளையும் பெற்றனர்.
- ஏக்நாத் ஷிண்டே தரப்பு சிவசேனா கட்சி மக்களவையில் வென்ற 18 நபர்களில் 13 நபர்களையும், அம்மாநிலச் சட்டமன்றத்தில் வென்ற 56 நபர்களில் 40 நபர்களையும் கொண்டுள்ளதாக உரிமை கோரியுள்ளது.
- 2019 ஆம் ஆண்டு மகாராஷ்டிரச் சட்டசபைத் தேர்தலில் வெற்றி பெற்ற சிவசேனா கட்சியில் 56 சட்டசபை உறுப்பினர்கள் உள்ளனர்.
- கடந்த ஜூன் மாதத்திலிருந்து, கட்சியின் பெயர் மற்றும் சின்னம் தொடர்பாக இரு தரப்பினர்களுக்கும் இடையே மோதல் நிலவி வருகிறது.



## ஒருங்கிணைந்த மருத்துவ மையங்கள்

- நாட்டிலுள்ள அனைத்து அரசு மருத்துவ நிறுவனங்களிலும் குறிப்பாக AIIMS போன்ற நிறுவனங்களிலும் ஒருங்கிணைந்த மருத்துவ மையங்களைத் திறப்பதற்கு மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

- இத்தகைய மையங்களைத் திறப்பதால், இந்திய மருத்துவ முறையினை நவீன மருத்துவ முறைகளோடு ஒத்திசைப்பதற்காகவும், நோயாளிகளுக்குப் பலதரப்பட்ட மருத்துவச் சேவைகளை வழங்கவும் உதவும்.
- இந்த ஒருங்கிணைந்த மருத்துவச் சேவையானது, அலோபதி மருத்துவத்தில் நவீன முன்னேற்றங்களைப் பயன்படுத்துவதோடு, இந்தியாவின் வளமானப் பாரம்பரியம் மற்றும் மருத்துவ அறிவின் திறனைத் திறம்படப் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




## ஜாதுய் பிடரா

- மத்தியக் கல்வித் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் அவர்கள் அடிப்படைக் கல்வி நிலைக்கான கற்றல் மற்றும் கற்பித்தல் ஆகியவற்றிற்கான "ஜாதுய் பிடாரா" என்ற பாடத் திட்டத்தினை வெளியிட்டார்.
- இது 3 முதல் 8 வயது வரையிலான குழந்தைகளுக்கான விளையாட்டு முறை அடிப்படையிலான கற்றல் திட்டமாகும்.
- இது 13 வெவ்வேறு இந்திய மொழிகளில் கிடைக்கப் பெறுகிறது.
- இது தேசியப் பாடத்திட்டக் கட்டமைப்பின் கீழ் உருவாக்கப்பட்டது.



## SADUN முன்னெடுப்பு

- இந்திய அரசானது, தெற்காசிய விநியோகப் பயன்பாட்டு வலையமைப்பினை (SADUN) அறிமுகப் படுத்தியுள்ளது.
- ஒரு பிராந்தியத்தின் விநியோக நிறுவனங்களிடையேயான அறிவுப் பகிர்வு மூலம் தெற்காசியாவில் பல்வேறு பயன்பாடுகளின் விநியோகத்தை நவீனமயமாக்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- SADUN என்பது மின்சாரத் துறை அமைச்சகம், USAID மற்றும் ஆற்றல் நிதி நிறுவனம் (PFC) ஆகியவற்றின் ஒரு கூட்டு முயற்சியாகும்.

## 'She Feeds the World' திட்டம்





- இந்தியாவில் பெப்சிகோ மற்றும் கேர் (CARE) ஆகிய நிறுவனங்கள் இணைந்து 'She Feeds the World' திட்டத்தினைத் தொடங்கியுள்ளன.
- இத்திட்டமானது, முதலில் மேற்கு வங்காளத்தின் கூச்பெஹார் மற்றும் அலிபுர்துவார் ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட உள்ளது.
- இது 48,000 பெண்களின் நிலையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த 1.5 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் இந்தத் திட்டத்தின் மூலம் பயனடைவார்கள்.
- இது பயிர் விளைச்சலை அதிகரிப்பது, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்களில் பெண்களின் வருமானத்தை அதிகரிப்பது, ஆரோக்கியமான மற்றும் சமச்சீர் உணவுக்கான அணுகலை உறுதி செய்வது மற்றும் நீடித்த வேளாண்மை குறித்துப் பெண்களுக்குப் பயிற்சி அளிப்பது ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.

## யானைக்கால் நோயினை எதிர்த்துப் போராடுவதற்கான பிரச்சாரம்

- மத்திய சுகாதார அமைச்சகம் ஆனது நாடு முழுவதும் மாபெரும் மருந்து விநியோகப் பிரச்சாரத்தினைத் தொடங்கியுள்ளது.
- குறிப்பாக பாதிக்கப்பட்ட 10 மாநிலங்களில் யானைக்கால் நோய் (ஃபைலேரியா) எதிர்ப்பு மருந்துகளை வீட்டுக்கு வீடாக வழங்குவதன் மூலம் யானைக்கால் நோய் பரவுவதைக் கட்டுப்படுத்துவதனை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.


- பீகார், சத்தீஸ்கர், ஜார்க்கண்ட், மகாராஷ்டிரா, உத்தரப் பிரதேசம், மேற்கு வங்காளம், கர்நாடகா, ஒடிசா, மத்தியப் பிரதேசம் மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் அதிக நோய்ப் பாதிப்பு கொண்ட மாவட்டங்கள் இணைந்து இந்தப் பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளன.
- மத்திய சுகாதாரத் துறை அமைச்சகமானது, உலக நாடுகளின் இலக்கை விட மூன்று ஆண்டுகளுக்கு முன்னதாக, 2027 ஆம் ஆண்டிற்குள் யானைக்கால் நோயினை அகற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது..
- நிணநீர் ஃபைலேரியாசிஸ் (LF) என்பது க்யூலெக்ஸ் கொசுக்களால் ஏற்படும் ஒரு நோய் பரப்பிகளின் மூலம் பரவும் குறைபாடுகளுக்கு வழி வகுக்கின்ற ஒரு நோயாகும்.




## பேறுகால தாய்மார்கள் இறப்பு விகிதம் – 2000/2020

- 2020 ஆம் ஆண்டில் இந்தியாவில் இரண்டாவது அதிக எண்ணிக்கையிலான பேறுகால தாய்மார்கள் இறப்புகள் பதிவாகியுள்ளன.
- பெருந்தொற்று ஏற்பட்ட ஆண்டில் 82,000 பேறுகால தாய்மார்கள் இறப்புகள் பதிவாகிய நைஜீரியாவினைத் தொடர்ந்து 24,000 என்ற எண்ணிக்கையுடன் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது.
- இருப்பினும், இந்தியாவில் பதிவான பேறுகால தாய்மார்கள் இறப்பு விகிதத்தில் ஒட்டு மொத்தமாக 73.5 சதவீதம் குறைந்துள்ளது.
- நூற்றாண்டின் தொடக்கத்தில் 384 ஆக இருந்த இந்தியாவின் பேறுகால தாய்மார்கள் இறப்பு விகிதமானது 2020 ஆம் ஆண்டில் 103 ஆக குறைந்திருப்பது மிகப்பெரிய ஒரு முன்னேற்றமாகும்.
- மற்ற வளர்ந்து வரும் நாடுகளான அர்ஜென்டினா (45), பூடான் (60), பிரேசில் (72), கிர்கிஸ்தான் (50) மற்றும் பிலிப்பைன்ஸ் (78) ஆகிய நாடுகள் இந்தியாவை விட மிகச் சிறப்பான செயல்திறனைக் கொண்டதாக உள்ளன.
- உலகளவில், 2020 ஆம் ஆண்டில் 287,000 பேறுகால தாய்மார் இறப்புகள் பதிவானதாக மதிப்பிடப் பட்டுள்ளது.

- 2020 ஆம் ஆண்டில் பதிவான அனைத்து பேறுகால தாய்மார்கள் இறப்புகளில் ஆப்பிரிக்காவின் துணை-சஹாரா பகுதியானது 70 சதவிகிதத்தினைக் கொண்டுள்ள நிலையில் பேறுகால தாய்மார் இறப்புகள் ஏழ்மை மிக்க நாடுகள் மற்றும் மோதல் நிறைந்த மண்டலங்களில் அதிகமாகக் காணப்படுகின்றன.
- மேலும், 223 என்ற அளவிலான உலக சராசரியுடன் ஒப்பிடும்போது, மோதல்கள் நிறைந்த நாடுகளில் பேறுகால தாய்மார்கள் இறப்பு விகிதம் 551 ஆகப் பதிவாகி உள்ளது.




## சிறுதானியங்களுக்கான FSSAI அமைப்பின் தர நிர்ணயம்

- இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையமானது, உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் 2023 ஆம் ஆண்டின் இரண்டாவது திருத்தச் சட்டங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் சிறு தானியங்களுக்கான விரிவான தொகுப்பு குறித்த தர நிலைகளைக் குறிப்பிட்டுள்ளது.
- இது இந்த ஆண்டின் செப்டம்பர் 01 ஆம் தேதி முதல் அமலுக்கு வர உள்ளது.
- தற்போது, 2011 ஆம் ஆண்டு உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் (உணவுப் பொருட்களின் தரநிலைகள் மற்றும் உணவுச் சேர்க்கைகள்) ஒழுங்குமுறைகளில் ஒரு சில உணவு வகைகளுக்கான தனிப்பட்ட தரநிலைகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.
- FSSAI அமைப்பானது தற்போது 15 வகையான சிறு தானியங்களுக்கு ஒரு விரிவான தொகுப்பு தரநிலைகளை உருவாக்கியுள்ளது.
- ஈரப்பதத்திற்கான அதிகபட்ச வரம்பு, யூரிக் அமில உட்கூறு, தேவையற்ற பொருட்கள், மற்ற உண்ணக் கூடிய தானியங்கள், குறைபாடுகள், அந்துப்பூச்சிகள் தாக்கிய தானியங்கள் மற்றும் முதிர்ச்சியடையாத மற்றும் உலர்ந்த தானியங்கள் போன்ற 8 தர அளவுருக்களை அவை குறிப்பிடுகின்றன.

**FSSAI FRAMES COMPREHENSIVE GROUP STANDARDS FOR 15 TYPES OF MILLETS SPECIFYING 8 QUALITY PARAMETERS**

- Quality Parameters Include Max Limits For Moisture Content, Uric Acid Content, & Other Edible Grains
- FSSAI Says Standards Prescribed To Ensure Good Quality Millets In Domestic And Global Markets
- Standards To Be Enforced From September 1, 2023

# சர்வதேசச் செய்திகள்

## BIO ASIA 2023 மன்றத்திற்கான பங்குதார நாடு

- மத்திய அரசு மற்றும் பல சர்வதேச நிறுவனங்கள் இணைந்து ஹைதராபாத்தின் ஜீனோம் பள்ளத்தாக்குப் பகுதியில் BIO ASIA மன்றத்தை ஏற்பாடு செய்ய உள்ளன.
- BIO ASIA 2023 மன்றத்திற்கானப் பங்குதார நாடாக ஐக்கியப் பேரரசு நிர்ணயிக்கப் பட்டு உள்ளது.
- முன்னணி உயிரித் தொழில்நுட்ப நிறுவனங்கள் அத்துறையில் உள்ள சமீபத்தியத் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் பற்றி அறிய இந்த மன்றம் ஒரு வாய்ப்பாக அமையும்.
- இந்த ஆண்டு, இந்த மன்றம் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையில் கவனம் செலுத்த உள்ளது.




## இந்திய எல்லைக்கு அருகில் அணை நிறுவும் சீனா

- இந்தியா, சீனா, நேபாளம் ஆகிய நாடுகளின் முச்சந்திப்புப் பகுதிக்கு அருகில், திபெத்தில் உள்ள மப்ஜா சாங்போ ஆற்றின் மீது சீனா ஒரு புதிய அணையை கட்டி வருகிறது.
- இந்தப் புதிய அணையானது, முச்சந்திப்பு பகுதியில் இருந்து வடக்கே 16 கி.மீ தொலைவில் உத்தரகாண்ட் மாநிலத்தின் காலாபாணி பகுதிக்கு எதிரே அமைந்து உள்ளது.
- மப்ஜா சாங்போ நதியானது திபெத்தின் நகரி மாவட்டத்தில் தோன்றுகிறது.

- இது நேபாளம் வழியாக காகரா நதியுடன் இணைந்து, இந்தியாவில் கங்கை நதியில் கலக்கிறது.




## இஸ்லாமியத்திற்கு எதிரான பாகுபாடுகளை எதிர்த்துப் போராடுதல் நடவடிக்கைகளுக்கான பிரதிநிதி



- இஸ்லாமியத்திற்கு எதிரான பாகுபாடுகளை எதிர்த்துப் போராடுதல் என்ற நடவடிக்கைகளுக்கான தனது முதல் சிறப்புப் பிரதிநிதியை கனடா அரசு நியமித்து உள்ளது.
- நாட்டில் முஸ்லிம்கள் மீது அண்மையில் மேற்கொள்ளப்பட்ட பல தாக்குதல்களைத் தொடர்ந்து இந்தப் பதவியானது உருவாக்கப் பட்டது.
- இதில் பத்திரிகையாளரும் ஆர்வலருமான அமிரா எல்கவாபி சாம்பியன், ஆலோசகர், நிபுணர் மற்றும் பிரதிநிதி என்ற பல பரிமாணங்களில் பணியாற்ற உள்ளார்.
- இஸ்லாமியத்திற்கு எதிரான பாகுபாடுகள், அமைப்பு ரீதியிலான இனவாதம், இன பாகுபாடு மற்றும் மத சகிப்புத் தன்மையற்றல் ஆகியவற்றிற்கு எதிரான போராட்டத்தில் அந்நாட்டு மத்திய அரசு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு அவர் ஆதரவளித்து அதனை மேம்படுத்துவார்.

## பணத்தாள்களில் இருந்து பிரிட்டிஷ் அரசர்களின் படங்களை அகற்றுதல்

- ஆஸ்திரேலிய அரசானது, தனது புதிய 5 டாலர் தாள்களில் மூன்றாம் சார்லஸ் மன்னரின் படம் இடம் பெறாது என்று அறிவித்துள்ளது.
- அதன் புதிய 5 டாலர் தாள்களானது, மூன்றாம் சார்லஸின் படத்திற்குப் பதிலாக, உள்நாடு சார்ந்த வடிவமைப்பைக் கொண்டிருக்கும்.
- ஆனால் தற்போது மறைந்த இரண்டாம் எலிசபெத் மகாராணியின் உருவம் பொறிக்கப் பட்ட நாணயங்களில் மன்னரின் படம் இடம் பெறும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- இந்த நடவடிக்கையானது, "மூதாதைய ஆஸ்திரேலியர்களின் கலாச்சாரம் மற்றும் வரலாற்றிற்கு" மதிப்பளிக்கும்.
- பிரிட்டிஷ் மன்னர் ஆஸ்திரேலியாவின் அரசத் தலைவராக விளங்குகிறார் இருப்பினும் தற்போதையக் காலங்களில் இவரது பொறுப்பு பெரும்பாலும் பெயரளவு அடையாளம் என்ற அளவிலேயே உள்ளது.




## உகாண்டாவின் முதல் எண்ணெய்க் கிணறுகள் துளைத்தல் திட்டம்

- உகாண்டா அரசானது, தனது முதல் எண்ணெய்க் கிணறுகள் துளைத்தல் பணியினைத் தொடங்கியது.
- 2025 ஆம் ஆண்டில் முதல் முறையாக எண்ணெய் உற்பத்தி என்ற ஒரு இலக்கை அடைவதற்கான அந்நாட்டின் பாதையில் இது ஒரு முக்கிய மைல்கல் ஆகும்.
- இந்த எண்ணெய்க் கிணறு ஆனது, கிகுபே மாவட்டத்தில் உள்ள ஆல்பர்ட் ஏரிக்கு அருகில் சீனத் தேசியக் கடற்கரையோர எண்ணெய் உற்பத்தி நிறுவனம் (CNOOC) மூலம் இயக்கப் படுகிறது.



- ❖ கிழக்கு ஆப்பிரிக்க நாட்டில் வணிக ரீதியிலான முக்கியத்துவம் வாய்ந்த எண்ணெய் இருப்புகள் கண்டுபிடிக்கப்பட்டு 17 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த மேம்பாட்டுப் பணி தொடங்கப் பட்டுள்ளது.
- ❖ உகாண்டாவின் எண்ணெய் இருப்புக்கள் 6.5 பில்லியன் பீப்பாய்கள் கச்சா எண்ணெய் வழங்கக் கூடியது என மதிப்பிடப்பட்டுள்ள நிலையில், இதில் சுமார் 1.4 பில்லியன் பீப்பாய்கள் தோண்டியெடுக்கப் படக்கூடியவை என கருதப்படுகிறது.

## சர்வதேச சூரியசக்திக் கூட்டணியில் காங்கோ

- ❖ சர்வதேச சூரியசக்திக் கூட்டணியில் காங்கோ இணைவதை இந்தியா வரவேற்று உள்ளது.
- ❖ சர்வதேச சூரியசக்திக் கூட்டணி (ISA) என்பது சூரிய ஆற்றல் தொழில்நுட்பங்களின் பயன்பாட்டினை அதிகப்படுத்தச் செய்வதற்கான செயல் சார்ந்த, உறுப்பினர்களால் இயக்கப் படும் ஒரு கூட்டுறவு அமைப்பாகும்.
- ❖ இதன் தலைமையகம் இந்தியாவில் உள்ள நிலையில் அதன் இடைக்காலச் செயலகம் குருகிராமில் அமைக்கப்பட்டுள்ளது.
- ❖ சர்வதேச சூரியசக்திக் கூட்டணியின் கட்டமைப்பு ஒப்பந்தத்தில் மொத்தம் 107 நாடுகள் கையெழுத்திட்டுள்ளன.
- ❖ இந்த 107 நாடுகளில், 86 நாடுகள் சர்வதேச சூரியசக்திக் கூட்டணியின் கட்டமைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு ஒப்புதல் அளித்துள்ளன.
- ❖ ஐக்கிய நாடுகள் சபையின் அனைத்து உறுப்பினர் நாடுகளும் சர்வதேச சூரியசக்திக் கூட்டணியில் இணையத் தகுதியுடையவையாகும்.




## மாட்ரிட் சர்வதேச புத்தகக் கண்காட்சி

- ❖ 2025 ஆம் ஆண்டு மாட்ரிட் சர்வதேச புத்தகக் கண்காட்சியின் கருத்துரு இந்தியா என்று அறிவிக்கப் பட்டுள்ளது.
- ❖ மாட்ரிட் புத்தகக் கண்காட்சியானது 1993 ஆம் ஆண்டு முதல் ஸ்பெயினில் நடத்தப் படுகிறது.
- ❖ 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் கொல்கத்தாவில் நடைபெற்ற சர்வதேச புத்தகக் கண்காட்சியின் கருத்துரு ஸ்பெயின் என்பதாகும்.




## பசுமை ஒப்பந்தத் தொழில்துறைத் திட்டம்


- ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்த முன்மொழிவானது எளிமையான ஒழுங்குமுறைக் கட்டமைப்பை உருவாக்குதல், நிதிகளுக்கான விரைவான அணுகலை வழங்குதல், திறன்களை மேம்படுத்துதல் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் வர்த்தக வலை அமைப்பை மேம்படுத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கியது.
- அமெரிக்கா தனது பணவீக்கக் குறைப்புச் சட்டத்தை அறிவித்த சில மாதங்களுக்குப் பிறகு இந்த நடவடிக்கையானது மேற்கொள்ளப்பட்டது.
- இது அமெரிக்க நிறுவனங்களின் உற்பத்திக்கான ஊக்கத் தொகைகளுடன் கூடிய பருவநிலை மாற்ற திட்டங்கள் , தூய்மையான எரிசக்திக்கான பில்லியன் கணக்கான டாலர் வரிக் குறைப்புகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.




## துருக்கி மற்றும் சிரியா ஆகிய நாடுகளைத் தாக்கிய மாபெரும் நிலநடுக்கம்

- பிப்ரவரி 06 ஆம் தேதியன்று, துருக்கி மற்றும் சிரியா ஆகிய நாடுகளில் ஏற்பட்ட பெரும் நிலநடுக்கத்தில் 3,800க்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டு ஆயிரக் கணக்கான கட்டிடங்கள் தரைமட்டமாயின.
- ரிக்டர் அளவுகோலில் 7.8 ஆக பதிவான முதல் நிலநடுக்கம் ஆனது துருக்கியின் கஹ்ராமன்மாராஸ் மாகாணத்தின் பசார்சிக் மாவட்டத்தில் மையம் கொண்டிருந்தது.
- அடுத்த 12 மணி நேரத்திற்குள்ளாகவே, அதே பகுதியில் 7.6 ரிக்டர் என்ற அளவில் இரண்டாவது நிலநடுக்கம் ஏற்பட்டது.

- 7 ரிக்டர் அளவிலான நிலநடுக்கங்கள் மாபெரும் நிலநடுக்கமாக கருதப் படுகிறது.
- துருக்கி நாடானது, உலகிலேயே அதிகளவில் நிலநடுக்கம் ஏற்படக் கூடிய மண்டலங்களில் அமைந்த நாடுகளுள் ஒன்றாகும்.
- அந்நாட்டில் கடைசியாக 7.8 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஆனது 1939 ஆம் ஆண்டில் கிழக்கு எர்சின்கான் மாகாணத்தில் ஏற்பட்டு அதில் 33,000 பேர் உயிரிழந்தனர்.
- 1999 ஆம் ஆண்டில், துருக்கிய நாட்டின் டஸ் பகுதியில் 7.4 ரிக்டர் அளவிலான நில நடுக்கம் ஏற்பட்டு அதில் 17,000க்கும் அதிகமானோர் உயிரிழந்தனர்.




## காசியான்டெப் கோட்டை




- தென்கிழக்கு துருக்கியில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கங்கள் ஆனது 2,200 ஆண்டுகள் பழமையான ஒரு ரோமானிய நினைவுச் சின்னமான காசியான்டெப் என்ற கோட்டையையும் சீர்குலைத்தது.
- ஒரு மலை உச்சியில் அமைந்த காசியான்டெப் கோட்டையானது துருக்கியில் காசியான்டெப் நகரின் மையத்தில் அமைந்துள்ளது.
- இது 2 மற்றும் 3 ஆம் நூற்றாண்டுகளின் போது அப்போதைய ரோமானியக் காலத்தில் ஒரு காவற்கோபுரமாக கட்டமைக்கப்பட்டது.
- கி.பி.527-565 காலத்தின் போது, பைசான்டைன் பேரரசர் ஜஸ்டினியனின் ஆட்சியின் போது, இந்தக் கோட்டை மேலும் மேம்படுத்தப்பட்டு அதன் தற்போதைய வடிவத்தை பெற்றது.

- இது 12 மற்றும் 13 ஆம் நூற்றாண்டுகளில் அய்யூபிட்களின் ஆட்சியிலும், ஒட்டாமான் பேரரசின் ஆட்சியிலும் ஒரு சில மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டது.
- 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நடைபெற்ற துருக்கியின் சுதந்திரப் போரின் போது இது ஒரு முக்கியப் பங்கைக் கொண்டிருந்தது.
- ஒட்டாமான் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு பிரெஞ்சுப் படைகளுக்கு எதிராக அந்த நகரத்தின் பாதுகாப்புத் திறனின் ஓர் அடையாளமாக இது இருந்தது.

## உலகப் பருவநிலை நெகிழ்திறன் நிதி



- குஜராத் மாநிலத்தின் அகமதாபாத்தில் நடைபெற்ற, SEWA அமைப்பின் 50வது ஆண்டு நிறைவு விழாவில் அமெரிக்காவின் முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் பங்கேற்றார்.
- இந்த நிகழ்வின் போது, பருவநிலை மாற்றத்தினை எதிர்த்துப் போராடச் செய்வதில் பெண்களுக்காக 50 மில்லியன் அமெரிக்க டாலர் என்ற அளவிற்கு உலகப் பருவநிலை நெகிழ்திறன் நிதியை வழங்குவதாக அறிவித்தார்.
- பருவநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடுவதற்கும், புதிய வாழ்வாதார வளங்கள் மற்றும் கல்வியை வழங்குவதற்கும் வேண்டி பெண்களுக்கும் சமூகங்களுக்கும் இந்த நிதி ஆதரவு அளிக்கும்.
- SEWA என்பது சுயதொழில் செய்யும் பெண்கள் சங்கம் என்பதைக் குறிக்கிறது.
- இது சமீபத்தில் மறைந்த ஆர்வலர் ஈலா பட் அவர்களால் 1972 ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது.

## இந்தியா-தென்கொரியா இடையிலான அரசுமுறை உறவுகள்

- 2023 ஆம் ஆண்டானது, இந்தியா - கத்தார் மற்றும் இந்தியா-தென் கொரியா ஆகியவற்றுக்கு இடையேயான முழு அரசுமுறை உறவுகள் நிறுவப்பட்டதன் 50 ஆண்டு நிறைவினை (1973 ஆம் ஆண்டு முதல்) குறிக்கிறது.
- புத்தமதம் ஆனது இந்தியாவில் இருந்து 3 ஆம் நூற்றாண்டில் இருந்த மூன்று பேரரசுகளின் காலத்தில் கொரியத் தீபகற்பத்தை அடைந்தது.

- 1945 ஆம் ஆண்டில் கொரியா சுதந்திரம் பெற்ற பிறகு, கொரிய நாட்டு விவகாரங்களில் இந்தியா ஒரு முக்கியமான மற்றும் நேர்மறையான பங்கினைக் கொண்டிருந்தது.
- கொரியாவில் தேர்தலை நடத்தச் செய்வதற்காக 1947 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட 9 உறுப்பினர்களைக் கொண்ட ஐக்கிய நாடுகள் ஆணையத்தின் தலைவராக இந்தியாவின் திரு. K.P.S. மேனன் பணியாற்றினார்.
- கொரியப் போரின் போது (1950-53), போரில் ஈடுப்பட்ட இரு நாட்டுத் தரப்பினரும் இந்தியாவால் முன்மொழியப்பட்ட ஒரு தீர்மானத்தை ஏற்றுக் கொண்டன.
- அதனைத் தொடர்ந்து 1953 ஆம் ஆண்டு ஜூலை 27 ஆம் தேதியன்று போர் நிறுத்தம் அறிவிக்கப் பட்டது.
- 1962 ஆம் ஆண்டில் இருநாடுகளிடையே இருதரப்புப் பிரதிநிதிகள் சார்ந்த உறவுகள் நிறுவப் பட்டு அவை 1973 ஆம் ஆண்டில் தூதரக உறவுகள் என்ற நிலைக்கு உயர்த்தப் பட்டன.
- 1974 ஆம் ஆண்டில் வர்த்தக மேம்பாடு, பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான ஒப்பந்தம் கையெழுத்தானது.
- முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் கடந்த 2006 ஆம் ஆண்டு தென் கொரியாவுக்கு வருகை தந்தார்.
- இதன் விளைவாக 2010 ஆம் ஆண்டில் செயலாக்கப்பட்ட ஒரு கூட்டு பணிக்குழு உருவாக்கப் பட்டது.
- 2010 ஆம் ஆண்டு இந்தியக் குடியரசு தின விழாவின் தலைமை விருந்தினராக அப்போதைய அதிபர் லீ இந்தியாவிற்கு வருகை தந்தார்.
- இந்தியாவில் கொரிய முதலீடுகளை ஊக்குவிக்கச் செய்வதற்காகவும், மேம்படுத்தச் செய்வதற்காகவும் இந்தியா மற்றும் தென் கொரியா ஆகிய நாடுகள் இணைந்து 2016 ஆம் ஆண்டில் 'கொரியா பிளஸ்' என்ற முன்னெடுப்பினைத் தொடங்கின.
- தென் கொரிய அரசானது, 2016 ஆம் ஆண்டில் இந்தியப் பாதுகாப்பு உபகரணங்கள் கண்காட்சி மற்றும் கடல்சார் இந்திய உச்சி மாநாட்டில் பங்கேற்றது.
- இருநாடுகளின் இருதரப்பு உறவு ஆனது 2018 ஆம் ஆண்டில் ஒரு சிறப்பு உத்திசார் கூட்டாண்மை என்ற நிலைக்கு மேம்படுத்தப்பட்டது.
- 2022 ஆம் ஆண்டில், இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம் ஆனது 27.8 பில்லியன் அமெரிக்க டாலர்கள் என்ற மதிப்பினை எட்டியது.



## இந்தியா, ஐக்கிய அரபு அமீரகம், பிரான்சு - முத்தரப்பு முன்னெடுப்பு

- இந்தியா, பிரான்சு மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகள் அணுசக்தி மற்றும் சூரிய ஆற்றல் ஆகிய துறைகளில் இணைந்து செயல்படுவதற்காக வேண்டி ஒரு கூட்டாண்மையை உருவாக்குவதற்கு ஒப்புக் கொண்டுள்ளன.
- பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ளச் செய்வதற்கும், பல்லுயிர்த் தன்மையினைப் பாதுகாப்பதற்குமான முயற்சிகளில் அவை ஒன்றிணைந்துச் செயல்பட உள்ளன.
- 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் நியூயார்க் நகரில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் கூட்டத்தின் போது நடைபெற்ற மூன்று அமைச்சர்களின் சந்திப்பின் போது இந்த முத்தரப்புக் கூட்டமைப்பு குறித்து முதலில் விவாதிக்கப்பட்டது.




## 12வது உலக இந்தி மொழி மாநாடு

- வெளியுறவுத் துறை அமைச்சகமானது, பிஜி நாட்டு அரசுடன் இணைந்து 12வது உலக இந்தி மொழி மாநாட்டினைப் பிஜியில் நடத்த உள்ளது.
- 11வது உலக இந்தி மொழி மாநாடு ஆனது மொரீஷியஸ் நகரில் 2018 ஆம் ஆண்டில் நடைபெற்றது.
- முதலாவது உலக இந்தி மொழி மாநாடு ஆனது 1975 ஆம் ஆண்டு ஜனவரி 10 ஆம் தேதி அன்று, அப்போதைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அவர்களால் தொடங்கி வைக்கப் பட்டது.

## இந்திய அரசின் LiFE முன்னெடுப்பு குறித்த சர்வதேச எரிசக்தி முகமையின் அறிக்கை

- சர்வதேச எரிசக்தி முகமையானது, சமீபத்தில் LiFE முன்னெடுப்பு குறித்த ஓர் அறிக்கையை வெளியிட்டது.
- சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் பொதுமக்களை ஈடுபடுத்தச் செய்வதனை LiFE என்ற முன்னெடுப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த அறிக்கையானது, இந்தத் திட்டத்தின் மூலம் 2030 ஆம் ஆண்டிற்குள் 440 பில்லியன் அமெரிக்க டாலருக்கும் அதிகமாக சேமிக்க முடியும் என்று குறிப்பிடுகிறது.
- வளர்ச்சி பெற்ற நாடுகளில், பணக்கார வர்க்கத்தினர்களால் வெளியிடப்படும் கரிம உமிழ்வுகள் ஏழைகளால் உருவாக்கப்பட்ட கரிம உமிழ்வை விட ஏழு மடங்கு அதிகம் ஆகும்.
- மேம்பட்ட நாடுகளின் தனிநபர் கரிம உமிழ்வுகள் வளர்ந்து வரும் நாடுகளை விட நான்கு மடங்கு அதிகமாகும்.

- உலக நாடுகளை விட இந்தியப் பொருளாதாரத்தின் செயல்திறன் 10% அதிகமாகும்.
- தற்போது, இந்தியா புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையின் மூன்றாவது பெரிய சந்தையாக உள்ளதோடு மட்டுமல்லாமல் 2022 ஆம் ஆண்டில் இந்தியாவின் மின்சார வாகன விற்பனையானது 2021 ஆம் ஆண்டை விட 5% அதிகரித்துள்ளது.
- தற்போது, அதிகபட்ச ஆற்றலானது வட அமெரிக்க நாடுகளில் தான் பயன்படுத்தப் படுகிறது.
- இந்தப் பகுதியைத் தொடர்ந்து, ரஷ்யா மற்றும் மத்திய ஆசியா ஆகிய நாடுகள் இரண்டாவது பெரிய ஆற்றல் நுகர்வோராக திகழ்கின்றன.
- மத்தியக் கிழக்கு நாடுகளானது மூன்றாவது பெரிய ஆற்றல் நுகர்வோராக திகழச் செய்கின்றன.
- உலகின் மூன்றில் ஒரு பங்கு ஆற்றலினை ஆப்பிரிக்க நாடுகள் பயன்படுத்துகின்றன.
- உலக ஆற்றல் பயன்பாட்டில் இந்தியா 35% பயன்பாட்டினைக் கொண்டுள்ளது.




## தோஸ்த் நடவடிக்கை



- நிலநடுக்கத்தினால் பாதிக்கப்பட்ட துருக்கி நாட்டில் இந்திய நாட்டின் மீட்புக் குழுவினர் மற்றும் மருத்துவப் பணியாளர்கள் தோஸ்த் என்ற நடவடிக்கையின் கீழ் பணியில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர்.
- தற்போது வரையில், இந்தப் பயங்கர நிலநடுக்கத்தில் துருக்கியிலும், சிரியாவிலும் அதிகமான நபர்கள் உயிரிழந்துள்ளனர்.
- 2021 ஆம் ஆண்டில், இந்தியா கோவிட் பெருந்தொற்றினால் அதிகம் பாதிக்கப் பட்ட போது, துருக்கி நாட்டு அரசானது இரண்டு விமானங்கள் முழுவதும் கோவிட் தொற்று மருந்துகளை அனுப்பியது.

## இந்தியாவிற்கான ரஷ்ய நாட்டின் ஆயுத விநியோகம்

**MAKE RUSSIAN IN INDIA**

| Status | Weapons system | Quantity | Cost ($ bn) |
|---|---|---|---|
| Firm | Kamov 226T helicopters | 200 + 111 | 3 |
| | AK-203 Kalashnikov assault rifles | 750,000 | 1 |
| | Krivak-III frigates | 4 | 3 |
| | BrahMos missiles for warships | 15 ships | 2.6 |
| | Igla-S VSHORADS | 800 | 1.5 |
| | Sukhoi-30MKI fighters | 18 | 1.15 |
| | **Total** | | **12.3** |
| Up for grabs | Project 75-I submarines | 6 | 7 |
| | Medium fighters for IAF and navy | 114 + 57 | 18-25 |
| | **Total** | | **25-32** |

- கடந்த ஐந்து ஆண்டுகளில் ரஷ்யா சுமார் 13 பில்லியன் டாலர் மதிப்பிலான ஆயுதங்களை இந்திய நாட்டிற்கு வழங்கியுள்ளது.
- உலகிலேயே ரஷ்ய நாட்டு ஆயுதங்களை அதிகளவில் வாங்கும் நாடு இந்தியாவாகும்.
- இது மாஸ்கோவின் தற்போதைய விநியோகக் கணக்குப் புத்தகத்தில் சுமார் 20% மதிப்பாகும்.

## TROPEX - 23

- இந்தியக் கடற்படையின் முக்கியக் கடல்சார் பயிற்சியான TROPEX எனப்படும் 2023 ஆம் ஆண்டிற்கான பயிற்சியானது தற்போது இந்தியப் பெருங்கடல் பகுதியில் நடைபெற்று வருகிறது.
- இந்த நடவடிக்கை அளவிலானப் பயிற்சியானது, இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப் படுவதோடு, அனைத்து இந்தியக் கடற்படைகள், இந்திய இராணுவம், இந்திய விமானப் படை மற்றும் கடலோரக் காவல்படை சார் கப்பல்கள் ஆகியவை இதில் பங்கேற்கின்றன.

- இந்தப் பயிற்சியானது ஜனவரி மாதம் முதல் மார்ச் மாதம் வரை மூன்று மாத காலங்களுக்கு நடத்தப் படுகிறது.



## விண்வெளிக்குப் பயணம் மேற்கொள்ளும் முதல் சவுதி அரேபியப் பெண்



- சவுதி அரேபியா இந்த ஆண்டு இறுதியில், தனது முதல் பெண் விண்வெளி வீராங்கனையினை விண்வெளிக்கு அனுப்பவுள்ளது.
- ரய்யானா பர்னாவி, சவூதி அரேபிய ஆண் விண்வெளி வீரர் அலி அல்-கர்னியுடன் இணைந்து சர்வதேச விண்வெளி நிலையத்திற்கான இந்த விண்வெளிப் பயணத்தில் இணைய உள்ளார்.
- இதற்கான விண்கலம் அமெரிக்காவில் இருந்து விண்ணில் ஏவப்பட உள்ள நிலையில் இந்த விண்வெளி வீரர்கள் "AX-2 என்ற விண்வெளி ஆய்வுப் பயணத்திற்கான ஒரு குழுவினருடன் இணைய உள்ளனர்".
- ஐக்கிய அரபு அமீரகமானது 2019 ஆம் ஆண்டில், தனது குடிமக்களில் ஒருவரை விண்வெளிக்கு அனுப்பிய முதல் அரேபிய நாடு என்ற பெருமையினைப் பெற்றது.


## அருணாச்சலப் பிரதேசம் குறித்த அமெரிக்க மசோதா

- அருணாச்சலப் பிரதேசமானது சர்ச்சைக்குரியப் பகுதி அல்ல, அது இந்தியாவின் ஒரு ஒருங்கிணைந்தப் பகுதி என்று அங்கீகரிப்பது குறித்த ஒரு தீர்மானமானது அமெரிக்க மேலவையில் நிறைவேற்றப்பட்டது.
- இது "மெய்க் கட்டுப்பாட்டுப் பகுதியில் நிலவும் தற்போதைய நிலையை மாற்றச் செய்வதற்காக சீனா மேற்கொண்டு வரும் இராணுவ ஆக்கிரமிப்பையும்" கண்டனம் செய்தது.

- சீனாவிற்கும் இந்திய மாநிலமான அருணாச்சலப் பிரதேசத்திற்கும் இடையிலான ஒரு சர்வதேச எல்லையாக மெக்மஹோன் எல்லைக் கோடு திகழச் செய்வதை அமெரிக்கா அங்கீகரிக்கிறது என்பதை இந்தத் தீர்மானம் மீண்டும் உறுதிப்படுத்தியது.
- 1914 ஆம் ஆண்டு சிம்லா ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக பிரிட்டன் மற்றும் திபெத் ஆகியவை இந்த எல்லை வரையறைக்கு ஒப்புதல் அளித்தன.




## உலகளாவிய மின்சாரத் தேவை




- ஆசிய நாடுகளானது முதல் முறையாக 2025 ஆம் ஆண்டில் உலகின் மின்சாரத் தேவையில் பாதியளவினைப் பயன்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- உலக மக்கள்தொகையில் தான் கொண்டுள்ளப் பங்கை விட மிகக் குறைவாகவே ஆப்பிரிக்க நாடுகள் மின்சாரத்தினைப் பயன்படுத்துகின்றன.
- இந்தக் கணிப்பு அறிக்கையானது சர்வதேச எரிசக்தி முகமையினால் (IEA) வெளியிடப் பட்டுள்ளது.
- ஆசியாவின் மின்சாரப் பயன்பாட்டில் பெரும்பகுதி சீனா கொண்டிருக்கும்.

- உலக மின்சாரத் தேவையின் 70 சதவீதத்திற்கும் அதிகமான அதிகரிப்பானது சீனா, இந்தியா மற்றும் தென்கிழக்கு ஆசியா ஆகிய நாடுகளினால் ஏற்பட உள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் பதிவான சீனாவின் மின்சாரத் தேவையை விட இந்தியாவின் மின் தேவை மிக வேகமாக அதிகரித்து வருகிறது.
- சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளின் தேவையானது அந்தப் பிராந்தியத்தின் மொத்த மின்சார நுகர்வில் 70 சதவீதத்தை கொண்டுள்ளது.

## அமெரிக்காவில் சுட்டு வீழ்த்தப்பட்ட மர்மப் பொருட்கள்




- வட அமெரிக்காவின் வானத்தில் பறந்த மூன்று மர்மப் பொருட்களை அமெரிக்க ராணுவம் சுட்டு வீழ்த்தியது.
- இது 20,000 அடி (6,100 மீ) உயரத்தில் பயணித்ததால், அவை வணிக ரீதியாக இயக்கப் படும் விமானப் போக்குவரத்தில் குறுக்கிடக் கூடும்.
- கடைசியாக சுடப்பட்ட பொருள் உருளை வடிவமும் 200 அடி உயரமும் கொண்டதாகும்.
- இந்த வான்வழிப் பொருளின் தாங்கு பொருள் எடையானது 1000 பவுண்டுகளுக்கு மேல் இருந்தது.
- முன்னதாக, அமெரிக்க விமானப்படையானது அதன் F-22 போர் விமானங்களைப் பயன்படுத்தி, தெற்கு கரோலினா கடற்கரைக்கு அருகில் சீனக் கண்காணிப்புப் பலூன் ஒன்றினைச் சுட்டு வீழ்த்தியது.
- அடுத்த நாள் அது அலாஸ்கா பகுதியின் வான்வெளிக்கு அருகில் மற்றொரு வான் பொருளைச் சுட்டு வீழ்த்தியது.
- மேலும், ஓர் அடையாளம் தெரியாத பொருள் வடக்கு கனடா பகுதி மீது சுட்டு வீழ்த்தப் பட்டது.
- இந்த நான்காவது நிகழ்வானது ஹூரான் ஏரியின் மேல் நடத்தப்பட்டது.

## வங்காள தேசத்தின் 22வது குடியரசுத் தலைவர்

- முன்னாள் நீதிபதியும், சுதந்திரப் போராட்ட வீரருமான முகமது ஷஹாபுதீன் சுப்பு வங்காள தேசத்தின் புதிய அதிபராக பதவியேற்கவுள்ளார்.

- இவரை எதிர்த்து எந்தவொருப் போட்டி வேட்பாளரும் இல்லாததால் 22வது அதிபராக இவர் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- அந்நாட்டின் அதிபரான ஹமீத், இரண்டு பதவிக் காலங்களுடன் வங்காள தேசத்தில் நீண்ட காலம் பதவி வகித்த குடியரசுத் தலைவர் ஆவார்.
- அந்த நாட்டின் அரசியலமைப்பின் படி, அவர் மூன்றாவது முறையாக இப்பதவியினை வகிக்க முடியாது.

## 18வது உலகப் பாதுகாப்பு மாநாடு

- 18வது உலகப் பாதுகாப்பு மாநாடானது (2023) ஜெய்ப்பூர் நகரில் நடைபெற்றது.
- சர்வதேச இரயில்வே ஒன்றியம் மற்றும் இரயில்வே பாதுகாப்புப் படை ஆகியவை இணைந்து இந்த மூன்று நாட்கள் மாநாட்டினை நடத்துகின்றன.
- இந்த நிகழ்விற்கான கருத்துரு, "இரயில்வே பாதுகாப்பு சார்ந்த உத்திகள்: எதிர் காலத்திற்கான நடவடிக்கைகள் மற்றும் குறிக்கோள்" என்பதாகும்.
- முன்னதாக, 2006 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில், இந்திய அரசானது சர்வதேச UIC உலகப் பாதுகாப்பு மாநாட்டினைப் புது டெல்லியில் நடத்தியது.
- சர்வதேச இரயில்வே ஒன்றியத்தின் தலைமையகம் ஆனது பிரான்சின் பாரீஸ் நகரில் அமைந்துள்ளது.
- இது 1922 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிற ஒரு தொழில்முறைச் சங்கமாகும்.
- இரயில்வே துறையைப் பிரதிநிதித்துவப் படுத்தும் இது உலகம் முழுவதும் உள்ள ரயில் போக்குவரத்தினை மேம்படுத்துகிறது.




## ஆசியப் பொருளாதாரப் பேச்சுவார்த்தை 2023

- மத்திய வெளியுறவு விவகாரங்கள் துறை அமைச்சகமானது, சமீபத்தில் ஆசியப் பொருளாதாரப் பேச்சுவார்த்தை நிகழ்ச்சியினைப் புனேயில் நடத்தியது.
- இந்த நிகழ்வின் கருத்துரு, "ஆசியா மற்றும் உலக நாடுகளின் மேம்பட்டு வரும் ஒழுங்கு முறை" என்பதாகும்.
- இந்தப் பேச்சுவார்த்தையில் மெட்டாவர்ஸ், G20 செயல்பாட்டு நிரலை வடிவமைப்பதில் உலகளாவியத் தெற்கு நாடுகளின் பங்கு, பருவநிலை சார்ந்த இலக்குகளைப் பூர்த்தி செய்தல் போன்றவற்றிலும் கவனம் செலுத்தப்பட்டது.


## விமானச் சேவை ஒப்பந்தம்




- இந்தியா மற்றும் கயானா ஆகியவற்றுக்கு இடையேயான ஒரு விமானச் சேவை ஒப்பந்தத்தில் கையெழுத்திட மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இது இரு நாடுகளுக்கும் இடையே விமானச் சேவைக்கு வழி வகுக்கும்.
- கயானாவுடனான இந்த விமானச் சேவை ஒப்பந்தமானது, இரு நாடுகளுக்கும் இடையேயான விமானச் சேவைகளை வழங்குவதற்கான ஒரு கட்டமைப்பைச் செயல் படுத்திட முயலும்.
- 2012 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி, கயானாவில் இந்தியர்கள் கணிசமான அளவில், அந்நாட்டு மக்கள்தொகையில் 40% கொண்ட மிகப்பெரிய ஒரு இனக் குழுவாக உள்ளனர்.
- இந்தியா மற்றும் கயானா ஆகியவை சர்வதேசப் பொது விமானப் போக்குவரத்து ஒப்பந்தத்தில் (சிகாகோ உடன்படிக்கை 1944) கையெழுத்திட்டுள்ளன.
- தற்போது, இந்தியா சுமார் 110 நாடுகளுடன் விமானச் சேவை ஒப்பந்தங்களை மேற் கொண்டுள்ளது.


## மாடுகளின் மூளைக்கோளாறு நோய் பாதிப்பு

- வட மாகாணமான பாராவில் மாடுகளின் மூளைக்கோளாறு நோய்ப் பாதிப்பு இருப்பது உறுதி செய்யப் பட்டதை அடுத்து, சீனாவிற்கு மேற்கொள்ளப்படும் மாட்டிறைச்சி ஏற்றுமதியைப் பிரேசில் நிறுத்தியுள்ளது.
- இந்த நோயானது, கால்நடை மூளைச் செல் மிருதுவாக்க நோய் என்றும் அழைக்கப் படுகிறது.
- இது ஒரு பரவக்கூடிய, மெல்ல மெல்ல அதிகரிக்கக்கூடிய, மோசமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய, ஒரு மிக ஆபத்தான நோயாகும்.
- இளம் பருவ கால்நடைகளின் மத்திய நரம்பு மண்டலத்தினைப் பாதிக்கிறது.
- ப்ரியான் எனப்படும் புரதத்தில் ஏற்படும் ஒரு தொற்று காரணமாக இத்தகைய குணப் படுத்த முடியாத நோய் ஏற்படுகிறது.
- அமெரிக்கா, சீனா, எகிப்து, ஹாங்காங், சிலி, ஐக்கிய அரபு அமீரகம் போன்ற நாடுகளிலும் இந்த நோய்த் தொற்று ஏற்பட்டுள்ளது.
- மாட்டிறைச்சியினை ஏற்றுமதி செய்வதில் உலகளவில் பிரேசில் முதலிடத்தில் உள்ளது.




## ஆராய்ச்சி மற்றும் விழிப்புணர்வுக்கான சர்வதேச சிறு தானிய முன்னெடுப்பு


- சிறு தானியங்களின் நுகர்வு மற்றும் உற்பத்தியை ஊக்குவிப்பதற்கான ஓர் உலகளாவிய முன்னெடுப்பினைத் தொடங்குவதற்கு இந்தியா திட்டமிட்டுள்ளது.
- உலகெங்கிலும் உள்ள சிறு தானிய ஆராய்ச்சி நிறுவனங்களை இணைப்பதோடு, சிறு தானியப் பயிர்கள் பற்றிய ஆராய்ச்சியையும் ஆதரிப்பதனையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தியா "விதை நிதியம்" என்பதற்குப் பங்களிக்க உள்ள அதே சமயம் G20 அமைப்பின் ஒவ்வொரு உறுப்பினர் நாடுகளும் அதன் நிதிநிலையில் தனது உறுப்பினர் கட்டணமாக ஒரு தொகையினைப் பங்களிக்க வேண்டும்.
- ஹைதராபாத்தில் அமைந்துள்ள இந்திய சிறு தானிய ஆராய்ச்சி நிறுவனம் ஆனது இந்த முன்னெடுப்பிற்கான தொழில்நுட்ப ஆதரவை வழங்கும்.
- இந்தியாவின் வலியுறுத்தலின் மூலம், ஐக்கிய நாடுகள் சபையானது 2023 ஆம் ஆண்டினைச் சர்வதேச சிறு தானிய ஆண்டாக அறிவித்தது.



# பொருளாதாரச் செய்திகள்

## சரக்கு மற்றும் சேவை வரி வருவாய் இழப்பீடு பெறும் முதல் ஐந்து மாநிலங்கள்

- 2017 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் 2022 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரையிலான ஐந்தாண்டு கால நிலைமாற்றக் காலகட்டத்திற்கான சரக்கு மற்றும் சேவை வரி வருவாய் இழப்பீடு பெறும் முதல் ஐந்து மாநிலங்களில் தமிழ்நாடு இடம் பெற்றுள்ளது.
- சரக்கு மற்றும் சேவை வரியானது 2017 ஆம் ஆண்டு ஜூலை 01 ஆம் தேதியன்று அறிமுகப் படுத்தப் பட்டது.
- இந்தப் புதிய வரி விதிப்பு அமலாக்கத்தின் காரணமாக மாநிலங்களுக்கு ஏற்படும் வருவாய் இழப்புக்கு ஈடு செய்யப் படுவதற்காக நிர்ணயிக்கப்பட்ட நிலை மாற்றக் காலம் 2022 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் தேதியன்று முடிவடைந்தது.
- 2015-16 ஆம் ஆண்டினை அடிப்படை ஆண்டாகக் கொண்ட 14% வருடாந்திர வளர்ச்சி மற்றும் உண்மையான சரக்கு மற்றும் சேவை வரி வருவாய் ஆகியவற்றின் அடிப்படையில் கணிக்கப்பட்ட வருவாய் ஆகியவற்றிற்கு இடையேயான வேறுபாடாக இது கணக்கிடப் படுகிறது.
- குறிப்பிட்ட சரக்குகள் மற்றும் சேவைகள் மீதான GST இழப்பீடு கூடுதல் வரி விதிப்பதன் மூலம் மாநிலங்களுக்கான இழப்பீடு பூர்த்தி செய்யப்படுகிறது.
- இந்த அறிக்கையில் பகிரப்பட்ட தரவுகளின்படி, தமிழ்நாடு மாநிலமானது, இந்த நிலை மாற்றக் காலகட்டத்தில் சுமார் 40,000 கோடி ரூபாய் தொகையினை இழப்பீடாகப் பெற்றுள்ளது.
- மகாராஷ்டிரா, கர்நாடகா மற்றும் குஜராத் ஆகியவற்றினைத் தொடர்ந்து அதிக இழப்பீடு பெறும் நான்காவது மாநிலமாக தமிழ்நாடு உள்ளது.
- இதில் பஞ்சாப் மாநிலம் ஐந்தாவது இடத்தில் உள்ளது.



## 2022 ஆம் ஆண்டில் MSME நிறுவனத் தயாரிப்புகளை அதிகம் வாங்கிய பிரிவுகள்

- 2022 ஆம் ஆண்டில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன விற்பனையாளர்களிடமிருந்து சரக்குகள் மற்றும் சேவைகளை வாங்குவதில் பாதுகாப்பு அமைச்சகம் முன்னணியில் உள்ளது.
- அரசு இணையவழிச் சந்தையானது 2016 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- இது இயங்கலையில் சரக்குகள் மற்றும் சேவைகளை வாங்குவதற்குப் பயன்படுத்தப் படும் ஒரு இயங்குதலை தளமாகும்.
- இந்த அமைச்சகமானது, 2022 ஆம் ஆண்டில் 16,747 கோடி ரூபாய் மதிப்பிலான சரக்குகள் மற்றும் சேவைகளை இத்தளத்தில் இருந்து வாங்கியுள்ளது.
- இது முந்தைய ஆண்டில் பதிவானதை விட 250 சதவீதம் அதிகமாகும்.




## விமான எரிவாயு ஏற்றுமதி

- முதன்முறையாக, தேசிய எண்ணெய் விற்பனை நிறுவனமான இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் விமான எரிபொருள் ஏற்றுமதியைத் தொடங்கியுள்ளது.
- இது ஆளில்லா வான்வழி வாகனங்கள் மற்றும் சிறிய விமானங்களை இயங்கச் செய்யும் எரிபொருளாகும்.
- உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப் படும் இந்த எரிவாயு AVgas 100 LL எனப் பெயரிடப் பட்டது.
- இந்த ஏற்றுமதியானது இந்திய நாட்டின் எரிபொருள் வரலாற்றில், ஒரு நிகர இறக்குமதியாளராக விளங்கிய நிலையில் இருந்து ஒரு ஏற்றுமதியாளர் என்ற நிலைக்கு இந்தியாவினை மாற்றி ஒரு புதிய அத்தியாயத்தை உருவாக்கியுள்ளது.
- விமான எரிவாயு அடங்கிய 80 பீப்பாய்கள் கொண்ட முதல் சரக்குப் பெட்டகமானது, பப்புவா நியூ கினியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.

## கூடுதல் கண்காணிப்புச் செயல்முறை


- ❖ தேசியப் பங்குச் சந்தை முகமையானது, அதானி நிறுவனங்கள், அதானி துறைமுகம் மற்றும் அம்புஜா சிமெண்ட்ஸ் ஆகியவற்றைத் தனது கூடுதல் கண்காணிப்புச் செயல் முறையின் கீழ் வைத்துள்ளது.
- ❖ இதன் பொருள் அவற்றின் பங்குகளில் வர்த்தகம் செய்வதற்கு 100% தொகை தேவை.
- ❖ இது ஊக வணிகங்கள் மற்றும் குறைந்த நேரத்தில் பங்கு விற்பனை ஆகியவற்றினைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ சந்தையில் உள்ள ஏற்ற இறக்கம் மற்றும் பங்கு விலையில் ஏற்படும் அசாதாரண மாற்றங்களிலிருந்து முதலீட்டாளர்களைப் பாதுகாக்கும் ஒரு நோக்கத்துடன் 2018 ஆம் ஆண்டு மார்ச் 26 ஆம் தேதியன்று இம்முறை அறிமுகப்படுத்தப்பட்டது.




## மத்திய வங்கியின் எண்ணிம நாணயத்தினை ரிலையன்ஸ் நிறுவனம் ஏற்பு

- ❖ ரிலையன்ஸ் ரீடெய்ல் நிறுவனமானது, ரிசர்வ் வங்கியின் எண்ணிம ரூபாய் மூலமான சில்லறை விற்பனைக் கட்டணங்களை ஏற்கத் தொடங்கியுள்ளதாக சமீபத்தில் அறிவித்துள்ளது.
- ❖ இதன் மூலம், மத்திய வங்கி எண்ணிம நாணயத்தை (CBDC) ஏற்றுக் கொண்ட முதல் இந்திய சில்லறை விற்பனையாளர் நிறுவனம் இதுவாகும்.
- ❖ இந்திய ரிசர்வ் வங்கியானது, தனது முதலாவது சோதனை அடிப்படையிலான சில்லறை எண்ணிம ரூபாயினை 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 01 ஆம் தேதியன்று அறிமுகப் படுத்தியது.
- ❖ இந்த நாணயமானது சட்டப்பூர்வ அனுமதியினைக் குறிக்கும் எண்ணிம வில்லை வடிவத்தில் கிடைக்கிறது.
- ❖ மத்திய வங்கி எண்ணிம நாணயம் (CBDC) ஆனது காகிதத்தாள் மற்றும் நாணயங்களின் அதே மதிப்பில் வெளியிடப்பட்டுள்ளது.
- ❖ மத்திய வங்கி எண்ணிம நாணயம் என்பது பணத்தாளுடன் சேர்ந்து புழக்கத்தில் இருக்கும் ஃபியட் பணத்தின் (அரசின் ஒப்புதல் பெற்ற பிற நாணய வடிவங்கள்) எண்ணிம வடிவமாகும்.

## இந்திய ரிசர்வ் வங்கியின் நிதியியல் கொள்கை 2023





- ❖ இந்திய ரிசர்வ் வங்கியின் நிதியியல் கொள்கைக் குழுவானது (MPC), முக்கியக் கொள்கை விகிதமான ரெப்போ வட்டி விகிதத்தை உயர்த்தியுள்ளது.
- ❖ இது வங்கிகளுக்கு இந்திய ரிசர்வ் வங்கி கடன் வழங்குவதற்கான ஒரு வட்டி விகிதம் ஆகும்.
- ❖ அதன் சில்லறைப் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் இது 25 அடிப்படைப் புள்ளிகள் உயர்த்தப்பட்டு 6.50 சதவீதமாக உள்ளது.
- ❖ ஒரு அடிப்படைப் புள்ளி என்பது ஒரு சதவீதப் புள்ளியில் நூறில் ஒரு பங்கு ஆகும்.
- ❖ அடுத்த நிதியாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியானது, 6.4 சதவீதமாக இருக்கும் என்றும் இந்திய ரிசர்வ் வங்கி கணித்துள்ளது.
- ❖ 2024 ஆம் நிதியாண்டில் சில்லறைப் பணவீக்கம் 5.3 சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- ❖ இதன் காரணமாக வாகனங்கள், வீடு மற்றும் தனிநபர் கடன்களுக்கான சம மாதத் தவணை உயரும்.

## UPI மூலம் எல்லை தாண்டிய பண வழங்கீடுகள்

- ❖ ஃபோன்பே நிறுவனமானது 'ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுகச் செயலி மூலமான சர்வதேச அளவிலான பண வழங்கீடுகளுக்கான தனது வசதியினை வழங்கத் தொடங்கியுள்ளது.
- ❖ இந்த வசதியானது, வெளிநாடு செல்லும் இந்தியப் பயனர்கள் ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுகச் செயலியினைப் பயன்படுத்தி வெளிநாட்டு வணிகர்களுக்குப் பணம் செலுத்த வழிவகை செய்யும்.
- ❖ தற்போது அறிமுகப்படுத்தப்பட்ட இந்த வசதியானது ஐக்கிய அரபு அமீரகம், சிங்கப்பூர், மொரீஷியஸ், நேபாளம் மற்றும் பூடான் ஆகிய நாடுகளில் உள்ள உள்நாட்டு விரைவுக் குறியீடுகளைக் கொண்ட சர்வதேச வணிக விற்பனை நிலையங்களில் வழங்கப் படுகிறது.
- ❖ இந்தியாவில் இந்த வசதியினை அறிமுகப்படுத்திய முதல் நிதிசார் தொழில்நுட்பச் செயலி ஃபோன்பே ஆகும்.

## 2021-22 ஆம் ஆண்டில் அதிக பண வரவு பதிவு

- 2021-22 ஆம் ஆண்டில், வெளிநாடுகளிலிருந்து இந்திய நாட்டிற்கு அனுப்பப்பட்ட பண வரவுகளின் மதிப்பானது 89,127 மில்லியன் அமெரிக்க டாலர்கள் ஆகும்.
- இது ஓராண்டில் பெறப்பட்ட அதிகபட்ச மதிப்பாகும்.
- இந்தியா அதிகளவில் பண வரவு பெறப் படும் நாடுகளில் முன்னணியில் உள்ள 3 நாடுகள் அமெரிக்கா, ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் ஐக்கியப் பேரரசு ஆகும்.





## எண்ணிம வெள்ளி நாணயம்

- MMTC-PAMP இந்தியா நிறுவனமானது, எண்ணிம வெள்ளி நாணயத்தினை அறிமுப் படுத்த உள்ளதாக அறிவித்தது.
- MMTC என்பது உலோகங்கள் மற்றும் கனிமங்கள் வர்த்தக நிறுவனமாகும்.
- இது ஒரு இந்தியப் பொதுத்துறை நிறுவனமாகும்.
- MMTC என்பது சுவிட்சர்லாந்து நாட்டில் அமைந்துள்ள ஓர் உலோக மற்றும் கனிம வர்த்தக நிறுவனம் ஆகும்.
- விலையுயர்ந்த உலோகங்களை வாங்குவதற்கு இந்த எண்ணிம வெள்ளி நாணயம் ஒரு பாதுகாப்பான வழிகளில் ஒன்றாகும்.
- எண்ணிமம் அடிப்படையிலான இது வெளிப்படைத்தன்மை, 24/7 நேரத்திற்குமான அணுகல் தன்மை, உறுதி செய்யப்பட்ட தூய்மை மற்றும் வெள்ளி முதலீடுகளுக்கான குறைந்த நுழைவு வசதி ஆகியவற்றிற்கான எந்தவிதமானக் கட்டணங்களும் இன்றி, வெள்ளியின் அனைத்து நன்மைகளையும் வழங்குகிறது.

MMTC • PAMP •

## இறையாண்மைப் பசுமைப் பத்திரங்களின் முதல் தவணை

- ரூ.80 மதிப்பிலான இந்தியாவின் அறிமுக இறையாண்மை பசுமைப் பத்திரங்களின் முதல் தவணை சமீபத்தில் ஏலம் விடப்பட்டது.
- பருவநிலை தொடர்பான இத்தகையத் திட்டங்களை செயல்படுத்தச் செய்வதற்கான வளங்களை கொண்டு வரும் இந்தப் பத்திரங்கள் இறையாண்மைப் பசுமைப் பத்திரங்கள் என்று அழைக்கப் படுகின்றன.
- இவை அரசுப் பத்திரங்களைப் போன்றதாகும்.
- இறையாண்மைப் பசுமைப் பத்திரங்கள் இந்திய ரிசர்வ் வங்கியால் அறிமுகப் படுத்தப் பட்டது.
- இதில் இரண்டு வெவ்வேறு வகையான பத்திரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.
- ஒரு பத்திரமானது 2028 ஆம் ஆண்டிலும், மற்றொன்று 2033 ஆம் ஆண்டிலும் நிறைவு அடைய உள்ளது.




## 2022-23 ஆம் நிதியாண்டின் நேரடி வரி வசூல்

- பிப்ரவரி 10 ஆம் தேதி வரையில் வசூலான மொத்த நேரடி வரி வசூலானது, 15.67 லட்சம் கோடி ரூபாய் ஆக உள்ளது.
- இது கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தில் வசூலான மொத்த வரி வசூலை விட 24.09 சதவீதம் அதிகமாகும்.
- நேரடி வரி வசூல் மற்றும் நிகரத் தொகை திருப்பி செலுத்தியது ஆகியவை 12.98 லட்சம் கோடியாக உள்ளது.
- இது கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தின் பதிவான நிகர வசூலை விட 18.40 சதவீதம் அதிகமாகும்.

- இந்த வசூலானது 2022-23 ஆம் நிதியாண்டிற்கான நேரடி வரிகளின் மொத்த நிதிநிலை மதிப்பீடுகளில் 91.39 சதவீதமாகும் என்பதோடு, 2022-23 ஆம் நிதியாண்டிற்கான நேரடி வரிகளின் திருத்தப்பட்ட மதிப்பீடுகளில் 78.65 சதவீதமாகும்.
- நேரடி வரி வருவாயானது 14.2 லட்சம் கோடி ரூபாய் என நிதிநிலை மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.




## ஹலோ உஜ்ஜீவன் செயலி

- உஜ்ஜீவன் சிறு கடன் வங்கியானது, இந்தியாவிலேயே முதல் முறையாக 3 V - அதாவது குரல் சார்ந்த, காட்சி சார்ந்த, வட்டார மொழி மூலம் இயங்கக் கூடிய அம்சங்களுடன் கூடிய ஹலோ உஜ்ஜீவன் எனப்படும் கைபேசி சார்ந்த வங்கிச் சேவைச் செயலியினை அறிமுகப் படுத்தியுள்ளது.
- குறைந்த வாசிப்புத்திறன் மற்றும் எழுதும் திறன் கொண்ட தனிநபர்களுக்கு வங்கி அணுகலை வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சிறு வங்கிச் சேவை மற்றும் எண்ணிம ரீதியில் சவால்கள் நிறைந்த கிராமப்புற வாடிக்கையாளர்களுக்கு வங்கிச் சேவை பயன்பாடுகளைப் உபயோகிக்கச் செய்யும் பழக்கத்தை ஏற்படுத்துவதற்காக இந்தச் செயலியானது வடிவமைக்கப்பட்டுள்ளது.
- நவனா என்ற செயற்கை நுண்ணறிவு நிறுவனத்துடன் இணைந்து உருவாக்கப்பட்ட ஹலோ உஜ்ஜீவன் செயலியானது, எட்டு பிராந்திய மொழிகளில் குரல்வழி மூலம் அணுகக் கூடியதாகும்.



## இந்தியாவின் மாபெரும் ஏர்பஸ் விமான விற்பனை ஒப்பந்தம்

- டாடா குழுமத்திற்குச் சொந்தமான ஏர் இந்தியா (AI) நிறுவனமானது சமீபத்தில், 470 விமானங்களை வாங்குவதற்கான இரண்டு மாபெரும் கொள்முதலை மேற்கொண்டது.
- ஐரோப்பாவின் ஏர்பஸ் குழுமத்தின் 250 விமானங்கள், அமெரிக்காவின் போயிங் நிறுவனத்தின் 220 விமானங்கள் ஆகியவற்றினைக் கொள்முதல் செய்வதற்காக இந்த ஒப்பந்தங்கள் இறுதி செய்யப்பட்டன.
- உலகில் முதல் முறையாக ஒரே நேரத்தில் மிக அதிக அளவிலான விமானங்களை கொள்முதல் செய்ய மேற்கொள்ளப்படும் மிகப்பெரிய ஒப்பந்தம் இதுவாகும்.
- இது 2011 ஆம் ஆண்டில் அமெரிக்க ஏர்லைன்ஸ் நிறுவனம் மேற்கொண்ட 460 விமானங்களுக்கான கொள்முதலினை விஞ்சியுள்ளது.
- இதற்கு முன்னதாக ஒரு இந்தியப் போக்குவரத்து நிறுவனம் மேற்கொண்ட ஒரு மிகப் பெரிய கொள்முதல் ஒப்பந்தம் 2019 ஆம் ஆண்டில் இண்டிகோ நிறுவனம் மேற் கொண்ட 300 விமானங்கள் கொள்முதலுக்கான ஒப்பந்தமாகும்.

**WHICH PLANES, HOW MANY**

| Model | Order Size (nos) | Avg List Price ($ mn) | Total List Price ($ mn) |
|---|---|---|---|
| 737 Max* | 190 | 128.25 | 24,367.5 |
| 787-9 | 20 | 292.5 | 5,850 |
| 777-9 | 10 | 442.2 | 4,422 |
| TOTAL (BOEING)* | 220 | | 34,639.5 |
| A320neo | 140 | 110.6 | 15,484 |
| A321neo | 70 | 129.5 | 9,065 |
| A350-1000 | 34 | 366.5 | 12,461 |
| A350-900 | 6 | 317.4 | 1,904.4 |
| TOTAL (AIRBUS)** | 250 | | 38,914.4 |
| GRAND TOTAL | 470 | | $73.55 billion** |

## சரக்கு மற்றும் சேவை வரிச் சபையின் 49வது கூட்டம்

- சரக்கு மற்றும் சேவை வரிச் சபையின் 49வது கூட்டமானது மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள் தலைமையில் டெல்லியில் நடைபெற்றது.
- இந்தச் சபையானது, பொதிகளாக முத்திரையிட்டு விற்கப்படும் வெல்லப்பாகு மீதான சரக்கு மற்றும் சேவை வரி விகிதத்தை 18 சதவீதத்திலிருந்து 5% ஆக குறைத்துள்ள நிலையில் அவை முத்திரையின்றி விற்கப்பட்டால் அவற்றிற்கு வரி விதிக்கப்படாது.
- முன்னதாக வரைகோல் (பென்சில்) கூர்மையாக்கிகளின் விலை மீதான வரியானது 18 சதவீதத்தில் இருந்து 12 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது.
- வரிக் கண்காணிப்பு அமைப்புகள் மீதான வரி விகிதங்கள் 18 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது, எனினும் அது நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும்.
- நீதிமன்றங்களால் வழங்கப்படும் சேவைகள் ஆனது மறுதலை வரி விதிப்பு முறை மூலமாக வசூலிக்கப்படும்.

## கடன் வழங்கீடுகளின் எண்ணிக்கை உயர்வின் அடிப்படையில் சிறந்த செயல் திறன் கொண்ட வங்கி

- 2022-23 ஆம் ஆண்டின் மூன்றாவது காலாண்டில் கடன் வழங்கீடுகளின் சதவீதத்தின் அடிப்படையில், பாங்க் ஆஃப் மகாராஷ்டிரா அரசுக்குச் சொந்தமான கடன் வழங்கு நிறுவனங்களிடையே சிறந்த செயல்திறன் கொண்ட வங்கியாக உருவெடுத்துள்ளது.
- இந்தக் கடன் வழங்கு நிறுவனமானது 21.67 சதவீத மொத்தக் கடன் வழங்கீட்டில் அதிக அளவில் வருடாந்திர உயர்வினைக் கண்டது.
- 19.80% உயர்வினைக் கொண்ட யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா, பாங்க் ஆஃப் மகாராஷ்டிரா வங்கிக்கு அடுத்த படியாக இரண்டாவது இடத்தைப் பெற்றது.
- பாரத் ஸ்டேட் வங்கியானது (SBI) 16.91% கடன் வழங்கீட்டு அதிகரிப்புடன் நான்காவது இடத்தைப் பெற்றது.

## சிங்கப்பூர் அரசுடனான ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுகச் சேவை கூட்டிணைவு




- இந்தியாவின் ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுகச் சேவை மற்றும் சிங்கப்பூரின் PayNow ஆகியவை நிகழ்நேர பண வழங்கீட்டுச் சேவை இணைப்புக்காக அதிகாரப் பூர்வமாக இணைக்கப்பட்டுள்ளன.
- சிங்கப்பூர் தற்போது எல்லை கடந்த நேரடி (P2P) பண வழங்கீட்டு வசதிகள் தொடங்கப் பட்ட முதல் நாடாக மாறியுள்ளது.
- இது சிங்கப்பூரில் உள்ள புலம்பெயர்ந்த இந்தியர்களுக்கு, குறிப்பாக புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் /மாணவர்களுக்கு உதவச் செய்வதோடு, எண்ணிம மயமாக்கலின் பலன்களை அவர்களிடம் சேர்க்க உதவும்.

## கடல்சார் உணவு ஏற்றுமதி இலக்கு

- மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் அனுப்பிரியா படேல் அவர்கள் சமீபத்தில் கொல்கத்தாவில் இந்திய சர்வதேச கடல்சார் உணவுக் கண்காட்சியினைத் தொடங்கி வைத்தார்.

- 2025 ஆம் ஆண்டிற்குள் 14 பில்லியன் டாலர் என்ற இலட்சிய ஏற்றுமதி இலக்கை அடைவதற்காக இந்தியாவின் கடல்சார் உணவுத் தொழில்துறைகள் தனது உத்தியை மாற்றியமைத்து வருகிறது.
- 2021-22 ஆம் ஆண்டில், நாட்டின் கடல்சார் உணவு ஏற்றுமதி 7.76 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்தது.
- இது மொத்த வேளாண் பொருட்களின் ஏற்றுமதியில் 17% ஆகும்.
- தற்போது 100க்கும் மேற்பட்ட நாடுகளுக்குப் பாதுகாப்பான கடல்சார் உணவுப் பொருட்களை இந்தியா ஏற்றுமதி செய்து வருகிறது.
- 2022 ஆம் நிதியாண்டில் 7.76 பில்லியன் டாலர் மதிப்புள்ள இந்தியாவின் கடல்சார் உணவு ஏற்றுமதியில் 43 சதவீதப் பங்கினை அமெரிக்கா கொண்டுள்ளது.




## ஆறாவது பெரிய பங்குச் சந்தை

- உலகின் ஆறாவது பெரிய பங்குச் சந்தையாக இந்தியாவை ஐக்கியப் பேரரசு முதன் முறையாக விஞ்சியுள்ளது.
- ஐக்கியப் பேரரசின் முதன்மை பங்குச் சந்தையின் ஒருங்கிணைந்தச் சந்தை மூலதனம் சில விதிவிலக்குகளுடன் சுமார் 3.11 டிரில்லியன் டாலர்களை எட்டியது.
- ப்ளூம்பெர்க் நிறுவனம் தொகுத்த தரவுகளின்படி அந்நாட்டின் மதிப்பானது இந்திய மதிப்பை விட 5.1 பில்லியன் டாலர் அதிகமாகும்.



## கிரேட் பேக்யார்டு பறவைகள் கணக்கெடுப்பு 2023

- 35 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட 2023 ஆம் ஆண்டு கிரேட் பேக்யார்டு பறவைகள் கணக்கெடுப்பின் போது மேற்கு வங்காளத்தில் அதிக எண்ணிக்கையிலான பறவை இனங்கள் பதிவாகியுள்ள நிலையில் அதனைத் தொடர்ந்து உத்தரகாண்ட் மற்றும் அருணாச்சலப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் உள்ளன.
- கேரளாவில் அதிக எண்ணிக்கையிலான பறவைகள் பதிவு செய்யப் பட்டு உள்ளன.
- BCI (Bird Count India – இந்தியப் பறவைகள் கணக்கெடுப்பு) என்பது பறவைகளின் பரவல் மற்றும் எண்ணிக்கை பற்றிய ஒட்டு மொத்தத் தகவல்களை அதிகரிக்கச் செய்திட வேண்டி இணைந்து செயல்படும் நிறுவனங்கள் மற்றும் குழுக்களின் ஒரு முறை சாராக் கூட்டாண்மை ஆகும்.
- 2023 ஆம் ஆண்டு கிரேட் பேக்யார்டு பறவைகள் கணக்கெடுப்பில் பங்கேற்ற 190 நாடுகளில் இந்தியாவும் அடங்கும்.
- இந்தக் கணக்கெடுப்பில் பங்கேற்ற 35 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் மேற்கு வங்காளத்தில் மிக அதிகமான அளவில் 489 இனங்கள் பதிவாகியுள்ளன.
- உத்தரகாண்ட், அருணாச்சலப் பிரதேசம், அசாம் மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்கள் முறையே 426, 407, 397 மற்றும் 371 இனங்களைக் கொண்டுள்ளன.
- தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகியவை 349 மற்றும் 325 இனங்களுடன் எட்டாவது மற்றும் ஒன்பதாவது இடங்களைப் பெற்றன.
- இருப்பினும், 9,768 பட்டியல்களுடன் தனது பறவைகள் பட்டியலில் எண்ணிக்கையினை பதிவேற்றி, மறு சரிபார்ப்புப் பட்டியல் பிரிவில் கேரளா முதலிடத்தைப் பிடித்தது.
- மகாராஷ்டிரா 7,414 பட்டியல்களுடனும், தமிழ்நாடு 6,098 பட்டியல்களுடனும் முறையே இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெற்றுள்ளன.
- கிரேட் பேக்யார்டு பறவைகள் கணக்கெடுப்பானது 1998 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது.
- Bird Count India என்ற அமைப்பானது இந்தியாவில் கிரேட் பேக்யார்டு பறவைகள் கணக்கெடுப்பினை ஏற்பாடு செய்கிறது.



# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## iNCOVACC

- இந்திய அரசானது நாசி வழி உட்செலுத்தக் கூடிய வகையிலான தனது முதல் கோவிட் 19 தடுப்பூசியினை இன்கோவாக் என்ற பெயரில் அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது ஹைதராபாத்தில் உள்ள பாரத் பயோடெக் என்ற நிறுவனத்தினால் தயாரிக்கப் படுகிறது.
- இந்தத் தடுப்பூசியானது, இந்தியாவில் முதன்மை மற்றும் பன்முகத் தன்மை கொண்ட (கலப்பு) பூஸ்டர் தவணையாக பயன்படுத்த அனுமதிக்கப் பட்டுள்ளது.
- கொரோனா வைரஸுக்கு எதிரான எளிதான மற்றும் வலியற்ற நோய்த் தடுப்பினை வழங்குவதற்கு இது பயன்படுத்தப்பட உள்ளது.





## மார்பகப் புற்றுநோய்க்கான மருந்தின் மரபியல் சார்ந்த வடிவம்

- MSN குழுமமானது, பால்போசிக்லிப் என்ற மார்பகப் புற்றுநோய்க்கான மருந்தின் இனம் சார் பொது வடிவத்தினை, பால்போரஸ்ட் என்ற பெயரின் கீழ் மாத்திரை வடிவில் அறிமுகப் படுத்தியுள்ளது.
- மேலும் சில நிறுவனங்களும் பால்போசிக்லிப் மருந்தினை மாத்திரை வடிவில் அறிமுகப் படுத்தியுள்ளன.
- இது மிகவும் மலிவு விலையிலான மற்றும் புதுமை மிக்க உயிர்ச் சமநிலை மாத்திரை ஆகும்.



## பூமியின் உட்கரு சுழற்சி

- பூமியின் உட்கருவானது, நமது கிரகத்தின் மேற்பரப்பை விட வேகமாகச் சுழல்வதனை நிறுத்தியுள்ளது.
- பூமியின் உட்கருவானது, உருகிய திரவ வெளிப்புற மையத்தில் மிதந்தவாறு, தன்னிச்சையாகச் சுழல்கிறது.
- பூமியின் மேற்பரப்புடன் தொடர்புடைய உட்கருவானது, ஒரு ஊஞ்சலைப் போல முன்னும் பின்னுமாகச் சுழல்கிறது என்று சமீபத்திய ஆராய்ச்சி கூறுகிறது.
- 2009 ஆம் ஆண்டு முதல், உட்கருவானது மேற்பரப்பை விட மெதுவாகச் சுழலுவதால் இந்த எதிர்மறையானப் போக்கு இருப்பது கண்டறியப்பட்டது.





## 50,000 ஆண்டுகளுக்குப் பிறகுத் தோன்றும் பச்சை நிற வால் நட்சத்திரம்



- சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டப் பச்சை நிற வால் நட்சத்திரம் ஆனது 50,000 ஆண்டுகளில் முதல் முறையாக பூமியை நெருங்குகிறது.
- இது முன்னதாக கற்காலத்தின் பொது இரவு வானில் கடைசியாகத் தென்பட்டது.
- இது நியாண்டர்தால்களின் காலத்திலிருந்து பூமிக்கு மிக அருகில் நெருங்கி வருகிறது.

- C/2022 E3 (ZTF) என்று பெயரிடப்பட்ட இந்த வால் நட்சத்திரம் ஆனது, பூமியிலிருந்து 26 மில்லியன் மைல்கள் (42 மில்லியன் கிலோமீட்டர்) தொலைவில் புவிக்கு அருகில் வர உள்ளது.
- இந்த வால் நட்சத்திரமானது ஜனவரி மாதம் முதலே இரவு வானத்தைப் பிரகாசமாக்கி வருகிற நிலையில், இது செவ்வாய் மற்றும் பூமி ஆகியவற்றின் சுற்றுப்பாதைகளுக்கு இடையில் கடந்து செல்ல உள்ளது.
- இது மணிக்கு 128,500 மைல்கள் என்ற (207,000 km/h) வேகத்தில் பயணிக்க உள்ளது.

## மூளையின் கணக்கிடுதல் திறனை ஒத்தச் செயற்கை நரம்பிணைவுத் தொழில் நுட்பம்




- பெங்களூரின் ஜவஹர்லால் நேரு மேம்பட்ட அறிவியல் ஆராய்ச்சி மையத்தின் (JNCASR) அறிவியலாளர்கள் குழுவானது, மூளையின் கணக்கிடுதல் திறனை ஒத்த, குறைந்த ஆற்றல் நுகர்வுடைய, அதிவேகத் தொழில்நுட்பத்தை உருவாக்கியுள்ளது.
- மூளையின் கணக்கிடுதல் திறனை ஒத்த ஒரு அமைப்பினை உருவாக்குவதற்காக, ஸ்காண்டியம் நைட்ரைடு என்ற உயர்நிலைத் தன்மை கொண்ட ஒரு குறைகடத்திப் பொருளை இக்குழு பயன்படுத்தியுள்ளது.
- பாரம்பரியக் கணினிகளானது, தனியாக அமைந்த நினைவகச் சேமிப்பு மற்றும் செயலாக்க அலகுகளைக் கொண்டுள்ளன.
- செயல்பாட்டின் போது இந்த அலகுகளுக்கு இடையில் தரவை மாற்றுவதற்கு அந்தக் கணினிகள் அதிகளவிலான ஆற்றலையும் நேரத்தையும் எடுத்துக் கொள்கின்றன.
- இதற்கு நேர்மாறாக, மனித மூளையில் உள்ள சினாப்ஸ் (இரண்டு நியூரான்களுக்கு இடையிலான சந்திப்பு) ஆனது ஒரு செயலாக்க மற்றும் நினைவகச் சேமிப்புச் சாதனமாக செயல்படுகிறது.
- இதுவே சிறியதாகவும் மிகவும் பயனுள்ளதாகவும் உள்ள ஒரு சிறந்த உயிரியல் கணினியாக விளங்குகிறது.

## அணுக்கருப்பிளவு மூலம் இயங்கும் விண்கலம்

- ❖ நாசா மற்றும் பாதுகாப்புத் துறை சார்ந்த மேம்பட்ட ஆராய்ச்சித் திட்டங்கள் முகமை (DARPA), செவ்வாய்க் கிரகத்திற்கு மனிதர்களை கொண்டு செல்லக் கூடிய அணு சக்தியில் இயங்கும் ஏவுகலங்களைப் பரிசோதிக்க உள்ளதாக சில அறிவிப்புகளை வெளியிட்டு உள்ளன.
- ❖ இந்த அணுசக்தியில் இயங்கும் ஏவுகலங்களுக்கான அணு உலை மற்றும் எந்திரம் ஆகியவற்றினை DARPA உருவாக்க உள்ளது.
- ❖ நாசா நிறுவனமானது 2027 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஒரு விண்வெளி சார்ந்த செயல் விளக்கத்தினை மேற்கொள்ளும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- ❖ இந்தத் திட்டமானது, DRACO - விரைதிறனுடைய நிலவின் சுற்றுவட்டப்பாதைச் சார்ந்த நடவடிக்கைகளுக்கான செயல் விளக்க ஏவுகலம் என அழைக்கப்படும்.
- ❖ DRACO நிறுவனமானது அணுக்கரு பிளவு வினை செயல்முறையினை இயக்க உள்ளது.
- ❖ அமெரிக்கா அரசானது 1955 ஆம் ஆண்டில் இந்தத் தொழில்நுட்பத்தை பரிசோதிக்கத் தொடங்கியது, ஆனால் நிதிப் பற்றாக்குறையால் இந்தத் திட்டம் நிறுத்தப்பட்டது.
- ❖ அணுக்கருப் பிளவு மூலம் இயங்கும் ஏவுகலங்கள் பயண நேரத்தை வெகுவாகக் குறைக்க அறிவியலாளர்களுக்கு உதவும்.




## அண்டார்டிகாவில் கண்டறியப்பட்ட விண்கல்

- ❖ சர்வதேச ஆராய்ச்சியாளர்களின் குழு ஒன்று, அண்டார்டிக்கா பகுதியில் கண்டத்தில் இதுவரை கண்டுபிடிக்கப் பட்ட மிகப்பெரிய ஒரு விண்கல் உட்பட ஐந்து புதிய விண் கற்களை கண்டுபிடித்துள்ளது.
- ❖ இந்த அரிய விண்கல்லானது ஒரு கிர்ணி பழ அளவினை ஒத்த, ஆனால் 17 பவுண்டுகள் (7.7 கிலோ கிராம்) எடையுள்ளதாக இருக்கிறது.
- ❖ கடந்த நூற்றாண்டில் அண்டார்டிகா பகுதியிலிருந்து மட்டும் சுமார் 45,000 விண்கற்கள் கண்டெடுக்கப் பட்டுள்ளன.




## ஒளியணுவியல் அடிப்படையிலான உலகின் முதல் குவாண்டம் கணினி




- ஒளியணுவியல் அடிப்படையிலான, குறைவான பிழை வழங்கீட்டுத் திறன் கொண்ட உலகின் முதல் குவாண்டம் கணினியினை உருவாக்கவும் அதனை வணிக மயம் ஆக்கவும் ஒரு புதிய கூட்டு முதலீட்டினை மேற்கொள்ள உள்ளதாக கனடா அரசு அறிவித்துள்ளது.
- சிக்கலான தரவு சார்ந்த சிக்கல்களைத் தீர்க்க உதவும் உலகின் முன்னணி திறன்களை வழங்கும் வகையிலான திறன் கொண்ட குவாண்டம் கணினியை அந்நாடு உருவாக்க உள்ளது.
- இது நிதி, போக்குவரத்து, சுற்றுச்சூழல் மாதிரியாக்கம் மற்றும் சுகாதாரம் போன்ற பல்வேறு துறைகளில் பயன்படுத்தப்பட உள்ளது.

## முக்கிய பணையத்தீநிரல் வலையமைப்பு – Hive




- ஹைவ் (Hive) எனப்படும் முக்கிய பணையத் தீநிரல் வலையமைப்பின் இணைய தளத்தை அமெரிக்கா முடக்கியுள்ளது .
- ஒரு சர்வதேசப் பணையத் தீநிரல் வலையமைப்பான இது நிறுவனங்களை மிரட்டி நூற்றுக்கணக்கான மில்லியன் டாலர் மதிப்பிலான பணம் பறித்தல் மற்றும் அது சார்ந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஒரு வலையமைப்பாகும்.
- இதனால் பாதிக்கப்பட்ட நிறுவனங்களில் இந்தியாவின் டாடா பவர், ஜெர்மனி நாட்டுச் சில்லறை வர்த்தக நிறுவனமான மீடியா மார்க், கோஸ்டாரிகாவின் பொதுச் சுகாதாரச் சேவை போன்றவை அடங்கும்.
- ஹைவ் என்பது ஒரு பணையத் தீநிரல் சேவை வழங்கீட்டு வலையமைப்பாகச் செயல்பட்டது.
- இலக்கு நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்ப அமைப்புகளுக்குள் நுழைவதற்கும், முற்றிலும் முடக்குவதற்கும் மற்றும் பணம் செலுத்துவதற்கும் அதன் மென்பொருள் மற்றும் பிற சேவைகளைப் பயன்படுத்துவதற்கு எந்தவொரு அமைப்பினையும் இது அனுமதிக்கிறது.

## மகாராஷ்டிராவில் புதிய பீடபூமி

- மேற்கு தொடர்ச்சி மலையில் பருவநிலை மாற்றத்தினைக் குறித்த சில புதிய நுண்ணறிவுகளை வழங்கச் செய்யும் ஒரு அரிய தாழ்மட்ட பசால்ட் பீடபூமியை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
- இந்தப் பீடபூமியில், இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட 24 வெவ்வேறு குடும்பங்களைச் சேர்ந்த 76 வகையான தாவரங்கள் மற்றும் புதர்ச் செடிகள் உள்ளிட்ட பல்வேறு தாவரங்கள் உள்ளன.
- இது மகாராஷ்டிராவின் தானே மாவட்டத்தில் உள்ள மஞ்சரே கிராமத்தில் கண்டு பிடிக்கப் பட்ட நிலையில் இந்தப் பீடபூமியானது இப்பகுதியில் அடையாளம் காணப் பட்ட நான்காவது வகை பீடபூமியாகும்.
- முந்தைய மூன்று பீடபூமிகள் என்பது, உயர் மற்றும் தாழ்மட்ட செம்மண் பாறை மற்றும் அதிக உயரத்தில் உள்ள பாசால்ட் பாறை வகையிலான பீடபூமிகள் ஆகும்.




## முதலாவது காமா-கதிர் கிரகணங்கள்

- ❖ நாசாவின் ஃபெர்மி காமா-கதிர் விண்வெளி தொலைநோக்கியின் சில தரவுகளைப் பயன்படுத்தி ஒரு சிறப்பு வகை இரும விண்மீன் அமைப்பில் நிகழ்ந்த முதல் காமா-கதிர் கிரகணங்களை அறிவியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
- ❖ இத்தகைய வலைப் பின்னல் அமைப்பு என்று அழைக்கப் படுபவை ஒவ்வொன்றிலும், மெதுவாக அதன் இணைப் பகுதியை முற்றிலும் சிதைக்கின்ற ஒரு மீயொளிர் விண்மீன் வெடிப்பு நிகழ்வில் வெடித்துச் சிதறிய மிகுவேக சுழற்சி கொண்ட துடிப்பான மற்றும் வேகமாகச் சுழலும் விண்மீன் அமைப்புகளின் எஞ்சிய பாகங்கள் உள்ளன.
- ❖ ஒரு இரும விண்மீன் அமைப்பில் உள்ள ஒரு நட்சத்திரம் அதன் இணை விண்மீன் அமைப்பினை விட வேகமாகப் பரிணமிப்பதால் வலைப் பின்னல் அமைப்புகள் உருவாகின்றன.
- ❖ இரும விண்மீன் அமைப்பு என்பது அவை ஒன்றுக்கொன்று ஈர்ப்பு விசையால் பிணைக்கப் பட்டுள்ள நிலையில் இரண்டு நட்சத்திரங்கள் ஒரு பொதுவான மையத்தைச் சுற்றி வருகின்ற அமைப்பாகும்.
- ❖ மிகுவேக சுழற்சி விண்மீன் அமைப்புகள் வேகமாக சுழலும் நியூட்ரான் நட்சத்திரங்கள் ஆகும்.
- ❖ கிட்டத்தட்ட முற்றிலும் நியூட்ரான்களால் ஆனவை என்பதோடு அவை 20 கி.மீ. (12 மைல்கள்) அல்லது அதற்கும் குறைவான விட்டம் கொண்டவை என்பதால் அவை மிகவும் அடர்த்திமிகு நட்சத்திரங்கள் ஆகும்.
- ❖ அவை விண்வெளி முழுவதும் செறிவுமிக்க கதிர்வீச்சினை வெளியிடுகின்றன.



## கால்நடைகளில் நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகளின் பயன்பாடு குறித்த ஆய்வு

- இந்த ஆய்வறிக்கையானது PLoS குளோபல் பப்ளிக் ஹெல்த் என்ற இதழில் வெளியிடப் பட்டுள்ளது.
- மனிதர்கள் மற்றும் விலங்குகளில் ஏற்படும் நோய்த் தொற்றுகளை எதிர்த்துப் போராடுவதற்கான நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகளை அறிவியலாளர்கள் உருவாக்கி உள்ளனர்.
- ஆனால் 2019 ஆம் ஆண்டில் பூமியில் விற்கப்படும் அனைத்து நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகளில் 73% மருந்துகள் உணவுக்காக என்று வளர்க்கப்படும் விலங்குகளில் பயன்படுத்தப் பட்டது.
- இந்தியாவில் நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகளின் பயன்பாட்டு (AMU) அளவானது 2020 ஆம் ஆண்டிலேயே உலகச் சராசரியை விட 43% அதிகமாக இருக்கும் என மதிப்பிடப் பட்டது.
- இது 2030 ஆம் ஆண்டில் சராசரியை விட 40% அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- இந்தியாவிற்குள்ளேயே, கிழக்கு மற்றும் தென்னிந்தியாவில் அதிகப் பயன்பாடுகள் உள்ள பகுதிகளை ஆராய்ச்சியாளர்கள் அடையாளம் கண்டுள்ளனர்.
- இந்தியாவில் உள்ள பல பண்ணை உரிமையாளர்கள் அறுவடை நேரத்தை ஒரு வாரம் என்ற அளவிற்கு குறைக்கச் செய்வதற்காக சிப்ரோஃப்ளோக்சசின் மற்றும் என்ரோஃப்ளோக்சசின் எனப்படும் இரண்டாம் தலைமுறை தொழில்நுட்பம் சார்ந்த நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகளைப் பயன்படுத்துகின்றனர்.
- இந்தியாவின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகமானது, நுண்ணுயிர் எதிர்ப்பைக் கட்டுப்படுத்துவதற்காக வேண்டி 2017 ஆம் ஆண்டில் ஒரு 'தேசிய செயல் திட்டத்தை' அறிமுகப்படுத்தியது.
- இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, உணவு உற்பத்திக்காக பயன்படுத்தப் படும் அனைத்து விலங்குகளிலும் கொலிஸ்டின் என்ற ஒரு மருந்தினைப் பயன்படுத்துவதை அரசாங்கம் தடை செய்தது.



## பாய்டு நிறுவனத்தின் உரையாடு மென்பொருள் 'எர்னி'

- 'எர்னி பாட்' எனப்படும் தனது சொந்த ChatGPT-பாணியிலான செயற்கை நுண்ணறிவு உரையாடல் மென்பொருளின் உள்ளியக்கச் சோதனையை நிறைவு செய்ய உள்ளதாக சீனத் தொழில்நுட்ப நிறுவனமான பாய்டு தெரிவித்துள்ளது.
- எர்னி என்பது "தகவல் ஒருங்கிணைப்பு மூலம் மேம்படுத்தப்பட்ட உரை" என்பதன் ஒரு சுருக்கமாகும்.
- இது 2019 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு பெரிய செயற்கை நுண்ணறிவு மூலம் இயங்கும் மொழி மாதிரியாகும்.

## கூகுள் நிறுவனத்தின் உரையாடு மென்பொருள் ‘பார்டு’

- கூகுள் நிறுவனமானது ‘பார்டு’ எனப்படும் செயற்கை நுண்ணறிவு மூலம் இயங்கும் தனது புதிய உரையாடல் மென்பொருளினை அறிமுகப்படுத்த உள்ளது.
- இது மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் ஆதரவு பெற்ற OpenAI நிறுவனத்தின் ChatGPT என்ற உரையாடல் மென்பொருளுக்கு எதிராக சவால் விடுவதை நோக்கமாகக் கொண்டு அறிமுகப் படுத்தப் பட உள்ளது.
- இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கூகுள் நிறுவனமானது, ‘நமது நாட்டின் மொழி மாதிரி (LaMDA)’ மூலம் இயங்கும் உரையாடல் பயன்பாடுகளுக்காக அடுத்தத் தலைமுறைத் தொழில்நுட்பம் சார்ந்த மொழி மற்றும் உரையாடல் திறன் கொண்ட ஒரு செயலியை அறிமுகப் படுத்தியது.




## SSLV D2


- இஸ்ரோவின் சிறிய செயற்கைக்கோள் ஏவுதல் வாகனம் (SSLV) ஆனது, EOS-07 எனப்படும் புவிக் கண்காணிப்புச் செயற்கைக்கோள் உள்ளிட்ட மூன்று செயற்கைக் கோள்களை அவற்றிற்காக நிர்ணயிக்கப்பட்ட சுற்றுப் பாதையில் நிலை நிறுத்தியது.
- 156.3 கிலோ எடையுள்ள EOS-07 செயற்கைக் கோளின் பணி ஆயுட்காலம் ஓராண்டு ஆகும்.
- SSLV ஆனது சிறிய-குறுகிய அல்லது நுண்ணிய செயற்கைக் கோள்களை (10 முதல் 500 கிலோ எடை கொண்ட) 500 கி.மீ. கோள்களின் சுற்றுப் பாதையில் செலுத்தும் திறன் கொண்டது.

- SSLV என்பது அனைத்துத் திடநிலை உந்துவிசை நிலைகளையும் கொண்ட மூன்று எரி பொருள் நிலையிலான ஏவுதல் வாகனமாகும்.
- SSLV வாகனத்தின் வடிவமைப்புக் காரணிகள் குறைந்த விலை, குறைவான புவிக்குத் திரும்பும் நேரம், பல செயற்கைக் கோள்களை ஏந்திச் செல்லக் கூடிய வகையிலான மற்றும் குறைந்தபட்ச ஏவுதல் உள்கட்டமைப்புத் தேவைகள் ஆகியவற்றினைக் கொண்டுள்ளது.




## செயற்கைக்கோள் வழியான இருவழிச் செய்தியிடல் சேவை

- குவால்காம் டெக்னலாஜிஸ் என்ற நிறுவனமானது உயர்மதிப்பு திறன்பேசிகளுக்கான உலகின் முதல் செயற்கைக் கோள் வழியான இருவழிச் செய்தியிடல் சேவையினை அறிமுகப் படுத்தியுள்ளது.




- இது ஸ்னாப்டிராகன் செயற்கைக் கோள் என்று அழைக்கப்படுகிறது.
- இது ஸ்னாப்டிராகன் 5G சேவை இணங்கி RF அமைப்பு மூலம் இயக்கப்படுகிறது.

- ஸ்னாப்டிராகன் செயற்கைக்கோள் சேவையானது வரைப்பட்டிகைகள், வாகனங்கள், மடிக் கணினிகள் மற்றும் இணைய உலகம் (IoT) போன்ற பிற சாதனங்களுக்கான இணைப்பிற்காகவும் விரிவாக்கப்படலாம்.
- நிலப்பரப்பு சாராத 5G வலையமைப்புக்களுக்கான (NTN) சேவையை வழங்குவதற்காக இந்த செயற்கைக் கோள் அமைப்பானது உருவாக்கப்பட்டது.

## நடுநிலை அடர்த்தி கொண்ட வடிவமற்ற பனிக்கட்டி


- நீரின் மற்ற வடிவங்களை விட பெருமளவில் திரவ நீரை ஒத்திருக்கும் புதிய பனி வடிவத்தை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- பனிக்கட்டியின் இந்தப் புதிய வடிவம் ஆனது உருவமற்றதாகும்.
- சாதாரண படிக வடிவிலான பனியில், மூலக்கூறுகள் ஒரு முறையான வடிவத்தில் தானே சீரமைத்துக் கொள்கின்றன.
- ஆனால் உருவமற்ற பனியில், மூலக்கூறுகள் ஒரு திரவத்தை ஒத்தவாறு ஒரு ஒழுங்கற்ற வடிவத்தில் உள்ளன.
- இதற்கு பனிக்கட்டி என்று பெயரிடப்பட்டாலும், அதன் மூலக்கூறு அமைப்பு தண்ணீரின் சீரமைப்பினை ஒத்துள்ளது.
- உருவமற்றது (அமார்ஃபஸ்) என்றால் தெளிவான வடிவம் அற்றது என்று பொருளாகும்.
- இது நீரோ அல்லது பனியோ அல்ல, எனவே இது வடிவமற்ற பனிக்கட்டி எனப்படுகிறது.
- வெப்பமடைந்து மீண்டும் படிகமாக்கப் படும் போது, இந்த வடிவமற்ற பனிக் கட்டி அசாதாரண அளவிலான வெப்பத்தை வெளியிடுகிறது.
- அப்போது வெளியிடப்படும் வெப்ப ஆற்றல் ஆனது மிக அதிகமாக இருப்பதால் அது பனி நிலநடுக்கங்களை ஏற்படுத்தக்கூடும்.
- சனி மற்றும் வியாழன் போன்ற கோள்களில் பனி நிலநடுக்கம் மிகவும் சாதாரணமாக ஏற்படுகிறது.



## குவாவார் குறுங்கோளினைச் சுற்றி காணப்படும் வளையம்

- சனிக் கோளினைச் சுற்றியுள்ள வளையம் போன்ற குவாவார் என்ற குறுங் கோளினைச் சுற்றி வளையம் இருப்பதை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- குவாவார் புளூட்டோவின் விட்டத்தில் பாதியளவு மற்றும் பூமியின் துணைக்கோளின் விட்டத்தில் மூன்றில் ஒரு பங்கினை விட சற்று குறைவாக உள்ளது.

- இது புளூட்டோ அமைந்துள்ள மற்றும் நெப்டியூனுக்கு அப்பால் காணப்படும் உறைந்த விண்வெளிக் குப்பைகள் நிறைந்த பகுதியான கைபர் பட்டைப் பகுதியில் சூரியனைச் சுற்றி வருகிறது.
- ஆனால் குவாவாரைச் சுற்றியுள்ள வளையமானது, அத்தகைய வளையங்கள் எங்கு உருவாகலாம் என்பதினைப் பற்றிய தற்போதையப் புரிதலையும் விஞ்சுவதோடு, இது எங்கு அமைந்திருக்கலாம் என்று கணிக்கப்பட்ட தற்போதைய இடத்தினை விட வெகு தொலைவில் அமைந்துள்ளது.
- 2002 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்ட குவாவார் தற்போது ஒரு சிறிய கிரகமாக வரையறுக்கப் பட்டுள்ளதோடு, இது ஒரு குறுங்கோள் எனவும் குறிப்பிடப் பட்டுள்ளது.
- 2013 ஆம் ஆண்டில், சனி மற்றும் யுரேனஸுக்கு இடையில் உள்ள பகுதியில் சூரியனைச் சுற்றி வலம் வரும் சென்டார் என்று அழைக்கப்படுகின்ற சாரிக்லோவைச் சுற்றி இரண்டு வளையங்கள் இருப்பதனை வானியலாளர்கள் கண்டறிந்தனர்.
- 2017 ஆம் ஆண்டில், கைபர் பட்டைப் பகுதியில் காணப்படும் ஹௌமியா எனப்படும் மற்றொரு கோளினைச் சுற்றி ஒரு வளையம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்ட நிலையில், இது ஒரு நட்சத்திர மண்டல மறைவின் போது மங்கலானது.



## கழிவிலிருந்து ஹைட்ரஜன் உற்பத்தி செய்யும் ஆலை



- இந்தியாவில் முதல்முறையாக திடக்கழிவில் இருந்து ஹைட்ரன் உற்பத்தி செய்யச் செய்வதற்கான ஆலை புனே நகரில் அமைக்கப்பட உள்ளது.
- கிரீன் பில்லியன் லிமிடெட் என்ற தனியார் நிறுவனத்தினால் இந்த ஆலை கட்டமைக்கப் பட உள்ளது.
- இது 350 டன் திடக்கழிவுகளில் இருந்து தினமும் 10 டன் அளவு ஹைட்ரஜனை உற்பத்தி செய்யும்.
- கழிவுகளில் இருந்து பெறப்படும் எரிபொருளானது, பிளாஸ்மா வளிமமாக்கல் என்ற தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஹைட்ரஜனை உருவாக்கச் செய்வதற்காகப் பயன் படுத்தப் படும்.

## முதலாவது மீக்காந்தங்களின் சோதனை


- ஐக்கியப் பேரரசின் டோகாமாக் எனர்ஜி நிறுவனமானது, உலகில் முதல் முறையாக புதிய தலைமுறைத் தொழில்நுட்பம் சார்ந்த உயர் வெப்பநிலை மீக்கடத்தி திறன் கொண்ட (HTS) காந்தங்களின் முதல் தொகுதியினை உருவாக்கியுள்ளது.
- இது ஒன்றிணைக்கப்பட்டு, அணுக்கரு பிணைப்பு சார்ந்த மின் உற்பத்தி தொடர்பான செயல்பாடுகளில் சோதிக்கப் படும்.
- டோகாமாக் நிறுவனத்தின் புதிய Demo4 மையத்தில் 44 தனிப்பட்ட காந்தச் சுருள்கள் அமைந்திருக்கும்.
- Demo4 ஆனது 18 பூமியின் காந்தப்புலத்தை விட கிட்டத்தட்ட ஒரு மில்லியன் மடங்கு வலிமையானதாக, டெஸ்லாவுக்கு மேலான திறன் கொண்ட காந்தப்புல வலிமையைக் கொண்டிருக்கும்.



## அதிகத் துணைக் கோள்களை கொண்டுள்ள கிரகம்

- வியாழன் கோளானது, அதைச் சுற்றி 12 புதிய துணைக் கோள்கள் இருப்பது கண்டு பிடிக்கப் பட்டதனையடுத்து, அதிகத் துணைக்கோள்களைக் கொண்ட ஒரு கிரகமாக மாறியது.
- மொத்தத்தில் 92 துணைக் கோள்களை கொண்ட இந்தக் கிரகம் சனிக்கோள் கொண்டு இருக்கும் துணைக் கோள்களின் எண்ணிக்கையினை மிஞ்சியுள்ளது.

- சனிக் கோளானது, 83 உறுதிப்படுத்தப் பட்ட துணைக் கோள்களுடன் இரண்டாவது இடத்தில் உள்ளது.
- அவை 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டில் ஹவாய் மற்றும் சிலி ஆகிய இடங்களில் உள்ள தொலைநோக்கிகளைப் பயன்படுத்தி கண்டுபிடிக்கப்பட்டதோடு, அவற்றின் சுற்றுப் பாதைகள் ஆனது அதற்குப் பிந்தைய ஆய்வுகளின் அடிப்படையிலும் உறுதிப் படுத்தப் பட்டது.
- வியாழன் மற்றும் சனி ஆகிய கோள்களின் துணைக் கோள்கள் சிறிய உருவ அளவு கொண்டவையாகும்.
- யுரேனஸ் 27 துணைக் கோள்களையும், நெப்டியூன் 14 துணைக் கோள்களையும், செவ்வாய் இரண்டு மற்றும் பூமி ஒரு துணைக் கோளினையும் கொண்டுள்ளன.
- வெள்ளி மற்றும் புதன் ஆகிய கோள்களுக்குத் துணைக் கோள்கள் இல்லை.




## தியோதர் விண்கல்




- குஜராத்தில் உள்ள இரண்டு கிராமங்களில் விழுந்த விண்கற்கள் ஆனது, அரிதான ஆபிரைட் வகை விண்கற்கள் என ஆராய்ச்சியாளர்கள் உறுதி செய்துள்ளனர்.

- இரண்டு கிராமங்களில் விழுந்த விண்கல் துண்டுகளுக்கு தியோதர் விண்கல் என்று பெயரிடப் பட்டுள்ளது.
- ஆபிரைட் விண்கல் என்பது ஆக்ஸிஜன் இல்லாத நிலையில் உருவாகிய, பூமியில் காணப் படாத சில தனித்துவமான தாதுக்களைக் கொண்டுள்ள ஒரு கரடுமுரடான எரிமலைப் பாறை ஆகும்.
- இந்தியப் பகுதி மீது நூற்றுக்கணக்கான விண்கற்கள் மோதியுள்ளன, என்றாலும் ஆபிரைட் விண்கல் இந்தியப் பகுதியில் விழுவது இது இரண்டாவது முறையாகும்.
- முதல் முறையாக 1852 ஆம் ஆண்டு டிசம்பர் 02 ஆம் தேதியன்று உத்தரப் பிரதேசத்தின் பஸ்திப் என்ற பகுதியில் ஆபிரைட் விண்கல் விழுந்தது.
- 1836 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை உலகளவில் ஆப்பிரிக்காவில் மூன்று பகுதிகள் மற்றும் அமெரிக்காவில் ஆறு பகுதிகள் உட்பட, குறைந்தது 12 இடங்களில் ஆபிரைட் விண்கற்கள் விழுந்துள்ளன.
- விண் வீழ்கற்கள் என்பது விண்வெளியில் உள்ள சில திடப்பொருளின் உடைந்த துண்டுகள், ஒரு கிரகம் அல்லது துணைக்கோளின் மீது மோதி, அவற்றின் மேற்பரப்பை அடையும் பாறைத் துண்டுகள் ஆகும்.
- அவை மேற்பரப்பை அடைந்த பிறகு, அவை விண்கற்கள் என அழைக்கப் படுகின்றன.

## புதிய பகுதியளவுப் படிகம்

- அமெரிக்காவின் வடக்கு மத்திய நெப்ராஸ்காவில் உள்ள மணல்குன்றுகளில் 12 மடிப்பு சமச்சீரமைப்பு கொண்ட புதிய வகை பகுதியளவுப் படிகத்தினை அறிவியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
- இந்தப் பகுதியளவுப் படிகமானது, மின்னல் தாக்குதலால் அல்லது ஒரு குன்றுகளுக்கு அடியில் அமைக்கப்பட்டுள்ள மின் கம்பியால் உருவாக்கப்பட்ட தற்செயலான மின்சார ஓட்டத்தின் போது உருவாக்கப்பட்டது.
- பகுதியளவுப் படிகம் என்பது அடிப்படையில் ஒரு படிகம் போன்ற பொருளாகும்.
- ஒரு படிகத்தில், அணுக்கள் தொடர் மீள்வு வடிவத்தில் அமைக்கப்பட்டிருக்கும்.
- ஒரு பகுதியளவு படிகத்தில், தொடர் மீள்வு சாராத வடிவத்தில் அணுக்கள் அமைக்கப் பட்டிருக்கும்.



## மார்பர்க் வைரஸ் நோய் பெருந்தொற்று

- ❖ உலக சுகாதார அமைப்பு (WHO) ஆனது எக்குவடோரியல் கினியாவில் முதன்முதலில் மார்பர்க் நோய் பெருந்தொற்று ஏற்பட்டுள்ளதனை உறுதிப்படுத்தியுள்ளது.
- ❖ மார்பர்க் நோயானது மிக அதிக அளவில் தொற்றக் கூடியதாகும்.
- ❖ மார்பர்க் வைரஸ் மற்றும் எபோலா வைரஸ் ஆகிய இரண்டும் ஃபிலோவிரிடே என்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவையாகும், என்றாலும் அவை வெவ்வேறு வைரஸ்களால் ஏற்படுகின்றன.
- ❖ இந்த வைரஸ் ஆனது, மனிதர்களில் 88% வரையிலான அதிக இறப்பு விகிதத்துடன் கூடிய தீநுண்மக் குருதிப் போக்கு காய்ச்சல் ஏற்பட வழிவகுக்கிறது.
- ❖ இந்த நோயானது, 1967 ஆம் ஆண்டில் ஜெர்மனியின் மார்பர்க் மற்றும் பிராங்பர்ட் ஆகிய இடங்களில் ஒரே நேரத்தில் ஏற்பட்டதையடுத்து இந்த நோய்த் தொற்று குறித்து முதன்முதலில் கண்டறியப்பட்டது.





## கட்புலனாகா அண்டம்

- ❖ இத்தாலிய ஆராய்ச்சியாளர்கள், ALMA என்ற தொலைநோக்கித் தொகுதியைப் பயன் படுத்தி கருப்பு அண்டம் அல்லது கட்புலனாகா என்ற அண்டத்தினைக் கண்டுபிடித்து உள்ளனர்.
- ❖ தூசிக்கள் மற்றும் வாயுக்களால் நிரம்பியுள்ள இந்த இளம் மற்றும் நட்சத்திரத்தை உருவாக்கும் அண்டமானது, பெரு வெடிப்பு ஏற்பட்ட 2 பில்லியன் ஆண்டுகளுக்குப் பிறகு

உருவானது.

- இந்த அண்டத்தினால் வெளியிடப்படும் ஒளியினைப் பூமியிலிருந்துப் பார்க்க முடியாது என்பதால் இது கட்புலனாகா அண்டம் என்று அழைக்கப்படுகிறது.
- இருப்பினும், இந்த அண்டம் இருப்பது குறித்து ஈர்ப்பு வில்லை என்ற ஒரு நுட்பத்தைப் பயன்படுத்திக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.
- ALMA என்பது அட்டகாமா மாபெரும் மில்லிமீட்டர் அரே என்பதன் சுருக்கமாகும்.



## மோப்ப சக்தி கொண்ட எந்திரங்கள்

- இஸ்ரேலைச் சேர்ந்த சில அறிவியலாளர்கள் உயிரியல் உணர்விகள் பொருத்தப்பட்ட மோப்ப சக்தி கொண்ட எந்திரங்களை உருவாக்கியுள்ளனர்.
- இந்த எந்திரங்கள் ஒரு வெட்டுக்கிளியின் உணர் கொம்புகளைப் பயன்படுத்தி அதன் நோயைக் கண்டறியவும் பாதுகாப்புச் சோதனைகளை மேம்படுத்தவும் உதவுகிறது.
- வெட்டுக்கிளிகள் அவற்றின் உணர் கொம்புகளைக் கொண்டு தனது வாசனையினை உணரச் செய்கின்றன.
- இந்த எந்திரமானது அதைச் சுற்றியுள்ள மிகச்சிறிய துகள் அல்லது ஒரு மிகச்சிறிய உயிரினத்தைக் கூட கண்டறியக் கூடியது.
- போதைப்பொருள் மற்றும் வெடிமருந்துகளைக் கண்டறியவும் இதனைப் பயன்படுத்த முடியும்.



## ஹைட்ரஜனில் இயங்கும் முதலாவது கனரக சரக்குந்து வாகனம்

- இந்தியாவின் முதல் ஹைட்ரஜன் உள் எரிதிறன் இயந்திரம் (H2-ICE) மூலம் இயங்கும் கனரகச் சரக்குந்து வாகனமானது சமீபத்தில் அறிமுகப் படுத்தப்பட்டது.
- அசோக் லேலாண்டு நிறுவனத்தின் புதிய H2-ICE கனரகச் சரக்குந்து வாகன ரகங்கள் ஆனது ஹைட்ரஜன் எரிபொருளால் இயக்கப் படுவதோடு, இது வழக்கமான டீசல் எரி பொருளில் இயங்கும் எரிப்பு இயந்திரத்தை அடிப்படையாகக் கொண்டதாகும்.
- இது அசோக் லேலாண்டு நிறுவனத்துடன் இணைந்து ரிலையன்ஸ் நிறுவனத்தால் உருவாக்கப் பட்டது.
- ஒப்பீட்டளவில் குறைந்த செலவில் தூய்மையான எரிசக்தி மூலங்களுக்கு விரைவாக மாறுவதற்கு இது உதவும்.
- H2-ICE இயந்திரமானது, வளிமண்டல ஹைட்ரஜனைப் பயன்படுத்தினால் மட்டுமே நைட்ரஜன் ஆக்சைடுகளை உற்பத்தி செய்கிறது.
- இந்திய அரசானது, நைட்ரஜன் ஆக்சைடுகளை தனது மாசுபடுத்திகள் பட்டியலில் சேர்த்துள்ளது.
- H2-ICE இயந்திரத்தில் சல்பர் ஆக்சைடுகள், கார்பன் மோனாக்சைடு, நுண்துகள்கள் அல்லது ஹைட்ரோ கார்பன்கள் ஆகியவற்றின் உமிழ்வுகள் இல்லை.




## இந்தியாவின் முதல் கலப்பின ஏவுகலம்

- இந்தியாவின் முதல் கலப்பின ஆய்வு ஏவுகலமானது, செங்கல்பட்டில் உள்ள பட்டிபுலம் கிராமத்தில் இருந்து விண்ணில் ஏவப்பட்டது.
- மார்ட்டின் அறக்கட்டளை என்ற அமைப்பானது டாக்டர் A.P.J. அப்துல் கலாம் சர்வதேச அறக்கட்டளை மற்றும் விண்வெளி மண்டலம் இந்தியா ஆகியவற்றுடன் இணைந்து, 2023 ஆம் ஆண்டு டாக்டர் A.P.J. அப்துல் கலாம் செயற்கைக் கோள் ஏவுகல திட்டத்தினை அறிமுகப் படுத்தியது.
- வானிலை, வளிமண்டல நிலவரங்கள் மற்றும் கதிர்வீச்சு ஆகியவை குறித்த ஆராய்ச்சிக்கு இந்த ஏவுகலத்தினைப் பயன்படுத்தலாம்.



## லெக்சி – ChatGPT

- வெலோசிட்டி எனப்படும் நிதிசார் தொழில்நுட்ப நிறுவனமானது "லெக்சி" எனப்படும் இந்தியாவின் முதல் உரையாடு மென்பொருளினை (ChatGPT) அறிமுகப்படுத்தியுள்ளது.
- வணிக நுண்ணறிவுகளை எளிமையான முறையில் வழங்கச் செய்வதன் மூலம் இந்த உரையாடு மென்பொருள் இணைய வர்த்தக நிறுவனர்களுக்கு உதவுகிறது.
- ChatGPT ஆனது 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் பொதுமக்கள் மத்தியில் அறிமுகப் படுத்தப் பட்டது.





## நிலவில் உள்ள பசால்ட் பாறைகளின் தோற்றம்

- வெற்றுக் கண்களுக்குப் புலப்படக் கூடிய சந்திரனின் இருள் நிறைந்தப் பகுதிகள், 'மேர்' (நிலவின் இருள் நிறைந்த பகுதி) என்று அழைக்கப் படுகின்றன.
- அவை சூரியக் குடும்பத்தினுடைய முற்கால மாற்றங்களின் எஞ்சியப் பகுதிகள் ஆகும்.
- பூமியில் ஏற்பட்ட இந்த மோசமான நிகழ்வுகள் பற்றிய பதிவுகள் எதுவும் இல்லை.
- பூமியில் இருந்து பார்க்கும் போது புலப்படக்கூடிய, நிலவில் உள்ள பெரிய அளவிலான மேர் எனப்படும் பகுதிகள் பெரும்பாலும் எரிமலை பாறைகளால் ஆன பசால்ட் பாறைகளைக் கொண்டுள்ளது.

- இந்தப் பகுதிகள் ஆனது சந்திரன் எவ்வாறு குளிர்ச்சியடைந்து மாற்றம் பெற்றது என்பதற்கான சான்றுகளைக் கொண்டுள்ளன.
- தற்போது பாறைகளாக மாறியுள்ளவற்றினை, உருக்கிப் படிகமாக்குவதற்கு மூல ஆதாரமாக இருந்த வெப்ப ஆற்றல் எது என்பது பற்றியத் தகவல்களையும் அவை வழங்குகின்றன.
- அப்பல்லோ, லூனா மற்றும் சாங்'இ-5 ஆகிய ஆய்வுக் கலங்கள், நிலவின் இருண்டப் பகுதியிலுள்ள பசால்ட் பாறைகளின் மாபெரும் மாதிரித் தொகுப்பினைச் சேகரித்துப் பூமிக்கு கொண்டு வந்துள்ளன.
- அப்பல்லோ ஆய்வுக் கலம் கொண்டு வந்த நிலவின் இருண்டப் பகுதியிலுள்ள பசால்ட் பாறைகளின் மாதிரிகள் 3.8–3.3 Ga காலத்திற்கு முந்தையவை (Ga என்பது ஒரு பில்லியன் ஆண்டுகள்) ஆகும்.
- நிலவில் ஏற்பட்ட குறைந்த அழுத்தம் காரணமாக அங்கிருந்த மூலப் பொருட்கள் உருகியதன் விளைவாக இந்த பசால்ட் பாறைகள் உருவாகியிருக்க வேண்டும் என்று மதிப்பீடுகள் காட்டுவதாக இஸ்ரோ கூறியது.
- மேலும், இந்த பசால்ட் பாறைகள் ஆனது குளிர்ந்த, ஆழமற்ற மற்றும் உட்கூறுகள் ஆகியவற்றின் வேறுபட்டுக் காணப்பட்ட சந்திரனின் உட்புறப் பகுதியிலிருந்து தோன்றியது என்பதனையும் அவை வெளிப்படுத்துகின்றன.
- சந்திரனின் உட்புறப் பகுதியானது 4.3 - 3.9 Ga காலத்திலிலேயேப் பசால்ட் பாறைக் குழம்பு வடிவில் உருகியுள்ளது.
- பொட்டாசியம், அருமண் தனிமங்கள் மற்றும் பாஸ்பரஸ் நிறைந்த ப்ரோசெல்லரம் க்ரீப் டெர்ரேன் (PKT) எனப்படும் சந்திரனின் ஒரு பகுதியானது பின்னர் 3.8-3.0 Ga காலத்தில் உருவானது.

FIG.2





## சந்திரன், வெள்ளி வியாழன் கோள்கள் ஒரே நேரத்தில் காட்சியளிப்பு

- சந்திரன், வெள்ளி மற்றும் வியாழன் ஆகியவை வானத்தில் ஒரே நேரத்தில் ஒன்றாக இணைந்து காணப்பட்டன.
- மூன்று வானியல் அமைப்புகளும் ஒன்றுக்கொன்று நெருங்கி வந்து, இரவு வானில் முக்கோணம் போன்ற வடிவத்தை உருவாக்கின.

- இருப்பினும், பூமி தனது அச்சில் சுழலும் போது இந்த இணைவானது குறுகிய காலமே காணப்பட்டது.
- தற்போது வெள்ளிக் கோளானது, சூரியன் மற்றும் சந்திரனுக்கு அடுத்தபடியாக வான வெளியில் காணப்படும் 3வது பிரகாசமான இயற்கை அமைப்பாகும்.
- இது மிகவும் திகைப்பூட்டும் வகையில் பிரகாசமாக இருப்பதால் சில சமயங்களில் பகலில் கூட இதனைப் பார்க்க முடியும்.



## ஹைப்பர்லூப் மூலமான சரக்குப் போக்குவரத்து



- கான்பூரில் உள்ள இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகமானது, நிலக்கரி மற்றும் கனிமங்களைக் கொண்டு செல்வதற்காக வேண்டி ஆற்றல் செயல்திறன் மிக்க மீ-வளி அழுத்தத்தில் வைக்கப்பட்ட காற்று கொண்ட ஒரு குழாய் அமைப்பினை உருவாக்கி உள்ளது.
- ஹைப்பர்லூப் மூலமான சரக்குப் போக்குவரத்துச் சேவையானது பொருள் இழப்பு, விநியோக நேரத்தில் உள்ள நிச்சயமற்றத் தன்மை மற்றும் காற்று மாசுபாடு போன்ற சவால்களை எதிர்கொள்ள உதவும்.
- இந்த அமைப்பானது, நிலக்கரி அல்லது நீர்மங்களை ஓர் இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு மீ-வளி அழுத்தக் காற்றினை அதன் ஆற்றலாகக் கொண்டு எடுத்துச் செல்லும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

- இந்த எந்திரமானது, ஒரு மணி நேரத்திற்குச் சுமார் 120 கி.மீ. வேகத்தில் பயணிக்கக் கூடியதோடு, முழுவதும் சரக்கு ஏற்றப்பட்ட ஒரு தொகுதியை நிர்ணயிக்கப்பட்ட இடங்களுக்குத் தொடர்ந்து கொண்டு செல்லக் கூடியது.
- இந்த அமைப்பானது துல்லியமான, நம்பகமான மற்றும் தொடர்ச்சியான வாகனம் / எந்திர இடங்காட்டு அமைப்பையும் கொண்டுள்ளது.

## LORA உந்துவிசை ஏவுகணை

- பாரத் எலெக்ட்ரானிக்ஸ் லிமிடெட் (BEL) நிறுவனமானது, தனது LORA என்ற ஆயுத அமைப்பினை உள்நாட்டில் உற்பத்தி செய்து, இந்தியாவின் முப்படைகளுக்கு வழங்கச் செய்வதற்காக இஸ்ரேல் நாட்டின் ஏரோஸ்பேஸ் இண்டஸ்ட்ரீஸ் (IAI) நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- இந்த அதிநவீன உத்திசார் ஆயுத அமைப்பானது ஆயுதம் BEL நிறுவனத்தினால் தயாரிக்கப் பட உள்ளது.
- LORA என்பது கடல் பரப்பில் இருந்து நிலப்பரப்பிற்குப் பாயக் கூடிய மற்றும் நிலப் பரப்பிலிருந்து வேறொரு நிலப்பரப்பிற்குப் பாயக்கூடிய வகையில், நீண்ட தொலைவு வரை சென்று தாக்கும் உந்து விசை ஏவுகணை கொண்ட ஆயுத அமைப்பாகும்.
- இது ஒரு தனித்துவமான ஏவுகணை ஏவல் அமைப்பு, கட்டளை வழங்கீட்டு மூலமான கட்டுப்பாட்டு அமைப்பு மற்றும் நிலப்பரப்பு/கடல் சார் தொழில்நுட்ப ஆதரவு அமைப்பு ஆகும்.
- LORA அமைப்பு ஆனது பல தொலைவு வரம்புகளுக்கு 10 மீட்டர் சுற்றளவு பிழையளவு என்ற துல்லிய நிலையுடன் கூடிய உந்துவிசை தாக்குதல் திறன்களை வழங்குகிறது.



## மேகக்கணிமை முறையில் கட்டமைக்கப்பட்ட உலகின் முதல் செயல்விளக்க செயற்கைக் கோள்

- இஸ்ரோவின் SSLV-D2 எனப்படும் புதிய குறு ஏவுகலத்தில் பயணம் செய்த JANUS-1 என்ற செயற்கைக் கோளானது, அதன் சுற்றுப்பாதையை வெற்றிகரமாக அடைந்தது.
- இது முழுமையாக ஓர் இந்திய நிறுவனத்தின் ஆரம்பம் முதல் இறுதி வரையிலான மேகக் கணிமைத் தளத்தினைப் பயன்படுத்தி கருத்துருவாக்கப்பட்ட, வடிவமைக்கப் பட்ட மற்றும் தயாரிக்கப்பட்ட உலகின் முதல் செயற்கைக்கோள் ஆகும்.
- இது அன்டாரிஸ் மேகக்கணிமை மென்பொருள் தளம் மற்றும் SatOSsoftware ஆகியவற்றினைப் பயன்படுத்தி வடிவமைக்கப்பட்ட மற்றும் கட்டமைக்கப்பட்ட, மென் பொருள் மூலமாக வரையறுக்கப்பட்ட 6U தொழில்நுட்ப விளக்கச் செயற்கைக்கோள் ஆகும்.
- JANUS-1 ஆனது வெறும் 10 மாதங்களில், இதர செயற்கைக் கோள் ஆய்வுப் பணிகளை விட 75% குறைவான செலவில் வடிவமைக்கப் பட்டுக் கட்டமைக்கப்பட்டது.




## வெர்டிபிளேன் X3 ஆளில்லா விமானம்

- இதற்கான சோதனையின் போது, டெஹ்ரி கர்வாலில் உள்ள மாவட்ட மருத்துவ மனைக்கு 2 கிலோ என்ற அளவிற்கு எடையுள்ள காசநோய் எதிர்ப்பு மருந்துகளை கொண்டு செல்வதற்கு வெர்டிபிளேன் எக்ஸ்3 ஆளில்லா விமானங்கள் பயன்படுத்தப் பட்டது.
- AIIMS மருத்துவமனையில் உள்ள ஹெலிகாப்டர் ஏறுதளத்திற்கும் மருத்துவமனைக்கும் இடையேயான 40 கிலோமீட்டர் தொலைவினை இதன் மூலம் 30 நிமிடங்களில் கடக்க முடிந்தது.
- 2025 ஆம் ஆண்டிற்குள் காசநோயை ஒழிப்பது என நிர்ணயிக்கப்பட்ட இந்தியாவின் இலக்கிற்கு உதவிடும் வகையில் மருந்துகளை மட்டுமின்றி, சளி மாதிரிகளையும் ஆய்வகங்களுக்குக் கொண்டு செல்வதற்கான ஒரு பணியினையும் இந்தத் திட்டம் எளிதாக்கும்.
- மருத்துவப் பொருட்களை எடுத்துச் செல்ல ஆளில்லா விமானங்கள் பயன்படுத்தப் படுவது இது முதல் முறை அல்ல.
- பெங்களூரைச் சேர்ந்த புத்தொழில் நிறுவனம் ஒன்று அருணாச்சலப் பிரதேசத்தில் மருந்துகளை கொண்டு செல்வதற்காக ஆளில்லா விமானங்களைப் பயன்படுத்தியது.

- இது தவிர, ஆளில்லா விமானங்கள் மூலமான மருந்து வழங்கீட்டுச் சேவையினை பல்வேறு இணைய மருந்தக நிறுவனங்களும் அறிமுகப்படுத்தி உள்ளன.



## சூரிய சக்தியில் இயங்கும் ஆளில்லா விமானம்- SURAJ




- கருடா ஏரோஸ்பேஸ் என்ற நிறுவனமானது, ஏரோ இந்தியா 2023 நிகழ்ச்சியில், சூரிய சக்தியில் இயங்கும் SURAJ எனப்படும் ஆளில்லா உளவு, கண்காணிப்பு மற்றும் கள ஆய்வு (ISR) வான்வழி வாகனத்தினை (ஜே-கிளைடர்) அறிமுகப்படுத்தியது.
- இது குறிப்பாக கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காகவும், உயர் நிலைப் படை அதிகாரிகளுக்கு நிகழ்நேரத் தகவல்களை வழங்குவதற்காகவும், நிலப்பரப்பில் பணியில் ஈடுபட்டுள்ள வீரர்களைப் பாதுகாப்பதற்காகவும் வடிவமைக்கப்பட்ட உயரமான பகுதிகளில் இயங்கக் கூடிய ஒரு ஆளில்லா விமானம் ஆகும்.
- இந்த ஆளில்லா விமானமானது சுமார் 10 கிலோ எடையைச் சுமந்து செல்லும் திறன் கொண்டது.
- 12 மணி நேரம் பறக்கும் திறன் கொண்ட இது 3,000 அடி உயரத்தில் பறக்கக் கூடியது.

## 'Vayulink' தளம்

- மோசமான வானிலையை எதிர்கொள்வதில் விமானிகளுக்கு உதவும் வகையிலான புதுமை மிக்க ஒரு தீர்வை இந்திய விமானப் படையானது அறிமுகப்படுத்தியுள்ளது.

- இது அவர்களுக்கு நிலப்பரப்பில் அமைந்துள்ள கட்டுப்பாட்டு மையத்துடனான தடையில்லா தகவல்தொடர்புகளை வழங்குகிறது.
- 'Vayulink' என அழைக்கப்படுகின்ற இந்தத் தரவு இணைப்பு தொடர்பு வசதியானது இந்தியப் பிராந்தியக் கண்காணிப்புச் செயற்கைக்கோள் அமைப்பை (IRNSS) பயன்படுத்துகிறது.
- Vayulink என்பது ஒரு தற்காலிக தரவு இணைப்பு தகவல் தொடர்பு அமைப்பாகும்.
- இது ஒரு விமானத்தில் பொருத்தப்படும் போது, அருகிலுள்ள மற்ற விமானங்களின் இடம் குறித்தத் தகவல்களைப் பாதுகாப்பான ஊடகம் மூலமாக மறை குறியாக்கப் பட்ட தொடர்புத் தரவை வழங்குகிறது.

## LLaMA மாதிரி

- OpenAI நிறுவனத்தின் ChatGPT அறிமுகமாகி ஒரு புரட்சியை ஏற்படுத்தியதையடுத்து, கூகுள் நிறுவனம் BARD எனப்படும் அதன் உரையாடு மென்பொருளினை வெளியிட்ட நிலையில், மேலும் பல நிறுவனங்கள் இதைப் பின்பற்றின.
- இப்போது, மெட்டா நிறுவனமானது, அதன் மாபெரும் மொழி மாதிரி மெட்டா செயற்கை நுண்ணறிவு மென்பொருளினை (LLaMA) பொது மக்கள் மத்தியில் அறிமுகப் படுத்தியது.
- LLaMA என்பது செயற்கை நுண்ணறிவு சார்ந்த துறையில் ஆராய்ச்சியாளர்களுக்கு அவர்கள் மேற்கொள்ளும் பணிகளில் உதவுவதற்காக உருவாக்கப்பட்ட ஒரு அதிநவீன அடிப்படை மொழி மாதிரியாகும்.
- தவறான தகவல்களை வழங்கியதைத் தொடர்ந்து உடனடியாக நிறுத்தப்பட்ட Glactica மற்றும் Blender Bot 3 ஆகியவற்றிற்குப் பிறகு மெட்டா நிறுவனத்தினால் அறிமுகப் படுத்தப் படும் மூன்றாவது மொழி மாதிரி இதுவாகும்.
- மெட்டாவின் கூற்றுப்படி, LLaMA அடிப்படையில் ஒரு உரையாடு மென்பொருள் அல்ல; இது செயற்கை நுண்ணறிவு மொழி மாதிரிகள் தொடர்பான சிக்கல்களைத் தீர்க்கும் ஒரு ஆராய்ச்சிக் கருவியாகும்.



# சுற்றுச்சூழல் செய்திகள்

## தென்னாப்பிரிக்காவிலிருந்து அதிக எண்ணிக்கையிலான சிவிங்கிப் புலிகள் இடமாற்றம்


- அடுத்த 10 ஆண்டுகளில் தென்னாப்பிரிக்காவிலிருந்து 100 சிவிங்கிப் புலிகளை இடம் மாற்றுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) இந்தியா மற்றும் தென் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகள் கையெழுத்திட்டுள்ளன.
- இது தென்னாப்பிரிக்க நாடு வெளியிட்ட ஒரு அரசுச் செய்திக்குறிப்பு மூலம் உறுதி செய்யப் பட்டுள்ளது.
- தற்போதைய நிலவரப்படி, மத்தியப் பிரதேசத்தில் உள்ள குனோ தேசியப் பூங்காவிற்கு 12 சிவிங்கிப் புலிகளை இடமாற்றம் செய்வதற்கான ஒரு ஒப்பந்தம் ஆனது தென் ஆப்பிரிக்காவுடன் கையெழுத்திடப்பட்டுள்ளது.
- வரும் பிப்ரவரி 15 ஆம் தேதிக்குள் ஏழு ஆண் மற்றும் ஐந்து பெண் சிவிங்கிப் புலிகள் குனோ தேசியப் பூங்காவினை வந்தடையும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- அதிகளவிலான வேட்டையாடுதல் மற்றும் வாழ்விட இழப்பு காரணமாக இந்தியாவில் இருந்து முற்றிலும் அழிக்கப்பட்ட ஒரே பெரிய மாமிச உண்ணி சிவிங்கிப் புலிகள் மட்டுமேயாகும்.
- இந்தியாவில் இருந்த கடைசிச் சிறுத்தையானது, 1947 ஆம் ஆண்டில் இன்றைய சத்தீஸ்கரின் கோரியா மாவட்டத்தில் உயிரிழந்ததோடு, 1952 ஆம் ஆண்டில் இந்த இனம் அழிந்துவிட்டதாக அறிவிக்கப் பட்டது.




## ஆலிவ் ரிட்லி ஆமைகளின் திரளான உயிரிழப்பு

- பாதிக்கப்படக் கூடிய நிலையில் உள்ள நூற்றுக்கணக்கான ஆலிவ் ரிட்லி ஆமைகள் (லெபிடோசெலிஸ் ஒலிவேசியா) இறந்து கடற்கரையோரத்தில் கரை ஒதுங்கியுள்ளன.
- அவை முட்டையிடும் இடங்களான சக்கிநெட்டிப்பள்ளி, மாலிகிபுரம், மாமிடிகுடுரு மற்றும் அல்லாவரம் ஆகிய இடங்களில் ஆமைகள் பெருமளவில் இறந்து கரை ஒதுங்குகின்றன.
- ஆலிவ் ரிட்லி ஆமைகள் பசிபிக் ரிட்லி ஆமைகள் என்றும் அழைக்கப் படுகின்றன.

- IUCN என்ற அமைப்பானது இந்த ஆமைகளை "பாதிக்கப்படக்கூடிய நிலையில் உள்ள இனங்கள்" என்று வகைப்படுத்துகிறது.
- அவை இந்தியப் பெருங்கடல், அட்லாண்டிக் மற்றும் பசிபிக் பெருங்கடல்களில் காணப் படுகின்றன.
- இந்தியாவில் காணப்படும் அவற்றின் முட்டையிடும் இடங்கள் ஒடிசாவில் உள்ள காஹிர்மாதா கடற்கரை ஆகும்.
- உலகில் உள்ள மிகப்பெரிய ஆலிவ் ரிட்லி ஆமைகள் முட்டையிடும் இடங்களில் இந்தக் கடற்கரையும் ஒன்றாகும்.




## சோலிகா ஈகரிநாட்டா

- அறிவியலாளர்கள் சமூகமானது, கர்நாடகாவின் பிலிகிரி ரங்கன் மலைகளில் வாழும் பழங்குடிச் சமூகமான சோலிகாவின் பெயரினை ஒரு புதிய குளவி இனத்திற்கு இட்டு உள்ளது.
- இது காடுகளையும் பல்லுயிர்களையும் பாதுகாக்கச் செய்வதற்காக வேண்டி அவர்கள் ஆற்றியப் பங்களிப்புகளுக்கான அங்கீகாரம் ஆகும்.



- அதே இனத்தின் கூடுதல் மாதிரிகள் நாகாலாந்தின் இரண்டாம் நிலை ஈரநிலக் காடுகளில் இருந்து சேகரிக்கப்பட்டன.

- இந்த புதிய குளவி இனமானது டார்வின் குளவிக் குடும்பமான இக்னியூமோனிடேயின் துணைக் குடும்பமான மெட்டோபினியைச் சேர்ந்தது.
- மெட்டோபினி என்ற துணைக் குடும்பத்தில் உள்ள 27 பேரினங்களில் 862 இனங்கள் உள்ளன.
- இது இந்தியாவில் கண்டறியப் பட்ட இந்த துணைக் குடும்பத்தினைச் சேர்ந்த இரண்டாவது பேரினம் ஆகும் என்பதோடு இது தென்னிந்தியாவில் கண்டறியப்பட்ட முதல் இனமாகும்.

## வரித்தலை வாத்து

- 2010 ஆம் ஆண்டுக்குப் பிறகு, சென்னை பள்ளிக்கரணையில் வரித்தலை வாத்து தென் படுவது இதுவே முதல்முறையாகும்.
- இது உலகிலேயே மிக அதிக உயரத்தில் பறக்கக் கூடிய பறவைகளில் ஒன்றாக கருதப் படுகிறது.
- மத்திய ஆசியாவை பூர்வீகமாகக் கொண்ட இந்தப் பறவையானது தெற்காசியாவில், அசாம் முதல் தமிழ்நாடு வரையிலான பகுதிகளில் தனது குளிர்கால வாசத்தினைக் கழிப்பதற்காக இமயமலையினைக் கடந்து புலம்பெயருவதாக அறியப் படுகிறது.
- முன்னதாக இவை தென்பட்ட அரிதான நிகழ்வுகளில், 2018 ஆம் ஆண்டில், சில நிகழ்வுகள் ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் அமைந்த புலிகாட் ஏரியின் முனைப் பகுதியிலும், இரண்டு நிகழ்வுகள் காஞ்சிபுரத்திலும் மற்றும் ஐந்து நிகழ்வுகள் கேளம்பாக்கம் சிற்றோடைப் பகுதியிலும் தென்பட்டன.
- பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தில் 2010 ஆம் ஆண்டு முதல் கிட்டத்தட்ட 193 வகையான பறவைகள் காணப்பட்டன.



## ஆக்கிரமிப்புத் தாவரங்களை ஒழிப்பதற்கான திட்டம்

- கேரள வனத் துறை ஆராய்ச்சி நிறுவனத்தில் உள்ள உயிரியல் ஆக்கிரப்புகளுக்கான முதன்மை மையம் ஆனது (NCBI) சென்னா ஸ்பெக்டாபிலிஸ் என்ற தாவர இனத்தினை ஒழிப்பதற்கான ஒரு மேலாண்மைத் திட்டத்தை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இது அந்த மாநிலத்திலுள்ள உயிரினங்களின் வாழ்விடத்திற்கு மிகவும் மோசமான அச்சுறுத்தலாக விளங்கும் ஒரு அயல்நாட்டு ஆக்கிரமிப்புத் தாவரமாகும்.
- சென்னா ஸ்பெக்டாபிலிஸ் என்பது அமெரிக்காவின் வெப்பமண்டலப் பகுதிகளைச் சேர்ந்த ஒரு இலையுதிர் கால மரமாகும்.

- ❖ இது குறுகிய காலத்தில் 15 முதல் 20 மீட்டர் வரை வளரக் கூடியதோடு, பூத்தல் என்ற நிகழ்விற்குப் பிறகு ஆயிரக்கணக்கான விதைகளை பரவச் செய்யக் கூடியது.
- ❖ மரத்தின் தடிமனான இலையானது பிற பூர்வீக மர இனங்கள் மற்றும் புல் இனங்களின் வளர்ச்சியைத் தடுக்கிறது.
- ❖ இதனால் வனவிலங்குகளுக்கு குறிப்பாகத் தாவர உண்ணிகளுக்கு மிகப்பெரிய ஒரு உணவுப் பற்றாக்குறை ஏற்படுகிறது.
- ❖ இது பூர்வீக இனங்களின் முளைத்தல் மற்றும் வளர்ச்சி ஆகியவற்றினையும் மோசமாக பாதிக்கிறது.
- ❖ இது IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலின் கீழ் 'குறைந்தபட்ச கவனம் தேவைப்படும் நிலையில் உள்ள இனம்' என வகைப்படுத்தப் பட்டுள்ளது.



## புதிய ஸ்வாலோடெயில் வண்ணத்துப் பூச்சி

- ❖ நோபலின் ஹெலன் (பாபிலியோ நோப்லி) எனப்படும் ஸ்வாலோடெயில் வண்ணத்துப் பூச்சிகளானது இதுவரையில் பரவிக் காணப்பட்ட அதன் அறியப்பட்டப் பகுதிகளான மியான்மர் மற்றும் தெற்கு சீனாவிலிருந்து வியட்நாம் வரையில் உள்ள பகுதிகளில் மறைந்து வருகிறது.
- ❖ தற்போது இது முதன்முறையாக இந்தியாவின் அருணாச்சலப் பிரதேச மாநிலத்தில் உள்ள நாம்தாபா தேசியப் பூங்காவில் உள்ளதாக பதிவு செய்யப் பட்டுள்ளது.
- ❖ பிலிப்பைன்ஸ் நாட்டில் உள்ள பாபிலியோ அன்டோனியோ இனத்துடன் ஒத்துள்ள நோபல்ஸ் ஹெலன் மிகப் வெள்ளைப் புள்ளிகள் கொண்ட பெரிய மேற்புறத்தினைக் கொண்டு வகைப்படுத்தப் படுகிறது.
- ❖ இது ஒரு காலத்தில், வடக்கு தாய்லாந்தின் நடுத்தர உயரம் கொண்ட பகுதிகளில் உள்ள மலைக்காடுகளில் பொதுவாக காணப்பட்டது.
- ❖ வண்ணத்துப் பூச்சிகளானது பல்லுயிர் நிலை மற்றும் முக்கியச் சுற்றுச்சூழல் செயல்பாடுகளைக் குறிக்கும் முக்கிய குறிகாட்டிகளாகக் கருதப் படுகின்றன.



## ஆசிய நீர்ப்பறவைகள் கணக்கெடுப்பு 2023

- ❖ சர்வதேச நீர்ப் பறவைகள் கணக்கெடுப்பு என்பது 143 நாடுகளில் உள்ள சதுப்பு நிலங்களில் காணப்படும் நீர்ப்பறவைகளின் எண்ணிக்கை பற்றியத் தகவல்களைச் சேகரிக்கும் ஒரு கண்காணிப்புத் திட்டமாகும்.
- ❖ ஒவ்வோர் ஆண்டின் குளிர்காலத்தின் நடுப்பகுதியில் மேற்கொள்ளப்படும் ஆசிய நீர்ப் பறவைகள் கணக்கெடுப்பின் கீழான இந்த கண்காணிப்புத் திட்டத்தின் ஓர் அங்கமாக இந்தியாவும் இடம் பெற்றுள்ளது.
- ❖ இது உலகளவிலான ஈரநிலங்கள் மற்றும் நீர்ப் பறவைகளின் பாதுகாப்பு மற்றும் மேலாண்மையை ஆதரிக்கும் குடிமக்கள்-அறிவியல் சார்ந்த ஒரு திட்டமாகும்.
- ❖ இந்தக் கணக்கெடுப்பு குறித்த தகவல்கள் eBird செயலியில் பதிவு செய்யப்பட்டுள்ளன.
- ❖ கேரளாவின் ஆலப்புழா என்ற பகுதிக்கு வருகை தரும் சில புலம்பெயர்ந்த நீர்ப் பறவைகளின் எண்ணிக்கையானது, குறிப்பாக வாத்து இனங்களின் எண்ணிக்கை என்பது குறைந்து வருவதை இந்த அறிக்கை குறிப்பிடுகிறது.
- ❖ முந்தைய ஆய்வுகளில் காணப்பட்ட தட்டைவாயன் வாத்து எனப்படும் நார்தர்ன் ஷோவலர், கிளுவை மற்றும் நாமத்தலை வாத்து போன்ற வாத்து இனங்கள் இந்த முறை இங்கு முற்றிலும் காணப் படவில்லை.

BNHS INDIA CONSERVING NATURE SINCE 1883 | birdcount.in BIRD COUNT INDIA | Wetlands INTERNATIONAL | EAAFP

## பண்டைய காலத்தில் இருந்த 'கடல் முதலையின்' புதைப்படிமம்

- ❖ புதைப்படிம ஆராய்ச்சியாளர்கள், நவீன கால முதலையின் பழங்கால "இணை இனமான" தலட்டோசூசியன் என்ற புதிய ஒரு இனத்தின் புதைப்படிவத்தினைக் கண்டு பிடித்துள்ளனர்.

- இது சுமார் 185 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு இருந்த ஆரம்பகால ஜுராசிக், மற்றும் ப்ளியன்ஸ்பாச்சியன் காலத்தைச் சேர்ந்தது.
- இது இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட இத்தகைய வகைகளில் மிகப் பழமையானதாக இருக்கலாம்.
- தலட்டோசுச்சியன்கள் என்பவை பேச்சு வழக்கில் 'உப்புநீர் முதலைகள்' அல்லது 'கடல் முதலைகள்' என்று குறிப்பிடப்படுகின்றன.
- ஆனால் அவை க்ரோகோடிலியா குடும்பத்தினைச் சேர்ந்தவை அல்ல.



## IqAir நிறுவனத்தின் காற்றுத் தரக் குறியீடு





- உலகளாவியக் காற்றுத் தரக் குறியீட்டில் (AQI), டெல்லி நகரினை விஞ்சி மும்பை நகரம் உலகின் இரண்டாவது மாசுபட்ட நகரமாக மாறியுள்ளது.
- இது சுவிட்சர்லாந்தில் அமைந்துள்ள IqAir எனப்படும் காற்றுத் தரக் கண்காணிப்பு தொழில்நுட்ப நிறுவனத்தின் தரவுகளில் கூறப்பட்டுள்ளது.
- ஜனவரி 29 ஆம் தேதி முதல் பிப்ரவரி 08 ஆம் தேதி வரையிலான காலகட்டத்தில், போஸ்னியாவில் உள்ள சர்ஜேவோ நகரமானது உலகின் மிகவும் மாசுபட்ட நகரமாக தரவரிசைப்படுத்தப் பட்டுள்ளது.

- இதில் பாகிஸ்தானின் லாகூர் நகரம் மூன்றாவது இடத்தில் உள்ளது.
- இப்பட்டியலில் டெல்லி ஆறாவது இடத்திலும், கொல்கத்தா 17வது இடத்திலும் உள்ளன.
- IQAir நிறுவனமானது ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பு (UNEP) மற்றும் கிரீன்பீஸ் ஆகியவற்றுடன் இணைந்து இந்தியாவில் காற்றின் தரத்தை மதிப்பிடுகிறது.
- அதன் ஆய்வுகள் மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் (CPCB) தரவுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப் படுகின்றன.

## சுந்தரவனக் காடுகளில் மேற்கொள்ளப்பட்ட முதல் பறவைகள் கணக்கெடுப்பு

- மேற்கு வங்காள வனத்துறையின் சுந்தரவனப் புலிகள் காப்பகம் (STR) பிரிவால் இந்த முதல் பறவைகள் கணக்கெடுப்பானது ஏற்பாடு செய்யப்பட்டது.
- பறவைகள் கணக்கெடுப்பானது சுந்தரவனப் பகுதியில் உள்ள பறவை இனங்களின் பன்முகத் தன்மை பற்றிய அடிப்படைத் தரவை வழங்குகிறது.
- முதல் பறவைகள் கணக்கெடுப்பின் போது, சுமார் 145 வெவ்வேறு பறவை இனங்கள் கணக்கிடப் பட்டன.
- முதல் பறவைகள் கணக்கெடுப்பின் போது பதிவு செய்யப்பட்ட இனங்களில் 78 வனப் பறவைகள் மற்றும் 42 வகையான கரைப் பறவைகள், பருந்து வகைப் பறவைகள் போன்றவை அடங்கும்.
- இந்த கணக்கெடுப்பின் போது கணக்கிடப்பட்ட மொத்தப் பறவைகளின் எண்ணிக்கை 5,065 ஆகும்.
- சுந்தரவனக் காடுகளானது வங்காள விரிகுடாவில் கங்கை, பிரம்மபுத்திரா மற்றும் மேக்னா நதிகளின் கழிமுகப் பகுதியில் அமைந்துள்ளது.




| SBR area | No. of species |
|---|---|
| Core | 86 |
| Buffer | 128 |
| Outside protected areas | 71 |

| Birds | No. of species |
|---|---|
| Forest birds | 78 |
| Waders/shore birds | 42 |
| Raptors | 12 |
| Water fowl | 6 |
| Others | 7 |

## பெரு பகுதியில் கடற்சிங்கங்கள் உயிரிழப்பு

- பெருவில் சமீபத்திய வாரங்களில் ஏற்பட்ட H5N1 பறவைக் காய்ச்சல் வைரஸ் தொற்றினால் சுமார் 585 கடற்சிங்கங்களும் 55,000 வனப்பறவைகளும் உயிரிழந்து உள்ளன.
- உயிரிழந்தப் பறவைகளில் கூழைக்கடா, பல்வேறு வகையான கடற்பறவை மற்றும் செர்னான்ப் எனப்படும் பெங்குவின் வகை ஆகியவை அடங்கும்.
- மூன்று கூழைக்கடா பறவைகளில் அதிகம் தொற்றக் கூடிய தொற்றுநோயான H5N1 நோய்ப் பாதிப்புகள் இருப்பது கண்டறிந்ததையடுத்து நவம்பர் மாதத்தில் அந்த நாட்டு அரசானது 180 நாள் சுகாதார எச்சரிக்கையை அறிவித்தது.
- பறவைக் காய்ச்சலானது பாலூட்டிகளைப் பாதிப்பது அரிதான நிகழ்வு ஆகும், என்றாலும், இது மனிதர்களைப் பாதிப்பது மேலும் அரிதானதாகும்.
- ஆனால் சமீபத்தில் பிரிட்டனில் உள்ள நரிகள் மற்றும் நீர்நாய்கள், பிரான்சில் உள்ள பூனை மற்றும் மொன்டானாவில் உள்ள கொடுங்கரடிகள் ஆகியவற்றில் இந்த வைரஸ் இருப்பது கண்டறியப் பட்டது.




## ரோடோடென்ட்ரான்ஸ்

- கிரேக்க மொழியில் ரோஜா மரம் என்று பொருள்படும் ரோடோடென்ட்ரான் (பெரிடிய மலர்களைக் கொண்ட பசுமை மாறா செடி வகை) பருவநிலை மாற்றத்திற்கான ஒரு குறிகாட்டி இனமாக கருதப் படுகிறது.
- இந்தியாவில் காணப்படும் அனைத்து வகையான ரோடோடென்ட்ரான்களிலும் மூன்றில் ஒரு பங்கிற்கும் அதிகமானவை டார்ஜிலிங் மற்றும் சிக்கிம் இமயமலைகள் பகுதிகளில் காணப்படுகின்றன.
- இந்தியத் தாவரவியல் ஆய்வு அமைப்பின் 'சிக்கிம் மற்றும் டார்ஜிலிங் இமய மலைகளின் ரோடோடென்ட்ரான்ஸ் - ஒரு விளக்க அறிக்கை' என்ற தலைப்பிலான புதிய அறிக்கையில் 45 வகை ரோடோடென்ட்ரான்களைப் பட்டியலிடப்பட்டுள்ளன.
- இந்தியாவில் 132 வகையான (80 இனங்கள், 25 கிளையினங்கள் மற்றும் 27 வகைகள்) ரோடோடென்ட்ரான்கள் உள்ளன.

- இந்த அறிக்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள 45 வகைகளில், 24 வகைகள் டார்ஜிலிங் இமயமலையிலும், 44 சிக்கிம் இமயமலையிலும் காணப்படுகின்றன.
- அவை ஆசியா, வட அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவின் மிதவெப்பப் பகுதிகளிலும், தென்கிழக்கு ஆசியா மற்றும் வடக்கு ஆஸ்திரேலியாவின் வெப்பமண்டலப் பகுதிகளிலும் காணப்படுகின்றன.
- ரோடோடென்ட்ரான்கள், முதன்முதலில் 1776 ஆம் ஆண்டில் கேப்டன் ஹார்ட்விக் என்பவரால் ஜம்மு மற்றும் காஷ்மீரில் கண்டறியப்பட்டன.
- இது நேபாளத்தின் தேசிய மலர் மற்றும் இந்தியாவின் உத்தரகாண்ட் மாநிலத்தின் மாநில மரமாகும்.



## ஓமோர்கஸ் கந்தேஷ்

- இந்தியாவில் புதிய வண்டு இனம் ஒன்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.
- இது ஒரு விலங்கு அல்லது மனிதனின் மரண நேரத்தைக் கண்டறிய உதவுகிறது என்பதால் தடயவியல் அறிவியலுக்கு இந்த வண்டு இனம் முக்கியமான ஒன்றாகும்.
- ஓமோர்கஸ் கந்தேஷ் ஒரு பிணந்தின்னி வண்டு இனமாகும் என்பதால் இது கெரட்டின் வண்டு என்றும் அழைக்கப்படுகிறது.
- இந்தப் புதிய இனமானது ட்ரோகிடே குடும்பத்தைச் சேர்ந்தது ஆகும்.
- இந்தப் புதிய இனத்தின் சேர்க்கையுடன் இந்தியாவில் இந்த வண்டுக் குடும்பத்தில் தற்போது மொத்தம் 14 இனங்கள் உள்ளன.
- இந்த இனத்தினைச் சேர்ந்த வண்டுகள் சில சமயங்களில் மறை வண்டுகள் என்று அழைக்கப் படுவதால், அவை மண்ணின் கீழ் தனது உடலை மூடி மறைத்துக் கொள்ளும் தன்மையினை உடையவையாகும்.



## பருவநிலை சார்ந்த திறன்மிகு கோதுமை வகை

- இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனமானது, HD-3410 வகையினைப் போன்ற அதே விளைச்சல் திறன் கொண்ட, வெறும் 95 செ.மீ. உயரம் கொண்ட தாவரமான மற்றும் வலுவான தண்டுகள் உடைய HD-3385 எனப்படும் மூன்றாவது கோதுமை வகையினை உருவாக்கியுள்ளது.
- இது குறைந்தபட்சம் தண்டு வீழ்ச்சித் தன்மை கொண்ட, முன்கூட்டியே விதைப்புக்கு மிகவும் ஏற்ற வகையாகும்.
- இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனமானது, தாவர வகைகள் மற்றும் விவசாயிகளின் உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தில் (PPVFRA) HD-3385 என்ற வகை ஒன்றினைப் பதிவு செய்துள்ளது.
- இந்தப் புதிய வகை கோதுமையானது, இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் நிலவும் அதிக வெப்பநிலையைத் தாங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- முன்னதாக புது டெல்லியில் உள்ள, இந்திய வேளாண் ஆராய்ச்சி சபையின் இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்கள் (IARI) இரண்டு கோதுமை வகைகளை உருவாக்கியுள்ளனர்.
- HDCSW-18 எனப்படும் முதல் வகையானது 2016 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டு, அதிகாரப் பூர்வமாக வெளியிடப்பட்டது.
- இது ஒரு ஹெக்டேருக்கு 7 டன்களுக்கும் அதிகமான அளவில் கோதுமை விளைச்சல் தரக் கூடியது.
- ஆனால் தாவரங்களின் உயரம் காரணமாக கதிர் முற்றிய நிலையில் அவை கீழே சாயக் கூடியதாக உள்ளன.
- HD-3410 எனப்படும் இரண்டாவது வகையானது, 2022 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.
- இது குறைவான தாவர உயரத்துடன் (100-105 செ.மீ) அதிக மகசூல் திறன் (7.5 டன் / ஹெக்டேர்) கொண்டுள்ளது.




## சதுப்பு நிலங்களைப் பாதுகாத்தல் பிரச்சாரம்

- மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகமானது, கோவாவில் 'சதுப்பு நிலங்களைப் பாதுகாத்தல்' என்ற பிரச்சாரத்தினைத் தொடங்கியுள்ளது.
- இந்தப் பிரச்சாரமானது, சதுப்பு நிலங்களைப் பாதுகாப்பதற்கான "முழுச் சமூகம்" சார்ந்த அணுகுமுறையின் அடிப்படையில் கட்டமைக்கப் பட்டுள்ளது.

- இது சதுப்பு நிலங்களைப் பாதுகாப்பதற்காக சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும் மேற்கொள்ளப்படும் உறுதியான நடவடிக்கைகளை செயல்படுத்தச் செய்வதோடு, சமூகத்தின் அனைத்துப் பிரிவினரையும் உள்ளடக்கியது.
- அடுத்த ஓர் ஆண்டில் மேற்கொள்ளப்பட உள்ள இந்தப் பிரச்சாரத்தில் சதுப்பு நிலங்கள் குறித்த மதிப்பை மக்களுக்கு உணர்த்துவது, சதுப்புநில நண்பன் திட்டத்தின் பரவலை அதிகரிப்பது மற்றும் சதுப்பு நிலங்களைப் பாதுகாப்பதற்காக குடிமக்கள் சார்ந்த ஒரு கூட்டாண்மைகளை உருவாக்குவது ஆகியவை அடங்கும்.




## சதுப்பு நிலங்களின் அகலிட அழிவுறா காத்தல் அமைப்பு




- ராஜஸ்தான் மாநில வனத்துறையானது கியோலாடியோ தேசியப் பூங்காவிற்குள் ஒரு மிருகக்காட்சிச் சாலையை அமைக்க முன்மொழிந்துள்ளது.
- இந்த மிருகக்காட்சிச் சாலையின் நோக்கம் சதுப்பு நிலங்களின் அகலிட அழிவுறா காத்தல் அமைப்பு (WESCE) ஆகும்.
- இந்த மிருகக்காட்சிச் சாலையில் ஓங்கில்கள், முதலைகள், நீர் எருமைகள் மற்றும் பிற அயல்நாட்டு இனங்கள் காட்சிப்படுத்தப்படும்.
- இந்த மிருகக்காட்சிச் சாலையில் காட்சிப்படுத்தப்படும் சதுப்பு நில இனங்கள் அதன் முக்கிய ஈர்ப்பாக விளங்கும்.
- நீர்நாய்கள், மீன்பிடிப் பூனைகள், புல்வாய் இனங்கள், வராகமான்கள் போன்ற உள் நாட்டில் அழிந்து வரும் உயிரினங்களுக்கான இனப்பெருக்கம் மற்றும் மறு அறிமுக மையம் அமைக்கப் படுவதும் இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்


## "Countdown to 2023" அறிக்கை

- உலக சுகாதார அமைப்பானது, 4வது வருடாந்திர நிலை அறிக்கையான 'Countdown to 2023' எனப்படும், உலக மாறுபக்கக் கொழுப்பு நீக்கம் குறித்த ஒரு அறிக்கையினை வெளியிட்டது.
- உலகளவில் 5 பில்லியன் மக்கள் தீங்கு விளைவிக்கக் கூடிய மாறுபக்கக் கொழுப்பு அமிலங்களிலினால் ஏற்படும் பாதிப்புகளிலிருந்துப் பாதுகாப்பற்ற நிலையில் உள்ள நிலையில், இதன் விளைவாக இதய நோய் மற்றும் இறப்பு ஆகியவை ஏற்படுவதற்கான அபாயத்தை இது அதிகரிக்கிறது.
- 2018 ஆம் ஆண்டில் தொழில்துறை ரீதியாக தயாரிக்கப்பட்ட மாறுபக்கக் கொழுப்புகளை உலகளவில் முற்றிலும் நீக்கச் செய்வதற்கு முதன்முதலாக அழைப்பு விடுத்தது.
- மேலும், இது ஒரு மாறுபக்கக் கொழுப்பு நீக்கத்திற்கான இலக்கு ஆண்டாக 2023 ஆம் ஆண்டினை அறிவித்தது.
- 43 நாடுகள், உணவில் உள்ள மாறுபக்கக் கொழுப்பின் அளவினைக் கட்டுப்படுத்தச் செய்வதற்கான சிறந்த நடைமுறைக் கொள்கைகளைச் செயல்படுத்தியுள்ளன.



## உலகப் பொருளாதார நிலை மற்றும் வாய்ப்புகள் 2023 - அறிக்கை


- ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக விவகாரங்கள் துறையானது "உலகப் பொருளாதார நிலை மற்றும் வாய்ப்புகள்" என்ற அறிக்கையினை வெளியிட்டது.
- இது உலகப் பொருளாதார அறிக்கை என்றும் அழைக்கப்படுகிறது.
- உலக நாடுகளின் பொருளாதார வளர்ச்சியானது குறைந்து வருவதாக இந்த அறிக்கை கூறுகிறது.
- 2022 ஆம் ஆண்டில் 3% ஆக இருந்த இந்த வளர்ச்சியானது 2023 ஆம் ஆண்டில் 1.9% ஆக இருந்தது.
- உலகளாவியப் பணவீக்கம் ஆனது 2023 ஆம் ஆண்டில் 6.5% ஆக இருக்கும்.
- 2024 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் உலக நாடுகள் மந்தநிலையை எதிர்கொள்ளும்.
- இந்த அறிக்கையின்படி இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி விகிதம் ஆனது 2023 ஆம் ஆண்டில் 5.8% ஆகவும், 2024 ஆம் ஆண்டில் 6.7% ஆகவும் இருக்கும்.




## வருடாந்திர மரணத் தண்டனை அறிக்கை, 2022

- 2022 ஆம் ஆண்டில், இந்தியாவில் உள்ள குற்றவியல் அமர்வு நீதிமன்றங்கள் ஆனது 165 மரணத் தண்டனைகளை விதித்துள்ளன.
- இது கடந்த 20 ஆண்டுகளில் பதிவானவரையில், ஓராண்டில் விதிக்கப்பட்ட மிக அதிகமான எண்ணிக்கையாகும்.
- இந்த எண்ணிக்கை அதிகரிப்பானது, அகமதாபாத்தில் நிகழ்ந்த ஒரு குண்டுவெடிப்பு வழக்கில் 38 பேருக்கு மரணத் தண்டனை விதிக்கப்பட்டதன் காரணமாக இருக்கலாம்.

- இது 2016 ஆம் ஆண்டு முதல் பதிவான, ஒரே வழக்கில் அதிக எண்ணிக்கையிலான நபர்களுக்கு மரணத் தண்டனை விதிக்கப்பட்ட நிகழ்வினைக் குறிக்கிறது.
- 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 31 அன்றைய நிலவரப்படி, 539 கைதிகள் மரணத் தண்டனை நிறைவேற்றப் படுவதற்கான பட்டியலில் உள்ளனர் என்று இந்த அறிக்கை குறிப்பிடச் செய்கிறது.
- 400 கைதிகள் மட்டுமே மரணத் தண்டனையை எதிர்நோக்கியதாக பதிவான 2016 ஆம் ஆண்டிலிருந்து, விதிக்கப்பட்ட மிக அதிக எண்ணிக்கையிலானதாக இந்த எண்ணிக்கை உள்ளது.
- 2022 ஆம் ஆண்டு விதிக்கப்பட்ட மரணத் தண்டனைகளின் எண்ணிக்கையானது 2015 ஆம் ஆண்டில் பதிவானதை விட 40% அதிகரிப்பைக் குறிக்கிறது.
- இந்தத் தகவல் ஆனது, 'இந்தியாவில் மரணத் தண்டனை - வருடாந்திரப் புள்ளி விவரங்கள் 2022' அறிக்கையின் ஒரு பகுதியாகும்.
- திட்டம் 39A எனப்படும் இது டெல்லியின் தேசியச் சட்டப் பல்கலைக் கழகத்தின் ஆலோசனைக் குழுவினால் வெளியிடப்பட்டது.





## வணிக மேலாண்மைக் கல்வி நிறுவனங்களின் தரவரிசை 2023

- இந்திய நிறுவன தரவரிசைக் கட்டமைப்பு ஆனது (IIRF) இந்தியாவில் உள்ள 2023 ஆம் ஆண்டின் சிறந்த வணிக மற்றும் மேலாண்மை கல்வி நிறுவனங்களின் பட்டியலினை வெளியிட்டுள்ளது.
- அகமதாபாத் இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனம், பெங்களூரு இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனம் மற்றும் இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனம், கொல்கத்தா ஆகியவை இந்தியாவில் முன்னணியில் உள்ள 3 வணிகக் கல்வி நிறுவனங்களாகும்.

- முன்னணியில் உள்ள 3 தனியார் வணிகக் கல்வி நிறுவனங்கள்
  - சேவியர் தொழிலாளர் உறவுகள் கல்வி நிறுவனம், ஜாம்ஷெட்பூர், ஜார்க்கண்ட்
  - மேலாண்மை மேம்பாட்டுக் கல்வி நிறுவனம், குருகிராம், ஹரியானா
  - சிம்பயோசிஸ் வணிகக் கல்வி மேலாண்மைக் கல்வி நிறுவனம், புனே.
- உலகளவில் முன்னணியில் உள்ள 3 வணிகக் கல்வி நிறுவனங்கள்
  - லண்டன் வணிகக் கல்வி நிறுவனம், ஐக்கியப் பேரரசு
  - பென்சில்வேனியாவின் வார்டன் பல்கலைக்கழகம், அமெரிக்கா
  - ஹார்வர்டு வணிகக் கல்வி நிறுவனம், அமெரிக்கா.

## செம்மரம் கடத்தல் பற்றிய CITES தரவு




- CITES வர்த்தக தரவுத்தளமானது, இந்தியக் காடுகளில் இருந்து செம்மரம் பறிமுதல், கையகப் படுத்துதல் மற்றும் தொகுப்புகள் ஏற்றுமதி செய்யப்பட்டது தொடர்பான 28 சம்பவங்களைப் பதிவு செய்துள்ளது.
- இந்தச் சரக்குகள் 2016 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை சீனா (53.5%), ஹாங்காங் (25.0%), சிங்கப்பூர் (17.8%) மற்றும் அமெரிக்கா (3.5%) ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.


- செம்மரம் அல்லது ப்டெரோகார்பஸ் சாண்டலினஸ், அல்லது சிவப்புச் சந்தன மரம், இந்தியாவின் கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் மட்டுமே பரவிக் காணப்படும் ஒரு உள்நாட்டு மர இனமாகும்.
- "செம்மரம்: சட்டவிரோத வன உயிரிகள் வர்த்தகத்தில் இந்தியாவின் செம்மரக் கடத்தல் பற்றிய உண்மைத் தகவல் அறிக்கை" என்ற தலைப்பிலான அறிக்கையானது சமீபத்தில் வெளியிடப் பட்டது.
- இந்த அறிக்கையின்படி, 13,618 டன்களுக்கும் அதிகமான செம்மரங்களை இறக்குமதி செய்ததுடன் சீனா முதலிடத்திலும், ஹாங்காங் (5,215 டன்கள்) மற்றும் சிங்கப்பூர் (216 டன்கள்) ஆகிய நாடுகள் இடம் பெற்றுள்ளன.
- அழிந்து வரும் வன விலங்குகள் மற்றும் தாவர இனங்களில் மேற்கொள்ளப்படும் சர்வதேச வர்த்தகம் தொடர்பான உடன்படிக்கை (CITES) என்பது அரசாங்கங்களுக்கு இடையிலான ஒரு சர்வதேச ஒப்பந்தமாகும்.
- வன விலங்குகள் மற்றும் தாவரங்கள் சார்ந்த பொருட்களில் மேற்கொள்ளப்படும் சர்வதேச வர்த்தகமானது, உயிரினங்களின் உயிர்வாழ்வை அச்சுறுத்துவதில்லை என்பதை உறுதி செய்வதே இந்த உடன்படிக்கையின் நோக்கமாகும்.

## உலகளாவிய தரமான உள்கட்டமைப்பு குறியீடு 2021

- சமீபத்தில் வெளியிடப்பட்ட 2021 ஆம் ஆண்டு உலகளாவிய தரமான உள்கட்டமைப்பு குறியீட்டின் (GQII) படி, இந்தியா அதன் அங்கீகார வழங்கீட்டு முறையினை கருத்தில் கொள்கையில், உலகின் ஐந்தாவது சிறந்த நாடாக தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.
- இந்தத் தரவரிசையானது, 184 நாடுகளின் உள்கட்டமைப்புத் தரத்தை அடிப்படையாகக் கொண்டதாகும்.
- இந்தக் குறியீட்டில் இந்திய நாட்டின் ஒட்டு மொத்தத் தரவரிசை இன்னும் 10வது இடத்தில் தான் உள்ளது.
- அளவியல் மற்றும் தரப்படுத்தலின் ஆகியவற்றின் அடிப்படையில், உலக அளவில் இந்தியா முறையே 21வது மற்றும் 9வது இடத்தில் உள்ளது.
- இந்த அறிக்கையின்படி, உலகில் முன்னணியில் உள்ள 25 நாடுகள் முக்கியமாக ஆசிய-பசிபிக், வட அமெரிக்கா மற்றும் ஐரோப்பா ஆகிய பகுதிகளில் அமைந்து உள்ளன.
- இப்பட்டியலில் ஜெர்மனி முதலிடம் பெற்றுள்ளது.
- அதைத் தொடர்ந்து சீனா, அமெரிக்கா, ஐக்கியப் பேரரசு மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் முறையே இரண்டாவது, மூன்றாவது, நான்காவது மற்றும் ஐந்தாவது இடங்களில் உள்ளன.

## உலகளாவியச் சிறுபான்மையினர் அறிக்கை


- பாட்னா நகரில் அமைந்துள்ள கொள்கைப் பகுப்பாய்வு ஆராய்ச்சி மையம் ஆனது "உலகளாவியச் சிறுபான்மையினர் அறிக்கையை" வெளியிட்டது.
- இந்தக் குறியீட்டில் இந்தியா முதலிடத்தில் உள்ளது.
- அதைத் தொடர்ந்து தென் கொரியா, ஜப்பான், அமெரிக்கா ஆகிய நாடுகள் இடம் பெற்றுள்ளன.
- மாலத்தீவு, ஆப்கானிஸ்தான், சோமாலியா ஆகிய நாடுகள் இந்தப் பட்டியலில் கடைசி இடங்களில் உள்ளன.
- ஐக்கியப் பேரரசு மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகியவை முறையே 54 மற்றும் 61 ஆகிய இடங்களில் உள்ளன.




## மாநில அரசுகளின் கல்விக்கான நிதி ஒதுக்கீடு

- இந்தியாவில் உள்ள பெரிய மாநிலங்களில், சத்தீஸ்கர் மற்றும் பீகார் ஆகிய மாநிலங்கள் 2023 ஆம் நிதியாண்டிற்கான தங்களது நிதிநிலை அறிக்கையில் கல்விக்காக அதிகளவு விகிதத்தை ஒதுக்கியுள்ளன.
- சத்தீஸ்கர் மாநிலத்தின் மதிப்பிடப்பட்ட நிகர நிதிநிலைச் செலவினத்தில் 18.82 சதவீதத்தை கல்விக்காக அம்மாநிலம் ஒதுக்கியுள்ள நிலையில், பீகார் மாநில அரசானது 18.3 சதவீதத்தை ஒதுக்கியுள்ளது.
- சத்தீஸ்கர் மாநிலத்தின் கல்வியறிவு விகிதம் 77.9 சதவீதமாக உள்ள அதே சமயம் பீகார் மாநிலத்தின் கல்வியறிவு விகிதமானது நாட்டிலேயே மிகக் குறைவான அளவு கல்வியறிவு விகிதமாக 70.9 சதவீதமாக உள்ளது.
- டெல்லி, அசாம் மற்றும் இமாச்சலப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் தங்களது நிதிநிலை செலவினத்தில் அதிகப் பகுதியை கல்விக்காக செலவிட்ட மாநிலங்களாகும்.

- அவை முறையே 22 சதவீதம், 20 சதவீதம் மற்றும் 19 சதவீதம் அளவில் நிதி ஒதுக்கீடு செய்துள்ளன.
- கேரள மாநிலமானது 96.2 சதவீத கல்வியறிவு வீதத்துடன் நாட்டிலேயே அதிக கல்வியறிவு வீதம் கொண்ட மாநிலமாக உள்ள அதே சமயம் தமிழ்நாடு மாநிலத்தின் கல்வியறிவு வீதமானது 82.9 சதவீதமாக உள்ளது.
- 2023 ஆம் நிதியாண்டிற்கான நிகர நிதிநிலைச் செலவினத்தில் கல்விக்கான ஒதுக்கீட்டின் தேசிய சராசரி 15.4 சதவீதமாக இருந்தது.
- கல்விக்கான தங்களது நிகர செலவினத்தில் ஒப்பீட்டளவில் சிறிய விகிதத்தை ஒதுக்கி உள்ள மற்ற மாநிலங்களில் ஆந்திரப் பிரதேசம் (12.7 %), கர்நாடகா (12.73 %), உத்தரப் பிரதேசம் (12.89 %), மற்றும் பஞ்சாப் (13.05 %) ஆகியவை அடங்கும்.
- ஒட்டு மொத்த மதிப்பீடுகளானது, தமிழ்நாடு மாநிலத்தில் ஏற்கனவே கல்வியறிவு விகிதங்கள் அதிகமாக இருந்தாலும் அதன் கல்வியறிவு விகிதத்தை மேலும் அதிகரிக்க அம்மாநில அரசு திட்டமிட்டுள்ளது என்று கூறுகிறது.
- மத்திய அரசானது கல்விக்காக மொத்த நிதிநிலையில் 16.51% என்ற அளவில் ரூ.44,094 கோடியை ஒதுக்கியுள்ளது.
- இது முந்தைய ஆண்டை விட 8% அதிகமாகும்.




## TomTom போக்குவரத்துக் குறியீடு அறிக்கை

- 12வது அறிக்கையானது 2022 ஆம் ஆண்டு முழுவதும் 56 நாடுகளில் உள்ள 389 நகரங்களில் நிலவியப் போக்குவரத்துப் போக்குகள் குறித்து மதிப்பிட்டது.
- 2022 ஆம் ஆண்டில் உலகிலேயே மிக மெதுவாக வாகனம் ஓட்டக் கூடிய இரண்டாவது இடம் பெங்களூரு நகராகும்.
- இந்தப் பட்டியலில் நியூயார்க் நகரம் முதலிடத்தில் உள்ளது.
- இந்த மதிப்பீட்டானது வாகனம் ஓட்டும் போது ஏற்படும் நேர இழப்பினை மட்டும் மதிப்பிடாமல், பணம், சுற்றுச்சூழல் பாதிப்பு போன்ற பிற காரணிகளின் மீதான தாக்கங்களையும் மதிப்பிடுகிறது.
- பெங்களூருவின் பரபரப்பான போக்குவரத்தானது கடந்த ஆண்டில் 129 மணி நேர இழப்புக்கு வழி வகுத்தது.

❖ அயர்லாந்தின் டப்ளின் நகரத்தில் போக்குவரத்து நெரிசல்கள் காரணமாக 140 மணி நேர இழப்பு ஏற்பட்டுள்ளது.

❖ போக்குவரத்து நெரிசல் நேரங்களின் போதான வாகன இயக்கத்தின் போது ஒரு மைலுக்கு வெளியிடப்படும் $CO_2$ உமிழ்வுகளின் அடிப்படையில் பெங்களூரு ஐந்தாவது இடத்தில் உள்ளது.

❖ வாகன இயக்கத்தின் போது ஒரு மைலுக்கு வெளியிடப்படும் $CO_2$ உமிழ்வுகளின் அடிப்படையில் இலண்டன் அதிகளவு $CO_2$ உமிழ்வினை வெளியிடுகிறது.




| RANK BY FILTER | WORLD RANK | CITY | DAYS WITH LOW TRAFFIC | CONGESTION MONTH BY MONTH | CONGESTION LEVEL 2020 | CHANGE FROM 2019 |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | Moscow region (oblast) Russia | 66 days | | 54% | [illegible] |
| 2 | 2 | Mumbai India | 132 days | | 53% | [illegible] |
| 3 | 3 | Bogota Colombia | 116 days | | 53% | [illegible] |
| 4 | 4 | Manila Philippines | 128 days | | 53% | [illegible] |
| 5 | 5 | Istanbul Turkey | 80 days | | 51% | [illegible] |
| 6 | 6 | Bengaluru India | 147 days | | 51% | [illegible] |
| 7 | 7 | Kyiv Ukraine | 48 days | | 51% | [illegible] |
| 8 | 8 | New Delhi India | 64 days | | 47% | [illegible] |
| 9 | 9 | Novosibirsk Russia | 35 days | | 45% | 0% |
| 10 | 10 | Bangkok Thailand | 44 days | | 44% | [illegible] |
| 11 | 11 | Odessa Ukraine | 47 days | | 44% | [illegible] |
| 12 | 12 | Saint Petersburg Russia | 60 days | | 44% | [illegible] |

## சேவை சார்ந்த வர்த்தகக் கட்டுப்பாடு குறியீடு (STRI)


❖ 2022 ஆம் ஆண்டிற்கான சேவை சார்ந்த வர்த்தகக் கட்டுப்பாடு குறியீட்டில் (STRI) இந்தியா 47வது இடத்தில் உள்ளது.

❖ பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பினால் (OECD) இந்தக் கணக்கெடுப்பானது மேற்கொள்ளப்பட்டது.


❖ ரஷ்யா-உக்ரைன் போர் காரணமாக, ரஷ்யா இந்தக் குறியீட்டில் 48வது இடத்திற்கு சரிந்தது.

❖ சேவை சார்ந்த வர்த்தகக் கட்டுப்பாடு குறியீடானது, அந்தத் துறைகள் மற்றும் தொழிற்சாலைகளில் உள்ள வர்த்தகம் செய்வதை எளிமையாக்கச் செய்தலை மேம்படுத்தும் அரசாங்கத்தின் பல துறை கொள்கைகளைக் கருத்தில் கொள்கின்றன.

- இந்தக் குறியீட்டின்படி, சுழியம் என்பது குறைந்தபட்சக் கட்டுப்பாடுகள் உள்ளது என்பதனையும், ஒன்று என்பது எந்தக் கட்டுப்பாடும் இல்லாத ஒரு நிலையினையும் குறிப்பிடுகிறது.
- இந்தத் தரவுத் தளமானது வர்த்தகம் செய்ய மிகவும் விரும்பத் தகுந்த தேசம் என்ற ஒரு அந்தஸ்தின் அடிப்படையிலான விவரங்களையும் பதிவு செய்கிறது.




## மொத்த உள்நாட்டுப் பருவநிலை ஆபத்து அறிக்கை




- கிராஸ் டிபென்டென்சி முன்னடுப்பு (XDI) என்ற ஒரு அமைப்பின் மூலம் இந்த அறிக்கை வெளியிடப் பட்டது.
- உலகில் உள்ள 50 பிராந்தியங்களில் ஒன்பது பிராந்தியங்கள், இந்தியாவில் காணப் படும் பலவீனமான உள்கட்டமைப்பு வீழ்ச்சியினால் அதிகளவுப் பருவநிலை அபாயத்தை எதிர்கொள்கிறது.
- பீகார் (22வது இடம்), உத்தரப் பிரதேசம் (25வது), அசாம் (28வது), ராஜஸ்தான் (32வது), தமிழ்நாடு (36வது), மகாராஷ்டிரா (38வது), குஜராத் (48வது), பஞ்சாப் (50வது) மற்றும் கேரளா (52வது) ஆகியவை நாட்டில் உள்ள மிகவும் பாதிக்கப்படக் கூடிய பகுதிகள் ஆகும்.

- ❖ கட்டமைக்கப்பட்ட சூழலுக்கான பருவநிலை சார்ந்த இடர்களுக்கு உள்ளாகக் கூடிய மாநிலங்களை அதிக எண்ணிக்கையில் கொண்ட நாடாக சீனாவுக்கு அடுத்தபடியாக இந்தியா உள்ளது.
- ❖ ஒட்டு மொத்தமாக, உலகளவில் உள்ள 80% மிகவும் பாதிக்கப்படக்கூடிய நகரங்கள் மற்றும் பொருளாதார நடவடிக்கை மையங்கள் இந்தியா, சீனா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளில் அமைந்துள்ளன.
- ❖ முதல் 100 இடங்களில் அமெரிக்காவின் 18 பிராந்தியங்கள் இடம் பெற்றுள்ளன.

## உலகத் தொழிலாளர் வள நெகிழ்திறன் குறியீடு 2023




- ❖ உலக நாடுகளின் அரசாங்க உச்சி மாநாட்டின் போது வொயிட் சீல்டு (White Shield) என்ற அமைப்பானது உலகளாவியத் தொழிலாளர் வள நெகிழ்திறன் குறியீட்டினை வெளியிட்டது.
- ❖ வேலைவாய்ப்பு சார்ந்த ஏற்ற இறக்கங்களைத் தாங்கும் நாடுகளின் திறனையும், அவற்றை எதிர்த்துப் போராடும் திறனையும் இந்தக் குறியீடு அளவிடுகிறது.
- ❖ முதல் வகையான இந்த அறிக்கையானது, தொழில்நுட்பச் சீர்குலைவுகள், பெருந் தொற்றுகள், பசுமைப் பொருளாதாரம் மாற்றம் போன்ற பல்வேறு அளவுருக்களின் அடிப்படையில் 136 நாடுகளைத் தரவரிசைப் படுத்தியுள்ளது.
- ❖ சுவிட்சர்லாந்து, ஜெர்மனி, நெதர்லாந்து, சிங்கப்பூர், சுவீடன் ஆகிய இந்த நாடுகள் குறியீட்டில் முதல் இடத்தைப் பிடித்துள்ளன.
- ❖ இந்த அறிக்கையில் இந்தியா 65வது இடத்தில் உள்ளது.

- தெற்காசியாவில் உள்ள மற்ற அனைத்து நாடுகளும் 80 என்ற தரவரிசைக்குக் கீழான இடங்களில் உள்ளன.
- இந்த அறிக்கையில் பாகிஸ்தான் 97வது இடத்தைப் பிடித்தது.
- இந்தத் தரவரிசையில் இடம் பெற்ற மூன்றில் ஒரு பங்கிற்கும் அதிகமான நாடுகள் (136 நாடுகளில் 49 நாடுகள்) தொழிலாளர் வளச் சந்தை நெகிழ்திறனில் 100க்கு 50க்கும் குறைவான மதிப்பெண்களையேப் பெற்றுள்ளன.

## உலகின் முன்னணி சுயாதீன ஆற்றல் உற்பத்தியாளர்

- S&P க்ளோபல் கமாடிட்டி இன்சைட்ஸ் நிறுவனத்தின் 2022 ஆம் ஆண்டிற்கான 250 முன்னணி உலக ஆற்றல் உற்பத்தி நிறுவனங்களின் தரவரிசைப் பட்டியலானது சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- அரசிற்குச் சொந்தமான NTPC லிமிடெட் நிறுவனமானது, உலகின் முன்னணி சுயாதீன மின் உற்பத்தியாளர்கள் மற்றும் எரிசக்தி வர்த்தக நிறுவனமாக தரவரிசைப் படுத்தப் பட்டுள்ளது.
- இந்தத் தரவரிசையானது, சொத்து மதிப்பு, வருவாய்கள், லாபம் மற்றும் முதலீட்டின் மீதான வருமானம் ஆகிய நான்கு முக்கிய அளவுருக்களை அடிப்படையாகக் கொண்டது.
- தற்போது இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் மொத்த மின்சார ஆற்றலில் 24 சதவீத பங்களிப்பை NTPC வழங்குகிறது.
- 2050 ஆம் ஆண்டிற்குள், நாட்டின் மொத்த மின் உற்பத்தியில் 50 சதவீதத்தினை இந்த நிறுவனம் வழங்கும்.




## இணைய சங்கேதப் பணத்தின் ஏற்பிற்குத் தயாராக உள்ள நாடுகள்

- 2023 ஆம் ஆண்டில் இணைய சங்கேதப் பணத்தினை ஏற்பதற்குத் தயாராக உள்ள நாடுகளில் முதலாவது பெரிய நாடாக ஆஸ்திரேலியா உள்ளது.
- இணைய சங்கேதப் பணம் மற்றும் பிற எண்ணிமச் சொத்துகளின் விற்பனையானது ஆஸ்திரேலியாவில் சட்டப்பூர்வமானது மற்றும் ஒழுங்குபடுத்தப்பட்டதாகும்.


- இதைத் தொடர்ந்து, இணைய சங்கேதப் பண ஏற்பில் அமெரிக்கா இரண்டாவது பெரிய நாடாக உள்ளது.
- இத்தரவரிசையில் பிரேசில் மூன்றாவது இடத்தில் உள்ளது.
- 2023 ஆம் ஆண்டில் இணைய சங்கேதப் பண ஏற்பிற்குத் தயாராக உள்ள நாடுகளில் 7வது பெரிய நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது.

| Rank | Country | Crypto adoption rate (%) | Crypto ATMs | Increase in google searches since 2020 (%) | Crypto ready score |
|---|---|---|---|---|---|
| 1 | Australia | 18 | 240 | 198 | 7.37 |
| 2 | USA | 16 | 33,938 | 108 | 7.07 |
| 3 | Brazil | 24 | 25 | 358 | 6.81 |
| 4 | United Arab Emirates | 34 | 6 | 267 | 6.41 |
| 5 | Hong Kong | 18 | 146 | 208 | 6.4 |
| 6 | Taiwan | 14 | 43 | 278 | 6.2 |
| 7 | India | 25 | 5 | 316 | 6.12 |
| 8 | Canada | 14 | 2,640 | 198 | 6.1 |
| 9 | Turkey | 40 | 14 | 123 | 6.07 |
| 10 | Singapore | 25 | 0 | 294 | 6.02 |

# மாநிலச் செய்திகள்

## ஜார்க்கண்ட் மாநிலத்தின் புலம்பெயர்ந்தோர் குறித்த முதல் கணக்கெடுப்பு

- ஜார்க்கண்ட் மாநில அரசானது, 2021 ஆம் ஆண்டில் மாநில மற்றும் பொறுப்பு மிக்க இடம் பெயர்வு முன்னெடுப்பினைத் தொடங்கியது.
- இந்தக் கணக்கெடுப்பானது, அந்தமாநிலத்தில் புலம்பெயர்ந்தோர் குறித்த வலுவான தரவுத்தளத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ள நிலையில், இது இந்த முன்னெடுப்பின் ஒரு பகுதியாகும்.
- இந்த ஆய்வானது, புலம்பெயர்விற்கானக் காரணத்தை அடையாளம் காண்பதற்கு அந்த மாநில அரசிற்கு உதவும்.
- மாநில அளவிலான கொள்கையை உருவாக்குவதற்கு இந்தக் கணக்கெடுப்பின் மதிப்பீடுகள் பயன்படுத்தப்பட உள்ளது.
- கோவிட் பெருந்தொற்று கால நெருக்கடியின் போது சுமார் 8.5 லட்சம் அளவிலான புலம்பெயர்ந்தோர் தங்களது சொந்த மாநிலமான ஜார்க்கண்ட் மாநிலத்திற்குத் திரும்பினர்.




## நாகாலாந்து ஆரஞ்சு திருவிழா


- ❖ நாகாலாந்து மாநிலத்தில் இரண்டு நாட்கள் அளவிலான ஆரஞ்சு திருவிழா என்ற விழா கொண்டாடப் படுகிறது.
- ❖ ஆரஞ்சுப்பழ விவசாயிகளின் கடின உழைப்பினை அங்கீகரிக்கும் வகையில் அந்த மாநிலத்தில் நாகாலாந்து பழத் திருவிழாவானது ஏற்பாடு செய்யப்படுகிறது.
- ❖ 2023 ஆம் ஆண்டு நாகாலாந்து பழத் திருவிழாவானது மூன்றாவது திருவிழாவாகும்.
- ❖ நாகாலாந்து பழத் திருவிழாவானது ருசோமா கிராம சபையினால் ஏற்பாடு செய்யப் படுகிறது.
- ❖ அம்மாநிலத்தில் ஆரஞ்சு பழ உற்பத்தி மூலம் பெறப்படும் வருவாய் சமீபத்தில் இரு மடங்காக அதிகரித்தது.




## ஆந்திரப் பிரதேசத்தின் புதிய தலைநகர்

- ❖ ஆந்திரப் பிரதேசத்தின் தலைநகர் ஆனது விசாகப்பட்டினத்திற்கு மாற்றப்படும் என்று அம்மாநில முதல்வர் ஜெகன் மோகன் ரெட்டி அறிவித்துள்ளார்.
- ❖ 2015 ஆம் ஆண்டில் இருந்த முந்தைய அரசானது, அமராவதியை மாநிலத் தலைநகராக அறிவித்து புதியத் தலைநகரைக் கட்டமைப்பதற்காக நிலங்களைக் கையகப் படுத்தும் பணிகளை மேற்கொண்டது.

- 2019 ஆம் ஆண்டில், ரெட்டி அவர்கள் முதன் முதலில் "பரவலாக்கப்பட்ட மேம்பாடு" என்ற ஒரு கருத்தாக்கத்தினை முன்மொழிந்து, மாநிலத்தில் மூன்று தலைநகரங்களை நிறுவுவதற்கான ஒரு திட்டத்தினை முன்வைத்து, பின்னர் அதனை ரத்து செய்தார்.




## 10,000 புதிய குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களைப் பதிவு செய்த முதல் மாவட்டம்





- பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் புதிய குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களை பதிவு செய்த கேரளாவின் முதல் மாவட்டமாக எர்ணாகுளம் மாறியுள்ளது.
- திருச்சூர், மலப்புரம் போன்ற பிற மாவட்டங்களும் இந்த எண்ணிக்கையை நெருங்கி வருகின்றன.
- கேரள மாநில அரசானது, அதன் 2022-23 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் போது நிறுவனங்கள் பிரச்சாரத்தைத் தொடங்கியது.

- மேலும், அம்மாநில அரசானது 2022-23 ஆம் நிதியாண்டை நிறுவனங்களின் ஆண்டாக அறிவித்தது.
- மாநிலத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் துறையின் மேம்பாட்டினை அதிகரிப்பதற்காக இந்த நடவடிக்கையானது மேற்கொள்ளப்பட்டது.

## நிலத்தடித் தண்ணீர்ப் பயன்பாடு குறித்த பஞ்சாப் கொள்கை

- பஞ்சாப் தண்ணீர் ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (PWRDA) ஆனது 2023 ஆம் ஆண்டு பஞ்சாப் நிலத்தடி நீர் பிரித்தெடுத்தல் மற்றும் பாதுகாப்பு வழி முறைகளை அறிவித்துள்ளது.
- அம்மாநிலத்திலிருந்து நிலத்தடி நீரைப் பிரித்தெடுப்பதற்கான கட்டணத்திலிருந்து விலக்கு பெறாத அனைத்துப் பயனர்களுக்கும் பிப்ரவரி 01 முதல் பஞ்சாப் அரசு கட்டணம் விதிக்கத் தொடங்கியுள்ளது.
- இருப்பினும், இந்தப் புதிய வழிகாட்டுதல்கள், வேளாண்மை, குடிநீர் மற்றும் வீட்டு தேவைகளுக்கான நிலத்தடி நீர்ப் பயன்பாடுகளை உள்ளடக்கவில்லை.
- மாதத்திற்கு 300 கன மீட்டருக்கும் குறைவான அளவில் நிலத்தடி நீரைப் பிரித்து எடுக்கும் அனைத்துப் பயனர்களுக்கும் இதிலிருந்து விலக்கு அளிக்கப் பட்டு உள்ளது.
- பஞ்சாப் மாநிலத்தின் தொகுதிகள் வருடாந்திர நிலத்தடி நீர் பிரித்தெடுத்தல் அளவை அடிப்படையாகக் கொண்டு மூன்று மண்டலங்களாக (பச்சை, மஞ்சள் மற்றும் ஆரஞ்சு) வகைப் படுத்தப் பட்டுள்ளன.



## லடாக்கின் முதல் பல்லுயிர்ப் பாரம்பரியத் தளம்

- யாயா சோ ஏரியானது, உயிரியல் பன்முகத் தன்மைச் சட்டத்தின் கீழ், லடாக்கின் முதல் பல்லுயிர்ப் பாரம்பரியத் தளமாக அறிவிக்கப் பட்டுள்ளது.
- லடாக்கில் 4,820 மீட்டர் உயரத்தில் இந்த அழகிய ஏரி அமைந்துள்ளதால், யாயா சோ ஏரியானது பறவைகளின் சொர்க்கம் என்று அறியப் படுகிறது.
- இது வரித்தலை வாத்து, கருங்கழுத்து கொக்கு மற்றும் பிராமினி வாத்து போன்ற ஏராளமான பறவைகள் மற்றும் விலங்குகளுக்கு இனப்பெருக்க இடமாக விளங்கச் செய்கிறது.
- இந்தியாவில் கருங்கழுத்து கொக்குகள் அதிக அளவில் இனப்பெருக்கம் செய்யும் இடங்களில் இதுவும் ஒன்றாகும்.




## இந்தியாவின் மிகப்பெரிய ஹெலிகாப்டர் தயாரிப்பு ஆலை



- கர்நாடகாவில் உள்ள துமகுருவில் அமைக்கப்பட்டுள்ள இந்தியாவின் மிகப்பெரிய ஹெலிகாப்டர் தயாரிப்பு ஆலையினைப் பிரதமர் அவர்கள் திறந்து வைத்தார்.
- 2016 ஆம் ஆண்டில் பிரதமர் அவர்கள் இந்த ஆலைக்கான அடிக்கல்லினை நாட்டினார்.
- ஹெலிகாப்டர்கள் பாதுகாப்புப் படையில் தரைப்படைகளுக்கு போதுமான வான்வழி உதவிகளை வழங்கச் செய்தல் மற்றும் எதிரியின் வான்பாதுகாப்பினைச் சீர் குலைக்கச் செய்தல் போன்ற முக்கியப் பங்குகளை வகிக்கின்றன.

## ஆசியாவின் முதல் மிதவைத் திருவிழா

- காந்திசாகர் மிதவைத் திருவிழா எனப்படும் ஆசியாவின் முதலாவது மிதவைத் திரு விழாவானது மத்தியப் பிரதேசத்தில் உள்ள மண்ட்சூரில் நடைபெற்றது.
- மத்தியப் பிரதேசத்தில் உள்ள மண்ட்சூருக்குச் செல்லும் சுற்றுலாப் பயணிகளுக்கு ஒரு தனித்துவமான கூடாரம் அமைத்தல் அனுபவம் மற்றும் சாகச நடவடிக்கை அனுபவம் ஆகியவற்றை வழங்குவதற்காக இந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- இத்தகைய முதல் வகையான மிதவைத் திருவிழாவில் நிலம், காற்று மற்றும் நீர் சார்ந்த சாகசங்கள் இடம் பெற்றிருக்கும்.

## FAME திட்டத் தரவரிசை

- FAME II திட்ட மானியத்தைப் பயன்படுத்திக் கொண்ட மகாராஷ்டிரா மாநிலமானது மின்சார வாகனங்களின் மொத்த விற்பனையில் முன்னணியில் உள்ளது.
- அதைத் தொடர்ந்து கர்நாடகா, தமிழ்நாடு, குஜராத், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்கள் இடம் பெற்றுள்ளன.
- இந்தத் திட்டத்தின் மூலம் வாங்கப்பட்ட 0.85 மில்லியன் மின்சார வாகனங்களில், முன்னணியில் உள்ள இந்த ஐந்து மாநிலங்களால் இணைந்து வாங்கப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை 56%க்கும் அதிகமானவையாகும்.
- வழங்கப்படும் FAME II திட்ட மானியப் புள்ளி விவரங்களின் படி, நாட்டில் விற்கப்படும் 6,397 நான்கு சக்கர மின்சார வாகனங்களில் 93% விற்பனை இந்த ஆறு மாநிலங்களால் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

**THE PECKING ORDER**

| State | Total EV sales where FAME II was availed | | Two-wheeler EV sales based on FAME II subsidy | Motor vehicle registration share as on March 19 (%) |
|---|---|---|---|---|
| Maharashtra | 143,986 | (16.8) | 139,109 | 12 |
| Karnataka | 120,070 | (14.05)* | 112,997 | 7.1 |
| Tamil Nadu | 82,955 | (9.71) | 80,784 | 10.2 |
| Gujarat | 72,302 | (8.46) | 70,778 | 8.5 |
| Rajasthan | 60,584 | (7.09) | 58,185 | 5.9 |
| Uttar Pradesh | 39,572 | (4.6) | 11,707 | 11 |
| Kerala | 39,379 | (4.6) | 36,313 | 4.4 |

## குழந்தைத் திருமணத் தடுப்பு நடவடிக்கை

- அசாம் மாநிலக் காவல்துறையானது, கடந்த சில நாட்களாக மாநிலம் முழுவதும் மேற் கொள்ளப்பட்ட குழந்தைத் திருமணங்களுக்கு எதிரான நடவடிக்கையில் 2,000க்கும் மேற்பட்ட ஆண்களைக் கைது செய்துள்ளது.
- கைது செய்யப்பட்டவர்கள் மீது கடுமையான POCSO சட்டம் மற்றும் குழந்தை திருமணத் தடைச் சட்டம் ஆகியவற்றின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.
- 14 முதல் 18 வயதுக்குட்பட்டப் பெண்களைத் திருமணம் செய்தவர்கள் மீது 2006 ஆம் ஆண்டு குழந்தை திருமணத் தடைச் சட்டத்தின் கீழ் வழக்குகள் பதிவு செய்யப்படும்.



WHAT LAW SAYS

➤ The Prohibition of Child Marriage Act, 2006 aims to eradicate child marriage

➤ The centre enacted the Act by replacing the earlier legislation of Child Marriage Restraint Act 1929

PUNISHMENT

➤ If a person performs, conducts, directs or abets any child marriage, he shall be punishable with rigorous imprisonment for 2 years or with fine which may extend to Rs1lakh or both

WHEN MARRIAGE IS NULL AND VOID

➤ Where a minor is taken or enticed out of the custody of legal guardian

➤ When a minor is compelled by any deceitful means to go from any place

➤ If a minor is sold for purpose of marriage and go through a form of marriage

➤ If a minor is married after which the minor is sold off or trafficked or used for immoral purpose


## சிற்பப் பூங்கா

- ராஜஸ்தான் மாநில தலைமைச் செயலாளர் உஷா சர்மா, டெல்லியில் உள்ள பிகானீர் இல்லத்தில் அமைக்கப்பட்டுள்ள சிற்பக் கலை சார்ந்த ஒரு பூங்காவினைத் திறந்து வைத்தார்.
- இந்த சிற்பப் பூங்காவில் நவீன கால மற்றும் சமகால அளவிலான கலை மற்றும் கலாச்சாரத்தினைச் சேர்ந்த சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன.
- இந்த சிற்பப் பூங்காவில், இந்தியா மற்றும் வெளிநாடுகளில் உள்ள புகழ்பெற்ற சிற்பிகளின் சிற்பங்கள் / சிலைகள், வளர்ந்து வரும் கலைஞர்களின் சிலைகள் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன.



## ஜம்மு & காஷ்மீரில் லித்தியம் கனிம இருப்புகள்

- இந்தியாவிலேயே முதன்முறையாக ஜம்மு & காஷ்மீரில் லித்தியம் கனிம இருப்புகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- ஜம்மு & காஷ்மீரின் ரியாசி மாவட்டத்தில் 5.9 மில்லியன் டன் கனிம இருப்புக்கள் கண்டறியப் பட்டுள்ளன.
- லித்தியம் என்பது ஓர் இரும்பு அல்லாத உலோகம் மற்றும் மின்சார வாகனங்களின் மின்கலங்களில் உள்ள முக்கிய கூறுகளில் ஒன்றாகும்.
- தற்போது, இந்தியா லித்தியம், நிக்கல் மற்றும் கோபால்ட் போன்ற பல கனிமங்களுக்கு இறக்குமதியையே சார்ந்து உள்ளது.
- லித்தியம் மற்றும் தங்கம் உள்ளிட்ட மொத்தம் 51 கனிமத் தொகுதிகள் பல்வேறு மாநில அரசுகளிடம் ஒப்படைக்கப்பட்டன.
- இந்த 51 கனிமத் தொகுதிகளில், 5 தொகுதிகள் தங்கம் மற்றும் பிற தொகுதிகள் பொட்டசியம், மாலிப்டினம், மூல உலோகங்கள் போன்றவற்றின் இருப்புகள் ஆகும்.




## இந்தூர் மாநகராட்சிக் கழக பசுமைப் பத்திரங்கள்

Response to Indore Municipal Corporation's Green Bonds Issue

| Category | Issue Size | | Bonds Subscribed | | Amount Oversubscribed | | No. of Times Oversubscribed |
|---|---|---|---|---|---|---|---|
| | (₹Billion) | (~$ Billion) | (₹Billion) | (~$ Billion) | (₹Billion) | (~$ Billion) | |
| Institution | 0.61 | 0.007 | 1.074 | 0.013 | -0.464 | -0.006 | 1.76 |
| Corporate | 0.61 | 0.007 | 1.218 | 0.015 | -0.608 | -0.007 | 2 |
| HNI | 0.61 | 0.007 | 0.020 | 0.000 | 0.590 | 0.007 | 0.03 |
| Retail | 0.61 | 0.007 | 0.718 | 0.009 | -0.108 | -0.001 | 1.18 |
| *Total* | *2.44* | 0.030 | *3.029* | 0.037 | *-0.589* | -0.007 | *1.24* |

- ரூ.244 கோடி மதிப்பிலான இந்தூர் மாநகராட்சிக் கழகத்தின் (IMC) பசுமைப் பத்திரம் ஆனது, அறிவிக்கப்பட்ட மூன்று மணி நேரத்திற்குள் குறிப்பிட்ட வரம்பினை விட அதிகமாக அளவிற்கு வரவேற்கப் பட்டது.
- இந்தூர் மாநகராட்சிக் கழகமானது பொதுப் பங்கு வெளியீட்டினை அறிமுகப்படுத்திய நாட்டின் முதல் ஆட்சி அமைப்பு ஆகும்.
- இதன் மூலம், அந்த உள்ளாட்சி அமைப்பானது அதன் மின்சார செலவைக் குறைக்கச் செய்வதற்காக கார்கோன் எனுமிடத்தில் 100 ஏக்கர் நிலப்பரப்பில் 60 மெகாவாட் திறன் கொண்ட மாபெரும் சூரியசக்தி மின் உற்பத்தி நிலையத்தை நிறுவ உள்ளது.

## முதல் தேசிய மெட்ரோ இரயில் தகவல் மையம்

- புது டெல்லியில், முதலாவது தேசிய மெட்ரோ இரயில் தகவல் மையத்தினை உருவாக்கும் பணி நடைபெற்று வருகிறது.
- தேசிய மெட்ரோ இரயில் தகவல் மையமானது, இந்தியா முழுவதும் உள்ள பல நகரங்களில் அமைந்துள்ள மெட்ரோ வலையமைப்புகள் மற்றும் போக்குவரத்து அமைப்புகளின் விரிவாக்கம் பற்றிய தகவல்களை வழங்கும்.
- இந்தக் கட்டிடமானது, இந்திய மெட்ரோ இரயில் வலையமைப்புகளுக்கான தகவல் மற்றும் புதுமையாக்க மையமாக செயல்படுவதனை நோக்கமாகக் கொண்டதாகும்.
- இது சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருக்கும் பேச்சுவார்த்தை மற்றும் ஒத்துழைப்பு ஆகியவற்றுக்கான ஒரு தளத்தை இது வழங்கும்.



## 'ஒரு குடும்பம், ஓர் அடையாள அட்டை' திட்டத்திற்கான இணைய தளம்

- உத்தரப் பிரதேச அரசானது, 'ஒரு குடும்பம் ஓர் அடையாளம்' என்ற திட்டத்தின் கீழ் குடும்ப அடையாள அட்டையினை உருவாக்கச் செய்வதற்கான ஒரு இணையத் தளத்தினைத் தொடங்கியுள்ளது.
- 'ஒரு குடும்பத்திற்கு ஒரு வேலைவாய்ப்பு' என்ற ஒரு திட்டத்தினைச் செயல் படுத்தச் செய்வதற்கான ஒரு செயல்பாட்டு அலகாக குடும்பங்களை அடையாளம் காண்பதை நோக்கமாகக் கொண்டு இந்த இணைய தளமானது தொடங்கப் பட்டுள்ளது.
- தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் பயன்களைப் பெற தகுதியற்ற குடும்பங்கள் இந்த அடையாள அட்டையைப் பெற முடியும்.

- குடும்ப அட்டை வைத்திருக்கும் குடும்பங்களின் அந்த அடையாள அட்டையானது அவர்களின் குடும்ப அடையாளமாகக் கருதப்படும்.




## உறைந்த ஏரி மீதான இந்தியாவின் முதல் மாரத்தான் போட்டி

- லடாக்கின் பாங்காங் சோ ஏரியில் உறைந்த ஏரி மீதான இந்தியாவின் முதல் மாரத்தான் போட்டி நடைபெற உள்ளது.
- லுகுங் என்ற இடத்தினை ஆரம்பமாகக் கொண்ட இந்த 21 கிலோமீட்டர் மாரத்தான் போட்டியானது மான் கிராமத்தில் நிறைவடைய உள்ளது.
- இந்தியா மற்றும் வெளிநாடுகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 75 விளையாட்டு வீரர்கள் இந்த மாரத்தான் போட்டியில் பங்கேற்கின்றனர்.
- இது உலகின் மிக உயரமான இடத்தில் உள்ள உறைந்த ஏரி மீதான இந்தியாவின் முதல் மாரத்தான் போட்டி என்ற கின்னஸ் உலக சாதனையினைப் படைக்கும் வாய்ப்பினை வழங்குகிறது.



## சர்வதேச கைவினைப் பொருட்கள் உச்சி மாநாடு

- ஒடிசா மாநில முதல்வர் நவீன் பட்நாயக் அவர்கள் ஜாஜ்பூர் எனுமிடத்தில் நடைபெறும் 'சர்வதேச கைவினைப் பொருட்கள் உச்சி மாநாட்டினை' தொடங்கி வைத்தார்.
- முன்னோடியான சில கைவினைஞர்கள், கலாச்சாரம் மற்றும் கலை ஆர்வலர்களின் சங்கமமாக இந்த முதல் வகையான கைவினைப் பொருட்கள் உச்சி மாநாடானது நடத்தப் படுகிறது.
- ஐக்கிய நாடுகள் சபையின் நான்கு முகமைகளும் யுனெஸ்கோ அமைப்பின் ஐந்து புதுமையாக்க நகரங்களும் அந்த மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து அந்த மாநில அரசாங்கத்தின் சார்பாக இந்த இலட்சியமிக்க மற்றும் முற்போக்குச் சிந்தனை கொண்ட இந்த நிகழ்வினைச் செயலாக்க உள்ளன.

## முதலாவது இரயில் கட்டுப்பாட்டு மற்றும் மேற்பார்வை அமைப்பு

- டெல்லி மெட்ரோ இரயிலின் சிவப்பு நிற வழித்தடத்தில் செயல்படுத்தப்படுவதற்காக உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட சமிக்ஞை தொழில்நுட்பம் அறிமுகப் படுத்தப் பட்டு உள்ளது.
- இதுவே இந்தியாவின் முதல் உள்நாட்டுத் தானியங்கி இரயில் மேற்பார்வை அமைப்பு (i-ATS) ஆகும்.
- இது DMRC மற்றும் பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் (BEL) ஆகியவற்றின் ஒரு கூட்டு முயற்சியினால் உருவாக்கப்பட்டுள்ளது.

## மலையாள மொழியில் உயர்நீதிமன்ற தீர்ப்புகள்

- சமீபத்தில் கேரள மாநில உயர் நீதிமன்றத்தின் இரண்டு தீர்ப்புகளானது மலையாள மொழியில் மொழி பெயர்க்கப்பட்டு நீதிமன்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டது.
- இதன் மூலம் நாட்டிலேயே முதல் முறையாக பிராந்திய மொழியில் தீர்ப்புகளை வெளியிடும் நீதிமன்றம் என்ற பெருமையை இது பெற்றுள்ளது.
- நீதிமன்ற தீர்ப்புகளைப் பிராந்திய மொழிகளில் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று உச்ச நீதிமன்றமும் வலியுறுத்தி வந்தது.

## B20 மாநாடு

- மணிப்பூர் மாநில அரசானது வணிகம் 20 (B20) மாநாட்டை நடத்தியது.
- இது உலகளாவிய வணிகச் சமூகத்திற்கான ஒரு அதிகாரப்பூர்வ G20 பேச்சுவார்த்தை மன்றமாகும்.
- இந்த மாநாட்டின் கருத்துரு, 'நிலையான வளர்ச்சி மற்றும் மேம்பாடு' என்பதாகும்.

## வேளாண் துறைக்கான இந்தியாவின் முதல் உரையாடு மென்பொருள்

- அமா க்ருஷ் AI எனப்படும் வேளாண் துறைக்கான இந்தியாவின் முதல் செயற்கை நுண்ணறிவு உரையாடு மென்பொருளானது 'க்ருஷி ஒடிசா 2023' நிகழ்வின் நிறைவுக் கூட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.

- இந்த உரையாடு மென்பொருளானது சிறந்த வேளாண் நடைமுறைகள், அரசுத் திட்டங்கள் மற்றும் 40க்கும் மேற்பட்ட வணிக மற்றும் கூட்டுறவு வங்கிகளின் கடன் சேவைகள் குறித்தத் தகவல்களை விவசாயிகள் பெற உதவும்.
- இது சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட ChatGPT அமைப்பு மற்றும் சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் உருவாக்கிய மொழி சார் உரையாடு மென்பொருள் தளமான பாஷினி ஆகியவற்றினைப் பயன்படுத்தி உருவாக்கப் பட்டு உள்ளது.

## கடல்சார் இடஞ்சார்ந்த திட்டமிடல் கட்டமைப்பு

- நாட்டின் முதல் கடல்சார் இடஞ்சார்ந்த திட்டமிடல் (MSP) கட்டமைப்பினைப் புதுச்சேரி வெளியிட்டுள்ளது.
- இது இந்திய-நார்வே ஒருங்கிணைந்தப் பெருங்கடல் முன்னெடுப்பின் கீழான ஒரு ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாகும்.
- இது கடல்சார் வளங்களின் நிலையான மேலாண்மை மற்றும் கடலோர சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றுடன் சேர்த்து, வளர்ச்சியை சமநிலைப்படுத்தச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## கழிவுநீர் சாக்கடைக் குழாய் சுத்திகரிப்பு எந்திரங்கள்

- கேரள அரசானது, கழிவுநீர் சாக்கடை சுத்தம் செய்வதற்காக பாண்டிகூட் என்ற கழிவு நீர் சாக்கடை சுத்திகரிப்பு எந்திரத்தினை அறிமுகப்படுத்தியது.
- இதன்மூலம் எந்திரத் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி அனைத்து கழிவுநீர் சாக்கடை குழாய்களையும் சுத்தம் செய்யும் இந்தியாவின் முதல் மாநிலமாக இது திகழ்கிறது.
- பாண்டிகூட் உலகின் முதல் கழிவுநீர் சாக்கடைக் குழாய் சுத்திகரிப்பு எந்திரமாகும்.
- கேரளாவில் உள்ள ஜென்ரோபோட்டிக்ஸ் நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட பாண்டிகூட், சமீபத்தில் நடைபெற்ற 2022 ஆம் ஆண்டு ஹடில் குளோபல் விருது என்ற விழாவில் 'கேரளத்தின் கௌரவம்' என்ற விருதைப் பெற்றுள்ளது.
- பாண்டிகூட் எந்திரங்கள் தற்போது இந்தியாவில் உள்ள 17 மாநிலங்கள் மற்றும் மூன்று ஒன்றியப் பிரதேசங்களில் உள்ள சில நகரங்களில் பயன்படுத்தப்படுகின்றன.



# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்


## கிருஷி மஹோத்சவம்

- இரண்டு நாட்கள் அளவிலான மாபெரும் கிருஷி மஹோத்சவக் கண்காட்சி மற்றும் பயிற்சி நிகழ்வானது ராஜஸ்தானின் கோட்டா எனுமிடத்தில் நடைபெற்றது.
- இது மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நலன் துறை அமைச்சகத்தினால் ஏற்பாடு செய்யப் பட்டது.
- இந்த நிகழ்வில் விவசாயிகளுக்குத் தோட்டக்கலை, வேளாண்மை, கால்நடை வளர்ப்பு மற்றும் இயற்கை வேளாண்மை முறை ஆகியவற்றில் பயிற்சி வழங்கப் பட்டது.
- வேளாண் உள்கட்டமைப்பு நிதி குறித்த ஒரு சிறப்புப் பயிலரங்கமும் இதில் நடைபெற்றது.

## இந்தியா-ஐக்கிய இராஜ்ஜியம் ஆகிய நாடுகளின் சாதனையாளர்களுக்கான விருது

- முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களுக்கு சமீபத்தில் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.
- பொருளாதாரம் மற்றும் அரசியல் வாழ்வில் அவர் ஆற்றியப் பங்களிப்பிற்காக என்று லண்டனில் உள்ள இந்தியா-ஐக்கிய இராஜ்ஜியம் ஆகிய நாடுகளின் சாதனையாளர் விருதுகள் என்ற அமைப்பினால் இந்த விருதானது வழங்கப்படுகிறது.
- இந்தியா சுதந்திரம் அடைந்த 75 ஆண்டுகளைக் குறிக்கும் வகையில், முதன் முறையாக இந்தியா-ஐக்கிய இராஜ்ஜியம் ஆகிய இரண்டு நாடுகளின் முக்கியச் சாதனையாளர்களுக்கான விருதுகள் ஆனது, 75 உயர் சாதனையாளர்களுக்கும், சில முக்கியச் சாதனையாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

## முன்னாள் சட்ட அமைச்சர் சாந்தி பூஷன்



- முன்னாள் மத்திய சட்ட அமைச்சரும், ஒரு பிரபலச் சட்ட நிபுணருமான சாந்தி பூஷன் சமீபத்தில் காலமானார்.
- 1975 ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் அப்போதையப் பிரதமர் இந்திரா காந்தி தேர்ந்தெடுக்கப் பட்டதனை ரத்து செய்ய வழிவகுத்த ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க வழக்கில் அரசியல்வாதியான ராஜ் நரேன் சார்பில் இவர் ஆஜரானார்.
- வரலாற்றுச் சிறப்புமிக்க ராஜ் நரேன் Vs இந்திரா நேரு காந்தி வழக்கில், 1975 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் அலகாபாத் உயர்நீதிமன்றமானது இந்திரா காந்தியின் வெற்றியை ரத்து

செய்து மேலும் ஆறு ஆண்டுகளுக்குத் தேர்தலில் போட்டியிடுவதற்கு அவரைத் தகுதி நீக்கம் செய்தது.

- மொரார்ஜி தேசாய் அமைச்சரவையில் 1977 ஆம் ஆண்டு முதல் 1979 ஆம் ஆண்டு வரை சட்ட அமைச்சராக பூஷன் பணியாற்றினார்.
- சட்ட அமைச்சராக அவர் 1978 ஆம் ஆண்டில் 44வது அரசியல் சட்டத் திருத்தத்தினை அறிமுகம் செய்தார்.

## வாணி ஜெயராம்


- பல்வேறு மொழிகளில் 10,000 பாடல்களுக்கு மேல் பாடிய பிரபலப் பின்னணிப் பாடகி வாணி ஜெயராம் (77) சமீபத்தில் காலமானார்.
- இந்தியாவின் மூன்றாவது உயரிய குடிமகன் விருதான பத்ம பூஷன் விருதானது சமீபத்தில் அவருக்கு வழங்கப்பட்டது.
- இவர் கடந்த 50 ஆண்டுகளாக திரைப்படத் துறையில் ஓர் அங்கமாக விளங்கினார்.
- மேலும் இவர் சிறந்தப் பின்னணிப் பாடகிக்கான தேசிய விருதினை மூன்று முறை பெற்று உள்ளார்.
- தமிழ்நாடு, கேரளா, மகாராஷ்டிரா, குஜராத், ஒடிசா ஆகிய மாநிலங்களில், மாநில அரசின் விருதுகளையும் இவர் பெற்றுள்ளார்.



## பர்வேஸ் முஷாரப்

- பாகிஸ்தானின் முன்னாள் அதிபர் ஜெனரல் பர்வேஸ் முஷாரப் (79, ஓய்வு) சமீபத்தில் காலமானார்.
- 1999 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வெற்றிகரமான வன்முறையற்ற இராணுவப் புரட்சிக்குப் பிறகு பாகிஸ்தானின் பத்தாவது அதிபராக இவர் பொறுபேற்றார்.
- அவர் 1998 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரை பாகிஸ்தானின் 10வது ராணுவக் குழுமத்தின் தலைவராகவும், 1998 ஆம் ஆண்டு முதல் 2007 ஆம் ஆண்டு வரை 7வது உயர்மட்டத் தலைவராகவும் பணியாற்றினார்.
- ஸ்ரீநகரில் இருந்து லே பகுதியின் இணைப்புகளை துண்டிப்பதற்காக இந்தியாவுக்குள் நுழைய தனது வீரர்களுக்கு உத்தரவிட்டதன் வகையில் அவர் கார்கில் போரின் சிற்பி என்று அறியப்பட்டார்.

- ❖ பர்வேஸ் முஷாரப் அதிபராக இருந்த போது தான் 2001 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் இந்தியா வந்தார்.
- ❖ மருத்துவச் சிகிச்சைக்காக 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் துபாய் சென்ற ஜெனரல் முஷாரப், பாகிஸ்தானுக்குத் திரும்பவில்லை.
- ❖ 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், பாகிஸ்தானின் சிறப்பு நீதிமன்றம் ஆனது 2007 ஆம் ஆண்டில் பாகிஸ்தானின் அரசியலமைப்பை இடைநிறுத்தியதற்காக ஜெனரல் பர்வேஸ் முஷாரப்புக்கு மரண தண்டனை விதித்தது.
- ❖ முஷாரஃப் இந்த உத்தரவை எதிர்த்து வழக்கு தாக்கல் செய்தார்.
- ❖ லாகூர் உயர் நீதிமன்றம் ஆனது 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இந்த மரணத் தண்டனையை ரத்து செய்து, முந்தைய விசாரணையினை அரசியலமைப்பிற்கு முரணானது என்று தீர்ப்பு வழங்கியது.




## கிராமி விருது 2023

- ❖ இந்திய நாட்டினைச் சேர்ந்த ரிக்கி கேஜ் தனது Divine Tides என்ற தனது இசைப் பாடல் தொகுப்பிற்காக இந்த ஆண்டிற்கான கிராமி விருதை வென்றுள்ளார்.
- ❖ அவரது இசைப் பாடல் தொகுப்பானது, சிறந்த அதிவேக இசைப் பாடல் தொகுப்பு என்ற பிரிவில் இந்த விருதிற்குப் பரிந்துரைக்கப்பட்டது.
- ❖ மூன்று கிராமி விருதுகளைப் பெற்ற ஒரே இந்தியர் மற்றும் இந்த விருது பெறும் நான்காவது இந்தியர் என்ற பெருமையை கேஜ் பெற்றுள்ளார்.

## சூரஜ்குண்ட் கண்காட்சி 2023

- ❖ சூரஜ்குண்ட் சர்வதேச கைவினைப் பொருட்கள் கண்காட்சி ஆனது, ஃபரிதாபாத்தில் உள்ள சூரஜ்குண்டில் நடத்தப்படுகிறது.
- ❖ மத்திய சுற்றுலா, ஜவுளி, கலாச்சாரம் மற்றும் வெளியுறவு அமைச்சகங்களுடன் இணைந்து சூரஜ்குண்ட் கண்காட்சி ஆணையம் மற்றும் ஹரியானா சுற்றுலாத் துறை இந்தக் கண்காட்சியினை நடத்துகின்றன.
- ❖ இந்தியா முழுவதிலும் இருந்து சிறந்தக் கைவினைஞர்கள் இந்தக் கைவினைப் பொருட்கள் கண்காட்சியில் பங்கேற்க உள்ளனர்.

- சூரஜ்குண்ட் சர்வதேச கைவினைப் பொருட்கள் கண்காட்சி என்பது உலகின் மிகப் பெரிய கைவினைப் பொருட்கள் கண்காட்சியாகும்.

## "உலகின் அறிவுத் திறன்மிக்க" மாணவர்கள் பட்டியல்

- இந்திய-அமெரிக்கப் பள்ளி மாணவியான சென்னையினைச் சேர்ந்த நடாஷா பெரிய நாயகம் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக "உலகின் அறிவுத் திறன் மிக்க" மாணவர்கள் பட்டியலில் இடம் பிடித்து உள்ளார்.
- 13 வயதான நடாஷா, நியூ ஜெர்சியில் உள்ள புளோரன்ஸ் எம் கவுடினியர் நடுநிலைப் பள்ளியில் படித்து வருகிறார்.
- இந்தப் பட்டியலை அமெரிக்காவில் அமைந்துள்ள ஜான்ஸ் ஹாப்கின்ஸ் சென்டர் ஃபார் டேலண்டட் யூத் என்ற அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ளது.
- இது 76 நாடுகளில் உள்ள 15,000க்கும் மேற்பட்ட மாணவர்களின் மேல்நிலைத் தேர்வுகளின் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு இப்பட்டியலானது தயாரிக்கப் பட்டது.
- அவரது சமீபத்தியத் தேர்வு பங்கேற்பில் இவர் அனைத்து மாணவர்களை விடவும் அதிக மதிப்பெண்களைப் பெற்றார்.



## தங்கப் புத்தகம் விருதுகள் - 2023

- 2023 ஆம் ஆண்டிற்கான "தங்கப் புத்தகம் விருதுகளின்" வெற்றியாளர் பெயரானது அறிவிக்கப் பட்டுள்ளது.



- இந்த மதிப்புமிக்க விருதானது, இலக்கியத்தில் சிறந்தப் புத்தகத்தை அங்கீகரித்து பாராட்டுகிறது.
- தங்கப் புத்தகம் விருதுகள் ஆனது குறிப்பிடத்தக்கத் தாக்கத்தை ஏற்படுத்திய தனித்துவம் மிக்க இலக்கியப் படைப்புகளை அங்கீகரிக்கிறது.
- இந்த ஆண்டு இந்தியாவில் 76000க்கும் மேற்பட்ட புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளன.
- ஜெயப்பிரகாஷ் எழுதிய ‘அகலிகை’ புத்தகம் இந்த விருதுகளை வென்ற புத்தகங்களுள் ஒன்றாகும்.

## ATD சிறப்பு விருதுகள் 2023

- NTPC லிமிடெட் நிறுவனத்திற்கு, அமெரிக்காவின் திறன் மேம்பாட்டுச் சங்கத்தின் (ATD) 'ATD சிறப்பு விருதுகள் 2023' வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.
- NTPC லிமிடெட் இந்த விருதினைப் பெறுவது இது ஆறாவது முறையாகும்.
- திறன் மேம்பாட்டுத் துறையில் நிறுவன அளவிலான ஒரு வெற்றியை வெளிப்படுத்தச் செய்வதற்காக இந்த விருதானது வழங்கப்படுகிறது.
- இந்த விருதானது NTPC நிறுவனத்தின் சமகால மனிதவள நடைமுறைகளுக்கான ஒரு சான்றாகும்.
- ATD சிறப்பு விருதுகள் ஆனது, திறன் மேம்பாடு மூலம் நிறுவனத்தினைச் சிறப்பாக வெளிப்படுத்தும் நிறுவனங்களை அங்கீகரிக்கிறது.
- உலகெங்கிலும் உள்ள சிறிய மற்றும் பெரிய தனியார், பொது மற்றும் இலாப நோக்கற்ற நிறுவனங்கள் ஆகியவற்றிற்கும் இந்த விருதானது வழங்கப்படுகிறது.




## தமிழ்நாட்டினைச் சேர்ந்த புதிய ஆளுநர்

- தமிழ்நாட்டினைச் சேர்ந்தவரும் பாரதிய ஜனதா கட்சியின் மூத்தத் தலைவருமான C. P. ராதாகிருஷ்ணன் ஜார்க்கண்ட் மாநிலத்தின் புதிய ஆளுநராக நியமிக்கப் பட்டு உள்ளார் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.
- இவர் கோவை தொகுதியிலிருந்து இரண்டு முறை மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.

- 2016 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை அகில இந்தியத் தென்னை நார் வாரியத்தின் தலைவராக இவர் பணியாற்றினார்.
- தற்போது அந்த மாநில ஆளுநராக உள்ள ரமேஷ் பெய்ஸ் என்பவருக்குப் பதிலாக இவர் நியமிக்கப்பட உள்ளார்.
- 2014 ஆம் ஆண்டு முதல் ஆளுநர்களாக நியமிக்கப்பட்ட தமிழ்நாட்டினைச் சேர்ந்த நபர்களின் எண்ணிக்கை ஐந்தாக உயர்ந்துள்ளது.




## தயானந்த சரஸ்வதி அவர்களின் 200வது பிறந்தநாள் (1824-1883)

- தயானந்த சரஸ்வதி அவர்கள், 1824 ஆம் ஆண்டு பிப்ரவரி 12 ஆம் தேதியன்று பிறந்தார்.
- ஒரு சமூக சீர்திருத்தவாதியான அவர் அந்தக் காலத்தில் நிலவிய சமூக ஏற்றத் தாழ்வுகளை எதிர்த்துப் போராடுவதற்காக 1875 ஆம் ஆண்டில் ஆர்ய சமாஜம் என்ற அமைப்பினை நிறுவினார்.
- ஒரு ஏகத்துவ இந்து ஒழுங்கமைப்பான இது மரபுவழி இந்து மதத்தின் சடங்கு சார்ந்த அத்துமீறல்கள் மற்றும் சமூகக் கோட்பாடுகளை நிராகரித்து மற்றும் வேதப் போதனைகளின் அடிப்படையிலான ஒன்றுபட்ட இந்துச் சமுதாயத்தை உருவாக்கச் செய்வதனை ஊக்குவித்தது.
- சமூகச் சீர்திருத்தங்கள் மற்றும் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தல் ஆகியவற்றின் மூலம் நாட்டின் கலாச்சாரம் மற்றும் சமூக விழிப்புணர்வில் ஆர்ய சமாஜம் முக்கியப் பங்கு வகித்துள்ளது.
- அவரது மகத்தானப் படைப்பான சத்யார்த் பிரகாஷ் (1875), "வேதக் கொள்கைகளுக்குத் திரும்புவதை" வலியுறுத்தியது.
- இஸ்லாமிய அல்லது கிறித்தவ மதத்திற்கு மாறியவர்களை மீண்டும் இந்து மதத்திற்கு கொண்டு வருவதற்கான சுத்தி என்ற கருத்தை அவர் ஆதரித்தார்.



## மதிப்புமிக்க விண்வெளி நிறுவன விருது

- ஜேம்ஸ் வெப் தொலைநோக்கியானது, சமீபத்தில் ஒரு விண்வெளி நிறுவன விருதைப் பெற்றது.
- இது சூரியனைச் சுற்றி வருகிற ஓர் அகச்சிவப்பு விண்வெளி தொலைநோக்கியாகும்.
- இந்தத் தொலைநோக்கியானது ஐரோப்பிய விண்வெளி நிறுவனம், நாசா மற்றும் கனடிய விண்வெளி நிறுவனம் ஆகியவற்றினால் இணைந்து உருவாக்கப் பட்டதாகும்.
- இது ஹப்பிள் தொலைநோக்கியின் வழியில் உருவாக்கப்பட்டதாகும்.
- இந்த விருதானது விண்வெளித் துறையில் சில குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை உருவாக்கும் தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களினை அங்கீகரிக்கிற ஒரு மதிப்புமிக்க விருதாகும்.
- ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி எடுத்த முதல் புகைப்படம் SMACS 0723 என்ற அண்டத் தொகுப்பின் புகைப்படமாகும்.




## ஷோய்சிரோ டொயோடா – ஜப்பான்



- டொயோட்டா நிறுவனத்தின் கௌரவத் தலைவரும், அதன் நிறுவனரின் மகனுமான ஷோய்சிரோ டொயோட்டா காலமானார்.
- டொயோட்டா நிறுவனத்தினை உலகளவில் கொண்டு செல்வதற்கான முயற்சியின் ஒரு சக்தியாக அவர் மதிக்கப் படுகிறார்.

- அவர் 1982 ஆம் ஆண்டில் அந்த நிறுவனத்தின் தலைவரானதோடு, சர்வதேசச் சந்தைகளில் அந்த நிறுவனத்தின் வளர்ச்சியை வழி நடத்திச் செல்லவும் உதவினார்.
- அவர் 2007 ஆம் ஆண்டில் அமெரிக்க வாகனப் புகழ் மன்றத்தில் சேர்க்கப்பட்டார்.


## உஸ்தாத் பிஸ்மில்லா கான் யுவ புரஸ்கார் விருது




- இந்த விருதினை நடனம், இசை, நாடகம் ஆகிய துறைகளில் சிறந்து விளங்கும் சில கலைஞர்களுக்குச் சங்கீத நாடக அகாடமி வழங்குகிறது.
- வடகிழக்கு இந்தியாவைச் சேர்ந்த 19 கலைஞர்கள் இந்த விருதினைப் பெற்றனர்.
- தற்போது 2019, 2020 மற்றும் 2021 ஆகிய ஆண்டுகளுக்கான விருதுகள் வழங்கப்பட்டன.
- இது 40 வயதிற்குட்பட்டக் கலைஞர்களுக்கு ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது.
- ஒவ்வோர் ஆண்டும், 33க்கும் மேற்பட்ட கலைஞர்களுக்கு இந்த விருது வழங்கப் படுகிறது.
- உஸ்தாத் பிஸ்மில்லா கான் யுவ புரஸ்கார் விருதானது 2006 ஆம் ஆண்டு முதல் வழங்கப் பட்டு வருகிறது.
- மத்தியக் கலாச்சாரம் மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் இந்த விருதுகளை வழங்கினார்.

## பிரசிடென்ட்ஸ் கலர் விருது – அரியானா

- குடியரசுத் தலைவர் சார்பில் மத்திய உள்துறை அமைச்சர் இந்த விருதினை வழங்கினார்.
- ஹரியானா காவல்துறையின் சிறப்பானச் சேவையைப் பாராட்டி பிரசிடென்ட்ஸ் கலர் விருதானது வழங்கப் பட்டது.
- பிரசிடென்ட்ஸ் கலர் விருது என்பது நாட்டிற்கு இராணுவம், துணை இராணுவம் அல்லது காவல்துறைப் பிரிவு ஆகியவை ஆற்றும் சேவைகளுக்கான அங்கீகாரத்தின் அடையாளமாக வழங்கப் படும் ஒரு சிறப்பு விருதாகும்.




## தாதாசாகேப் பால்கே விருதுகள்

- காந்தாரா திரைப்படத்தின் நடிகர்-திரைப்படத் தயாரிப்பாளரான ரிஷப் ஷெட்டி, தாதாசாகேப் பால்கே விருது விழாவில் மிகவும் நம்பிக்கைக்குரிய நடிகருக்கான விருதைப் பெற்றார்.
- துல்கர் சல்மான், 'சுப்: ரிவெஞ்ச் ஆஃப் தி ஆர்ட்டிஸ்ட்' என்ற படத்தில் ஏற்ற வில்லன் கதாபாத்திரத்திற்காக சிறந்த நடிகர் என்ற விருதை வென்றார்.
- S.S. ராஜமௌலியின் RRR திரைப்படம் இந்த ஆண்டின் சிறந்தத் திரைப்படத்திற்கான தாதா சாகேப் பால்கே விருதை வென்றது.



## ஆண்டின் சிறந்தப் புகைப்படங்களுக்கான விருதுகள்

- இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பொறியாளர் மற்றும் பொழுதுபோக்கு புகைப்படக் கலைஞர் கார்த்திக் சுப்ரமணியத்தின் புகைப்படம் ஆனது நேஷனல் ஜியோகிராஃபிக் ஊடகத்தின் 2023 ஆம் ஆண்டிற்கான 'ஆண்டின் சிறந்த புகைப்படம்' என்ற போட்டியில் முதலிடம் பிடித்துள்ளது.

- "டான்ஸ் ஆஃப் தி ஈகிள்ஸ்" என்று தலைப்பிடப்பட்ட அவரது புகைப்படம் ஆனது அலாஸ்காவில் உள்ள சில்காட் பால்ட் கழுகு வளங்காப்பகத்தில் எடுக்கப்பட்டது.
- மேலும் உலகளவில் உள்ள ஒன்பது புகைப்படக் கலைஞர்களும் தங்கள் புகைப் படங்களுக்காக அங்கீகாரத்தினைப் பெற்றனர்.



## இந்தியாவின் 80வது கிராண்ட்மாஸ்டர்

- இந்தியாவின் சதுரங்க வீரர் சென்னையினைச் சேர்ந்த N.R. விக்னேஷ், இந்தியாவின் 80வது கிராண்ட் மாஸ்டராக ஆனார்.
- ஜெர்மனியில் பேட் ஸ்விசெனான் என்னுமிடத்தில் நடைபெற்ற 24வது நார்ட்வெஸ்ட் (2023) என்ற கோப்பையினையும் அவர் வென்றார்.
- விக்னேஷின் மூத்த சகோதரர் NR. விசாக் 2019 ஆம் ஆண்டில் இந்தியாவின் 59வது கிராண்ட் மாஸ்டராக ஆனார்.
- இதன் மூலம், விசாக் மற்றும் விக்னேஷ் ஆகிய இருவரும் இந்தியாவின் கிராண்ட் மாஸ்டர்களான முதல் சகோதரர்கள் ஆவர்.



## சர்வதேச கஜுராஹோ நடனத் திருவிழா 2023

- உலகப் புகழ்பெற்ற சுற்றுலாத் தலமான மத்தியப் பிரதேசத்தின் கஜுராஹோவில் 49வது கஜுராஹோ நடனத் திருவிழாவானது (2023) தொடங்கப்பட்டது.
- இது தேசிய மற்றும் சர்வதேச அளவில் புகழ்பெற்ற இந்தியப் பாரம்பரிய நடன முறைகளை மையமாகக் கொண்ட நாட்டின் முதன்மையான நடனத் திருவிழாவாகும்.
- கஜுராஹோ நடனத் திருவிழாவானது 1975 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.



## ELECRAMA 2023

- 15வது ELECRAMA 2023 நிகழ்வானது, கிரேட்டர் நொய்டாவில் உள்ள இந்தியக் கண்காட்சி வணிக மையத்தில் தொடங்கப்பட்டது.
- இது திறன்மிகு அளவிகள், திறன்மிகு மின்னூட்டி மேலாண்மை அமைப்புகள், மெத்தனால் உற்பத்தி போன்ற மின் துறையில் மேற்கொள்ளப்படும் புதுமைகளைக் காட்சிப் படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த நிகழ்விற்கான கருத்துரு, 'எதிர்காலத்தினை மாற்றியமைத்தல்: இந்தியாவில் மின் துறையின் உருமாற்றம்' என்பதாகும்.

## சன்சத் ரத்னா விருதுகள் – 2023



- 13வது விருது வழங்கும் விழாவானது, இந்த ஆண்டு மார்ச் 25 ஆம் தேதியன்று புது டெல்லியில் நடைபெற உள்ளது.
- இந்த 13வது விருது வழங்கும் விழாவின் போது 13 பாராளுமன்ற உறுப்பினர்கள், 2 நாடாளுமன்றக் குழுக்கள் மற்றும் 1 வாழ்நாள் சாதனையாளர் விருது ஆகியவை வழங்கப் பட உள்ளன.
- இந்த விருதுகளானது, உயர்நிலைச் சட்ட உருவாக்க அமைப்பில் அவர்கள் ஆற்றும் பணியின் அடிப்படையில் சிறப்பாகச் செயலாற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களை அங்கீகரித்து அவர்களைக் கௌரவிக்கிறது.
- சன்சத் ரத்னா விருதுகள் ஆனது, முன்னாள் குடியரசுத் தலைவர் A.P.J.அப்துல் கலாம் அவர்களின் உரைகள் மூலம் ஈர்க்கப்பட்டு 2010 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் ஆதரவுடன் தி ப்ரைம் பாயிண்ட் அறக்கட்டளையினால் இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன.

## உலகின் சிறந்த M-GOV விருதுகள்

- இந்தூரின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் மாணவர்கள் ஐக்கிய அரபு அமீரகத்தின் துபாயில் நடைபெற்ற உலக அரசாங்க உச்சி மாநாட்டில் தங்கப் பதக்கம் வென்றதன் மூலம் 1 மில்லியன் AED (ஐக்கிய அரபு அமீரகம் திராம்கள்) பரிசினை வென்றுள்ளனர்.
- இந்தூரின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் நியாதி டோட்டாலா மற்றும் நீல் கல்பேஷ்குமார் பரிக் ஆகியோருக்கு எகிப்து அதிபர் ஏபெல் ஃபத்தா அல்-சிசி அவர்கள் இந்த மதிப்புமிக்கப் பதக்கத்தினை வழங்கினார்.
- இவர்களே 'பிளாக்பில்' எனும் செயலியை உருவாக்கியர்கள் ஆவர்.
- பிளாக்பில் என்பது அதன் அனைத்துப் பயனர்களின் பரிவர்த்தனைகளுக்குமான எண்ணிம முறை ரசீதுகளை உருவாக்குகிற வகையிலான, தொடர்சங்கிலித் தொழில் நுட்பம் அடிப்படையிலான ரசீது உருவாக்கச் செயலியாகும்.
- "M-Gov விருது" மற்றும் "GovTech விருது" ஆகியவை உலக அரசாங்க உச்சி மாநாட்டின் ஒரு பகுதியாக ஐக்கிய அரபு அமீரக அரசாங்கத்தினால் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வரும் விருதுகள் ஆகும்.

## சர்வதேச தொழிலாளர் அமைப்பின் வெளிப்புறத் தணிக்கையாளர்

- ஜெனீவாவில் உள்ள சர்வதேச தொழிலாளர் அமைப்பின் வெளிப்புறத் தணிக்கையாளராக இந்தியத் தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் கிரீஷ் சந்திர முர்மு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- அவர் 2024 முதல் 2027 ஆம் ஆண்டு வரையில் நான்கு ஆண்டுகள் இந்தப் பதவியில் இருப்பார்.
- இது சர்வதேசச் சமூகம் மற்றும் அதன் தொழில்முறை, உயர் தரநிலை, உலகளாவியத் தணிக்கை நடைமுறைகள் மற்றும் வலுவான தேசிய நன்மதிப்புகள் ஆகியவற்றின் மத்தியில் இந்தியாவின் நிலைப்பாட்டிற்கான ஒரு அங்கீகாரமாகும்.

- பிலிப்பைன்ஸின் உயர்நிலை தணிக்கை நிறுவனத்திடமிருந்து சர்வதேச தொழிலாளர் அமைப்பின் தற்போதைய வெளிப்புறத் தணிக்கையாளர் பொறுப்பினை இந்தியத் தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் ஏற்க உள்ளார்.



## 2022 ஆம் ஆண்டின் சிறந்த EY தொழில்முனைவோர்

- JSW குழுமத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் சஜ்ஜன் ஜிண்டால் 2022 ஆம் ஆண்டின் சிறந்த EY (Ernst & Young) தொழில்முனைவோர் விருதை வென்றார்.
- எஃகு, சிமென்ட், உள்கட்டமைப்பு, எரிசக்தி மற்றும் வண்ணப்பூச்சுகள் ஆகிய பல்வேறு துறைகளில் ஈடுபட்டு இந்த உலகளாவியக் குழுமத்தை மேம்படுத்துவதில் அவர் மேற் கொண்ட மகத்தான தொழில்முனைவோர் பணிக்காக இந்த விருதானது அவருக்கு வழங்கப் பட்டது.
- 'எஃகு மனிதன்' என்ற பெயரைப் பெற்ற சஜ்ஜன் ஜிண்டால், உலக எஃகுச் சங்கத்தின் தலைவராகப் பணியாற்றிய முதல் இந்தியப் பிரதிநிதி ஆவார்.
- மேலும் வளர்ச்சியுற்ற தொழில்துறையினர் மற்றும் புத்தொழில் துறைகளைச் சேர்ந்த இளம் தொழில்முனைவோர்களுக்கு ஆகியோரை உள்ளடக்கிய ஒன்பது பிரிவுகளுக்கு விருதுகள் அறிவிக்கப்பட்டன.



# விளையாட்டுச் செய்திகள்

## தேசியப் பனித்தள மைதான ஹாக்கி சாம்பியன்ஷிப் போட்டி

- இந்தியப் பனித்தள மைதான ஹாக்கி சங்கத்தின் (IHAI) 12வது ஆடவருக்கான தேசியப் பனித்தள ஹாக்கி சாம்பியன்ஷிப் போட்டியானது (2023), லடாக்கின் லே நகரில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- இந்தியத் திபெத்திய எல்லைப் பாதுகாப்புப் படையானது தொடர்ந்து மூன்றாவது முறையாக சாம்பியன்ஷிப் பட்டத்தினை வென்றது
- இந்தியத் திபெத்திய எல்லைப் பாதுகாப்புப் படையானது, நாட்டில் மேற்கொள்ளப் படும் சாகச விளையாட்டுப் போட்டிகளில் முன்னோடியாகத் திகழ்கிறது.
- மேலும் இது நாட்டில் மேற்கொள்ளப்படும் மலையேறுதல் மற்றும் அதனுடன் தொடர்பு உடைய பிற விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பெற்ற இணையற்ற சாதனையைப் படைத்துள்ளது.

## 5வது கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டிகள்

- ஐந்தாவது கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டியில், மகாராஷ்டிரா அணியானது 31 தங்கம் உட்பட 90 பதக்கங்களுடன் பதக்கப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.
- இதில் மத்தியப் பிரதேச அணியானது 25 தங்கப் பதக்கங்கள் உள்ளிட்ட 59 பதக்கங்களுடன் இரண்டாவது இடத்திலும், ஹரியானா 23 தங்கப் பதக்கங்களுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளன.



MEDAL TALLY

| RANK | STATE | GOLD | SILVER | BRONZE | TOTAL |
|---|---|---|---|---|---|
| 1 | Maharashtra | 31 | 31 | 28 | 90 |
| 2 | Madhya Pradesh | 25 | 13 | 21 | 59 |
| 3 | Haryana | 23 | 18 | 18 | 59 |
| 4 | Rajasthan | 12 | 7 | 11 | 30 |
| 5 | Odisha | 9 | 5 | 9 | 23 |
| 6 | Tamil Nadu | 8 | 10 | 10 | 28 |
| 7 | West Bengal | 8 | 7 | 10 | 25 |
| 8 | Uttar Pradesh | 6 | 10 | 10 | 26 |
| 9 | Delhi | 5 | 8 | 10 | 23 |
| 10 | Punjab | 5 | 4 | 7 | 16 |

## கேலோ இந்தியா குளிர்கால விளையாட்டுப் போட்டிகள் 2023

- மூன்றாவது ஆரம்ப நிலை அளவிலான இப்போட்டியானது, பிப்ரவரி 14 ஆம் தேதியன்று ஜம்மு மற்றும் காஷ்மீரின் குல்மார்க் நகரில் நிறைவடைந்தது.
- ஐந்து நாட்கள் நடைபெற்ற இந்தப் போட்டியில் 32 மாநிலங்கள், ஒன்றியப் பிரதேசங்கள் மற்றும் பிற பிரிவுகளைச் சேர்ந்த 11 விளையாட்டுப் போட்டிகளில் 1,500 விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டனர்.

- இந்தப் போட்டியின் முடிவில் அதிக தங்கப் பதக்கங்களைப் பெற்ற மாநிலம் அல்லது ஒன்றியப் பிரதேசம் வெற்றியாளராக அறிவிக்கப்பட்டது.
- 2023 ஆம் ஆண்டு கேலோ இந்தியா குளிர்கால விளையாட்டுப் போட்டிகளின் பதக்கப் பட்டியலில் 26 தங்கம், 25 வெள்ளி மற்றும் 25 வெண்கலத்துடன் ஜம்மு & காஷ்மீர் முதலிடத்தைப் பிடித்தது.
- இதில் 13 தங்கம், 8 வெள்ளி, 6 வெண்கலப் பதக்கங்களுடன் மகாராஷ்டிரா அணி இரண்டாவது இடத்தைப் பிடித்தது.

KIWG medal winners

| Rank | Team | Gold medals | Silver medals | Bronze medals | Total medals |
|---|---|---|---|---|---|
| 1 | Jammu and Kashmir | 26 | 25 | 25 | 76 |
| 2 | Maharashtra | 13 | 8 | 6 | 27 |
| 3 | Himachal Pradesh | 10 | 14 | 7 | 31 |
| 4 | Army | 10 | 10 | 9 | 29 |
| 5 | Haryana | 8 | 10 | 13 | 31 |
| 6 | Ladakh | 7 | 3 | 7 | 17 |
| 7 | Uttrakhand | 6 | 6 | 4 | 16 |
| 8 | Tamil Nadu | 6 | 5 | 3 | 14 |
| 9 | Karnataka | 5 | 2 | 7 | 14 |
| 10 | Gujarat | 4 | 1 | 1 | 6 |

## இந்திய ஓபன் பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் போட்டி 2023

- புது டெல்லியில் நடைபெற்ற இந்திய ஓபன் பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் போட்டியில், மகளிர் ஒற்றையர் பிரிவில் கொரிய வீராங்கனை அன் சேயோங் வெற்றி பெற்றார்.
- அவர் இறுதிப் போட்டியில் உலகின் முன்னணி ஜப்பானிய வீராங்கனையான அகானே யமாகுச்சியைத் தோற்கடித்தார்.
- ஆக்செல்சென் இதற்கு முன்பு 2017 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளில் இந்தியா ஓபன் பட்டத்தினை வென்றுள்ளார்.
- 2023 ஆம் ஆண்டு இந்திய ஓபன் ஆடவர் ஒற்றையர் பிரிவு பேட்மிண்டன் சாம்பியன் ஷிப் போட்டியில் குன்லவுட் விடிட்சார்ன் பட்டத்தை வென்றார்.



# முக்கிய தினங்கள்

## இந்தியக் கடலோரக் காவல்படை தினம் - பிப்ரவரி 01

- இந்தியக் கடலோரக் காவல்படையானது, முதலில் 1977 ஆம் ஆண்டு பிப்ரவரி 01 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- இது இந்தியாவின் உள்நாட்டுப் பொருளாதாரத்திற்கு இடையூறாக விளங்கும் கடல் வழிப் பொருட்களின் கடத்தல் நடவடிக்கைகளைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- 1978 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 18 ஆம் தேதியன்று, இந்தியக் கடலோரக் காவல்படை தினமானது பிப்ரவரி 01 ஆம் தேதியன்று கொண்டாடப்படும் என்று இந்தியப் பாராளுமன்றத்தால் அதிகாரப் பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

## உலக சமய நல்லிணக்க வாரம் - பிப்ரவரி 01- 07

- 2010 ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையானது (UNGA), பிப்ரவரி மாதத்தின் முதல் ஏழு நாட்களை உலக சமய நல்லிணக்க வாரமாக நியமித்தது.
- இந்தக் கொண்டாட்டங்கள் ஆனது, சமய நம்பிக்கைகளைச் சாராமல் மக்களிடையே நல்லிணக்கத்தை மேம்படுத்தி, பரஸ்பர புரிதல் மற்றும் மதங்களுக்கு இடையேயான ஒத்துழைப்பினை உருவாக்குவதில் கவனம் செலுத்துகின்றன.




## உலக சதுப்பு நில தினம் - பிப்ரவரி 02




- இது மக்களுக்கும் புவிக்கும் ஈரநிலங்கள் வழங்கும் முக்கியப் பங்கினைப் பற்றிய உலகளாவிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஈரானில் உள்ள ராம்சார் நகரத்தில் 1971 ஆம் ஆண்டு பிப்ரவரி 02 ஆம் தேதியன்று, ஈர நிலங்கள் தொடர்பான உடன்படிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்ட தேதியை இந்த நாள் குறிக்கிறது.

- முதல் உலக சதுப்பு நில தினமானது 2021 ஆம் ஆண்டில் கொண்டாடப்பட்டது.
- 2023 ஆம் ஆண்டின் உலக சதுப்பு நிலங்கள் தினத்தின் கருத்துரு, "இது ஈரநிலங்களை மீட்டெடுப்பதற்கான நேரம்" என்பதாகும்.

## சர்வதேச மனித சகோதரத்துவ தினம் - பிப்ரவரி 04

- பல்வேறு கலாச்சாரங்கள் மற்றும் மதங்கள் அல்லது நம்பிக்கைகள் மற்றும் அவற்றின் மீதான சகிப்புத் தன்மையை மேம்படுத்துதல் ஆகியவை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் முக்கியத்துவத்தைக் குறிப்பிட்டுக் காட்டச் செய்வதை இந்தத் தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சகிப்புத்தன்மை, பன்மைத்துவப் பாரம்பரியம், பரஸ்பர மரியாதை மற்றும் மதங்கள் மற்றும் நம்பிக்கைகளின் பன்முகத்தன்மை ஆகியவை மனித சகோதரத்துவத்தை ஊக்குவிக்கின்றன என்பதை மக்களுக்குக் கற்பிப்பதை இது நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- இந்தத் தினம் அனுசரிக்கப்படுவதன் குறிக்கோள் வேறுபாடுகளில் இணக்கம் என்பது ஆகும்.

## உலகப் புற்றுநோய் தினம் - பிப்ரவரி 04

- உலகப் புற்றுநோய் தினமானது ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி 04 ஆம் தேதியன்று அனுசரிக்கப் படுகிறது.
- கல்வி, விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் உலகெங்கிலும் உள்ள அரசாங்கங்கள் மற்றும் தனிநபர்கள் நடவடிக்கை எடுக்க வலியுறுத்துதல் ஆகியவற்றின் மூலம் ஒவ்வோர் ஆண்டும் மில்லியன் கணக்கான உயிர்களைக் காப்பாற்றுவதை இத்தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உலகப் புற்றுநோய் தினத்திற்கான அதிகாரப்பூர்வ நிறங்கள் நீலம் மற்றும் ஆரஞ்சு ஆகும்.
- முதலாவது புற்றுநோய் தினமானது 1933 ஆம் ஆண்டு சுவிட்சர்லாந்தின் ஜெனீவா நகரில் கொண்டாடப் பட்டது.
- இது உலக சுகாதார நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு முன்னெடுப்பாகும்.
- கடந்த மூன்று ஆண்டுகளுக்கான இந்தத் தினத்தின் கருத்துரு - 2022, 2023 மற்றும் 2024 - "சிகிச்சை நலனில் உள்ள இடைவெளியை நிரப்புதல்" என்பதாகும்.

## சர்வதேச பெண் பிறப்புறுப்பு சிதைப்பு எதிர்ப்பு தினம் - பிப்ரவரி 06

- இதற்காக, 1997 ஆம் ஆண்டில் உலக சுகாதார அமைப்பானது ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நிதியம் (UNICEF) மற்றும் ஐக்கிய நாடுகளின் மக்கள் தொகை நிதியம் (UNFPA) ஆகியவற்றுடன் இணைந்து ஒரு கூட்டு அறிக்கையை வெளியிட்டது.
- பெண் பிறப்புறுப்பு சிதைவு / துண்டித்தல் தொடர்பான கூட்டுத் திட்டமானது, ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நிதியம் (UNICEF) மற்றும் ஐக்கிய நாடுகளின் மக்கள் தொகை நிதியம் ஆகியவற்றால் 2007 ஆம் ஆண்டில் அந்த நடைமுறையைக் கைவிடுவதை துரிதப் படுத்துவதற்காக தொடங்கப் பட்டது.

- இந்தத் தினமானது சிறுமிகள் மற்றும் பெண்களின் மனித உரிமைகளை மீறும் வகையிலான பெண் பிறப்புறுப்பு சிதைவு பற்றிய விழிப்புணர்வைப் பரப்புகிறது.
- 2023 ஆம் ஆண்டிற்கான கருத்துரு, "சமூக மற்றும் பாலின நெறிமுறைகளை மாற்றி அமைப்பதற்காக ஆண்கள் மற்றும் சிறுவர்களுடன் இணைந்து பெண் பிறப்புறுப்பு சிதைவு நடைமுறையினை முடிவுக்குக் கொண்டு வருதல்" என்பதாகும்.
- இந்த நடைமுறையானது பெரும்பாலும் ஆப்பிரிக்காவில், குறிப்பாக வடகிழக்கு, கிழக்கு மற்றும் மேற்கு ஆப்பிரிக்காவில் மேற்கொள்ளப்படுகிறது.


## பாதுகாப்பான இணைய தினம் - பிப்ரவரி 07

- இது சமூகத்தில் அனைத்துப் பயனர்களுக்கும், முக்கியமாக குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கு பாதுகாப்பான இணையத்தை வழங்குவதை மேம்படுத்தச் செய்யும் ஐரோப்பிய ஒன்றிய அளவிலான ஒரு முன்னெடுப்பாகும்.
- இந்த ஆண்டு 19வது பாதுகாப்பான இணைய தினமாகும்.
- இந்த ஆண்டின் பாதுகாப்பான இணைய தினத்திற்கான கருத்துரு என்பது "சிறந்த இணையத்திற்காக ஒன்றாகச் செயல்படுதல்" என்பதாகும்.




## உலகப் பருப்பு வகைகள் தினம் - பிப்ரவரி 10

- உலகப் பருப்பு வகைகள் தினம் என்பது ஒரு உலகளாவிய உணவாக பருப்பு வகைகளின் முக்கியத்துவத்தை அங்கீகரிப்பதற்காக ஐக்கிய நாடுகள் சபையினால் ஓர் உலகளாவிய நிகழ்வாக இத்தினம் அறிவிக்கப்பட்டது.
- இத்தினமானது 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 20 ஆம் தேதியன்று ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையால் அறிவிக்கப்பட்டது.
- 2023 ஆம் ஆண்டின் உலகப் பருப்பு வகைகள் தினத்திற்கான கருத்துரு, "நிலையான எதிர்காலத்திற்கான பருப்பு வகைகள்" என்பதாகும்.




## தேசியக் குடற்புழு நீக்க தினம் - பிப்ரவரி 10

- ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி 10 ஆம் தேதியன்று தேசியக் குடற்புழு நீக்க தினம் அனுசரிக்கப் படுகிறது.
- இது நாடு முழுவதும் உள்ள 1 முதல் 19 வயதுக்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் குடற்புழு நீக்கம் செய்வதற்காக இந்திய அரசு மேற்கொண்ட ஒரு முன்னெடுப்பாகும்.
- புழுக்கள் என்பது அவை தனக்கான உணவு மற்றும் அவை உயிர் வாழ்வதற்காக மனித குடலில் வாழ்கின்ற ஒட்டுண்ணிகள் ஆகும்.
- இந்தப் புழுக்கள் மனித உடலுக்குத் தேவையான சில ஊட்டச் சத்துக்களை உட் கொண்டு, இரத்த இழப்பு, ஊட்டச்சத்துக் குறைபாடு மற்றும் வளர்ச்சித் தடுப்பு ஆகிய குறைபாடுகளை ஏற்படுத்துகின்றன.




## உலக யுனானி தினம் - பிப்ரவரி 11

- சமூக சீர்திருத்தவாதியும் யுனானி மருத்துவ அறிஞருமான ஹக்கீம் அஜ்மல் கான் அவர்களின் பிறந்த நாள் அன்று இத்தினமானது கொண்டாடப்படுகிறது.
- யுனானி மருத்துவத் துறையில் அவர் கடுமையாக உழைத்துப் பல படைப்புகளைப் படைத்துள்ளார்.

- டெல்லியின் மத்தியக் கல்லூரி, ஆயுர்வேத மற்றும் யுனானி திப்பியா கல்லூரி மற்றும் இந்துஸ்தானி தவாக்னா போன்ற மூன்று யுனானி நிறுவனங்களை அவர் நிறுவினார்.
- 2023 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'பொது சுகாதாரத்திற்கான யுனானி மருத்துவம்' என்பதாகும்.




## உலக நோயாளர் தினம் - பிப்ரவரி 11


- கத்தோலிக்கக் கிறிஸ்தவத் திருச்சபையினர் நோயுற்றவர்களுக்காகவும் துன்பப் படுபவர்களுக்காகவும் ஜெபிப்பதனை ஊக்குவிப்பதற்காக இந்தத் தினமானது நிறுவப் பட்டது.
- நோயுற்றவர்களுக்கு நம்பிக்கை ஊட்டுவதற்காகவே இந்த நாள் நிறுவப்பட்டது.
- உலக நோயாளர் தினம் ஆனது 1992 ஆம் ஆண்டு போப் இரண்டாம் ஜான் பால் அவர்களால் உருவாக்கப்பட்டது.
- கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவர் பார்கின்சன் என்ற நோயால் (PD) பாதிக்கப் பட்டிருந்தது ஒரு வருடத்திற்கு முன்பே கண்டறியப்பட்டது.
- ஆனால் போப் இரண்டாம் ஜான் பால் மற்றும் வாடிகன் நகர தேவாலயம், கிட்டத்தட்ட 12 ஆண்டுகளாக அந்தத் தகவலை மூடி மறைத்து இருந்தது.

## அறிவியல் துறையில் உள்ள பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கான சர்வதேச தினம் – பிப்ரவரி 11

- இது அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் (STEM) ஆகிய துறைகளில் பெண்களின் முழு அளவிலான மற்றும் சமமான அணுகல் மற்றும் பங்களிப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது 8வது அறிவியல் துறையில் உள்ள பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கான சர்வதேச தினமாகும்.
- 2023 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்திற்கான "புதுமை. செயல் விளக்கம். உயர்வு. மேம்பாடு (IDEA): நிலையான மற்றும் சமமான மேம்பாட்டிற்காக என்று சமூகங்களை முன்னோக்கிக் கொண்டு வருதல்" என்பதாகும்.

## சர்வதேச டார்வின் தினம் - பிப்ரவரி 12

- சார்லஸ் டார்வின் ஒரு ஆங்கிலேய இயற்கை ஆர்வலர் ஆவார்.
- இவருடைய இயற்கைத் தேர்வு மூலமான பரிணாம வளர்ச்சி பற்றிய அறிவியல் கோட்பாடு ஆனது நவீன பரிணாம ஆய்வுகளின் அடித்தளத்தை உருவாக்கியது.
- ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி 12 ஆம் தேதியன்று சார்லஸ் டார்வின் அவர்களின் பிறந்த நாளை நினைவு கூரும் வகையில் டார்வின் தினம் அனுசரிக்கப்படுகிறது.
- அறிவியலுக்கு சார்லஸ் டார்வின் ஆற்றியப் பங்களிப்பையும், பொதுவாக அறிவியல் துறையினை மேம்படுத்துவதையும் இந்தத் தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 1859 ஆம் ஆண்டு நவம்பர் 24 ஆம் தேதியன்று இயற்கைத் தேர்வின் வழியாக உயிரினங்களின் தோற்றம் என்ற தனது கோட்பாட்டினை வெளியிட்டார்.





## தேசிய உற்பத்தித் திறன் தினம் – பிப்ரவரி 12

- தேசிய உற்பத்தித் திறன் சபையின் (NPC) ஸ்தாபன நாளைக் குறிக்கும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி 12 ஆம் தேதியன்று இந்தியாவில் தேசிய உற்பத்தித் திறன் தினமானது கொண்டாடப்படுகிறது.
- நாட்டின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கான விழிப்புணர்வை ஊக்குவிப்பதே தேசிய உற்பத்தித் திறன் சபையின் குறிக்கோளாகும்.
- பிப்ரவரி 12 முதல் 18 வரை அனுசரிக்கப் படுகின்ற தேசிய உற்பத்தித் திறன் வாரத்தின் ஒரு பகுதியாக இந்த நாள் கொண்டாடப்படுகிறது.
- இந்த ஆண்டிற்கான தேசிய உற்பத்தித் திறன் தினத்தின் கருத்துரு, "இலக்குகளை நிர்ணயிப்பதற்கான ஒரு வாய்ப்பு" என்பதாகும்.
- தேசிய உற்பத்தித் திறன் சபை என்பது வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் கீழ் 1958 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ஒரு தன்னாட்சி அமைப்பாகும்.

## உலக வானொலி தினம் - பிப்ரவரி 13

- 2011 ஆம் ஆண்டு நவம்பர் 03 ஆம் தேதியன்று, யுனெஸ்கோ அமைப்பானது பிப்ரவரி 13 ஆம் தேதியினை உலக வானொலி தினமாக அறிவித்தது.
- 1946 ஆம் ஆண்டில் இந்த நாளில் தான் ஐக்கிய நாடுகள் சபையின் வானொலி முதன் முதலில் நிறுவப் பட்டது.
- வானொலியின் முக்கியத்துவத்தைப் பேணுவதுடன், அதிகாரிகள் வானொலி மூலம் தகவல்களை அணுக வாய்ப்பளித்தலை ஊக்குவிக்கச் செய்வதற்காகவும் வேண்டி இந்தத் தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- 2023 ஆம் ஆண்டிற்கான உலக வானொலி தினத்தின் கருத்துரு, 'வானொலி மற்றும் அமைதி' என்பதாகும்.
- இந்தியாவில் முதலாவது, வானொலி ஒலிபரப்பு ஆனது 1923 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் பம்பாய் நகரின் ரேடியோ குழுமம் மூலம் மேற்கொள்ளப்பட்டது.
- சுமார் 479 வானொலி நிலையங்கள் இந்தியாவில் உள்ள நிலையில் அகில இந்திய வானொலி நிறுவனம் உலகின் மிகப்பெரிய ஒலிபரப்பு நிறுவனங்களில் ஒன்றாக திகழ்கிறது.
- இது இந்திய மக்கள் தொகையில் 99.19% மக்களுக்குச் சேவையினை வழங்குகிறது.

## தேசிய மகளிர் தினம் - பிப்ரவரி 13




- இந்த நாள் இந்தியாவின் நைட்டிங்கேல் என்று அழைக்கப்படும் சரோஜினி நாயுடு அவர்களின் பிறந்தநாளை நினைவு கூறுகிறது.
- ஆணாதிக்க இந்தியச் சமூகத்தில் பெண்களின் உரிமைகளை நிலைநாட்டுவதற்காக சரோஜினி நாயுடு ஆற்றிய இணையற்றப் பங்களிப்பை இந்த நாள் கொண்டாடச் செய்கிறது.
- இந்தத் தினமானது அவருடைய கலாச்சாரம், அரசியல் மற்றும் பொருளாதாரப் பங்களிப்பை அங்கீகரிக்கிறது.
- அரசியலைத் தவிர, சரோஜினி நாயுடு அவர்கள், இந்திய இலக்கிய வரலாற்றில் மிகச் சிறந்த கவிஞர்களில் ஒருவராக உலகளவில் அங்கீகரிக்கப்பட்டவர் ஆவார்.


- 1925 ஆம் ஆண்டில், இந்தியத் தேசிய காங்கிரஸின் கட்சித் தலைவராக அந்த அமைப்பினை வழி நடத்திய முதல் பெண்மணி இவரே ஆவார்.
- இந்தியாவில் பிளேக் தொற்றுநோய் பரவிய காலத்தில் சரோஜினி நாயுடு அவர்கள் ஆற்றியச் சேவைக்காக பிரிட்டிஷ் அரசாங்கம் 'கைசர்-இ-ஹிந்த்' பதக்கம் வழங்கிப் பாராட்டியது.

## சர்வதேச வலிப்பு நோய் தினம் – பிப்ரவரி 13

- இது ஒவ்வோர் ஆண்டிலும் பிப்ரவரி மாதத்தின் இரண்டாவது திங்கட்கிழமையன்று கொண்டாடப் படுகிறது.
- இந்த நோய் பற்றியும், அதற்கான ஆரம்பக் கட்ட அறிகுறிகளை அடையாளம் காண்பது பற்றியுமான விழிப்புணர்வை அதிகரிப்பதே இதன் நோக்கமாகும்.
- வலிப்பு நோய் என்பது மூளையின் செயல்பாட்டைப் பாதிக்கும் ஒரு நரம்புக் கோளாறு ஆகும்.
- குழந்தைகளிடையே ஏற்படும் இந்த நோய்ப் பாதிப்பானது தாமதமாக கண்டறியப் படுகிறது.
- ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்தால், இந்த நோயினை எளிதில் குணப்படுத்தலாம்.
- உலகில் சுமார் 50 மில்லியன் மக்கள் வலிப்பு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
- அவர்களில் 80% பேர் குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் வாழ்கின்றனர்.

## APEDA அமைப்பின் ஸ்தாபன தினம் - பிப்ரவரி 13

- வேளாண் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (APEDA) ஆனது இந்த ஆண்டு தனது 37வது ஸ்தாபன தினத்தினைக் கொண்டாடியது.
- 2000-2001 ஆம் ஆண்டில் 0.6 பில்லியன் அமெரிக்க டாலருக்கும் அதிகமாக வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களை ஏற்றுமதி செய்துள்ள நிலையில் இது 2021-2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதியின் மதிப்பு 2477 பில்லியன் அமெரிக்க டாலர்கள் ஆகும்.



- வேளாண் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையமானது, உழவர் இணைப்பு தளம் என்ற இணைய தளத்தினையும் அமைத்துள்ளது.
- வேளாண் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையமானது, 1985 ஆம் ஆண்டு வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தால் நிறுவப்பட்டது.
- இது வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.


### சர்வதேச குழந்தைப் பருவ புற்றுநோய் தினம் - பிப்ரவரி 15

- இந்தத் தினமானது, சர்வதேசக் குழந்தைப் புற்றுநோய் அமைப்பு எனப்படும் பல பெற்றோர்களால் இணைந்து நிறுவப்பட்ட குழந்தைப் புற்றுநோய் சிகிச்சை ஆதரவு குழுக்களின் கூட்டமைப்பானது நிறுவப்பட்ட தினத்தினைக் குறிக்கிறது.
- 1994 ஆம் ஆண்டில் சர்வதேசக் குழந்தைப் பருவ புற்றுநோய் அமைப்பானது நிறுவப் பட்டது.
- புற்றுநோயால் பாதிக்கப்பட்ட இளையோர்கள் மீதான கவன ஈர்ப்பினைப் பெறுவதும், அவர்களுக்கு ஆதரவை வழங்குவதுமே இந்த நாளின் நோக்கமாகும்.
- சர்வதேச குழந்தைப் பருவ புற்றுநோய் தினப் பிரச்சாரமானது மூன்று ஆண்டுகளுக்கு (2021-2023) மேற்கொள்ளப்படும்.
- "சிறந்த உயிர்வாழ்வு" என்பதே இந்த மூன்று ஆண்டு கால முன்னெடுப்பிற்கான ஒரு முழக்கமாகும்.




### நிதிசார் கல்வியறிவு வாரம் - பிப்ரவரி 13 முதல் 17 வரை

- இந்திய ரிசர்வ் வங்கியானது, 2016 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் இந்தத் தினத்தினை அனுசரித்து வருகிறது.
- நாடு முழுவதும் உள்ள பொதுமக்களிடையே ஒரு குறிப்பிட்ட கருப்பொருள் குறித்த நிதியியல் சார்ந்த கல்வித் தகவல்களைப் பரப்புவதை இது நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- நிதிசார் கல்வியறிவு என்பது பல்வேறு நிதி திறன்களைப் புரிந்து கொண்டு அவற்றைத் திறம்பட பயன்படுத்துவதற்கான திறன் ஆகும்.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு என்பது, "நன்முறையிலான நிதியியல் நடவடிக்கை உங்களின் கவசம்" என்பதாகும்.





## உலக சுற்றுலா நெகிழ்திறன் தினம் - பிப்ரவரி 17

- சுற்றுலா நெகிழ்திறனின் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பதற்காக, ஐக்கிய நாடுகள் சபையானது 2023 ஆம் ஆண்டு பிப்ரவரி 06 ஆம் தேதியன்று இந்தத் தினத்தினை அறிவித்தது.
- இந்தத் தினத்தின் நோக்கமானது சுற்றுலா நெகிழ்திறன் பற்றி அதிக விழிப்புணர்வை உருவாக்குவதாகும்.
- முதல் உலக சுற்றுலா நெகிழ்திறன் தினமானது இந்த ஆண்டு பிப்ரவரி 17 ஆம் தேதி அன்று அனுசரிக்கப்பட்டது.
- சுற்றுலா நெகிழ்திறன் என்பது ஒரு சுற்றுலாத் தலத்தில் நிலவும் நெருக்கடிகளை எதிர் கொண்டு அவற்றிலிருந்து விரைவாக மீள்வதற்கான திறனைக் குறிக்கிறது.
- 2019 ஆம் ஆண்டில், உலகம் முழுவதும் சுற்றுலாத் துறையில் 333 மில்லியன் மக்கள் வேலைவாய்ப்பு பெற்றனர்.
- 2020 ஆம் ஆண்டில், சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறையானது இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6.8% அளவில் பங்களிப்பினை வழங்கச் செய்வதோடு மொத்த வேலை வாய்ப்புகளில் அது 8 சதவீதப் பங்களிப்பினை வழங்கியுள்ளது.

## உலக எறும்புத் திண்ணி தினம் - பிப்ரவரி 18


- உலக எறும்புத் திண்ணி தினமானது ஆண்டுதோறும் பிப்ரவரி மாதத்தின் மூன்றாவது சனிக்கிழமையன்று அனுசரிக்கப்படுவதோடு, இந்த ஆண்டு இந்தத் தினம் பிப்ரவரி 18 ஆம் தேதியன்று கொண்டாடப்படுகிறது.

- இந்தத் தினமானது எறும்புத் திண்ணிகளின் முக்கியத்துவத்தினைக் கொண்டாடுவது, அவை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவது மற்றும் ஆப்பிரிக்கா மற்றும் ஆசியா ஆகிய பகுதிகளில் எறும்புத் திண்ணி கைப்பற்றப்பட்டு உலகளவில் சட்ட விரோதமாக விற்கப்படுவது போன்றவற்றிற்கு எதிரானப் போராட்டத்தில் சர்வதேசத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை ஈடுபடச் செய்வதை உறுதி செய்வதை ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இவற்றின் எண்ணிக்கை குறைய செய்வதற்கு ஒரு முக்கிய காரணம் அவற்றில் உள்ள மருத்துவக் குணத்தின் காரணமாக கடத்தப்படுவதேயாகும்.
- எறும்புத் திண்ணிகளின் செதில்களில் பல மருத்துவ குணங்கள் உள்ளன.
- இந்தியாவில், ஒடிசாவில் தான் எறும்புத் திண்ணிகள் அதிக அளவில் கடத்தப் படுகின்றன.
- இதில் மகாராஷ்டிரா இரண்டாவது இடத்தில் உள்ளது.
- எறும்புத் திண்ணிகள் IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் மிகவும் ஆபத்தான நிலையில் உள்ள உயிரினமாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.





## 8வது மண்வளக் குறிப்பேடுத் திட்ட தினம் - பிப்ரவரி 19

- மண்வளக் குறிப்பேடு தினமானது 2020 ஆம் ஆண்டு பிப்ரவரி 19 ஆம் தேதியன்று தொடங்கப் பட்டது.
- இது வளமான மண்ணைப் பராமரிக்கச் செய்வதன் ஒரு முக்கியத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு மற்றும் மண்ணின் வளத்தினை மேம்படுத்தும் நடைமுறைகளைக் கடைபிடிக்க விவசாயிகளை ஊக்குவிக்கிறது.
- மண்வளக் குறிப்பேடுத் திட்டமானது 2015 ஆம் ஆண்டு பிப்ரவரி 19 ஆம் தேதியன்று தொடங்கப் பட்டது.
- இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மண்வளக் குறிப்பேடு அட்டைகள் வழங்கும் வகையில் இத்திட்டமானது அறிமுகப்படுத்தப்பட்டது.
- இந்தத் திட்டத்தின் நோக்கமானது, ஊட்டச்சத்து மேலாண்மையை மேம்படுத்தும் வகையில் மண் வளப் பரிசோதனையை ஊக்குவிப்பதாகும்.
- இது உரப் பயன்பாட்டினை 8 முதல் 10% வரை குறைத்து, பயிர்களின் ஒட்டுமொத்த மகசூலினை 5% ஆக அதிகரித்துள்ளது.




## அருணாச்சலப் பிரதேச மாநிலத்தின் உருவாக்க தினம் - பிப்ரவரி 20

- அருணாச்சலப் பிரதேச மாநிலமானது 1987 ஆம் ஆண்டு பிப்ரவரி 20 ஆம் தேதியன்று ஒரு மாநிலமாக உருவாக்கப்பட்டது.
- 1972 ஆம் ஆண்டு வரை, இது வட-கிழக்கு எல்லைப்புற அமைப்பு (NEFA) என்று அறியப் பட்டது.
- இது 1972 ஆம் ஆண்டு ஜனவரி 20 ஆம் தேதியன்று ஒன்றியப் பிரதேசமாக மாற்றப் பட்டு பின் அதன் பெயர் அருணாச்சலப் பிரதேசம் என மாற்றப்பட்டது.
- அந்த மாநில அரசின் சட்டசபைக்கான முதல் பொதுத் தேர்தல் ஆனது 1978 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் நடைபெற்றது.
- அரசியலமைப்பின் 55வது திருத்தம் ஆனது அருணாச்சலப் பிரதேச மாநிலத்திற்கு சில சிறப்புச் சலுகைகளை வழங்கியது.



## உலக சமூக நீதி தினம் - பிப்ரவரி 20

- சமூக அநீதிக்கு எதிராகக் குரல் எழுப்பவும், பாலினம், இனம், சமத்துவமின்மை, மதப் பாகுபாடு போன்றவற்றில் நிலவும் தடைகளை அகற்றவும் இந்தத் தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- இது உலகம் முழுவதும் மேற்கொள்ளப்படும் சமூக அநீதியை எடுத்துரைப்பதோடு, அதற்கான தீர்வுகள் மற்றும் மேம்பாடுகளை வெளிக் கொணரவும் செய்கிறது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு: "தடைகளை எதிர்கொள்ளுதல் மற்றும் சமூக நீதிக்கான வாய்ப்புகளை வெளிக் கொணர்தல்" என்பதாகும்.

## சர்வதேச தாய்மொழி தினம் - பிப்ரவரி 21

- இது மொழியியல் மற்றும் கலாச்சாரப் பன்முகத்தன்மை மற்றும் பன்மொழித்துவம் ஆகியவற்றை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 1999 ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பு (யுனெஸ்கோ) ஆனது இந்த நாளைக் கொண்டாடுவதற்கான ஒரு கருத்தாக்கத்திற்கு ஒப்புதல் அளித்தது.
- இந்தத் தினமானது வங்காளதேசத்தின் முன்னெடுப்பின் மூலமாக நிறுவப்பட்டு, 1999 ஆம் ஆண்டு முதல் உலகம் முழுவதும் அனுசரிக்கப்பட்டு வருகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "பன்மொழிக் கல்வி – கல்வித் துறையை மாற்றியமைப்பதற்கான அவசியம்" என்பதாகும்.




## உலக சாரணர் தினம் - பிப்ரவரி 22

- இந்தத் தினமானது சிறார் சாரணர் இயக்கத்தின் நிறுவனர் ராபர்ட் பேடன் பவல் பிரபுவின் பிறந்த நாளைக் கொண்டாடுகிறது.
- சாரணர் இயக்கத்தின் தொடக்கமானது, ஒரு நூற்றாண்டுக்கு முன்பு, 1907 ஆம் ஆண்டில் ஐக்கியப் பேரரசில் தொடங்கப்பட்டது.
- 1908 ஆம் ஆண்டு பேடன் பவல் என்பவரால் சிறார் சாரணர் இயக்கமானது முதன் முறையாக தொடங்கப்பட்டது.

- 20 இளைஞர்கள் கொண்ட அமைப்பு சாரா குழுவுடன், முதல் சிறார் சாரணர் முகாமானது பேடன் பவல் பிரபுவால் ஏற்பாடு செய்யப்பட்டது.
- 2022 ஆம் ஆண்டு நிலவரப்படி, சாரணர் இயக்கம் ஆனது 57 மில்லியன் உறுப்பினர்களுடன் 172 தேசிய சாரணர் அமைப்புகளில் பரவியுள்ளது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "நமது உலகம்: நமது சமமான எதிர்காலம்: சுற்றுச்சூழல் மற்றும் பாலினச் சமத்துவம்" என்பதாகும்.




## உலகச் சிந்தனை தினம் - பிப்ரவரி 22

- உலக மகளிர் வழிகாட்டிகள் மற்றும் மகளிர் சாரணர்கள் அமைப்பு (WAGGGS) ஆனது உலகச் சிந்தனை தினத்தை அனுசரித்து வருகிறது.
- உலகச் சிந்தனை தினத்தில், மகளிர் சாரணர்கள் நம்பிக்கை மற்றும் மரியாதை ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளிக்கும் அமைப்புகள் ஒன்றுக்கொன்று நீடித்தப் பிணைப்பை உருவாக்குவதற்கு ஊக்குவிக்கப் படுகிறார்கள்.
- இந்தத் தினமானது சகோதரத்துவம், ஒற்றுமை மற்றும் பெண்கள் அதிகாரம் ஆகியவற்றைக் கொண்டாடுகிறது.
- 1926 ஆம் ஆண்டு நடைபெற்ற நான்காவது சர்வதேச மகளிர் சாரணர் மாநாட்டில், உலகச் சிந்தனை தினத்திற்கான அவசியம் குறித்து கருத்தாக்கம் கொண்டு வரப் பட்டது.
- "நமது கிரகம், நமது அமைதியான எதிர்காலம்" என்பது 2023 ஆம் ஆண்டிற்கான உலகச் சிந்தனை தினத்தின் கருத்துருவாகும்.




## மத்திய கலால் வரி தினம் - பிப்ரவரி 24

- இந்தத் தினமானது 1944 ஆம் ஆண்டில் மத்திய கலால் மற்றும் உப்புச் சட்டம் நிறுவப் பட்டதை நினைவு கூரும் நாளாகும்.
- இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் அல்லது தயாரிக்கப்படும் பல்வேறு பொருட்களுக்கு விதிக்கப்படும் கலால் வரி மற்றும் உப்பு உற்பத்தி ஆகியவற்றினை ஒழுங்குபடுத்துவதற்காக இந்தச் சட்டமானது இயற்றப்பட்டது.

- இந்தியாவில் மறைமுக வரிகளை நிர்வகிப்பதற்கான பொறுப்பு கொண்ட அமைப்பு மத்திய கலால் வரி மற்றும் சுங்க வாரியம் ஆகும்.

## உலக தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் தினம் - பிப்ரவரி 27


- இந்தத் தினமானது பல்வேறு தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஆற்றியப் பணி மற்றும் பங்களிப்பினைக் கொண்டாடச் செய்யும் வகையில் உலகம் முழுவதும் அனுசரிக்கப் படுகிறது.
- சமூகப் பிரச்சனைகளைத் தடுக்க முன்வருகின்ற மற்றும் பல்வேறு முயற்சிகளை மேற் கொள்கின்ற ஒவ்வொரு அரசு சாரா நிறுவனங்களையும் இந்தத் தினம் அங்கீகரித்து கௌரவிக்கிறது.
- உலக தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் தினமானது முதன்முதலில் பால்டிக் கடல் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மன்றத்தால் 2010 ஆம் ஆண்டில் முன் மொழியப் பட்டது.
- 2014 ஆம் ஆண்டில் தான் அனைத்து நாடுகளிலும் இந்தத் தினமானது கடைபிடிக்கத் தொடங்கப் பட்டது.

## மராத்திய மொழி தினம் - பிப்ரவரி 27

- இந்தத் தினமானது புகழ்பெற்ற மராத்திய மொழி கவிஞர் விஷ்ணு வாமன் ஷிர்வாட்கர் அவர்களின் பிறந்தநாளைக் கொண்டாடும் வகையில் அனுசரிக்கப்படுகிறது.
- ஷிர்வாட்கர் பிரபலமாக 'குசுமக்ராஜ்' என்று அழைக்கப்படுகிறார்.
- அவர் ஒரு சிறந்த மராத்திய மொழி கவிஞர், நாடக ஆசிரியர், நாவலாசிரியர், சிறுகதை எழுத்தாளர் மற்றும் மனிதநேயவாதி ஆவார்.
- அவர் நட்சம்ராட்டு என்ற திரைப்படத்திற்காக மராத்திய மொழியில் 1974 ஆம் ஆண்டு சாகித்ய அகாடமி விருது, 1991 ஆம் ஆண்டில் பத்ம பூஷன் மற்றும் 1987 ஆம் ஆண்டில் ஞானபீட விருது உட்பட பல மாநில விருதுகள் மற்றும் தேசிய விருதுகளைப் பெற்றவர் ஆவார்.

## தேசிய அறிவியல் தினம் - பிப்ரவரி 28

- இந்தத் தினமானது அறிவியலாளர் சர்.சி.வி. இராமன் அவர்கள் 1928 ஆம் ஆண்டில் 'இராமன் விளைவினை' கண்டுபிடித்ததை நினைவு கூருகிறது.
- இவர் இந்த கண்டுபிடிப்பிற்காக என்று 1930 ஆம் ஆண்டில் இயற்பியலுக்கான நோபல் பரிசினைப் பெற்றார்.
- இந்திய அரசானது தேசிய அறிவியல் தினத்தை 1986 ஆம் ஆண்டில் அறிவித்தது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'உலகளாவிய நல்வாழ்வுக்கான உலகளாவிய அறிவியல்' என்பதாகும்.




# இதரச் செய்திகள்

## கட்டாயக் குறைந்தபட்ச தண்டனை

- 12 வயதுக்குட்பட்ட சிறுமியைக் கூட்டுப் பலாத்காரம் செய்த குற்றத்திற்கு விதிக்கப் படும் கட்டாயக் குறைந்தபட்சத் தண்டனையை எதிர்த்து தொடரப்பட்ட ஒரு மனுவை விசாரிக்க இந்தியத் தலைமை நீதிபதி சந்திரசூட் தலைமையிலான அமர்வு முடிவு செய்துள்ளது.
- கட்டாயக் குறைந்தபட்சத் தண்டனை என்பது "நீதிமன்றத்திற்கு எந்த விருப்புரிமையும் இல்லாமல் விதிக்கப்பட வேண்டிய தண்டனை" என்பதைக் குறிக்கிறது.
- குற்றவாளியின் எஞ்சிய ஆயுள்காலம் வரையிலான ஆயுள் தண்டனை மற்றும் மரணத் தண்டனை என்ற 'குறைந்தபட்சக் கட்டாயத் தண்டனையை' இது குறிக்கிறது.
- இந்தக் கருத்தாக்கமானது முதன்மையாக கனடா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் சட்ட அமைப்புகளில் இருந்து பெறப்பட்டது.
- இந்தியாவில், பாலியல் துன்புறுத்தல் குற்றத்தைத் தவிர, குழந்தைகள் மீதான பாலியல் குற்ற (POCSO) தடுப்புச் சட்டத்தின் கீழ் அனைத்துப் பாலியல் குற்றங்களுக்கும் இத்தகையத் தண்டனைகள் பரிந்துரைக்கப் படுகின்றன.
- POCSO சட்டத்தின் 8வது பிரிவின் கீழ், குழந்தைகள் மீதான பாலியல் வன்கொடுமை குற்றங்களைக் கையாளும் 7வது பிரிவின் கீழ் அந்தக் குற்றங்களுக்கு 3 முதல் 5 ஆண்டுகள் தண்டனை விதிக்கப் பட்டுள்ளது.
- 1983 ஆம் ஆண்டின் குற்றவியல் சட்டத் திருத்தச் சட்டம் தான் 'கட்டாயக் குறைந்த பட்சத் தண்டனை' பரிந்துரைக்கப் பட்டதற்கான முதல் நிகழ்வாகும்.
- பலாத்காரத்திற்கு ஏழு ஆண்டுகளும், 12 வயதுக்குட்பட்ட சிறார்கள் மற்றும் கர்ப்பிணிப் பெண்களுக்கு எதிரான கற்பழிப்பு போன்ற மிக கொடூரமான வழக்குகளுக்குப் பத்து வருடங்களும் குறைந்த பட்சத் தண்டனை என்று இந்தச் சட்டம் கூறுகிறது.

- இதில் இரு குற்றங்களுக்கும் அதிகபட்சத் தண்டனை அல்லது ஆயுள் தண்டனையாக 14 ஆண்டுகள் என நிர்ணயிக்கப்பட்டது.
- 2013 ஆம் ஆண்டு சீர்திருத்தங்கள், குற்றவாளியின் வாழ்நாள் முழுவதையும் குறிக்கும் வகையில் 'ஆயுள் சிறைத் தண்டனை' என்ற வரையறையைப் புதுப்பித்து, கூட்டுப் பலாத்காரத்திற்கான குறைந்தபட்சத் தண்டனையாக 20 ஆண்டுகள் தண்டனையை அறிமுகப் படுத்தியது.



## அதிக நஷ்டத்தில் இயங்கும் விமான நிலையங்கள்

- சென்னை விமான நிலையமானது, 2021-22 ஆம் ஆண்டில் 189.85 கோடி ரூபாய் இழப்பினைச் சந்தித்துள்ளது.
- இந்திய விமான நிலைய ஆணையத்தால் (AAI) இயக்கப்படும் விமான நிலையங்களில் இதுவே அதிக இழப்பைச் சந்தித்துள்ளது.
- 98.02 கோடி இழப்புடன் டேராடூன் விமான நிலையம் இரண்டாவது இடத்தைப் பெற்று உள்ளது.
- அதைத் தொடர்ந்து அகர்தலா விமான நிலையம் அதே காலகட்டத்தில் 80.67 கோடி ரூபாய் இழப்பினைச் சந்தித்துள்ளது.

भारतीय विमानपत्तन प्राधिकरण
AIRPORTS AUTHORITY OF INDIA

## விண்வெளி வீரர்களுக்கான பயிற்சிப் பெட்டகம்

- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனமானது, இந்திய விண்வெளிப் பயணத் திட்டத்திற்கான ஒரு பயிற்சிப் பெட்டகத்தினை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது.

- இந்தப் பயிற்சிப் பெட்டகமானது, மிகைப்படுத்தப்பட்ட மெய்நிகர்த் தோற்றம்/ மெய் நிகர்த் தோற்றம் / கலப்புத் தோற்றம் ஆகிய சில நுட்பங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட உள்ளது.
- இஸ்ரோ மற்றும் சென்னையின் இந்தியத் தொழில்நுட்பப் பல்கலைக் கழகம் ஆகிய இரண்டும் இந்தத் திட்டத்தில் இணைந்து செயல்படுவதற்கான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) கையெழுத்திட்டுள்ளன.




## ஆசிய காண்டாமிருகங்கள் வசிக்கும் நாடுகளின் கூட்டம்

- ஆசிய காண்டாமிருகங்கள் வசிக்கும் நாடுகளின் 2வது கூட்டமானது டெல்லியில் சமீபத்தில் நடைபெற்றது.
- மத்திய சுற்றுச்சூழல், வனங்கள் மற்றும் பருவநிலை மாற்றத் துறை அமைச்சகம் (MoEFCC), மற்றும் சர்வதேச இயற்கை வளங்காப்பு அமைப்பு, ஆசிய காண்டாமிருக நிபுணர் குழு, உலக வனவிலங்கு நிதி-இந்தியா (WWF), சர்வதேச காண்டாமிருக அறக் கட்டளை மற்றும் ஆரண்யக் என்ற தன்னார்வ தொண்டு நிறுவனம் ஆகியவற்றினால் ஏற்பாடு செய்யப்பட்டது.
- வேட்டையாடுதல், சட்டவிரோதமாக மேற்கொள்ளப்படும் வனவிலங்கு வர்த்தகம், வாழ்விட இழப்பு மற்றும் வெவ்வேறு பகுதிகளில் பிரிந்து காணப்படுதல் போன்ற காண்டாமிருகங்களைப் பாதிக்கும் முக்கியப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்து கொள்வதற்கும் ஒத்துழைப்பை ஊக்குவிக்கச் செய்வதற்கும் இந்தச் சந்திப்பு ஒரு செயல்பாட்டு ஊக்கியாக உள்ளது.
- ஆசியாவில் ஒற்றைக் கொம்பு, ஜாவான் மற்றும் சுமத்ரான் என்ற மூன்று வகையான காண்டாமிருகங்கள் உள்ளன.
- ஜாவான் மற்றும் சுமத்ரான் வகை காண்டாமிருகங்கள் மிக அருகி வரும் நிலையில் உள்ள இனங்களாகும், என்றாலும் ஒற்றைக் கொம்பு (அல்லது இந்திய) காண்டா மிருகங்கள் பாதிக்கப்படக் கூடிய இனங்களாக உள்ளன.
- 2013 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் இந்தோனேசியாவின் பந்தர் லாம்புங்கில் ஆசிய காண்டாமிருகங்கள் வசிக்கும் நாடுகளின் முதல் கூட்டமானது நடைபெற்றது.
- பூடான், இந்தியா, இந்தோனேசியா, மலேசியா மற்றும் நேபாளம் ஆகியவை ஆசிய காண்டாமிருகங்கள் வசிக்கும் நாடுகளாகும்.

## முசிரிஸ் பற்றிய BBC ஆவணப்படம்

- BBC ஊடகமானது சமீபத்தில் "முசிரிஸ்: 700 ஆண்டுகளாக தொலைந்து போன இந்தியாவின் முதல் வணிக மையம்"' என்ற ஒரு காட்சிப் படத்தினை வெளியிட்டது.
- முசிரிஸ் என்பது நறுமண (மசாலா) பொருட்கள் வர்த்தகத்திற்கான ஒரு முக்கியப் பண்டைய காலத் துறைமுக நகரமாக விளங்கியது.
- இது தற்காலத்திய கேரளாவில் முராச்சிப் பட்டணம் என்றும் அழைக்கப்பட்டது.
- மிளகிற்கு ஈடாக வழங்கச் செய்வதற்காக, தங்கம் ஏற்றப்பட்ட ரோமானியக் கப்பல்கள் முசிரிஸுக்கு வருவதைச் சங்க இலக்கியங்கள் விவரிக்கின்றன.
- 1341 ஆம் ஆண்டளவில், பெரியாறு ஆற்றுப்படுகையில் உள்ள நீர்நிலைகளின் அமைப்பானது ஒரு பெரிய மாற்றத்திற்கு உட்பட்டது என்பதால், வெள்ளம் மற்றும் பூகம்பம் காரணமாக அழிந்த முசிரிஸ் இந்திய வரைபடத்தில் இருந்து நீக்கப்பட்டது.
- முசிரிஸ் பாரம்பரியத் திட்டமானது இந்தியாவின் மிகப்பெரிய ஒரு வளங்காப்பு திட்டங்களில் ஒன்றாகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★